மயநூல் என்னும்

மனையடி சாஸ்திரம்



டாக்டர் பூ. சுப்பிரமணியம்

மயநூல்

என்னும்

மனையடி சாஸ்திரம்

(சுவடிப்பதிப்பு)

டாக்டர் பூ. சுப்பிரமணியம்

23, இரண்டாவது வன்னியர் தெரு,
சூளை மேடு, சென்னை-600 094.

Maya Nul — Manaiyadi Sastiram

Dr. P. SUBRAMANIAM
23, IInd, Vanniyar Street,
Choolaimedu,
MADRAS - 600 094.

First Edition: December, 1995

Pages 329

Price : Rs. 100/-

Photos :

S. ILAMVEL, P. S. Vedio,
76, Vanniyar St., Choolaimedu,
Madras - 600 094.

Typesetted and Printed at :

Pavai Printers (P) Ltd.,
Madras - 600 014.
Phone : 832 441

பொருளடக்கம்

முன்னுரை

வீடும் வாழ்க்கையும்

இயற்கை உணவை உண்டு, குகைகளிலும் பரண்களிலும் வாழ்ந்துவந்தவன் ஆதிகால மனிதன். செயற்கை உணவை அறிந்து, அதை உற்பத்தி செய்யத்தொடங்கியது முதல் ஒரே இடத்தில் தங்கினான். அங்கு வெய்யிலுக்கும் மழைக்கும் ஏற்றதாகத் தங்கும் இடத்தையும் அமைத்துக் கொண்டு வாழத் தொடங்கினான். மரக்கிளைகளில் பரண் அமைத்து வாழ்ந்தது முதல் இன்றைய பல அடுக்கு மாளிகையைக் கட்டி வாழும் நிலைவரையில் வளர்ந்திருக்கிற மனிதனின் வாழ்க்கை, வீட்டின் அவசியத்தைப் புலப்படுத்துவதாகும்.

வீடுகட்டி வாழத்தொடங்கிய மனிதன் பலருடன் சேர்ந்து வாழத் தொடங்கினான். அதனால் ஒரு வட்டாரத்தில் பல வீடுகள் தோன்றின. வாழ்க்கையும் நிலையான ஒன்றாக அமைந்தது. ஒருவருக்கொருவர் துணையாக நின்று வாழத் தலைப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் ஏற்படும் பலவகை யான இன்ப, துன்பங்களை உணர்ந்தனர்; அவற்றிற்குரிய காரணங்களைக் கண்டு, பரிகாரங்களைத் தேடினர். இந்த நிலைகளை வீடுகட்டுவதிலும் காணத் தொடங்கினர்.

வாழ்க்கை வேறுபாடுகள்

ஒவ்வொருவரும் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அவரவர் விருப்பம்போல் வீடுகட்டத்தொடங்கினர். அந்த வீடுகளில்,

1. சிலருடைய வீடுகள் மட்டுமே முழுமை பெற்றன; குடி ஏறினர். சீரும் சிறப்புமாக வாழ்ந்தனர்; மாடு கன்றுகள் பெருகின; பயிர் செய்த நிலத்திலும் நல்ல விளைச்சலைக் கண்டார்கள்.

2. ஒரு சில வீடுகள் அரை குறையாகவே நின்று விட்டன. சில வீடுகளைக் கட்டத் தொடங்கியவர்கள் வேறு இடம் செல்ல வேண்டிய நிலைக்கு ஆளானார்கள்.

3. சில வீடுகள் முடிக்கப்பட்டன; குடி புகுந்தார்கள். ஆனால் குடும்பத்தலைவன் நோய்வாய்பட்டான்; தலைவி இறந்துவிட்டாள் என்ற நிலைமை ஏற்பட்டது. சில

வீடுகளில் வறுமை தாண்டவமாடியது; குழந்தைச் செல்வம் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டது. திரிந்து வாழ்ந்த வாழ்க்கையில் இவ்வாறான இன்ப, துன்பங்களைக் கவனித்து அறியாத அவர்கள் ஒன்று சேர்ந்து வாழ்ந்த காலத்தில் பலருக்கும் ஏற்படும் பலவிதமான இன்பதுன்பங்களில் புதிய அனுபவத்தைக் கண்டார்கள்.

சிந்தனை

ஒரே இடத்தில் வாழ்கிறோம். சிலரது வாழ்க்கையில் இன்பம் ஏற்படுகிறது; பலரது வாழ்க்கையில் துன்பத்தைக் காணுகிறோம். ஒரே வகையான மண்ணில்தான் பயிர் செய்கிறோம். சிலருடைய பயிர் நல்ல பலனைத் தருகிறது; பலருடைய பயிர் நாசமாகிறது. இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன என்பதை இச்சான்றோர்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள்.

அந்த இடத்தைத் தேடி வந்த நேரத்தை நினைத்தார்கள். வீடுகட்டத் தேர்ந்தெடுத்த நிலத்தை உன்னிப்பாகக் கவனித்தார்கள். வீடு கட்டத் தொடங்கிய காலம், வாசற்கால் வைத்துள்ள இடம், வைத்த நேரம், வீட்டின் மேடு மூடி முடித்த நேரம் முதலியனவும் அவர்களால் கவனிக்கப் பட்டன. அவ்வீட்டில் குடி புகுந்த நாள் கவனிக்கப்பட்டது. ஒவ்வொரு கட்டத்திலும் நிகழ்ந்த நிமித்தங்களையும் எண்ணிப்பார்த்தார்கள்.

அனுபவ முடிவுகள்

வீட்டைப்பற்றி அறிந்தது போலவே பயிர்த்தொழில் போன்றவற்றை மேற்கொள்ளும்போதும் இவை அனைத்தையும் உற்று நோக்கினார்கள். ஒவ்வொன்றையும் காரண காரியங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தார்கள். பலாபலன்களுக்கு ஏற்ற காரணங்களைப் பலரும் அறியுமாறு செய்தார்கள். பலரும் ஏற்றுக்கொண்ட செய்திகள் மக்களிடையே பரவத் தொடங்கின. நல்லனவற்றை ஒவ்வொருவரும் பின்பற்றத் தொடங்கினார்கள்.

மக்கள் வாழ்க்கையில் செல்வமும் வறுமையும், மாடு கன்றுகளின் விருத்தியும் அழிவும், பயிர் பச்சைகளின் விளைவும் சேதமும், மிக்கட் பேறும் மலட்டுத் தன்மையும், பிணியும் அகாலமரணமும், நட்பும் பகையும், நன்மை

தீமைகளும் உயர்வு தாழ்வுகளும் தாங்கள் வாழும் வீட்டின் அமைப்பினால், அமைப்புக்கு ஏற்றவாறு அமைகின்றன என்பதை முழுமையாக உணர்ந்தார்கள். அது முதலே அனைவரும் வீடுகட்டுவதில் பலர் அனுபவங்களையும் அறிந்து தங்கள் வீடுகளை முறையாகக் கட்டத் தொடங்கி னார்கள்.

முடிவுகள் ஏட்டில் ஏறுதல்

இந்த வரன்முறைகள் பலகாலம் வாய்வழி வழக்காற்றி லேயே இருந்துவந்துள்ளன. யாரோ ஒருவர், ஏதோ ஒரு காலத்தில் இச்செய்திகளை ஏட்டில் எழுதிவைக்கத்தொடங்கி னார். அதன் பயனே இன்று நம்மிடை உலவிவரும் மனை யடி சாஸ்திரம் என்னும் சுவடிகள்.

> **''திதிலா மயனார் சொன்ன**
> **சிற்பசாஸ் திரமாம் நூலை**
> **நீதியாய்த் தமிழி னாலே**
> **நிலைபட உரைக்க லுற்றேன்''**

என்னும் இந்நூலின் முதற்பாடலடிகள், இந்நூல் மயன் என்பவரால் எழுதப்பட்ட **'மயமதம்'** என்னும் வடமொழி நூலின் மொழி பெயர்ப்பாகும் என்பதை உணர்த்துகின் றன. ஆனாலும் மயமதம் என்னும் நூலில் காணப்பெறும் வீடுகட்டுவதற்குரிய இலக்கணங்கள் மட்டுமே தொகுத்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

சில செயல் முறைகள்

வீடுகட்டத் தேர்ந்தெடுக்கும் நிலமானது கெட்டியான தாகவும் உறுதிவாய்ந்ததாகவும் இருப்பது நல்லது. இலே சான மண்ணாக இருப்பின் கட்டிடம் கட்டிய பிறகு கீழே இறங்கி விடக்கூடும். எனவே, நிலத்தின் ஒருபகுதியில் ஒரு குழி வெட்டி, அக்குழியிலிருந்து வெட்டி எடுத்த மண்ணை மீண்டும் அக்குழியில் நிரப்பிப்பார்க்க வேண்டும். நல்ல கெட்டி நிலமானால் மண் மிகுதியாகும். ஒரு குழி வெட்டி, அக்குழியில் நிறைய நீர் ஊற்றி வைத்தல் வேண்டும். காலை சூரிய உதயத்தில் வந்து பார்க்கச் சிறிது நீராவது தேங்கி யிருப்பது கெட்டிமண் ஆகும்.

இந்தச் சோதனையை விரத முறையோடு செய்து பார்க்க வேண்டும் என்கிறது மயநூல். அதாவது,

'ஒரு முழ நீளம், அகலம், ஆழம் உடையதாய் மனையின் நடுவில் ஒரு குழியினைத் தோண்ட வேண்டும். இடையில் மண் திட்டு விட்டுச் சுற்றிலும் வட்டமாகத் தோண்டுவது வழக்காறு. வீட்டுத்தலைவன் உபவாசம் இருந்து, இரவின் தொடக்கத்தில் பூசைசெய்து அக்குழியில் நீரை நிரப்பி, அதன் அருகில் தருப்பைப்புல்லைப் பரப்பி, கிழக்கே தலை' வைத்து அப்புல்லின் மீது படுத்திருக்க வேண்டும். காலை யில் எழுந்து காண வேண்டும்' என்பது மயநூல் கருத்து.

மேலும் குழியில் நீரும் மலரும் விட்டுப்பார்க்கும் முறை நிமித்த இலக்கணத்தை உணர்த்துவது. குழியில் நீரும் மலரும் விட்டு அது இடமாகச் சுற்றுவது, வலமாகச் சுற்றுவது, சுற்றிவந்து இறுதியில் நிற்கும் திசை போன்ற குறிகளின் அடிப்படையில், அவ் வீடு கட்டுவதனால் ஏற்படும் பலா பலன்களை மிகவும் நுணுக்கமாக அறிய இந்நூல் இலக் கணம் வகுத்துக் காட்டுகிறது.

அக்காலத்தில் வழங்கிவந்த பலவகையான அளவுகோல் களைப்பற்றிச் சுவடிகள் குறிப்பிடுகின்றன. ஆனால் வழக் காற்றில் 36 அங்குலம் அதாவது 3 அடி கொண்ட கஜக் கோலைக் கொண்டு கணக்கிடும் முறையே கையாளப்படு கிறது. அதற்குச் சமமான மீட்டர் அளவைப் பயன்படுத்திக் கொள்ளலாம்:

பொருத்தங்கள்

வீடு கட்டுவதில் கவனித்து அறியக்கூடிய ஒன்று மனைப் 'பொருத்தங்க'ளாகும். அப் பொருத்தங்களைக் கணக்கிட்டு அறியும் முறைகள் நூலுள் தெளிவு படுத்தப்பட்டுள்ளன என்றாலும் ஒவ்வொன்றையும் கணக்கிட்டு அறிய வேண்டிய உழைப்பை எளிமைப்படுத்த விரும்பி 'பொருத்தப்பலன் களின் அட்டவணை' ஒன்று இறுதியில் கொடுக்கப்பட் டுள்ளது. குழிகள் கணக்கிடும் முறை முதலில் கொடுக்கப் பட்டுள்ளது. அதன்படி வீட்டின் குழி அளவைக் கணக் கிட்டுக் கொண்டால் போதும். அந்தந்தக் குழியின் அளவுக் குரிய 16 வகைப் பொருத்தங்களையும் அட்டவணையில் அறிந்து கொள்ளலாம்.

அனுபவக் கருத்துகள்

'தவறு செய்தவன் நாட்டை விட்டே விலக்கப்பட வேண்டும்' — இது கிருதயுக தருமம். தவறு செய்தவன்

கிராமத்தை விட்டு விலக்கப்பட வேண்டும் என்பது திரேதா யுக தருமமாயிற்று. தவறு செய்தவனைக் குடும்பத்திலிருந்து விலக்கினாலே போதும் என்று துவாபரயுக தருமம் வகுத்தது. கலியுக தருமமோ குற்றம் செய்தவன் மட்டுமே தண்டிக்கப்பட வேண்டும் எனத் தளர்த்தியது. இதேபோல,

பாவம் செய்தவனைக் காண்பதும் அவனோடு பேசுவதுமே பாவம் என்பது முதல் யுக நிலைமை. பாவம் செய்தவனைத் தொட்டால்தான் பாவம்; பாவம் செய்தவன் உணவை உண்டால்தான் பாவம் என்னும் இரண்டு நிலைகள் அடுத்த இரண்டு யுகங்களில் கடைபிடிக்கப்பட்டன. ஆனால் தவறுகளை நாம் செய்தால்தான் பாவம் என்ற நிலை கலியுகத்தில் உருவாகிவிட்டது.

எல்லா செயல்களைச் செய்வதிலும் யுகங்களுக்கு ஏற்ப மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது நல்ல பொருளைப் பிறருக்கு வழங்குவது என்ற கொள்கையின் முதல் நிலை அப்பொருள் தேவைப்பட்டவர்கள் இருக்கும் இடத்தைத் தேடிச் சென்று வழங்கி மகிழ்வதாகவே இருந்தது. இரண்டாவது நிலை அவர்களை அழைத்து வழங்குவதாயிற்று. கேட்டுக் கொடுக்கப்பட்டது மூன்றாவது யுகத்தில். ஆனால் நான்காவதான கலியுகத்தில் 'வேலை வாங்கிக் கொண்டு கொடுப்பது' என்ற நிலைக்கு இறங்கி வந்துவிட்டது. இவை யுக மாற்றத்தால் ஏற்படும் இயற்கையாகும். இவற்றைப் போலவே, மயநூலில் கூறப்படும் அத்தனை விதிமுறைகளையும் கையாள இயலாது என்பது இயற்கை. இன்றியமையா சில விதிமுறைகளை மேற்கொள்ளுவது நல்வாழ்விற்குத் துணை செய்யும். சில விதிமுறைகள்:

1. குழியை (ஆயம்)க் கணக்கிடும்போது நான்கு புறமும் உள்ள தாய்ச் சுவர்களின் கன அளவைச் சேர்த்தே கணக்கிட வேண்டும். அதாவது சுவர்களின் வெளிப்புறத்தின் நீள அகலங்களைக் கணக்கெடுக்க வேண்டும்.

2. வாசற்காலின் உயரம், அகலம் முறையே 9 : 5 என்ற விகிதத்தில் அமைவது செல்வச் சிறப்புடையது. அதாவது 9 அடி உயரமானால் 5 அடி அகலம் இருத்தல் வேண்டும். இதுவும் மரத்தின் வெளிப்புற அளவேயாகும். வாசற்காலின் உட்புற உயரம் 6 அடி; மரத்தின் அளவு (கீழே + மேலே) 4½ அங்குலம் + 4½ அங்குலம் = 9 அங்குலம் எனக் கொண்டால் வாசற்காலின் உயரம் 6¾ அடி.

அந்த வாசற்கால் 3¾ அடி அகலமுள்ளதாய் அமைய வேண்டும்: ($\frac{5}{9}$ × 6¾ = 3¾) இது வெளிப்புற அளவு. உள் அளவு உயரம்: அகலம் = 2 : 1 என்று அமையும்.

3. கதவு ஒரே பலகையில் அமைவது சிறப்பு. இல்லையேல் 3, 5, 7 என்று ஒற்றைப் படைப்பலகைகளால் அமையலாம். யாவும் ஒரே மரப்பலகையாதல் வேண்டும்.

4. தலைவாசற்காலை விட உட்புற வாசற்கால்கள் படிப்படியே சிறிது உயரமாக இருத்தல் வேண்டும். அதாவது தலை வாசற்கால் 6 அடியானால் அடுத்தது 6 அடி 1 அங்குலம்; அதற்கடுத்து உள்ளே அமைவது 6 அடி 2 அங்குலம் என அமைய வேண்டும். அதே போல தரை அமைப்பிலும் சிறிது உயர்வாகத் தூக்கி வாசற்காலைப் பொருத்த வேண்டும்.

5. வீட்டின்

வடகிழக்குப் பாகத்தில்	—	பூசை அறை, தானிய அறை, படுக்கை அறை
கிழக்குப் பகுதியில்	—	பூசை அறை, படுக்கை அறை, குளிக்குமிடம்
தென்கிழக்குப் பகுதியில்	—	சமையல் அறை, விருந்தினர் அறை
தெற்குப் பகுதியில்	—	பூசை அறை, உணவு அறை
தென்மேற்குப் பகுதியில்	—	கல்வி அறை, கருவிகள் அறை
மேற்குப் பகுதியில்	—	படுக்கை அறை
வடமேற்குப் பகுதியில்	—	பூசை அறை, பிரசவ அறை, நெற் களஞ்சியம்
வடக்குப் பகுதியில்	—	செல்வம் வைக்கும் அறை, படுக்கை அறை

என்ற முறையில் ஏற்றவாறு அமைத்துக் கொள்ளலாம்.

6. கிணறு—வடக்கு அல்லது கிழக்கு நோக்கிய வீடுகளுக்குத் தென்மேற்குப் பகுதியிலும், தெற்கு அல்லது மேற்கு நோக்கிய வீடுகளுக்கு வடகிழக்குப் பகுதியிலும் கிணறு எடுக்க வேண்டும்.

முற்றிய நெல்லி மரத்தைக் கனத்த வண்டிச் சக்கர வட்டை போலப் பலகையாக அறுத்துக் கிணற்றின் அடியில் வட்டமாய்ப் பரப்பி அதன் மீது சுற்றுச் சுவர் கட்டினால் கிணற்று நீர் சுவை உள்ளதாக மாறிவிடும்.

7. ஒரு வீட்டைக் கட்டியபின் அதே மனையில் வேறு ஒரு பகுதி வீடுகட்டப்படுமானால் அதற்கான அளவு

முறைகளை மீண்டும் தனியாகவே கணக்கிட வேண்டும். முதல் வீட்டோடு இணைத்துக் கணக்கிடக் கூடாது. முன் கட்டிய வீட்டின் வாசற்படியின் வழியே செல்லுமாறு புதிய தாக ஒரு பகுதியைக் கட்டி வீட்டைப் பெரிய அளவில் விரிவுபடுத்தினால் மட்டும் பழைய வீட்டு அளவோடு சேர்த்துக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

8. மேல்மாடி வீடு கட்டுவதானால் கிழக்குப்பக்கத்திலும் வடக்குப் பக்கத்திலும் கட்டுவது நல்லது.

மாடிப்படிகளை வடக்கு நோக்கி அல்லது கிழக்கு நோக்கி ஏறுமாறு அமைப்பது சிறந்தது.

9. வீட்டின் தண்ணீர் வடக்கு, கிழக்கு, வடகிழக்கு ஆகியவற்றில் ஏதேனும் ஒரு திசையில் செல்லுமாறு விடு வது அவசியம்.

10. வீட்டின் உட்புறம் வாசல் விடப்படுமானால், அந்த வாசல் கிழக்கு மேற்கில் சிறிது நீண்டு அமைவது உயர்ந்தது.

11. வீடு குடிபுகும்போது, நூலினுள் கூறியதுபோல, நண்டுவளைமண், யானைக்கொம்புமண், எருதுக் கொம்பு மண், புற்றுமண், குளத்து மண் இவற்றால் கருப்பப் பேழை ஒன்று செய்து அதில் 9 குழிகள் அமைத்து அவற்றுள் நவரத்தினங்களை வைத்து மண் பலகையால் மூடி வீட்டின் வடகிழக்குப் பகுதியில் அமைத்தல் வேண்டும். தங்கத்தகட் டில் வாஸ்து யந்திரம் ஒன்று செய்து, அதனைச் சுத்தி செய்து கருப்பப் பேழையுடன் வைத்து நவக்கிரக பூசையும் வாஸ்து பூசையும் 48 நாள் செய்து வருவது எல்லா நன்மையும் தரும்.

நன்றி

சுவடி இயலில் பயிற்சி பெற்று, சுவடித்துறையில் பணியாற்றி வந்த **டாக்டர் விருதுசாரணி** அவர்கள் சுவடிகளிலிருந்து படியெடுப்பதில் முழுமையாக உதவினார்கள்.

சுவடி இயல் பட்டயக்கல்வியில் தேர்ச்சிபெற்றுப் பல நிறுவனங்களில் சுவடித்துறையில் பணியாற்றிய அனுபவமும், சுவடிப்பதிப்புகள் பலவற்றை உருவாக்கிய தனித் தகுதியும் பெற்ற **செல்வி மா. சத்தியபாமா,** எம்.ஏ, எம்.பில்., அவர்கள் பொருத்தப்பலன் அட்டவணையைத் தொகுப்பதிலும் படியெடுப்பதிலும் முழுமையான உழைப்பை நல்கினார்கள்.

முன்னுரைப்பகுதியையும் சுவடிச் செய்திகளின் சுருக்கப் பகுதிகளையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தளிப்பதில் நண்பர் டாக்டர் **வி. கணேசன்,** அவர்கள் உதவி செய்தார்கள். அனைத்துத் தமிழ் உள்ளங்களுக்கும் என்றும் நன்றியுடையேன்.

பதிப்புப்பணிகள் பலவற்றிலும் உறுதுணையாக இருந்து பலவகைப் பணிகளில் கைகொடுத்து உதவியு எங்கள் மகன்களான **சு. இளங்கோ, சு. இளவரசு, சு. இளம்வேள்** ஆகியோருக்கு என் வாழ்த்துக்கள்.

அழகுற அச்சிட்டு உதவிய **பாவை அச்சகத்தாருக்கு** என் நன்றி.

பூ. சுப்பிரமணியம்

INTRODUCTION

Home and Human Life

The ancient man lived in caves and in bamboo plotforms, built on the trees, eating the natural foods when he come to know about the method of cooking (artifical) foods he began to stay at one place. He built this shelter which guarded him from the heat of the sun and the rain. The human life, from the bamboo plotforms built on the branches of trees to the present day multistoried buildings, reveals the importance of the need of the houses.

Man who began to live in houses, started living in groups. Hence many houses came to exist. Life also seemed to become permanent. People lived by helping others and sharing joys and sorrows of other people. They found out reasons for their sufferings and began to find alternatives for them. They found that building houses helpepd to resolve many problems.

Variations of Human Life

Individuals selected lands and built houses according to their taste.

1. Only a few houses were completed and people started their life in that houses, lead their lives in prosperity. Herds got increased and cultivation saw rich harvests.
2. Some houses were incompleted, because people who started the construction happened to migrate.
3. Some houses were also completed and people also started their life but the head of the family fell sick; his wife died. Poverty reigned that houses. In some other houses people suffered due to death of children.

People who lived in isolation, experienced the sufferings, realized the bliss of living together.

Thought

We live in same place. While the lives of some people are filled with joy, the lives of some other people are clouded with sorrow. We cultivate the same land. While some lands yield rich harvest, the crops in some other land become destroyed. Why do these differences exist? Many scholars have began to ponder over this.

They read the time, when the possesion of the land was done. Then they examined the land, in which the construction was to take place. After they also noted down the corresponding omens. Then they arrived at some conclusions out of their experiences.

They read the time, read the consequences, examined them very well and finally made people aware of such deeds. This started spreading. People began to follow this, because, they thought that this was suggested to them only for the occurence of good things.

People believed that the increase in wealth, herds were depended upon the structure of their houses. Hence they started consulting fellow men's experiences in building houses. Thus, a system or a pattern was followed in the construction of houses.

Initially the rules of the system were existed orally. But they were written down in Palm Leaf Manuscript, by scholars of unknown period. Thanks to such efforts, we now realize the use of

Maniyaṭi Cāṣtiram

Tītilā mayaṉār cōṉṉa
cirpcās tiramām Nūlai
Nītiyāyt tamiḻi ṉāle
Nilaipaṭa uraikka luṟṟēṉ

These lines indicate that the text is the translation of one Sanskrit text entitled **mayamatam** written by the author

named Mayan. But this text contains only the translations of the grammar of constructing houses.

Some Methods

The land which is selected for the construction of the houses must be hard-soiled. If it is a loose-soiled land, the building of the houses would go down. Hence, a pit was to be dug and it should filled again with the soil taken out of the pit. If the land the hard-soiled, some soild will remain like wise, a pit has to be dug and it should be filled with water. If the land is hard-soiled, the water will remain there till the down of the next day.

The text stresses that these test have to be undertaken after much religious piety and fasting.

A pit, whose measurement is of one square feet and one feet depth, has to be cut out and it should be shaped round. The head of the family has to undergo fasting. Then he has to do poojas and pour water into the pit and spread flowers on the water. It should be seen in the next morning. The method of pouring water and flowers in the pit indicates the grammar behind the study of omens. The text clearly explains the omens, and the corresponding predictions, based on the rotation and the final stopping of flowers, which indicate the direction.

Though there are many scales of measurement, in practice the scale of length — 36 inches (3 feet) is used. The same equal metirical measurement can be used.

Pōruttaṅkal

Maṉai Pōruttam is one important aspect which has to be followed in constructing a house. A chart is appended at the end of the text, in order to understand the omens and their corresponding predictions. The method of measuring square yard is given at first. With the help of this measurement, the measurement of the square yard of the house can be calculated and the corresponding 16 types of Pōrattams can be identified from the charts.

Some Practical truths

"The culprit who committed mistake should be excommunicated from the country" — This verdict belongs Kirutayukam. The culprit should be sent out of village — This belongs to Tiretayukam. It is enough that the culprit is sent out of the family — This is Tuvāparayukam Justice. But the Verdiet of Kaliyukam enumerates that only the accused has to be punished.

The state of first yukam is: "it is a sin to speak with a sinner and to meet a sinner'; The state of second yukam: "it is a sin to touch a sinner; or to eat the food of the sinner"; But in kaliyukam it is considered that, only the person who commits mistake is the sinner.

Yukams have been changed according to the deeds of the people. In the initial stage in order to offer support, people went in search of the people who were in want of help; secondly they were called on and were given the help; thirdly, in third yukam, help was given to the people who asked for it; But fourthly, in the fourth yukam, that is in Kaliyugam help was given only after having been exploited the labour of the people who needed it. This is the evolution of the yukams. Like this, it is difficult to follow all the advices, rules and systems enumerated in **mayanūl**. Some such incredible rules are listed below, which would help to build a blessed life:

1. While calculating the measurement of the (Āyam), The measurement of the length and breadth of the main wall have to be taken from the outside.
2. It will be of much prosperity, if the ratio of the length and breadth of the entrance door happens to be 9 : 5 (9 feet length and 5 feet breadth). The measurement has to be taken from outside. That is, if the inner measurement of the height of the entrance is 6 feet, the measurement of the wood (length and width) 4½ × 4½ = 8 inch. The total height of the entrance door becomes 6¾ feet. Hence its breadth has to be 3¾ (3/9 × 6¾ = 3¾) This is the measurement from outside. The ratio of the inside measurement should be 2 : 1.

3. The doors should be made of single piece of wood. Or it should be from the no of woods whose total no should be and odd number like 3, 5, 7. It is good that if all things are made of one category of wood.

4. The measurement of the inner entrance should be bigger than that of the main entrance doors. For example, if the measurement of the main entrance is 6 feet; the measurement of subsequent doors should be 6 : 1 ft; 6 : ft. Like this, the measurement of the flooring has to follow the same pattern.

5. The North East part of the house should have

	—	prayer hall, store room for grains & bed room.
East part	—	Prayer room, bed room and bath room
South East part	—	kitchen, guest room,
South part	—	prayer room, Dianing hall,
South west part	—	Study room, Drawing room,
West part	—	bed room
Nort west part	—	prayer room, reception hall, store room for grains,
North	—	store room for wealth and bed room.

6. In the houses facing North, or East wells are to be dug out in South west part. In the houses facing South or West wells are to be dug out in the Nort East part. Black box whose nine sections are filled with nine types of stones, has to be placed in North East part of the house. The mantira of Vāstu has to be written on a golden plate and it has to be placed in the black box, and the puja to the nine planets and the puja to vastu have to be performed for 48 days. This would help to attain prosperity.

P. Subramaniam

மயநூல்

என்னும்

மனையடி சாஸ்திரம்

1. நிமித்தங்கள்

(சுவடிச் செய்தியின் சுருக்கம்)

இறை வணக்கம்

நான்கு வேதங்களாகி விளங்குபவன் இறைவன்; மும் மூர்த்திகளாகிய வடிவெடுத்து நிற்பவன் அவன்; முத் தொழிலை நிகழ்த்துபவனும் இறைவன்; முத்தொழிலை நிகழ்த்துவதற்காக இவ்வுலகினைத் தோற்றுவித்தவனும் அவனே.

அவ் இறைவனின் திருவடித் தாமரைகளை வணங்கி, தேவதச்சன் என்று கூறப்படும் சிற்பியாகிய மயன் என்பவர் வடமொழியிலே செய்துள்ள மனைநூலினைத் தமிழிலே சொல்லுகிறேன் என்று இறைவணக்கம் கூறி நூலைத் தொடங்குகிறார் ஆசிரியர்.

அவையடக்கம்

பழமும் நெய்யும் பாலும் கற்கண்டும் சர்க்கரையும் கலந்த உயர்ந்த உணவில் கல் கலந்து கிடக்குமானால் சான்றோர் கல்உணவு என்று அதனை விலக்கி விட மாட்டார்கள்; அந்தச் சிறு கல்லைக் கண்டு நீக்கிவிட்டு உணவை இனிய உணவாகவே ஏற்றுக்கொள்வார்கள். அதுபோல புல்லறி வாளனாகிய நான் செய்யும் இந்நூலுள் பிழை காணப் படினும், சான்றோர் அப்பிழையினை நீக்கி உயர்ந்த நூலாகவே ஏற்றுக் கொள்வார்கள் என்பது ஆசிரியரின் அவையடக்கக் கருத்து.

நிமித்தம் (சகுனம்)

இல்லத்திற்கு உரியவன் வந்து மனைகோல வேண்டும் என்று சிற்பியை அழைக்கிறான். சிற்பியும் மனைக்கு உரியவனுமாக மனையை நோக்கிச் செல்லுகிறார்கள். அவ்வாறு செல்லும்போது எதிரில் ஆண்கள், பெண்கள்

பிற உயிர்கள் வருவதையும், அவர்கள் பிற பொருள் களோடு வருவதையும் நிமித்தம் என்று கூறுகிறது மனை நூல். அப்படி வரும் நிமித்தங்களுக்கு ஏற்ப மனையில் நன்மை, தீமைகள் உண்டாகும் என்பது அனுபவத்தில் கண்ட உண்மையாக ஏற்கப்படுகின்றது. அவ்வாறு ஏற்படும் நிமித்தத்தின் நன்மை தீமைகள் தொகுத்துத் தரப்படுகின்றன.

நன்மை தரும் நிமித்தங்கள்

1. அழகு வாய்ந்த மகளிர் எதிரில் வந்தால் நல்ல யோகம் உண்டாகும்.

2. நிறைகுடம், தயிர்க்குடம், பால்குடம், சோறு, மதுக் குடம், சாரைப்பாம்பு, கரும்புக்கட்டு, பருவமகளிர், தேவ தாசி, வண்ணான், இரட்டைப் பார்ப்பனர் போன்ற நிமித் தங்கள் எதிரில் தோன்றினால் மிகவும் நன்மை உண்டாகும்.

3. அணில், ஓந்தி, கழுதை, கிளி, கொக்கு, கோழி, செம்போத்து, நரி, நாரை, பசு, மயில், மாடு, மான், முயல், வேங்கைப்புலி ஆகியவை நாம் மனைகோலப் புறப்படும் போது எதிரில் நமக்கு இடது பக்கத்திலிருந்து வலதுபக்க மாகச் சென்றால் மிகவும் நன்மை உண்டாகும்.

தீமை தரும் நிமித்தங்கள்

1. அழுக்கு ஆடை அணிந்தவன், உடலில் மயிர் இல் லாதவன், ஒற்றைக் கண்ணன், கையில் கயிறு உடையவன், சுருட்டைத்தலையன், செம்பட்டைத்தலையன், தடி ஊன்றி வருபவன், நொண்டி, விதவைப்பெண், விரித்த தலையை உடையவள் ஆகியோர் எதிரில் வருவார்களானால் உயிருக்கு ஆபத்து ஏற்படும்.

2. ஒற்றைப் பார்ப்பான், சன்னியாசி, புதிய பானை, மட்டை என்னும் ஒருவகைப் பாம்பு, முலை இல்லாத பெண், மூக்கு இல்லாதவன், மொட்டைத்தலையன், வாணி யன் ஆகியோர் எதிர் காணில் தீமை உண்டாகும்.

3. இரைச்சலிட்டு வரும் பாம்பு—பகை உண்டாகும்

உமி	—பொருள் அழியும்
எலும்பு	—பசுக்கள் நாசமாகும்
கரி	—நோய் உண்டாகும்
குறைகுடம்	—துன்பம் உண்டாகும்
நெருப்பு	—குடி அழிந்து போகும்
விறகு	—இகழ்ச்சி உண்டாகும்

பல்லி சொல்லுதலின் பலன்

சிற்பியும் மனைக்குரியவரும் மனையில் சென்று நின்ற வுடன் அவர்கள் நிற்கும் நிலைக்கு வலது பக்கத்தில் பல்லி சொல்லுமானால் நல்ல பலனைத் தரும்.

பல்லி முதலில் வலது புறம் சொல்லி, அடுத்து இடது புறமும் சொல்லுமானால் அந்த மனைக்கு உரியவர் அரச னுக்கு மிகவும் பிரியம் உள்ளவராகவும் சுகவாழ்வு உடைய வராகவும் விளங்குவர்.

பிற உயிர்களைக் காண்பதன் பலன் நல்ல பலன்கள்

அவர்கள் இருவரும் சென்று மனையில் நிற்கும்போது,

1. வெள்ளை எருது, வெள்ளைப் பசு, வெள்ளைப் புறா ஆகியவை அவர்கள் பார்வையில் காணுமானால் மனைகோலி மேலும் சீரும் சிறப்புமாக வாழ்வார்கள்.

2. பறண்டை என்னும் பறவை பாடிக்கொண்டே வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாகச் செல்லுவதைக் கண்டால் துன்பங்கள் நீங்கி நன்மை உண்டாகும்.

3. தண்ணீர், நல்ல புடவை, நிறைகுடம், நெய், பால், மதுக்குடம், மாமிசம், ஒற்றை ஆடவன், குதிரை, தேர், யானை இவற்றை எதிரில் கண்டால் மிகவும் உத்தமம் ஆகும்.

தீய பலன்கள்

1. எறும்புகள் சாரி சாரியாகச் செல்லாமல் சிதறிச் செல்வது, ஓணான் எதிரில் ஓடிவருவது, கரையான்கள் பரவிக் கிடப்பது, வண்டுகள் பூமியைத் துளைத்துக் கொண் டிருப்பது போன்றவற்றைக் காண நேர்ந்தால் தீமை உண்டாகும்.

2. குடியன், குருடன், கூனன், சுடுகாட்டு ஆண்டி, செக்கு ஆட்டுபவன், முடவன், மூக்கு அறுபட்டவன், வலையன் என்னும் சாதியான் ஆகியவர்களைக் காண நேர்ந்தால் மனைகோலக் குடி நசித்துப் போகும்.

இவ்வாறான தீய நிமித்தங்கள் தோன்றுமானால் அப் பொழுது அந்தச் செயலை நிறுத்திவிட்டுக் குறைந்தது ஒரு மாதம் கழித்து மீண்டும் நல்லநாள் தேர்ந்தெடுத்து அந்த

நாளில் நல்ல நிமித்தம் கண்டு அச்செயலைத் தொடங்க வேண்டும்.

நல்லநாள் பார்த்து மனை நடுவில் தோண்டிப் பார்த்தால் **மண்ணின் கீழ் கிடைக்கும் பொருள்களுக்கு** ஏற்ற பலன்கள்:

நல்ல பலன்கள்

அரணை, சிலந்தி, தவளை, நண்டு, பல்லி ஆகியவை காணப்பட்டால் அம் மனை சிறந்து விளங்கும்.

செங்கல், பசுவின்கொம்பு, பஞ்சலோகம், பலதானியங்கள் இவற்றுள் ஒன்று காணப்பட்டால் மிகுந்த செல்வம் உண்டாகும்.

செம்பு, பொன், வெள்ளி இவற்றுள் ஒன்று காணப் பட்டால் மிகவும் நன்மை உண்டு.

இரும்பு, ஈயம், பித்தளை இவற்றுள் ஒன்று காணப் பட்டால் மத்திம பலன் உண்டாகும். புதையல் கண்டால் இன்பம் உண்டாகும்.

தீய பலன்கள்

ஆமை, உடும்பு, தேன்கூடு, பாம்பு, பூரான், வண்டு இவை காணப்பட்டால் அம்மனை அனல்பட்டு அழியும்.

எறும்பு, கரையான், தேள், நகம், மயிர், மரக்கட்டை, முட்டை, வெண்தலைஎறும்பு ஆகிய இவற்றுள் ஒன்று காணுமேல் மிகவும் தீங்கு நேரிடும்.

உமி தோன்றினால் பொருள் அழியும்.

கரி தோன்றினால் நோய் உண்டாகும்.

விறகு தோன்றினால் குலம் அழியும்.

எலும்பு, கருங்கல் இவை தோன்றினால் மனையாள் சாவாள்;மனைக்குரியவரும் வியாதியால் மெலிந்து சாவார்.

இக்காரணங்களால் வீடு கட்டும்போது பூமியைத் தோண்டிச் சோதனை செய்த பிறகே வீடுகட்டுதல் வேண்டும். அவ்வாறு அன்றி, பூமியைச் சோதனை செய்யாமல் வீடு கட்டிவிட்டால் வீட்டில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப மண்ணில் உரிய பொருள்கள் இருந்தே தீரும் என்று உறுதியாக நம்பலாம்.

வீடுகட்டியபின் — வாழ்க்கையில் அவ்வீட்டில்,

1. 'பசு இருந்தும் பால் இல்லை' என்ற நிலை ஏற்பட்டால் வீட்டின் கிழக்குப் பக்கத்தில் மண்ணின் கீழ் குழந்தைகள் எலும்பு கிடக்கும் என்பது பொருள்.

2. வீட்டில் பசுக்கள் இருக்கின்றன. ஆனால் பால் கறவை இல்லை; மேலும் அரசினர் கோபம் கொண்டிருக்கின்றனர் என்ற நிலை இருந்தால் அவ்வீட்டின் தென்கிழக்கு மூலையில் குதிரை எலும்பு கிடக்கிறது என்று கண்டு கொள்ளலாம். ஆயினும் அவ்வீட்டில் நல்ல யோகம் உண்டாகும்.

3. வீட்டுத்தலைவன் ரோணகாரனாக இருந்து துக்கம் அடைவானானால், வீட்டின் தென்புறத்தில் யானை எலும்பு புதைந்து கிடக்கிறது என்று அறியலாம்.

4. என்றைக்கும் அபம் மிகுந்து தோஷம் வந்து அடையுமானால் அவ்வீட்டின் தென்மேற்கு மூலையில் பன்றி எலும்பு இருக்கும்.

5. எப்போதும் ஆருடம் சொல்லுதல், போக்குவரவு சொல்லுதல் ஆகிய தொழிலில் ஈடுப்பட்டிருந்தால் அவ் வீட்டின் மேற்கே எலும்பு புதைந்து கிடக்கிறது என்று அறியலாம்.

6. எப்பொழுதும் அர்த்த நாசனாய் இருப்பானாகில் அவ்வீட்டில் எங்கோ ஒரு பக்கம் கழுதை எலும்பு இருக்கிறது என்று அறியலாம்.

7. அண்டை, அயலார் எப்பொழுதும் விரோதமாக இருப்பார்களேயானால் அவ்வீட்டின் வடக்கே ஆட்டு எலும்பு இருக்கிறது என்று கொள்ளலாம்.

8. வீட்டில் எப்பொழுதும் கலகம் ஏற்பட்டால் வீட்டின் வடகிழக்கு மூலையில் நாய் எலும்பு புதைந்து கிடக்கிறது என்று அறியலாம்.

வீடு கட்டத் தொடங்கு முன் இவற்றை நன்கு ஆய்ந்து பார்த்து தீயனவற்றை நீக்கி வீடு கட்டத் தொடங்க வேண்டும்.

மேலும் மனையின் நடுவே தோண்டிச் சோதனை செய்யும் போது தலைமண்டை ஓடு காணப்பட்டால் அவ்வீட்டு மனையை ஆறுசாண் ஆழம் மண் எடுத்து நன்றாகச் சோதனை செய்து தீயனவற்றை நீக்கி வீடு கட்டினால் எல்லாவித நன்மையும் உண்டாகும்.

Ways and Means

(A summary of the Manuscript)

Invocation to God

God is the expression of four vedas; exists in the forms of three Moorthis and performs three kinds of activities — creation, preservation and distruction. In order to perform these duties he has created the world.

The author of this manuscript says that by surrendering himself to the lotus-feet of God, he has intended to translate the Mayan's *Manai Nul* which is in Sanskrit, into Tamil.

Expression of Humility

The author is humble enough in asking the scholars to endure and bear the mistakes in his translation, like the way in which a delicious meal would not be wasted away simply for unwanted small pieces of stone.

Omen

This manuscript lists a group of good and bad signs of omens for a man who sets out with his mason to start constructing a house for himself. Meaning for the signs of omen depends on the people and things that he encounters on his setting out.

Good omens

1. Beautiful young girl is suggestive of property.

2. People carrying pots full of curds, milk, alcholic drinks, bundle of sugarcane, dobi and twin brahmins are indicative of good things.

3. The moving of birds like parrot, crow, crane, hen, peacock and animals like squirrel, jackal, cow, deer, rabbit and tiger from left side to right side is suggestive of good things.

Ill omens

1. Men who are wearing dirty dresses; who are bald; who has blindness in one eye; who have unusual hairstyle; who are physically handicapped and widows are indicative of bringing danger into life.

2. Lone-brahmin, saints, women having no breasts, men with shaven heads, merchants are suggestive of bad things.

3 Hissing snake is suggestive of enemity; bones are indicative of danger to cows; the waste of rice grains indicates wastages of wealth; coal is indicative of disease; emptypot is indicative of suffering; fire is indicative of distribution; firewood is indicative of humiliation.

Reading omens from the sound of house lizard

If the mason and the owner, after reaching the plot, hear the sound of the house lizard from the right hand side it is indicative of goodness.

If the house lizard makes its sound first from the right side and then from the left side, it is indicative of the good-will that the owner of the plot receives from the king.

Good omens on seeing other living creatures:

1. In the plot, when they see white ox, white cow, white pigeon; they indicate the blissfulness for the owner.

2 The singing of owl from right to left is suggestive of the relief from sufferings.

3. Water, good saree, filled pots, ghee, milk, intoxicating drinks, meat, lone man, horse, chariot, elephant-all suggest good things.

Ill omens

1 The vision of ants moving desperse, the vision of lizards coming opposite, the spreading of white ants, the digging of moths, are suggestive of bad things.

2. Physically handicapped persons, drunkards, are Ill omens.

3. If this *ill* omen are seen, it is better to stop the work for a month, and then to start again with good omens.

4. If it is dug on a particular good day, and the appearance of following creatures and things while digging, suggest different meanings.

Good things

1. *Aranai,* a kind of lizard, spider, frogs, crabs, house lizards are suggestive goodness.

2. Bricks, horn of cow, grains, are indicative of good health.

3. Copper, gold, silver, are indicative of blissfulness.

4. Iron, Aluminium, bronze suggest moderate aspects. If any treasure is found it is indicative of happiness.

Ill omens

Tortise, honeycomb, monitor lizard, snakes, moths — these are suggestive of destruction of the house due to fire.

The sight of any one of the following: ants, scropion, snails, hairs, pieces of wood, eggs, white-headed ants suggests evils.

dust of rice grains suggests destruction of wealth; coal suggests the onset of sickness; firewood suggests the destruction of family;

bones, black stone suggest the death of the house-wife and would bring sickness to head of the family.

To avoid such appearance of these thing, one should test the land and soil and should construct the house. This caution would help to bring blissfulness.

1. After having constructed the house, if there is no milk in the cow that is in the house, this is due to the bones of children that were found buried in the eastern side of the land.

2. If cows refuse to give milk, If kings are angry, this means, these bad things are happening because of the bones of horse that were buried in south east part of the land.

3. If the head of the family falls sick, this is due to the bones of elephant in southern part of the land.

4. If fear prevails in that house, this is due to the presence of the bones of pigs in the south west part of the land.

5. Indulgence in Astrology and wandering is due to the unearthed bones in the western part of the land.

6. A perennial detioration indicates the unearthed bones of donkey in some part of the land.

7. The enemity between neighbours is found because of bones of goat in the northern side of the land.

8. The confusion in the house is due to the presence of bones of the dog in the north eastern direction of the land. One should consider all these factors before leap into the construction of the house and try to avoid evil omens.

Besides, if skull is found at the centre of the land while digging, the digging must be extended to another one feet and proper tests should be conducted to eliminate evils things.

கடவுள் வணக்கம்
(சுவடிச் செய்தி)

விருத்தம்

1. வேதநான் மறைக ளாகி
விளங்குமும் மூர்த்தி யாகிப்
பூதலந் தனைப்ப டைத்த
புண்ணியன் தாளைப் போற்றித்
தீதிலா மயனார் சொன்ன
சிற்பசாஸ் திரமாம் நூலை
நீதியாய்த் தமிழி னாலே
நிலைபட உரைக்க லுற்றேன்.

இதன் பொருள் — இருக்கு, யசுர், சாமம், அதர்வண மென்னும் நான்கு வேதங்களாகியும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளாகியும் ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் நடத்தும் பொருட்டு அண்ட சராசரங்களைப் படைத்த கடவுளினது திருவடிக் கமலத்தைத் துதிசெய்து பஞ்ச முக ஸ்வரூபியாகிய பரம சிவத்தின் நெற்றிக் கண்ணினிடமாய்த் தோன்றிய ஆதி விஸ்வகர்மா வென்னும் மயனார் சொல்லிய மனைநூலைத் தமிழிலும் சொல்லலுற்றேன் என்றவாறு.

அவையடக்கம்

2. பழத்தொடு நெய்பாற் கண்டு
பகர்ந்ததோர் அடிசில் தன்னைக்
கழிப்பரோ நல்லோர் தாமும்
கலந்ததில் கல்கி டந்தால்
வழிப்படு சாத்தி ரத்தின்
வளமைபுல் லறிவன் கூற
பழுதுஇதில் உறினும் கற்றோர்
பாவிப்பார் நலமாய்த் தானே.

(இ-ள்) வாழைப்பழமும் நெய்யும் பாலும் கற்கண்டும் சர்க்கரையும் கலந்த அசனத்தில் கல்கிடந்தால் அந்தக் கற்களை மாத்திரம் நீக்கி இன்பமாகக் கொள்ளுதல் போல,

புல்லறிவாளனாகிய யான் சொல்லும் இந்நூலிற் பிழையுறினும் மேலோர் அக்குற்றங்களைக் களைந்து சிரேஷ்டமாகக் கொள்ளுவார்கள் எ-று.

சகுனம்

மனைக்கு ஏகும்போது சகுனம்

நல்ல சகுனம்

3. மனையது கோல வென்று
வந்தவ னோடு சிற்பி
கனிவுடன் வழிச்செல் போது
காணுமேல் காம ரூப
வனிதையர் தமைக்கண் டாக்கால்
வந்தது பாக்கிய மென்றே
நனிவுடன் சிரத்தை யாக
நன்மையாய் நடக்க நன்றே

(இ-ள்) மனைகோல வேண்டுமென்று யாரேனுமொருவர் வந்து அழைக்க அவரோடு சிற்பியானவர் போகும்போது காமரூபியாயிருக்கும் ஸ்திரீகள் எதிர்படில் நல்ல யோகம் என்று விரைவில் போய் மனைகோல நன்மையுண்டாம் எ-று.

4. மன்னிய நிறைகு டங்கள்
மாறாயம் சொல்லும் வண்ணான்
மின்னிய தயிர்பால் சோறு
விடக்குடன் மதுக்கு டங்கள்
கன்னியர் சாரை வேசி
கரும்புக்கட்டு எதிரே காணில்
மென்னிய இரட்டைப் பார்ப்பான்
எதிர்வரக் கருமம் நன்றே

(இ-ள்) சகுனமாவது—நிறைகுடம், வண்ணான், தயிர்க்குடம், பால்குடம், அன்னம், மதுக்குடம், யௌவன ஸ்திரீ, சாரை, தேவதாசி, கரும்புக்கட்டு, இரட்டைப் பார்ப்பார் இவர்கள் எதிர்வந்தால் மகா உத்தமம் என்று சொல்லவும் எ-று.

5. கொடிநரி கிள்ளை வேங்கை
கூர்முயல் கோழி கொக்கு
வடிவுள மஞ்ஞை ஓந்தி
மரையொடு பசுக்கள் மீதே

கடிகமழ் நாரை நாவி
கடுவாயன் செம்போத்து என்றும்
வடிவுடன் வலத்தில் சென்றால்
வந்திடும் கருமம் நன்றே.

(இ-ள்.) நரி, கிளி, வேங்கை, முயல், கோழி, கொக்கு, மயில், ஓந்தி, மான், பசு, மாடு, நாரை, அணிற்பிள்ளை, கழுதை, செம்போர்த்து இவைகள் வலதுபக்கம் சென்றால் மகா உத்தமம் எ-று.

தீய சகுனம்

6. செய்யபுன் செய்ய ஆடை
செம்மட்டை சுருட்டை நொண்டி
மெய்யினில் மயிர்இல் லாதான்
விரிதலை ஒற்றைக் கண்ணன்
தையல்நூல் இழந்த மாது
தடிக்கொம்பு காண்பான் ஆகில்
கையிலே கயிறுங் காண
காலன்வாய்ப் படுவன் தானே.

(இ-ள்) அழுக்கு வஸ்திரத்தை உடையவன், செம்பட்டைத் தலையன், சுருட்டைத் தலையன், நொண்டி, முகத்தில் மயிர் இல்லாதவன், விரிந்த தலையை உடையவன், ஒற்றைக் கண்ணன், விதவைப்பெண், தடிக்கொம்பை உடையவன், கயிறு உடையவன் இவர்கள் எதிரில் வந்தால் உயிருக்கு லயம் வரும் எ-று.

7. தலைவிரி மொட்டை மட்டை
தவசிசன் னியாசி பார்ப்பான்
முலையிலாக் கன்னி கும்பம்
மூக்கரை விறகுக் கட்டே
நலமிலா முதுநோ யாளன்
நாவிதன் குருடன் செக்கான்
பலரும்வந் தெதிரே காணில்
பலனிலாக் கருமம் ஆமே.

(இ-ள்) விரிதலை உடையவன், மொட்டைத் தலையன், பாம்பு, சன்னியாசி, ஒற்றைப் பிராமணன், முலையிலாப் பெண், புதுப்பானை, மூக்கு இல்லாதவன், வாணியன் இவர்கள் எதிரே வந்தால் ஆகாது எ-று.

பிற சகுனங்கள்

8. நிறைந்திடு குடமே காணில்
நிலையதாய்ச் செல்வம் எய்தும்
குறைந்தடு குடமே காணில்
குறிப்பதாய்த் துன்பம் உண்டாம்
இறைந்திடு பாம்பு காணில்
இயல்பிலாப் பகைஉண் டாகும்
அறைந்திடு நெருப்பு காணில்
அருங்குடி நசித்துப் போமே.

9. க்ரியது காணும் ஆகில்
காயத்தில் நோயே ஆகும்
உரியதோர் எலும்பு காணில்
உற்றகோ அனைத்துஞ் சாவாம்
பிரியமாய் உமியே காணில்
பெரும்பொருள் அனைத்துங் கேடாம்
எரியுறு விறகு காணில்
இகழ்ச்சியாம் வினையுண் டாமே.

10. ஈண்டிய தனத்தைக் காணில்
இன்பமே வந்து சேரும்
காண்தகு தவளை காணில்
கனம்பெறு தானியம் உண்டாம்
வேண்டிய அலவன் காணில்
மிகுந்ததோர் பாக்கியம் உண்டாம்
பாண்டத்தின் ஓடு காணில்
பலமுள்ள உயிரும் போமே.

மனையில் நிற்கும்போது சகுனம்

பல்லி சொல்லல்

11. வலமிகச் சொலினும் பல்லி
யில்லது யிடத்திற் கூற
பலமிக வுடைய தாகும்
பாங்குடைக் கருமம் நன்றாம்
குலமிக வளரு நாளுங்
கோற்குறு காதன் மைந்தர்
பலமிக வுடைய ராவர்
பல்லியின் இயல்பு தானே.

(இ-ள்) சிற்பியும் அம்மனைக்கு யசமானனும் அம்மனையில் சென்று நின்றால் கௌளி முன்பு வலமாகச் சொல்லில் அழகியது. பின்பு இடமாகச் சொல்லில் அம்மனைக் குரியவன் அரசர்களுக்குப் பிரியனாய்ப் புத்திர களத்திரத்துடன் சுகித்து வாழ்வான் எ-று.

புறா, பசு, எருது

12. **வெள்ளிய புறாவி னோடு**
விளங்கிய பசுவு மற்றும்
ஒள்ளிய மாவின் ஏறும்
உருவுடன் காணு மாகில்
தெள்ளிய கருமம் நன்றாம்
சீர்மனை கோலச் சீராய்
வள்ளியர் ஆகி வாழ்வார்
மண்ணின்மேல் மனையுள் ளோரே.

(இ-ள்) வெள்ளைப் புறாவும் வெள்ளைப் பசுவும் வெள்ளை ரிஷபமும் தங்கள் மனையிலே நின்றபோது காணில் உத்தமம் எ-று.

எறும்பு, செல், வண்டு, ஓணான்

13. **எறும்புதான் ஒழுங்கு விட்டே**
ஏகிடில் இயற்ற வேண்டாம்
கறம்புதான் கரையான் ஒந்தி
கண்டிடில் கருத வேண்டாம்
சுரும்புதான் கீண்டு யர்ந்து
தோன்றிடில் செய்ய வேண்டாம்
கரும்புபோல் மொழியி னாளே
காட்டும்ஈது இடரைத் தானே.

(இ-ள்) மேற்சொல்லிய இருவரும் மனையிற் சென்று நின்றபோது எறும்புகள் ஒழுங்குவிட்டுப் பலவாறாய்ச் சிதறினும், செல்லுகள் பரவியிருக்கினும், வண்டுகள் பூமியைத் துளைக்கினும், ஓணான் எதிர்படினும் மனைகோலலாகாது எ-று.

14. **பாங்குடைப் பறண்டை யுந்தன்**
பண்ணொடு வலத்திற் பாடித்
தாங்குடன் இடத்தி னில்போய்த்
தனிக்குரல் வழியு மாகில்

ஓங்கிய மனையும் நன்றாம்
ஒள்ளிய பயனுண் டாகும்
தீங்குதான் வருவ தில்லை
செப்பிய வண்ணந் தானே.

(இ-ள்) மேற்சொல்லிய இருவரும் மனையில் நிற்கும் போது பறண்டை வலத்திற்பாடி வலத்திலிருந்து இடத்திற் குப் போந்து வழியுமாகில் மனைக்குரிய எசமானனுக்குத் துன்பங்கள் நீங்கி நன்மையுண்டாம் எ-று.

15. தண்டொடு. வலையன் நீமத்
தபசியு முடவன் செக்கான்
கொண்டமூக் கரையன் கூனன்
குருடனும் எதிரே தோற்றக்
கண்டிடில் நசித்துப் போகும்
கருதிட வேண்டா மென்று
வண்டமர் குழலின் மாதே
வகுத்துரை செய்வர் தாமே.

(இ-ள்) குடியன், வலையன், சுடுகாட்டாண்டி, முடவன், செக்கான், மூக்கரையன், கூனன்,. குருடன் இவர்களை எதிரில் காணில் மனைகோல நசித்துப்போம் எ-று.

16. மதுக்குட முடன்இ றைச்சி
மற்றும்பால் நெய்யும் நீரும்
கதித்திடு துகிலுங் கட்டுக்
கழுத்திபூ ரணகும் பந்தான்
மதித்திடும் யானை தேரும்
ஆளுடன் புரவி தானும்
எதிர்க்கவே காணின் நன்றாம்
எய்திடும் கருமந் தானே.

(இ-ள்) மதுக்குடம், மாமிசம், பால், நெய், தண்ணீர், நல்ல புடவை, மங்கிலியஸ்திரீ, நிறைகுடம், யானை, தேர், ஒற்றையாள், புரவு இவைகள் எதிர்காணில் உத்தமம் எ-று.

நல்லநாளும் முகூர்த்தமுங்கொண்டு மனைநடுவில் கெல்லிப் பார்க்கும் இலக்கணம்

17. நல்லதோர் நாளும் பார்க்க
முகூர்த்தமும் பொருந்தக் கொண்டு
கெல்லியே பார்க்கும் போது
கரியெழில் நோய தாகும்

புல்லிய உமியே காணில்
பொருள்மிகக் கேடு சொல்லும்
வில்லிய விறகு காணில்
இவன்குலங் கேட தாமே.

(இ-ள்) நல்லநாளும் பட்சமும் பொருந்த முகூர்த்தங் கொண்டு மனைநடுவில் கெல்லிப் பார்க்கும்போது கரி யெழும்பில் நோயாகும்; உமி காணில் பொருட்கேடு வரும்; விறகு காணில் மனைக்குரியவன் குலம் நசித்துப்போம் எ-று.

18. திண்திறல் எறும்பும் தேளுஞ்
சிதலொடு கட்டை பொல்லா
அண்டமும் உகிருங் கேசம்
வந்திடில் முற்றும் பொல்லா
வெண்தலை எலும்பு காணில்
வெறுமையுங் கேடும் என்று
தண்தமிழ் நூல்கள் வல்லோர்
சாற்றினார் தன்மை யாலே.

(இ-ள்) எறும்பு, தேள், கறையான், கட்டை, முட்டை, நகம், மயிர், வெண்டலை எலும்பு இவைகளில் ஒன்று காணிலும் பொல்லாங்கு நேரிடும் எ-று.

மேற்கோள்

19. மண்டுகம் அரணை பல்லி
வளம்புகு சிலந்தி வட்ட
நண்டுஇவை தோன்று மாகில்
நன்மனைக்கு அழகது ஆகும்
கொண்டதில் உடும்பு பாம்பு
குருகுதேள் ஆமை பூரான்
வண்டுஇவை தோன்று மாகில்
அனற்பட்டு அழிந்து போமே.

(இ-ள்) தவளை, அரணை, பல்லி, சிலந்தி, நண்டு இவை தோன்றில் உத்தமம். உடும்பு, பாம்பு, தேள்கூடு, தேள், ஆமை, பூரான் இவைகள் தோன்றில் அந்தமனை அக்கினியால் அழிந்துபோம் எ-று.

20. ஈண்டிய தனத்தைக் காணில்
இன்பமே வருவ தாகும்
காண்தகு தனங்கள் சேரும்
கல்லுறு தவளை காணில்

பாண்டியம் பசுவின் கொம்பு
பலதானி யங்கள் செங்கல்
வேண்டிய லோகங் காணில்
மிகுந்திடுஞ் செல்வந் தானே.

(இ-ள்) தனப்புதையல் காணில் இன்பம் உண்டாம்; தவளை காணில் உடைமை யுண்டாம்; பசுவின் கொம்பு, பல தானியங்கள் செங்கல், பஞ்சலோகம் இவையுள் ஒன்று காணில் மிகுந்த செல்வமுண்டாம் எ-று.

21. பொன்னுடன் வெள்ளி செம்பு
பொருந்திடின் நன்மை யாகும்
பின்னுமோர் இரும்போடு ஈயம்
பித்தளை மத்தி மந்தான்
கன்னல்சேர் மொழியி னாளே
கருங்கல்லோடு எலும்பு காணின்
மன்னிய மனையாள் சாவள்
மாளுவன் கணவன் தானே.

(இ-ள்) பொன், வெள்ளி, செம்பு இவைகளில் ஒன்று காணில் உத்தமம்; இரும்பு, ஈயம், பித்தளை இவைகளில் ஒன்று காணில் மத்திமம்; கருங்கல், எலும்பு இவை காணில் அம்மனைக்குரியவன் மனைவி இறப்பதும்அன்றி அவனும் வியாதியால் மெலிந்து இறப்பான் எ-று.

2. Soil Experimentation

This part of the manuscript helps to know about the soil experimentation, the effects of it, and further experimentation of it.

The soil of land, where house is to be built

1. If brahmins build houses where soil is white, tastes sweet, spreads the smell of lotus, it would bring wealth and all good things to the house.

2. If kings build houses where soil is red, tastes sour, spreads the smell of horses, the house would be over-flowed by power and wealth.

3. If sutiras build houses where soil is black, tastes bitter and spreads the smell of grains, the house would flourish in all aspects.

4. If the community of sangam builds house where soil is green, tastes sour and salty they would become great.

5. Any people can build house in the land where the soil possesses good qualities. This would predict only good signs.

6. Apart from this, building house in the lands where the soils spread the smells of curd, ghee, honey. Blood, dundruf, fish, meat, birds, it means that it would bring destruction. The land would also be barren crops do not grow there.

Land's integrity

When the land's level is high in its northern side and is low in its southern side brings happiness.

Selection of the land

1. Brahmins — Southern part of the land — entrance facing North.
2. Kings — Western part of land — entrance facing East.
3. Vaichiyer — Northern part of land -- entrance facing south.
4. Sutras — Eastern part of land — entrance facing West.

After having selected lands according to these norms, the owner of land will be benefited and blessed when he gets an opportunity to have his relatives, ancestors, resided in the west or south side of his own house (land).

2. மண் சோதனை

(சுவடிச் செய்தியின் சுருக்கம்)

வீடுகட்டும் நிலத்தின் மண்ணைச் சோதித்து அவற்றிற்குரிய பலனை அறியவும், பிற சோதனைகளைச் செய்து வீடுகட்டும் நிலத்தைத் தேர்ந்தெடுக்கவும் உதவும் செய்திகளைக் கூறுவது இப்பகுதி.

வீடுகட்டும் மனையின் மண்

1. வெள்ளைநிறம், இனிப்புச்சுவை, தாமரைப் பூவின் மணம் ஆகிய தன்மைகள் உள்ள மனைகளில் அந்தணர் வீடுகட்டினால் எந்த நாளும் செல்வம் நிறைந்து எல்லா நலமும் பெற்று மங்களகரமாக வாழ்வார்கள்.

2. நல்ல சிவப்புநிறம், துவர்ப்புச்சுவை, குதிரை மணம் ஆகிய தன்மைகள் நிறைந்த பூமியில் அரசர்கள் வீடு கட்டினால் குபேர வாழ்வு என்றும் நிலைத்திருக்கும். எவ்விதத் துன்பமும் நெருங்காது.

3. கருத்தநிறம், கசப்பு, காரம் ஆகிய சுவை, தானியங்களின் மணம் ஆகிய தன்மைகளோடு விளங்கும் மனைகளில் சூத்திரர் வீடுகட்ட மிகவும் உத்தமம் ஆம்.

4. பச்சை நிறம், புளிப்புச் சுவை, உவர்ப்புச் சுவை உடைய நிலங்களில் சங்கம சாதியினர் வீடுகட்ட மிக உயர்வு அடைவார்கள்.

5. என்றும் நீங்காத இனிமையும், நல்ல மணமும் உடைய எந்தப் பூமியிலும் எந்தச் சாதியினரும் வீடு கட்டலாம். எவ்விதக் குறையும் இல்லை.

6. இவை தவிர தயிர், நெய், தேன், இரத்தம், மயிர்ச் சிகிடு, மீன், பட்சி, மோர் ஆகியவற்றின் மணமுள்ள நிலத்தில் மனை எடுத்தால் அம்மனை பாழ் அடையும். இந்த நிலத்தில் பயிர் செய்தாலும் நன்றாக விளையாது.

நிலத்தின் உயர்வு தாழ்வு

நிலத்தின் கிழக்குப் பக்கமும் வடக்குப் பக்கமும் தாழ்ந்தும், மேற்குப் பக்கமும் தெற்குப் பக்கமும் உயர்ந்தும் உள்ள பூமியானது நல்ல சுகத்தைக் கொடுக்கும்.

மனையின் திசை தேர்ந்தெடுத்தல்

1. அந்தணர்—தென்புற மனை—வடக்கு நோக்கிய வாயில்
2. அரசர்—மேற்புறமனை—கிழக்கு நோக்கிய வாயில்
3. வைசியர்—வடபுறமனை—தெற்கு நோக்கிய வாயில்
4. சூத்திரர்—கீழ்ப்புறமனை—மேற்கு நோக்கிய வாயில்

என்ற முறையில் தேர்ந்தெடுப்பது நன்மையைத் தரும்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மனைகளில் மனைக்கு உரியவர் தம்மைக் காட்டிலும் மூத்தவர்கள், குருக்கள், தாய் தந்தையர், தன் சுற்றத்தினருள் மூத்தவர்கள் ஆகியோர் தம் மனைக்கு மேற்கிலும், தெற்கிலும் இருக்குமாறு செய்து அவர்கள் மனைக்குக் கிழக்கிலும், வடக்கிலும் தம் மனையை அமைத்துக் கொள்ளுவது உயர்வை அளிக்கும்.

பூமியைச் சோதித்து வீடு கட்டும் நியமம்
(சுவடியில் உள்ளவை)

22. கூறும் பூமி குறிக்கும் வெளுப்புடன்
வீறும் தித்திப்பு விரும்பும் ருசியுடன்
பேரும் தாமரை பெருத்தபூ வாசனை
ஏறும் பூமி இருக்க மிகநன்றே.

23. நன்றாம் ஆரியர் நவில்மாளி கட்டிடில்
குன்றாது எந்நாளும் கூறக் குடும்பமும்
நன்றால் ஓங்கும் நலம்பெறு நற்சுபம்
வன்தா மரையாள் வகுக்கும்வா சமதே.

24. ஓதும் பூமி உயர்ந்த சிவப்புமாய்
காதல் ஆம்துவர் கருதிய பூமியும்
ஏத லாம்பரி எழில்மணம் போலவும்
பூத லத்தில் புகழ்மாளி கட்டவே

25. கட்டி னால்மாளி காசினி ராசர்கள்
பட்டி னம்வாழ் பகருங் குபேரன்போல்
கட்டம் நீங்கிக் காட்சி மிகப்பெற்று
அட்டி இல்லா தருமையாய் வாழ்வரே.

வெளுத்தபூமி, தித்திப்பான பூமி, தாமரைப்பூ வாசனை யுள்ள பூமி இவைகளில் பிராமணாள் வீடுகட்ட உத்தமம். சிவந்தபூமி, துவர்ப்புள்ள பூமி, குதிரை வாசனையுள்ள பூமி இவைகளில் அரசர்கள் வீடுகட்டினால் உத்தமம்.

கருத்தபூமி, கசப்பு, காரம் உள்ளபூமி, தானியவாசனை உள்ள பூமி இவைகளில் சூத்திரர் வீடுகட்ட உத்தமம்.

பச்சைப்பூமி, புளிப்பு பொருந்திய பூமி இவைகளில் சங்கம சாதிகள் வீடுகட்ட உத்தமம்.

நீங்காத மதுரமும் பரிமளமும் பொருந்திய பூமியில் சகலசாதிகளும் வீடுகட்ட உத்தமம்.

மனையில் மண்ணின் சுவை லட்சணம்

26. **தயிரொடு நெய்தேன் எண்ணெய்**
தாக்கிய உதிரத் தோடு
மயிர்பல சிறுமீன் பட்சி
மற்றுமோர் பொல்லா நாற்றம்
பயிரொடு பலமும் காணார்
பாழ்படும் மனைஎ டுக்கில்
வயிரவேல் விழியி னாளே
மண்களின் குணங்கள் தானே.

(இ-ள்) மண்மணமாவது—தயிர், நெய், தேன், எண்ணெய், இரத்தம், மயிர்ச்சிக்கு, மீன்கவுச்சி, பட்சி, மோர் இவ்விதத் தீய மணமுள்ள பூமியில் பயிரிட்டாலும் பலியாது; மனை எடுக்கில் பாழாம் எ-று.

மண் இலட்சணம்

27. **இனிதா கியமண் ணவைமா மறையோர்**
மனதா கியகார்ப் பதுமன் னவர்தாம்
புளிதா கியதாம் புளிதான் வைசியர்
சொனதா கியசூத் திரர்கைத் தமண்ணே.

(இ-ள்) இனிப்பாகிய மண் மறையோருக்காம். கார்ப் பாகிய மண் அரசருக்காம். புளிப்பாகிய மண் வைசியருக் காம். கைப்பாகிய மண் சூத்திரருக்காம் எ-று.

மனை உயர்வு தாழ்வு இலட்சணம்

28. **அருக்கனுஞ் சோமன் தானும்**
அழகுடன் மிகவே தாழ்ந்து
திருக்கிளர் மேற்குந் தெற்குந்
தெரிந்துயர் பூமி மேலாம்

வருத்தமில் வாழ்வார் நாளும்
மனையினை எடுத்துக் கொள்க
கருத்துயர் புலவர் யாருங்
காரணம் விளம்ப லுற்றார்.

(இ-ள்) சூரியனென்பது கிழக்கு; சந்திரனென்பது வடக்கு; இவ்விரண்டு திக்கும் தாழ்ந்து தெற்கும் மேற்கும் உயர்ந்திருக்கும் பூமி சுகத்தைக் கொடுக்கும் எ-று.

நான்கு வருணத்தாருக்கும் கிரகதிசை

29. அந்தணர் தென்திசை அரசர் மேற்றிசை
வந்திடு வணிகர்நல் வடக்கு வான்றிசை
தொந்தமில் சூத்திரர் தோன்றுங் கீழ்த்திசை
பிந்திய நடுவது பிரமன் தானமே.

(இ-ள்) பிராமணருக்குத் தெற்கு; அரசர்க்கு மேற்கு; வணிகருக்கு வடக்கு; வேளாளருக்குக் கிழக்குக் குடியிருப்பாகில் இலட்சுமிகரம் பொருந்தி வாழ்வார்கள். நடு பிரமஸ்தானமாகக் கொள்க எ-று.

நால்வகை வருணத்தார்க்கும் வாசஞ்செய்ய சார்பு மனை இலட்சணம்

30. திடமா கியதென் மனைமா மறையோர்
குடசார் பெனுமேன் மனைகோ வரசர்
வடசார் பெனுமா மனைவை சியராம்
துடரா கியகீழ் மனைசூத் திரரே.

(இ-ள்) தென்சார்பாய்—வடக்குப் பார்த்த மனை மறையோருக்காம்; மேற்சார்பாய்—கிழக்குப் பார்த்த வாசல் மனை அரசர்களுக்காம்; வடசார்பாய்—தெற்குப் பார்த்த வாசல்மனை வைசியருக்காம்; கீழ்ச்சார்பாய்—மேற்குப் பார்த்த வாசல்மனை சூத்திரருக்காம் எ-று.

தானும் தன்கிளை முதலானவர்களும் வாசஞ்செய்யும் மனை இலட்சணம்

31. நன்குலம் அவர்க்கும் நவிநாய னவர்க்கும்
தன்கிளையின் மூத்தவர் தனக்குமனை யில்தான்
தென்திசையின் மேற்றிசை இருப்புறின் நசிக்கும்
பொன்குலவு மேலையவை பூதல மவர்க்கே.

(இ-ள்) தன்னில் பெரியவர்களுக்கும் குருக்களுக்கும் தாய் தந்தையர்களுக்கும் தன்கிளைஞருக்கும் மூத்தவருக்கும்

தெற்கு, மேற்கு, தான் இருக்கலாகாது. அவர்களைத் தெற்கு, மேற்கு வைக்க நன்றாம் எ-று.

கிராமக்ஷேத்திர நிர்ணய இராசகேந்திர சொரூப லட்சணம்

32. சொல்லும் சுத்திரி தோன்றுகோல் போலவும்
வெல்லும் முக்கோணம் விளம்பிய போலவும்
புல்லும் நேத்திரம் புகன்றன போலவும்
கல்லு மேதலை கருதிய போலவே.

33. போல மத்தளம் புகல அடைக்காய்போல்
ஆல உள்ளும் அறிய புறம்புமாய்
கோல மான குவலயம் தன்னிலே
ஏக மாளி இசையவொண் ணாதிதே.

34. சேரும் உப்பு சிறக்கும் கிராமத்தில்
நேரும் மத்திபம் நெருங்கு மூலையிலும்
பாரும் பள்ளம் பகர்நிலம் ஆகிலும்
ஊரும் தண்ணீராய் ஓடும் நிலமதே.

35. வரவு சொல்லும் வகுக்கும் பலபேர்கள்
திறமுடன் கூடாது என்ற நிலத்திலும்
உறையும் கோபுரம் உற்ற நிலத்திலும்
திரையும் அரவம் சேர்ந்த புற்றும்இதே.

36. புற்றுடன் பேரும் பத்துவாய்ச் சீறிய
சற்று மேவும் சதுர்நிலம் ஆகிலும்
தொற்று மேவும் சுடலைப் பதியிலும்
சுத்தும் மாடுகள் சுழறும் மந்தையதே.

37. சேத மேற்குச் சிறந்த கிழக்குடன்
நீதி யாம்மனை நிறைதப்பு இருந்தாலும்
போத மேசலம் புகழ்நெருக்கு ஆகிலும்
வேதம் ஓத விளங்கிடும் நெய்யதே.

38. நெய்யு டன்தயிர் நேரும்புத் தேனுடன்
கொய்யும் எண்ணெய் குறிக்கும் உதிரமும்
பைய மச்சம் பகரும் சவமுடன்
வெய்ய பட்சி இருக்கைபோல் லாதிதே.

39. பொல்லாது இந்தப் புகலும் வழிமுறை
வல்லாண்மை கண்டு அறிந்து இவையெல்லாம்
தெல்லாம் உணர்ந்த சிற்பநூல் பண்டிதர்
கல்லாஞ் சிறந்தநூல் காட்சிஎய் தாதிதே.

கத்தரிக்கோல் போலும் மூன்று மூலை போலும் நேத்திரம் போலும் தலைபோலும் மத்தளம் போலும் கொட்டைப்பாக்கு போலும் உள்ளும் புறம்புமாய் இருக்கப் பட்ட பூமியிலும், உப்பு நிலமாக உள்ள கிராமத்திலும் அல்லது அதற்கு மூலையிலும், பள்ள நிலத்திலும், தண்ணீர் ஓடுகிற நிலத்திலும், பலர் கூடாது என்று தடுக்கும் நிலத் திலும், கோயில் நிலத்திலும், புற்று இட்டிருந்த நிலத்திலும், சுடுகாட்டு நிலத்திலும், ஆடுமாடு கட்டப்பட்ட நிலத்திலும், தண்ணீர் சமீபித்த நிலத்திலும், தேன், நெய், தயிர், எண் ணெய், உதிரம், மீன், சவம், பட்டி இவைகளின் வாசனை பொருந்திய நிலத்திலும் வீடுகட்டலாகாது. கட்டினால் பலவிதத் துன்பம் உண்டாகும்.

3. Predictions for the presence of anthills

The author gives the meaning for the presence of anthills in the following parts of land.

Part of the land	Name of Thisai (Direction)	Effects and meanings
East	Inthira Thisai	accumulation of wealth
South East	Agni Thisai	house would fall
South	Yaman Thisai	sufferings would continue
South west	Niruthi Thisai	brings fame
West	Varuna Thisai	blessed with children
North West	Vayu Thisai	death would happen
North	Kubera Thisai	blessed with happiness and wealth
North East	Isania Thisai	sickness would happen
Centre	Bramasathanam	death would happen

These nine Thisais should be taken as nine parts also. For example, If one wants to know meaning for the anthill in the parts of Indira Thisai and Agni Thisai, it would make one doubt about the reading of its related meanings. So it will be helpful, if all these nine Thisais are considered as nine parts.

To know these nine parts, the following diagram will be helpful. Land should be divided into three separate parts both horizontally and vertically.

Figure

N.W		N		N.E
	Vayu part	Kubera part	Isaniya part	
W	Varuna part	Bramas-thnam	Indira part	E
S.W.	Niruthi part	Yaman part	Agni part	S.E.

3. புற்று நிமித்தம்

(சுவடியில் உள்ளதன் சுருக்கம்)

மனையில் கீழ்க்காணும் ஒன்பது பகுதிகளில் எதிலேனும் புற்று தோன்றுமானால் அவற்றிற்குரிய பலன்கள் வருமாறு-

மனைப்பகுதி	திசைப்பெயர்	புற்று தோன்றினால் பலன்
1. கிழக்குப் பகுதி	இந்திர திசை	செல்வம் பெருகும்
2. தென்கிழக்குப்பகுதி	அக்கினி திசை	வீடு இடிந்து போகும்
3. தெற்குப் பகுதி	இயமன் திசை	துன்பம் தொடரும்
4. தென்மேற்குப் பகுதி	நிருதி திசை	புகழும் உயர்ந்த வாழ்வும் பெருகும்
5. மேற்குப் பகுதி	வருணதிசை	புத்திரப் பேறு உண்டு
6. வடமேற்குப் பகுதி	வாயு திசை	மரணம் ஏற்படும்
7. வடக்குப் பகுதி	குபேர திசை	சீரும் சிறப்பும் செல்வமும் பெருகும்
8. வடகிழக்குப் பகுதி	ஈசானிய திசை	நோய் தொடரும்
9. நடுமனைப் பகுதி	பிரம்ம ஸ்தானம்	மரணம் ஏற்படும்

புற்று தோன்றுவதால் உண்டாகும் நன்மை, தீமைகளைப் பார்க்க மேற்சொன்ன ஒன்பதினையும் திசை என்று மட்டும் கொள்ளாது ஒன்பது யாகம் எனக்கொண்டு பார்ப்பதே பொருத்தமுடையதாகும்.

இந்திர திசை, அக்கினித் திசை என்று கொண்டால் மனையின் அவ்வத்திசை ஓரப்பகுதிகளே கொள்ளப்பட்டு விடும். அவ்வத்திசையின் உட்பகுதிகளில் புற்று தோன்றினால் அதன் பலன் யாது என்பதை அறிவதில் ஐயம் தோன்றும். எனவே அவற்றை இந்திரபாகம், அக்கினி பாகம் என்பன போன்ற ஒன்பது பாகங்களாகக்கொள்ள வேண்டும்.

இப்பாகங்களை அறிய மனையின் நீள அகலங்களைக் கீழே படத்தில் காட்டியுள்ளது போல மும்மூன்று சம

பாகங்களாகப் பிரிக்க ஒன்பது சமபாகங்கள் கிடைக்கும். பிறகு, மேற்கூறிய முறைப்படி ஒவ்வொரு, பாகத்தையும் இந்திர பாகம், அக்கினி பாகம், இமயன் பாகம், நிருதி பாகம் என இவ்வாறே ஒன்பது பாகமும் கொண்டு பலன் அறிதல் வேண்டும்.

படம்

	வ.மே.	வ	வ.கி.	
	வாயு பாகம்	குபேர பாகம்	ஈசானிய பாகம்	
மே	வருண பாகம்	பிரம்ம ஸ்தானம்	இந்திர பாகம்	கி
	நிருதி பாகம்	இயமன் பாகம்	அக்கினி பாகம்	
	தெ.மே.	தெ.	தெ.கி	

மனையில் புற்று எழும் இலட்சணம்

(சுவடியில் உள்ளவை)

40. அறையும் இந்திரன் ஆன கிழக்கினில்
நிறையும் செல்வம் நெருங்கிப் பெருகிடும்
திறையும் அக்கினி தென்கிழக் காய்விடில்
குறையு மேமனை குழுறி இடியுமே.

41. போற்றும் ஏமன் புகலுந்தெற்கு ஆயிடில்
தோற்றும் துக்கம் தொடருமே மாந்தர்க்கு
ஏற்றும் நிருதி எங்கும்தென் மேற்கிடில்
நாற்றிசை கீர்த்தி நவில்வாழ்வு உண்டாமே.

42. கொண்ட வருணன் கூறுமேற்கு ஆயிடில்
வண்தமிழ்ப் பாவலர் வகுக்கும்செல் வங்களாம்
தண்டிடா: வாயு தரும்வட மேற்காகில்
பண்டி தங்கள்போய் யாது மரண்மே.

43. பாரு மேகுபே ரன்வடக் காய்விடில்
சீரும் செல்வமும் சிறப்பும்உண் டாகுமே
[illegible] ஈசன் வடகிழக் காய்விடில்
[illegible] விரோதி குடியும் நசியுமே.

44. பாரி யட்டமர் பகரும் நடுவினில்
சேரும் பிரமம் சிறக்க இவற்றின்முன்
கூறும் நட்டங் குறைந்திடும் போதெல்லாம்
கோரும் சிந்தை குறிக்குந்தெய் வங்களே.

45. வஞ்சி கேளும் வகுக்கும் தருமமாம்
மிஞ்சு பிரமம் மிகுத்திடும் தானத்தில்
செஞ்சொல் புற்று செழிக்கக் கிளம்பிடில்
கஞ்சன் ஆனைக் கருது மிகச்சாவே.

கிழக்கு	— இந்திரன்	மேற்கு	— வருணன்
தென்கிழக்கு	— அக்கினி	வடமேற்கு	— வாயு
தெற்கு	— இயமன்	வடக்கு	— குபேரன்
தென்மேற்கு	— நிருதி	வடகிழக்கு	— ஈசானியன்

இவர்களுக்கு நடுவில் பிரமம். இவற்றின் நன்மை சொல்லும் போது—தெய்வச் சிந்தை தரும் பிரமதானத்தில் புற்று எடுக்குமாகில் சாவு. கிழக்கு—செல்வம்; மேற்கு—புத்திரர் உண்டாம்; தென்கிழக்கு—மனை இடியும்; வடமேற்கு—மரணம்; தெற்கு—துக்கம்; வடக்கு—நன்மை; தென்மேற்கு—வாழ்வு உண்டாம்; வடகிழக்கு—வியாதி உண்டாம்.

புற்று இலட்சணம்—வேறு

46. இந்திரன் செல்வம் அக்கினி மனையும்
இடியுமே யமன்திசை நிற்க
அந்தமா நிருதி நன்மையாம் வருணன்
அருளிய புத்திர லாபம்

உந்திய வாயு துறக்கமாம் குபேரன்
ஓங்கிய தன்மை ஈசான்யன்
பிந்திய பிணியாம் பிரமதா னத்தில்
பெருகிய சாவுஎனப் புற்றே.

(இ-ள்) இந்திரபாகத்தில் புற்று உண்டாகில் செல்வ மானது விருத்தியாகும். அக்கினி பாகத்தில் உண்டாகில் மனையானது இடிந்து பாழாகும்.

யமன்திசை துக்கம் உண்டாகும்; நிருதி பாகத்தில் நன்மை உண்டாகும்; ஈசானிய பாகத்தில் பிணி உண்டாகும்; வருண பாகத்தில் புத்திர பாக்கியம் உண்டாகும்; வாயுபாகத்தில் அதிக துக்கம் உண்டாகும்; குபேர பாகத்தில் அதிக நன்மை உண்டாகும்; பிரமதானத்தில் உண்டாகில் மரணமாம் எ-று.

4. Laying Foundation

A pit of 1 feet width and 1 feet depth has to be dug out in the centre of land, and some water to be poured into it and some sweet smelling flowers have to be floated on the water. If the flower moves in the right hand direction, it signifies the prosperity and if the flower moves in the left hand direction it denotes suffering. So construction of the house should not be started at that time.

Laying foundation must be started on an auspicious day and time by the owner of the land with the presence of his family.

But it is practised so, the pit has not always been dug out in the centre itself.

Instead of digging the pit in the Isaniya part of the North East direction, the pit ½ feet depth being dug out after leaving 2½ feet. Then, the ritual prayer is done and the flower floating is also followed.

By considering this, a pit after much examination of direction of Vaastu Pursa's head and feet, after deleting 28 parts from the side of his head and 17 parts from the side of his feet, is dug it bring would prosperity.

The sign indicated by the act of flower-floating

When three or five persons pour water in the above said pit, and when the flower is allowed to float.

1. If it moves from East towards South, then towards West, North, it means it moves in the right hand direction. This indicates the prosperity of the land.

2. Instead, if it revolves towards North, that means, it is rotating in the left hand side. This suggests the forthcoming suffering and danger.

3. If the flower rotates in the right hand side and stops at the part of Isaniya Thisai (ie) in the North East, it means that the head of the family would get all blisses.

4. If the flower stops at Indira Thisai (ie) in the East, it would bring all wealth includings the wealth of herds. The head of the family would get fame in the field of art.

5. If the flower stops at Agni Thisai (ie.) in the South East, it reads that the housewife would become sterile and the wealth would be destroyed by robbery and fire. There would be also fear of snake.

6. If the flower stop at Iyaman Thisai, of South, the house would be dominated by melancholy thoughts. Evils and fears would increase day by day.

7. If the flower stops at Niruthi Thiśai, in the South West, it reads that it would bring wealth and prosperity.

8. If it stops at Varuna Thisai in the West, it suggests the fulfilament of all wishes.

9. If it stops at Vayvu Thisai, in the North west, it indicates the destruction of the house. House would turn graveyard.

10. If it stops at Kubera Thisa, in the North, it would bring long life, prosperity to the house. The family would also be blessed with children.

Water has to be poured in the pit in the evening. When it is examined on the next morning:

1. If there is atleast 3 litre of water, it suggests goodness. If there is no water and the soil is found as clay it is also suggestive of goodthings.

2. If there is no water, it is the sign of humiliation.

3. If there is no water and the land is found cracked, it predicts sickness and imprisonment for the house owner.

After the pit has been dug, it has to be filled with the excavated soil. And when one finds that the pit is filled, and there is also some soil remaining, it means all goodness and profit.

If there is no soil remaining, it reads a moderate and balanced income of the house.

If the pit needs some more soil to be filled up it predicts the scarcity of income in that house.

4. மனை கோலுதல்
(சுவடிச் செய்தியின் சுருக்கம்)

குழியில் நீர்விட்டு அறியும் நிமித்தம்

மனையின் நடுவில் ஒரு முழ அகலம், ஒரு முழ ஆழம் உடைய சதுரமான ஒரு குழியைத் தோண்டி அக்குழியினுள் தண்ணீரை ஊற்றி அதன்மேல் மணமுள்ள மலரை இடுதல் வேண்டும். அந்நீரில் மலர் வலமாகச் சுற்றி வருமானால் அம்மனையில் வீடுகட்ட எல்லா நன்மையும் உண்டாகும். இடமாகச் சுற்றி வருமானால் துன்பம் நேருமாதலின் அப்போது வீடுகட்டத் தொடங்குதல் கூடாது என்பது நூலினுள் கூறப்படும் செய்தி.

நல்லதோர் மங்கல நாளினைத் தேர்ந்தெடுத்து அந்த நாளில் குறித்த நேரத்தில் மனைக்கு உரியவன் தன் குடும்பத்துடன் சிற்பியையும் அழைத்துச் சென்று மனைகோலுதல் என்னும் நிகழ்ச்சியாக இச்செயலைத் தொடங்குவது வழக்கம். மனை கோலும் நிகழ்ச்சியைத் தொடங்குங்கால் இவ்வாறு ஒரு குழியினைத் தோண்டி நீரும் மலரும் விட்டுப் பார்த்தல் நிகழும். பெரும்பாலும் இக்குழியினை மனையின் நடுவே தோண்டுவது இல்லை.

வீடு கட்டுவதற்குரிய நீள அகலங்களைக் கோடிட்டு வரைந்து கொண்டு அந்த இடத்தின் ஈசானத் திசையாகிய வடகிழக்கு மூலையில் இக்குழியினை முழுமையாகத் தோண்டாமல் இடையில் திட்டாக ஒரு சாண் அகல மண்ணை விட்டுவிட்டுச் சுற்றிலும் ஒருசாண் அகலத்தில் குழி எடுப்பதே பெரும்பாலும் வழக்காற்றில் இருந்து வருகிறது. பிற உரிய முறைப்படி பூசை முதலியன செய்து முன் கூறியபடி குழியில் நீரும், மலரும் விட்டுப் பார்ப்பது உண்டு. ஆனால்,

''வாஸ்து புருஷன் விழிநோக்கில்
மனைக்கு முகூர்த்தம் செய்யவேண்டில்
பார்த்து மனையை நாலேழாய்ப்
பகிர்ந்து காலில் பதினேழும்
சாத்தும் தலையில் ஈரைந்தும்
தள்ளி நடுவில் ஒருபாகம்
ஏத்த மாக முகூர்த்தமிட
இராச சம்பத்து உண்டாமே''

என்பதனால், வாஸ்து புருஷன் வீற்றிருக்கும் நிலை அறிந்து (மனைகோலும் மாதத்தில் வாஸ்து புருஷனின் தலை, கால் இருக்கும் திசை அறிந்து) தலை, கால் உள்ள பக்கத்தை 28 பங்காகச் செய்து தலைப்புறம் பத்துப் பாகமும் கால்புறம் பதினேழு பாகமும் தள்ளி இடை நின்ற ஒரு பாகத்தில் இக்குழியினை எடுத்து மனை கோலுதலே சிறப்புடைய தாகும் என்பதை அறியவேண்டும்.

மலர் சுற்றி நிற்கும் அறிகுறி

மேலே கூறியபடி குழிதோண்டி பூசை முதலியன செய்து மூவர் அல்லது ஐவர் சேர்ந்து வடக்கு நோக்கி நின்று குழியின் கிழக்குப் பக்கத்தில் நீரை ஊற்றி மலரை விடுவது வழக்கம். அவ்வாறு விடப்பட்ட மலர்,

1. கிழக்கிலிருந்து தெற்கு நோக்கி நகர்ந்து பின் மேற்கு, வடக்காகச் சுற்றி வருமானால் அது வலமாகச் சுற்றுதல் ஆகும். இவ்வாறு வலம் சுற்றினால் அது வலமாகச் சுற்றுதல் ஆகும். இவ்வாறு வலம் சுற்றினால் அம்மனையில் வீடுகட்ட உயர்ந்த வாழ்வும், எல்லாச் செல்வமும் புழும் பெற்றுச் சுகவாழ்வு பெறுவார்கள்.

2. அவ்வாறு இன்றி, கிழக்கில் விடப்பட்ட மலர் வடக்காகச் சுற்றி வருமானால் அது இடமாகச் சுற்றுதல் ஆகும். இவ்வாறு இடம் சுற்றினால் அம்மனையில் வீடுகட்ட மிகுந்த துன்பமும், பலவகை ஆபத்துகளும் நிகழும் ஆதலின் அப் போது வீடுகட்டக் கூடாது.

3. அம்மலரானது வலமாகச் சுற்றிவந்து இறுதியில் ஈசானியத் திசையாகிய வடகிழக்குத் திசையில் நின்றால் வீட்டுத் தலைவன் எல்லாவகையான செல்வமும் பெற்றுத் திகழ்வான்; தீர்க்காயுளோடு விளங்குவான்; புத்திரப் பேறு பெறுவான்; பெரியோருக்கு அன்னமளிக்கும் பெருமை பெற்று வாழ்வான்.

4. இந்திரன் திசையாகிய கிழக்குத் திசையில் வந்து அம்மலர் நிற்குமானால் எல்லாவகையான செல்வமும் தீர்க்காயுளும் புத்திரப் பேறும் பெறுவதோடு பலவகைக் கலைகளிலும் வல்லவனாக விளங்குவன். கால் நடைச் செல்வங்களும் வந்துசேரும்.

5. அம்மலரானது அக்கினித்திசை என்று சொல்லப் படும் தென்கிழக்குத் திசையில் வந்து நிற்குமானால் அவ் வீட்டில் இல்லத்தலைவனின் மனைவி மலடி ஆவாள்; பாம்பினால் அச்சம் உண்டாகும்; நெருப்பினாலும் திருடர் களாலும் பொருள் அழியும்.

6. இமயன் மூலை என்று சொல்லப்படும் தென்திசை யில் அம்மலர் வந்து நின்றால் வீட்டுக்கு உரியவன் உள்ளத் தில் என்றும் ஆழ்ந்த சிந்தனையும் வருத்தமும் தோன்றும்; பலரால் கலகம் உண்டாகும்; தீமையும், பிணியும், அச்சமும் நாளுக்குநாள் அதிகமாகும்.

7. கன்னிமூலை, நிருதித் திசை என்று சொல்லப்படும் தென்மேற்குத் திசையில் அம்மலர் வந்து நிற்குமானால் நவதானியங்கள் நிறையும்; பொன்னும் பொருளும் நிறைந்து ஒளிவீசும்; அனைத்துச் செல்வமும் கடல் போலப் பெருகி வந்தடையும்.

8. வருணதிசையாகிய மேற்குத் திசையில் மலர்வந்து நின்று விடுமானால் அவ்வீட்டில் பெருஞ் செல்வம் உண்டா கும்; தீவினைகள் அழியும்; எண்ணிய காரியம் வெற்றி பெறும்; வீட்டுக்கு உரியவன் கருணை உள்ளம் கொண்டவ னாக இருப்பான்.

9. வாயுமூலை என்று சொல்லப்படும் வடமேற்குத் திசை யில் அம்மலரானது வந்து நிற்குமானால் காசம் முதலிய நோயினால் மரணம் உண்டாகும்; கள்ளரால் பொருள்கள் அழியும்; அம்மனையே பேய்வாழும் சுடுகாடாய் மாறிப் போகும்.

10. குபேரதிசை என்னப்படும் வடதிசையில் வந்து அம்மலர் நிற்குமானால் செல்வம் பெருகும்; ஆயுள் விருத்தி யடையும்; புத்திரப்பேறு உண்டாகும்; அருள் உள்ளம் தோன்றும்; அதனால் தலைவன் பலருக்கும் பொருள் உதவி செய்து புண்ணியமும் புகழும் பெறுவான்.

குழியில் நீர்விட்டு மறுநாள் பார்க்கும் குறி

வெட்டப்பட்ட குழி நிறையுமாறு மாலைநேரத்தில் நீர் ஊற்றி வைக்கவேண்டும். மறுநாள் சூரியன் தோன்றும் நேரத்தில் வந்து பார்க்க,

மூன்றுபிடி நீரேனும் அக்குழியில் தேங்கி நிற்குமானால் மிகவும் நன்மை தரும் மனையாகும் எனக்கொள்ளுதல் வேண்டும். நீர் இன்றிச் சேறாய் இருப்பினும் நன்மைதரும்.

நீர் முழுமையும் வற்றிப் போனால் தாழ்வு நிலை அடையும்.

நீர் வற்றிப் பூமி வெடித்திருக்குமானால் நோயும், சிறைத் தண்டனையும் வந்துசேரும் என்று தெளிதல் வேண்டும்.

எடுத்தமண்ணை அடைத்துப் பார்க்கும் குறி

மனைகோலும் முகூர்த்தமாகத் தோண்டிய குழியிலிருந்து எடுத்த மண்ணை மீண்டும் அக்குழியில் இட்டு நிரப்பிப் பார்க்க வேண்டும்.

குழி நிறைந்து மண் மிகுதி இருந்தால் அவ்வீட்டில் வருவாய் மிகுந்து இலாபம் பெருகும் எனக் கொள்ள வேண்டும்.

மண் குழிக்குச் சரியாக நிரம்புமானால் அவ்வீட்டில் வரவும் செலவும் சமமாகி உயர்வு தாழ்வு இன்றி இல்லறம் நடைபெறும் என்பது அறியலாம்.

குழிக்கு மண் போதாமல் மண் குறைந்து குழி நிரம்பாமல் காணப்படுமேயானால் வருவாய் குறைந்து செலவு மிகுதியாகிக் குடும்பம் ஏழ்மை நிலை அடையும் என்று தெளியலாம்.

முகூர்த்தம் செய்யும் விபரம்

(சுவடியில் உள்ளவை)

47. தாழவே முழங்கால் ஆழம்
    தனிஉள்ள குழியை வெட்டி
நீள்குடம் நீரை விட்டு
    நின்றுபத் திரியைப் போட்டு
வாழ்வலம் புரியது ஆகில்
    வாழ்வுமே மிகஉண் டாகும்
நீள்இடம் புரியது ஆகில்
    நிதியுடன் தாழ்வும் உண்டாம்
உள்விழுந்து உறையும் ஆகில்
    உடன்பகை மிகஉண் டாமே.

48. கொட்டு முறிதல் முனைமுறிதல்
கோத்த கயிறு தானறுதல்
நட்ட மாயப் பாற்பிடுங்கி
நடுவே முறித்துத் தாணிசைதல்
விட்ட வாசல் மாற்றுதல்மேல்
படைத்த படிவைக்குதல் இவைசெய்தால்
சட்ட நாளின் வாழ்வுஇழந்து
சாவது திண்ணம் அதுதானே.

வாஸ்து விழி நோக்கில் இருபத்தெட்டுப்பங்கில் முகூர்த்தம்

49. வாஸ்து புருஷன் விழிநோக்கில்
மனைக்கு முகூர்த்தம் செயவேண்டில்
பார்த்து மனையை நாலேழாய்ப்
பகிர்ந்து காலில் பதினேழும்
சாத்தும் தலையில் ஈரைந்தும்
தள்ளி நடுவில் ஒருபாகம்
ஏத்த மாக முகூர்த்தமிட
இராச சம்பத்து உண்டாமே.

(இ-ள்) வாஸ்துவின் விழிநோக்கு அறிந்து முகூர்த்தஞ் செய்வது ஆகையால் அந்த மனையை இருபத்து எட்டுப் பாகஞ்செய்து காலில் பதினேழு பாகம் தள்ளித் தலையில் பத்துபாகம் தள்ளி நடுவில் ஒரு பாகத்தில் முகூர்த்தஞ் செய்தால் இராச சம்பத்து உண்டாம் எ-று.

50. துலங்கிய குழியைக் கெல்லி
சுத்தநீர் விட்ட போது
வலம்புரி வருமே யாகில்
வாழ்வொடு சம்பத்து உண்டாம்
இலங்கிஅது இடமே யாகில்
இயற்றிடில் மனையை அக்கால்
குலமுதல் நசித்துத் தானும்
கொடியநோய்க்கு இரையா வானே.

குழியில் நீரும் பூவும் விட்டுப் பலாபலன் அறியும் விதி

51. வாழ்மனை நடுவே நான்கு
வடிவுடன் ஒருமு ழத்தில்
ஆழமும் அகலங் கெல்லி
அதனுள்நீர் பூவும் விட்டால்

வாழ்கதி ரோனை நோக்கி
வலம்புரிந்து ஓடில் வாழ்வாம்
சூழ்புலி இடமாய்ச் சுற்றில்
தொல்லைநோய் ஆகும் அன்றே.

(இ-ள்) மனைக்கு நடுவில் சதுரமாக ஒருமுழம் அகலமும் ஒரு முழம் ஆழமுமாகக் கெல்லி அக்குழியில் தண்ணீரும் பூவும் விட்டால் பூவும் நீரும் வலமாகச் சுற்றிவரில் நன்மை; இடமாகச் சுற்றிவரில் துன்மை ஏ-று.

மேற்சொல்லிய குழியில் சாயரட்சை
நிறைநீர் விட்டுப் பார்த்தல்

52. நிறையநீர் இட்டு வைத்து
நீள்கதிர் எழுந்த போது
முறைமையாய் வந்து பார்த்தால்
முப்பிடி நீரே நன்றாம்
தரையினில் வற்றி யாக்கல்
தாழ்வுறப் பிளக்கும் ஆகில்
சிறையொடு நோயாம் என்று
தெரிந்தவர் உரைத்த வாறே.

(இ-ள்) மேற்படி குழியில் அந்திப்பொழுதில் நிறையநீர் விட்டு வைத்து சூரிய உதயத்தில் வந்து பார்த்தால் மூன்று பிடி நீர் இருக்கில் மிகவும் நன்றாம்; நீர் எல்லாம் வற்றிப் போனால் பொல்லாங்குண்டாம்; நீர் வற்றிப் பூமி பிளந் திருக்கில் சிறையொடு நோய் முதலாகிய துன்பம் உண்டாம். எ-று.

புட்பங்கள் விடுவதற்கு இலட்சணக் குறி

(வேறு)

53. தாழ்விலா மனையின் மீது
சதுரமாய் ஒருமு ழத்தில்
ஆழமும் அகலம் கெல்லி
அதனுள்நீர் பூவை விட்டால்
வாழ்கதி ரவனை நோக்கி
வலம்புரிந்து ஓடில் வாழ்வார்
ஆழ்கதிர் இடமாய்ச் சுற்றில்
சொல்மனை எடுக்கத் தீதே.

(இ-ள்) மனைக்கு நடுவில் நாற்சதுரமாய் ஒரு முழ அளவு ஆழமும் அகலமும் கெல்லி, அதில் தண்ணீர்விட்டு, ஒரு மலரைக் கையிலெடுத்து பரமசிவத்தைத் தியானித்து அதில் புரோட்சித்தால் அது கதிரோனை நோக்கி வலமாகச் சுற்றிவரில் அதிக வாழ்வும் சம்பத்தும் கீர்த்தியும் இராஜப் பிரதிஷ்டையும் வாகனாதிகளும் அதிகரித்துச் சுபேட்சை உண்டாகும். அம்மலரானது இடப்புறம் சுற்றில் அம்மனை எடுக்கில் அதிக துன்பங்களை விளைவிப்பதும் அன்றி எக்காலமும் மனவியாகூலமும் வாராத ஆபத்துகளும் வரும் என்று பெரியோர் சொல்லுவர் எ-று.

அஷ்டதிக்கு இலட்சணம்

54. **ஈசானிய மூலை தன்னில்**
இன்பமாய் இனிது கொண்டு
வாசமாம் அதனில் நின்றால்
வரிசையும் வாழ்வும் உண்டாம்
போசனம் பெரியோர்க்கு எல்லாம்
பொருந்திய மனிதன் ஆவான்
வாசமின் குழலி னாளே
மயனுரை நூல்கண் டாயே.

(இ-ள்) ஈசானிய பக்கம் என்று சொல்லப்படுகின்ற பரம சிவத்தினது பக்கத்தில் பரிமளம் பெருந்திய மலரானது வந்துநின்றால் கனக ஐஸ்வரியமும் தீர்க்காயுசும் புத்திர சம்பத்தும் வாழ்வும் மேன்மேலும் விருத்தியாய்ப் பெருகி நீடூழிகாலம் நிலைநிற்கும். இது அன்றி பெரியோர்களுக்கும் தபோதனர்களுக்கும் அன்ன-பானாதி கொடுக்க வல்லவ னாய் இருப்பான் எ-று.

55. **இந்திரன் மூலை தன்னில்**
இயல்புடன் கிழக்கில் நின்றால்
செந்திரு வாசம் ஆவாள்
செம்பொன்னும் சேரும் இன்ப
மைந்த்ரைப் பெற்று வாழ்வார்
வளர்கன்று காலி சேரும்
முத்தவே மயனார் சொன்ன
முறைமைநூல் இதுகண் டாயே.

(இ-ள்) இந்திரன் திக்கில் பரிமளம் பொருந்திய மலரா னது நிற்குமாகில் அதிக சௌந்தரிய இலட்சுமி விலாசமும்

தனதானிய சம்பத்தும் சந்தான பாக்கியமும் தீர்க்காயுசும் ஆயுராரோக்கியமும் மன்மத கிரீடையும் அறுபத்து நான்கு கலைஞானமும் பதினெண் புராணங்களும் நான்கு வேதமும் ஆறு சாஸ்திரமும் பொருந்துவதும் அன்றி பசுக்கள் முதலிய கறவைகளும் சேரும் எ-று.

56. அக்கினி மீதில் நின்றால்
ஆயிழை மலடி ஆவள்
செக்கர்வாள் அரவம் தீண்டும்
தீப்படும் மனைஎ டுக்கில்
தொக்கது மிகவும் உண்டு
சோரங்கள் கலகம் உண்டாம்
இக்கரு மயனார் சொன்ன
இசையுநூல் இதுகண் டாயே.

(இ-ள்) அக்கினித்திக்கில் வாசம் வீசுகின்ற புட்பமானது வந்து நிற்குமாகில் கற்பு நிலைமை பொருந்திய பெண் சாதியானவள் மலடியாவாள். இது அன்றி விஷத்தைத் தரா நின்ற பாம்பினால் பயமும் அச்சமும் உண்டாகும். அக்கினிச் சுவாலையினாலும் கள்வர்கள் பயத்தினாலும் பொருள் சற்பாத்திரருக்கு உதவாமல் யசமான் நாசமாம் எ-று.

57. அந்தகன் திக்கு மூலை
அன்புடன் வந்து நிற்கில்
சிந்தனை மிகவும் உண்டாம்
செருக்குதாம் கலகம் உண்டு
பிந்திய தீமை யோடு
பிணியினால் அச்சம் உண்டாம்
செந்தமிழ்ப் புனைந்த பாடல்
தீதிலா மயன்சொன் னாரே.

(இ-ள்) இயமன் மூலை என்னும் தெற்குத் திக்கில் வாசம் வீசும் மலரானது வந்து நிற்குமாகில் மனத்தில் சிந்தனையும் வியாகூலமும் செருக்கும் பல பேரால் கலகமும் தீங்காகிய காரியமும் தீமை, பிணி, அச்சம் முதலியவைகளும் அதிகரித்து உண்டாம் எ-று.

58. கன்னி மூலையிலே நின்றால்
கைப்பொருள் மிகஉண் டாகும்
அன்னமும் தனமும் சேரும்
ஆயிழை வந்து நிற்பள்

பொன்னொடு தானி யங்கள்
பொருந்திய செல்வம் உண்டாம்
முன்னமே மயனார் சொன்ன
முறைமைநூல் இதுகண் டாயே.

(இ-ள்) கன்னிமூலையில் மலர்வந்து நிற்கில், பொருளும் அன்னமும் தனகனகமும் இலட்சுமிப் பிரகாசமும் நவ தானிய இலாபமும் பிறவிச் செல்வமும் எந்நாளும் நீங்கா மல் வற்றா சமுத்திரமாய் மேன்மேலும் பெருகியுண்டாம் எ-று.

59. வருணன்தன் மேற்கு நோக்கி
வந்துமே நிற்கும் ஆகில்
இருநிதிச் செல்வம் உண்டாய்
இருக்குமே வினையும் மாறி
கருதிய கருமம் நன்றாம்
கருணையும் பெற்று வாழ்வார்
மருவிய கனதை உண்டாம்
வளம்பெறு மயன்சொன் னாரே.

(இ-ள்) வருணன் மூலையில் அழகும் வாசமும் பொருந் திய பூவானது வந்துநிற்கும் ஆகில் நின்ற செல்வம் அழியாது நிற்பதுமல்லாமல் நினைத்த காரியமும் தொழில்களும் செய மாகும். எ-று.

60. வாயுவின் மூலை தன்னில்
வந்துடன் நிற்கும் ஆகில்
காயுநோய் கொண்டு சாவன்
களவினால் பொருளும் போகும்
பேயுமே பிடித்துக் கொள்ளும்
பிணம்சுடு காடது ஆகும்
சேயுமே சாகும் என்று
செயல்பெறு மயன்சொன் னாரே.

(இ-ள்) வாயு மூலையில் விகசிதம் பொருந்திய மலர் வந்து நிற்குமாகில் பதினெண்காசம் என்னும் க்ஷயரோகத்தி னால் மரணமும், சோரர்கள் களவினால் பண்டிபண்டாரம் முதலிய பொருள் சேதமும் அன்றி அம்மனையானது அலகை வாழும் சுடுகாடாகும். அன்றியும் சகலபாக்கியமும் அழிந்து போம் எ-று.

61. குபேரன்தன் திக்கு நோக்கி
குணம்பெற நிற்கும் ஆகில்
விபரமாய்ப் பொருள்கை கூடும்
வேண்டிய சொர்ணம் சேரும்
சபைநலம் பெரியோன் ஆவன்
தனம்சிந் தனைஉண் டாகும்
அபயம்என் றோரைக் காப்பன்
அருள்பெறு மயன்சொன் னாரே.

(இ-ள்) குபேரன் திக்கில் விநோதம் பொருந்திய மலரா னது வந்து நிற்குமாகில் தனதான்ய சம்பத்தும், புத்திர சந்தானமும், ஆயுள் விருத்தியும், சபையோக்கியமும் பெற்று அதர்மசிந்தை நீங்கி தர்ம சிந்தை ஓங்கி அபயம் என்றவரைக் காத்துப் பொருள் உதவி செய்து வரப்பட்ட மகாபுண்ணிய வானாகவும் இருப்பான் எ-று.

குழியிலெடுத்த மண்ணை அடைத்தல்

62. அளந்ததோர் குழியின் மண்ணை
அகழ்ந்துஅதன் மேலே யிட்டால்
வளர்ந்திடிற் செல்வ முண்டாம்
ஒத்திடில் மிகுதி யில்லை
குளந்தனில் குறையு மாகிற்
குறைந்திடும் சம்பத்து அன்றே
உளந்தனில் கருதி நல்லோர்
உரைத்தனர் புவியின் மாதே.

(இ-ள்) முன் கெல்லின குழியிலே எடுத்த மண்ணைக் கொட்டினால் மண்மிஞ்சியிருக்கில் இலாபமுண்டாம்; ஒத் திருக்கில் வரவும், முதலும் (செலவும்) சமமாகும்; குறைந் திடில் செல்வங்குறைந்து செலவுமிகும் எ-று.

குழிகெல்லி மண் எடுத்துப் பார்க்கும் இலட்சணம்

வீட்டுக்குக் கர்த்தா ஆனவன் தன் முழத்தால் ஒரு முழ அகல நீளம், ஒரு முழம் ஆழம் நான்கு பக்கமும் கீழ் ஆழ மும் சரியாய்ப்பார்த்துப் பள்ளம் எடுத்து, மறுபடியும் அந்த மண்ணை அப்பள்ளத்தில் நிரப்பிப் பார்க்கும் போது—

மண் மிகுந்தால் சுபம்.
சரியாய் இருந்தால் சமமாய் இருக்கும்.
குறைவாய் இருக்குமாகில் தரித்திரம்.

5. The Signs indicated by the art of breaking the Coconut

When the function for laying foundation is being carried out, coconut-breaking becomes an important part. Much significance lays on the breaking of the coconut and the way it gets broken.

1. If the coconut gets broken with its upper part having larger portion and its lower part having smaller portion, it can be inferred that Goddess Lakshmi would bless that house.

2. If the coconut gets broken with ¾ of upper part and with ¼ of lower part, it would bring happiness to that house.

3. If the coconut gets broken with 3/5 of upper part and with 2/5 of lower part it would bring wealth to that house.

4. If the coconut is well-grown so that when it is broken if it is struck by the nerve of the coconut, then it suggests of goodness to the house and the people would live a long life.

5. While breaking the coconut, a small-part of coconut kernel follows into lid-part, it indicates that house would save pearls.

6. If it is broken vertically at the centre it cautions against the forth coming of sufferings.

7. If it gets broken with both parts equally, it means that it would be good.

8. If it is broken into 4 or 6 pieces it would also bring sufferings.

9. If the eye-part of the coconut falls on the man, the man would die.

10. If the coconut gets broken open and when its part falls separately poverty would attack that house.

11. If the shell of the coconut falls on the body, it would bring sickness.

12. If the shell gets broken and falls on the earth, the owner of the house would become poor.

5. தேங்காய்க் குறி

(சுவடிச் செய்தியின் சுருக்கம்)

மனை முகூர்த்தம் செய்யும்போது தேங்காய் உடைத்தால் அது உடையும் தன்மைகளுக்கு ஏற்ற பலன்களாவன—

1. குடுமி உள்ள முடிப்பக்கம் பெரியதாகவும், அடிப் பக்கம் சிறியதாகவும் உடைந்தால் அவ்வீட்டில் இலக்குமி அருள் உண்டாகும்.

2. முடிப்பக்கம் மூன்று மடங்கும், அடிப்பக்கம் ஒரு மடங்குமாக உடைந்தால் அந்த வீட்டில் மிக்க மகிழ்ச்சி உண்டாகும்.

3. முடிப்பக்கம் ஐந்தில் மூன்றுபாகமும், அடிப்பக்கம் ஐந்தில் இரண்டு பாகமுமாக உடையினும் அக்குடும்பத்தில் செல்வம் உண்டாகும்.

4. நரம்பு பிடித்திருந்தால் அக்குடும்பத்திலுள்ளார் நீடூழி வாழ்வார்கள்.

5. கடுகளவு துண்டு தேங்காய் முடியினுள் விழுந்தால் அவ்வீட்டில் இரத்தினம் சேரும்.

6. நடுவே நெடுக்காகப் பிளந்து போமானால் மிகுந்த துன்பத்தைத் தரும்.

7. சரிபாதியாக நேராய் உடைந்தால் நன்மையே தரும்.

8. நான்கு அல்லது ஆறுசுக்கல்களாக உடைந்தாலும் மிகுந்த துன்பத்தைத் தரும்.

9. தேங்காய்க் கண் உள்ள பகுதி உடல்மேல் வந்து விழுந்தால் வீட்டுக்கு உரியவன் மரணமாவான்.

10 ஓடு தனியாகப் பிரிந்து உடைந்தால் வறுமை உண்டாகும்.

11. ஓடு உடைந்து மேலே தெறித்தால் நோயுண்டாகும்

12. ஓடு உடைந்து பூமியில் விழுந்தால் வீட்டுக்குரியவன் வீடு வாசலை விற்று வறுமை அடைவான்.

தேங்காய்க் குறி

(சுவடியில் உள்ளவை)

தேங்காயுடைக்கும் குறி

63. அடித்ததோர் தேங்காய் தானும்
அகலவே சிதறி விட்டால்
முடித்ததோர் மௌலிக்கு ஆகா
முகிலுடன் ஓடும் ஆகில்
எடுத்ததோர் சிற்பன் கையில்
இடறியே விழும தாகில்
வடித்தது சிவாச கங்கள்
வாழ்வில்பா லாடும் என்றே.

64. முடிபருத்து வட்டமிடிற் திருவே சேரும்
மூன்றில்ஒரு பங்குடைந்தால் செயசந் தோஷம்
நெடியஐந்து இரண்டிற்குத் துலையாச் செல்வம்
நீங்கிநரம் பேபிடித்தால் நீடு வாழ்வாம்
கடுகுதனை உள்ஆனால் இரத்தினம் சேரும்
கனக்கவந்து இரண்டிற்கும் கருது பூசல்
வடிவமெனும் தமிழ்ஓதும் மயனார் சொன்ன
வளமைதேங் காய்ச்சகுன வன்மை கேளே.

(இ-ள்) முகூர்த்தஞ்செய்து தேங்காயுடைத்தால் முடி பருத்து அடி சிறுக்கில் இலட்சுமி விலாசமுண்டு. மூன்று பங்கு சிரசிலும் ஒரு பங்கு பாதத்திலும் ஆனாற் சந்தோஷ முண்டு. ஐந்து இரண்டு, ஐந்து மூன்று ஆனால் செல்வம் உண்டு. நரம்பு பிடித்தால் நீடூழி வாழ்வார்கள். கடுகு பிரமாணம் சிதழ் உள்ளே விழுந்தால் இரத்தினம் சேரும். நடுவில் பிளந்தால் மகாதுயரத்தை விளைவிக்கும் எ-று.

65. ஒன்றிரண்டு தனக்குநன்மை ஆறு நாலாய்
உடையவெகு துன்பமது ஓதக் கேளு
அண்டுமெய்யிற் கண்தெறித்தால் மரணம் ஆவன்
ஆகவும்நல் ஓடுவிட்டால் அசனம் வெல்லும்
விண்டுஒடு தெறித்திடுமேல் பிணியாம் மெய்யில்
மேதினியி லேவினைவிம் விலையு மாவன்
பண்டுதமிழ் அறிந்துஓதும் மயனார் சொன்ன
பாடல்தேங் காய்ச்சகுனம் பகரக் கேளே.

(இ-ள்) நடுமத்தியிலுடைந்தால் நன்மை. ஆறுச்சுக்கல், நான்கு சுக்கலாய் உடைந்தால் வெகுதுன்பம். சரீரத்தில்

தேங்காய்க்கண் தெறித்தால் யசமானன் மரணமாவான். ஓடுவிட்டால் புசிப்பதற்கு அன்னம் கிடைக்க மாட்டாது. ஓடு நெறிந்தால் சரீரத்தில் பிணியுண்டாகும். பூமியில் விழுந்தால் யசமானன் வீடுவாசலை விற்றுத் துக்கப்படு வான் எ-று.

(வேறு)

66. மூடிஇரண்டாய் உடைந்ததென்றால் தனமே சேரும்
மூடிபெருத் தாலும்நன்மை முக்கியம தாகவேகீழ்
மூடிதன்னில் ஒருமுடநில மெத்த நன்மை
கூடிவளர் கீழ்மூடி தன்னிலொரு கூறாவது
சமதாகு
கொப்பறையினங்கள் கண்டாலும்
வெகுநன்மையாம்
குருந்துடனே முளையும் நன்மை வுடலுடனே
குறுக்காகில் தின்மையாம் உதரியாய்ச்
சிதறுமாகில்
ஒன்றினங்களாய்த் துன்பம்வரும் அழுகலே
யென்னில்
உடலிலே வெகுநோய்கள் சேரும்
தேடியயெறும் பாடலெனிலுயிர்ச் சேதமாம்
சிரமே
கொஞ்ச மாகா தேங்கா யுடைத்தபல னிவ்வளவென்
றேமயனர் செப்பியது கண்டு கொள்ளே.

6. Length-width

People do not construct house in the entire part of their land. They choose a particular part of the plot. This part of the text concentrates on the length and the width, with which the rooms of the house to be constructed.

How do we measure thė length and width? The length and the width of the whole house have to be measured by the measurement of outer-walls of the house. And the inner halls and rooms, portico, verandha, etc. have to be measured by taking into account of the inside measurement of the respective halls, rooms etc. This measurement does not include the walls of the respective rooms, halls etc.

Length or width

7 feet — the failure of plans — sickness

8 feet — the achievement of things — enemies would disappear — Dried tree will blossom again.

9. feet — There would be a reduction in the life-span; wife would die.

10. feet — increase of herds and agriculture

11. feet — Rice and Milk will overflow in abundance — increase in the agricultural production.

12. feet — distruction of wealth; seizing of grief

13. feet — failure of plans — relatives would turn enemies — sufferings would stress more.

14. feet — annihilation of happiness — loss of life

15. feet — death due to illness — sins would be committed, dearth in wealth.

16. feet — accumulation of wealth — children will be born — disappearance of enemies.

17. feet — enemies would apologize — God will bless the house. Government job can be achieved.

18. feet — destruction of wealth and disappearance of possessed articles — wife would fall sick.

19. feet — Wife would die — quarrel and fear would prevail — children would die.
20. feet — blessed with children — Trade would flourish — happiness and wealth would stay back.
21. feet — Flourishing wealth due to Diary — Affliction won't occur.
22 feet — can lead a happy-life; blessed with good children; enemies would be in a state of fear
23 feet — decrease in life-span; onset of sickness; relatives would leave the house.
24 feet — decrease in life-span
25 feet — wife would die
26 feet — can live like Lord Indira
27 feet — can earn fame from all over the world — dried crops would grow again.
28 feet — wealth would accumulate; blessed with prosperity; enemies would be seized by fear.
29 feet — accumulation of all wealth
30 feet — accumulation of wealth; blessed with children.
31 feet — God's blessings can be obtained.
32 feet — Whole world becomes slave due to the blessings of God
33 feet — family would flourish
34 feet — have to be driven away from the house
35 feet — can possess all kinds of wealth
36 feet — can live on the par with the king
37 feet — profit and happiness could occur
38 feet — ghosts would haunt the house
39 feet — happiness and joy could occur
40 feet — frustration and dejection would seize the house
41 feet — can lead a aristocratic life
42 feet — can obtain all kinds of wealth
43 feet — destruction of greater things and occurance of evils.
44 feet — eye-sight would be lost.

6. நீள அகலம்

(சுவடி கூறுவதன் சுருக்கம்)

ஒருவருக்குச் சொந்தமான வீட்டு மனையில் மனை முழுவதிலும் வீடுகட்டிவிடுவதில்லை. வீடு கட்டுவதற்கென்று ஒருபகுதியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறோம். கட்டப் போகும் வீட்டில் பலவகை அறைகள், கூடம், தாழ்வாரம், வாசல் என்னும் பகுதிகளையும் அமைக்கிறோம். அந்த வீட்டிற்குரிய நீள, அகலம்; அறை, கூடம் போன்ற பகுதி களுக்கான நீள, அகலம் எந்த அளவில் இருப்பது நல்லது என்பதைக் கூறுவது இந்தப் பகுதி.

இந்த நீள, அகல அளவுகளை எப்படி கணக்கிடுவது?

வீட்டின் முழுமைக்குமான நீள, அகலங்களை வீட்டின் வெளிப்புறச் சுவர்களின் அளவால் கணக்கிட வேண்டும். அறை, கூடம், தாழ்வாரம், வாசல் போன்றவற்றிற்கு அந் தந்தப் பகுதிகளின் உட்புற அளவுகளை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும். சுவர்களின் கன அளவுகள் வீட்டின் மொத்த அளவில் அடங்கிவிடும். தனித்தனி அறைகளுக்கு அந்தச் சுவர்களின் கன அளவுகள் சேராது.

நீளம் அல்லது அகலம்

7 அடி ஆனால் — நினைத்தகாரியம் முடியாது; நோயுண்டாகும்.
8 அடி ஆனால் — எண்ணிய கருமம் முடியும்; பகைவர் விலகுவர்; பட்ட மரம் துளிர்க்கும்.
9 அடி ஆனால் — ஆயுள் குறையும்; மனையாள் இறப் பாள்.
10 அடி ஆனால் — கால்நடைச் செல்வம் பெருகும்; வேளாண்மை விருத்தியாகும்.
11 அடி ஆனால் — பாலும் சோறும் நிறையும்; வேளாண்மை பெருகும்.
12 அடி ஆனால் — பாலும் சோறும் நிறையும்; வேளாண்மை பெருகும்.
13 அடி ஆனால் — எண்ணிய கருமம் முடியாது; உறவி னர் பகை ஆவர்; தொல்லை மிகும்.
14 அடி ஆனால் — இன்பம் அழியும்; உயிருக்கு நஷ்டம் ஏற்படும்.

15 அடி ஆனால் — நோயால் மரணம் உண்டாகும்; பாவம் வந்து சேரும்; செல்வம் சேராது.

16 அடி ஆனால் — செல்வம் பெருகும்; புத்திரப்பேறு உண்டு; பகைவர் விலகுவர்.

17 அடி ஆனால் — பகைவர் வணங்குவர்; இறை அருள் கிடைக்கும்; அரசப் பதவி கிட்டும்.

18 அடி ஆனால் — செல்வம் அழியும்; இருந்த பொருள்கள் விலகும்; மனைவி நோயுடையவள் ஆவாள்.

19 அடி ஆனால் — மனைவி இறப்பாள்; சண்டை, பயம் போன்றவை நீங்காது; புத்திரர் மரணமடைவர்.

20 அடி ஆனால் — புத்திரப்பேறு உண்டாகும்; வியாபாரம் பெருகும்; மகிழ்ச்சியும், செல்வமும் நிலைக்கும்.

21 அடி ஆனால் — பால் பாக்கியம் பெருகும்; துன்பம் அணுகாது.

22 அடி ஆனால் — மகிழ்ச்சியான வாழ்க்கை அமையும்; சிறந்த புத்திரர் பேறு உண்டாகும்; பகைவர் அஞ்சுவர்.

23 அடி ஆனால் — ஆயுள் குறையும்; நோய் மிகும்; சுற்றத்தார் விட்டு விலகுவர்.

24 அடி ஆனால் — ஆயுள் குறையும்.

25 அடி ஆனால் — மனையாள் இறப்பாள்.

26 அடி ஆனால் — இந்திரன் போல வாழ்வர்.

27 அடி ஆனால் — உலகம் புகழ வாழ்வர்; பாழான பயிர்கள் விளையும்.

28 அடி ஆனால் — செல்வம் மிகும்; நிறைந்த வாழ்வு உண்டு; எதிரிகள் அஞ்சுவர்.

29 அடி ஆனால் — எல்லாச் செல்வமும் பெருகும்.

30 அடி ஆனால் — செல்வமும் பெருகும்; புத்திரப் பேறும் உண்டு.

31 அடி ஆனால் — இறையருள் உண்டாகும்.

32 அடி ஆனால் — இறையருளால் உலகம் அடிமையாகும்.

33 அடி ஆனால் — குடி உயரும்.

34 அடி ஆனால் — வீட்டைவிட்டு ஓட நேரிடும்.

35 அடி ஆனால் — பலவகைச் செல்வமும் உண்டாகும்.
36 அடி ஆனால் — அரசனுக்குச் சமமாக வாழ்வர்.
37 அடி ஆனால் — இன்பமும், லாபமும் உண்டாகும்.
38 அடி ஆனால் — வீட்டில் பிசாசுகள் குடியிருக்கும்.
39 அடி ஆனால் — இன்பமும் சுகமும் உண்டாகும்.
40 அடி ஆனால் — சலிப்பும், சோர்வும் உண்டாகும்.
41 அடி ஆனால் — குபேர வாழ்வு பெறுவர்.
42 அடி ஆனால் — எல்லாச் செல்வமும் நிலைபெறும்.
43 அடி ஆனால் — சிறப்பு அழியும்; தீமையுண்டாகும்.
44 அடி ஆனால் — கண்பார்வை அழியும்.

மனைகள் அகலம் நீளத்துக்கு — வீட்டுக்குள் அறைகள், கூடங்கள், சறுக்கார்கள், வாசல்கள் முதலானவைகள் வைப்பதற்கு இலக்கணம் —

(சுவடியில் உள்ளவை)

67. மனைதனை அளந்து வைத்து
மகிழ்ச்சியாய் வாழ்வோர்க்கு எல்லாம்
வினையில்லா சாத்தி ரத்தை
விளம்புவேன் சொல்லக் கேளும்
பனைநரி குடிபால் போலப்
பாரினில் மயங்க வேண்டாம்
முனைமணி பூண்ட தந்தி
முகவனுங் காப்ப தாமே.

68. ஆரிய மறைகள் தன்னில்
அனைவர்க்கும் உதவி யாக
பார்புகழ் முகுந்தன் மைந்தன்
பங்கயன் வகுத்த நூலும்
தாரணி உமையோர் பாகன்
சதாசிவன் சொன்ன நூலும்
சீர்பெற ஆய்ந்து பார்த்துச்
செழித்திட மனைகோல் வாயே.

7 அடிக்குப்பலன்

69. ஏழடி முழமும் ஆகில்
எண்ணிய கருமம் தீதாம்
வாழ்வுடன் மிக்க நோய்தான்
வந்தவர் தன்னைக் கொல்லும்

தாழ்விலா விபர மாகச்
சரஸ்வதி சொன்ன நூலால்
ஊழ்வினை தீராது இந்த
உற்றதோர் வேதம் பாரீர்!

8 அடிக்கு ப்பலன்

70. எட்டடி அகல நீளம்
எண்ணிய கருமம் நன்று
துஷ்டனும் வருவ தில்லை
தூரத்தே யகன்று நிற்பான்
பட்டிட்ட மரம்து ளிர்க்கும்
பாக்கியம் மெத்த உண்டாம்
வட்டமாம் குழலி னாளே
மயேசுரன் சொன்னார் பாரே.!

அடி 9க்கு

71. ஒன்பது அகல நீளம்
ஓங்கிடில் உயிரும் போகும்
ஐம்பது வயதும் ஆகும்
ஆயிழை தனக்குச் சாவாம்
சம்புவே பார்த்துச் சொன்னார்
சலிப்புகள் மெத்த உண்டாம்
வம்பது செய்ய வேண்டாம்
மறையவர் நூலைப் பாரீர்!

அடி 10க்கும் 11க்கும் பலன்

72. பத்துமே அகல நீளம்
பரிவுடன் வைத்த வர்க்கு
கொத்துடன் ஆடு மாடு
குறைவிலா வாழ்வுண் டாகும்
மெத்தவே பாலும் சோறும்
வேளாண்மை மிகுதி யாகும்
அந்தனார் அருளிச் செய்தார்
ஆராய்ந்து நூலைப் பாரீர்!

அடி 12க்கு

73. பத்துமே இீரண்டு மாகில்
பரிவுடன் சொல்லக் கேளும்
தத்துமே செல்வம் எல்லாம்
தரணியில் இருப்ப தில்லை

சற்றுநீ பாராய் ஆனால்
சதுரமும் குலைந்து போகும்
வைத்தது கூறு போல்
வருத்தமும் மெத்த வுண்டே.

அடி 13க்கு

74. ஏழுடன் உறும்ஆறு ஆனால்
எண்ணிய கருமம் தீதாம்
வாழ்வுடன் இருந்த பேர்க்கும்
வந்தவர் பகையே யாவர்
சூழவே தொல்லை யுண்டு
சுற்றத்தார் அற்றுப் போவார்
தாழ்வது மெத்த உண்டு
சங்கரர் சொன்னார் பாரே!

அடி 14க்கு

75. எட்டுமே ஆறும் ஆனால்
இன்பமும் இல்லை கண்டாய்
நட்டமும் உயிருக்கு ஈனம்
நலமில்லை நாதர் சொன்னார்
கெட்டியாய் இந்த நூலைக்
கேவலம் பண்ண வேண்டாம்
சட்டமாய்ப் பாரும் பாரும்
சாத்திரம் வேறே வேண்டாம்.

அடி 15க்கு

76. மூவைந்தாம் அடிய தாக
முடிந்திடல் ஆகாது என்றும்
நோயினால் மரணம் செய்யும்
நோக்கிய கருமம் தீதாம்
பாவமும் வந்து நிற்கும்
பாக்கியம் சேராது என்று
நாவினில் ஊறு கின்ற
நாயகி தனக்குச் சொன்னார்.

அடி 16க்கு

77. பத்துடன் ஆறே யாகில்
பாக்கியம் மிகவும் சேரும்
மெத்தவும் தனயர் உண்டு
மேன்மையாம் வாழ்வும் உண்டு

சத்துரு விலகிப் போவான்
சங்கரர் சொன்ன தைப்போல்
பத்தியாய் அடிமை வந்து
பரிவுடன் தொண்டு செய்வான்.

அடி 17க்கு

78. ஈரைந்தும் ஏழும் ஆகில்
எதிரியும் வணங்கி நிற்பான்
தாரணி கொன்றை சூடும்
சங்கரர் உதவி செய்வார்
பாரினில் மன்னர் ஆவர்
பாக்கியம் மிகஉண் டாகும்
சீர்கொண்டு வாழ லாகும்
செல்வமும் மெத்த வுண்டாம்.

அடி 18க்கு

79. எட்டுடன் பத்தும் ஆகில்
இலட்சுமி இருப்ப தில்லை
பட்டுடன் மணிகள் எல்லாம்
பாரினில் விலைய தாகும்
கட்டுவன் காலன் வந்து
காரிழை பிணியது ஆவாள்
தட்டுதான் செய்யும் என்றே
சங்கரர் சொன்னார் பாரீர்!

அடி 19க்கு

80. ஈரொன்பதும் ஒன்றும் ஆகில்
ஏந்திழை அடியாள் சாவாள்
பாரினில் செட்டு செய்யப்
பலியாது தீது மெத்தப்
போருடன் கிலேசம் உண்டு
புத்திரர் மரணம் ஆவார்
மாறுடன் திரிய வேண்டாம்
மகதேவர் சொன்னார் பாரீர்!

அடி 20க்கு

81. இருபது அடியது ஆனால்
ஏற்றமாம் மனையும் நன்றாம்
பெறுவது ஆணும் பெண்ணும்
பின்பல இன்பம் உண்டு

வருவதும் அசுவ யோகம்
வாணிபம் பலிக்கும் பாரு
திருவுடன் மகிழ்ச்சி செய்யும்
திருச்சடை நாதர் சொன்னார்.

அடி 21க்கு

82. நாலஞ்சு ஒன்றும் ஆகில்
நலமுடன் சொல்லக் கேளாய்
பாலுடன் பசுக்கள் மெத்த
பாக்கியம் மிகவுண் டாகும்
சாலவே வாழ்வ தற்குச்
சஞ்சலம் ஒன்றும் இல்லை
மாலுடன் ஈசர் தானும்
மகிழ்ச்சியாய்ச் சொன்னார் பாரீர்!

அடி 22க்கு

83. இருபதும் இரண்டும் ஆகில்
எதிரியும் அஞ்சு வான்காண்
வருவது மகிழ்ச்சி யாக
வாழ்வுமே மெத்த உண்டாம்
பெறுவது ஆணும் பெண்ணும்
பின்பலம் ஆகி நிற்கும்
ஒருமையாய் இந்த நூலை
உமையவள் தனக்கு உரைத்தார்.

அடி 23க்கு

84. இருபதும் மூன்றே யாகில்
எந்தநோய் தானும் உண்டு
வருவதும் கலங்கி நிற்கும்
வாழ்வுமே அற்பம் ஆகும்
இருவினை மிகவும் உண்டு
இழுப்பவர் கெடுதி யாகும்
மருவுள்ள சேதம் போகும்
மாரியும் பெய்யாது என்னே.

அடி 24, 25, 26க்கு

85. அறுநான்காம் அடியது ஆகில்
அற்பமாய் வயது குன்றும்
ஒருநான்கும் இருபத்து ஒன்றில்
உமையவள் கடாட்சம் போகும்

இருநான்கும் எட்டும் பத்தும்
இந்திர செல்வம் பெற்று
ஒருமையாய் வாழ்வர் என்று
உமையவள் தனக்குச் சொன்னார்.

அடி 27க்கு

86. ஏழுடன் இருபது ஆகில்
எழும்புமே யோகம் பாரு
தாழ்விலா வாழ்வு பெற்றுத்
தரணியில் மதிக்க வாழ்வார்
பாழ்போன பயிர்கள் தானும்
பலிதமாய் விளையும் பாரு
ஊழ்வினை ஒன்றும் இல்லை
உமைபரன் சொன்னார் பாரீர்!

அடி 28க்கு

87 எட்டுடன் இருப தாகில்
எதிரியும் அஞ்சி நிற்பான்
கொட்டுமே மனையில் வாழ்வு
குறைவிலா பாக்கி யத்தைக்
கெட்டுமே போகா தப்பா
கேசரி உதவி யாலே
தட்டுதான் வாரா தென்று
தாண்டவ மூர்த்தி சொன்னார்.

அடி 29, 30க்கு

88. இருபதும் ஒன்பது ஆனால்
எழும்புமே செல்வம் அப்போ
ஒருபதும் இருபது ஆகில்
உண்மையாய்ச் சொன்னேன் பாரும்
வருவதும் அனேக யோகம்
வந்தவர் சலிப்பில் லாமல்
பெறுவது ஆணும் பெண்ணும்
பித்தனார் தாம்உ ரைத்தார்.

அடி 31, 32க்கு

89. முப்பதும் ஒன்றும் ஆனால்
முக்கணர் அருளும் உண்டாம்
முப்பதும் இரண்டு ஆகில்
முகுந்தனார் கடாட்சத் தாலே

வைப்பது அடிமை மக்கள்
வையகம் முழுதும் வாழ்வார்
தப்பிலை சொன்னேன் அந்த
சங்கரர் உமைக்குச் சொன்னார்.

அடி 33, 34, 35, 36க்கு

90. ஐயாறும் மூன்றும் ஆனால்
ஆனதோர் குடியும் நன்றாம்
ஐயாறும் நான்கும் ஆகில்
அண்டிய குடிவிட்டு ஓட்டும்
ஐயாறும் ஐந்தும் ஆனால்
அட்டலட் சுமியும் சேர்வாள்
ஐயாறும் ஆறும் ஆகில்
அரசரோடு அரசாள் வாரே.

அடி 37, 38, 39, 40க்கு

91. ஏழஞ்சும் இரண்டும் ஆகில்
இன்பமாய் இலாபம் உண்டு
ஏழஞ்சும் மூன்றும் ஆகில்
எப்போதும் பிசாசு சேரும்
ஏழஞ்சும் நாலும் ஆகில்
இன்பமும் சுகம்உண் டாகும்
ஏழஞ்சும் ஐந்தும் ஆகில்
என்றைக்கும் சலிப்புண் டாகும்.

அடி 41, 42, 43, 44க்கு

92. எண்ணெய்ந்தும் ஒன்றே ஆகில்
இன்பமாம் குபேரச் செல்வம்
நண்ணவே ஏழாறு ஆகில்
இலட்சுமி குடியி ருப்பாள்
திண்ணமாய் ஏழைந்து எட்டும்
சிறப்பில்லை தீங்குண் டாகும்
கண்ணவே ஆறாறு எட்டும்
கண்கெட்டுப் போவார் தாமே.

விசால இலட்சணம்

தெற்குமுகம், மேற்குமுகம் கட்டின வீடு விசாலத்துக்குக் கமலாகரம் என்னப்படும். இதன்பலன் லட்சுமி பிரதம்.

மேற்கு முகம், வடக்கு முகம் கட்டினவீடு விசாலத்துக்குச் சுவர்ணபலம் என்னப்படும். இதன் பலன் சோரபயம், பீடையுண்டாம்.

வடக்கு முகம் கிழக்கு முகம் கட்டினவீடு விசாலத்துக்குப் புஷ்கத முஷ்டிகம் என்னப்படும். இதன் பலன் சோரபயமும் விஷபயமுமாகும்.

தெற்கு, மேற்கு, வடக்கு கட்டின வீட்டிற்குக் கிழக்கு அவடத்தில் வாசற்கால் வைத்தால் புத்திரமுஷ்டிகம் என்னப் படும். இதன் பலன் பயம்.

வடக்கு, கிழக்கு, தெற்கு கட்டின வீட்டுக்கு மேற்கில் வாசற்கால் வைத்தால் அதிசயம் என்னப்படும். இதன் ''லன் ஆனி.

கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு கட்டின வீட்டுக்கு வடக்கில் வாசற்கால் வைத்தால் நல்ல சுகமுண்டாம்.

மேற்கு, கிழக்கு, வடக்கு இந்த மூன்று பக்கத்திலும் வாசற்கால் இருந்தால் கலியாணபதம் என்னப்படும். இதனால் சம்பத்துண்டாம்.

கிழக்கு தெற்கு, மேற்கு, வடக்கு இந்த நாலு பக்கத்திலும் வீடு கட்டியிருந்தால் அது சதுரச் சாலை என்னப்படும். இதன் பலன் உத்தமம்.

7. Scale and the method of scaling

8 atoms	=	tip of the grass
8 tips of the grasses	=	one microsand
8 micro sands	=	one sesame
8 sesames	=	one rice grain
8 rice grains	=	one pigeon-pea
8 pigeon-peas	=	one finger
6 fingers	=	4½ inches
2 4½ inches	=	9 inches
2 9 inches		2 span (24 fingers)

Other names

24 fingers	=	*kitaku* (For vẽllālar, this is 2 span)
25 fingers	=	*pracāpatiyant* (For vaisiyar, this is 2 span)
26 "	=	*tanumuti* (For kings, this is 2 span)
27 "	=	*tanukiragam* (For Brahmins, this is 2 span)

Other kinds of Scale

8 atoms	=	one dust powder of cotton
8 dust-powders of cotton	=	ont tip of hair
8 tips of hair	=	one drop of sand
8 drops of sand	=	one Indian Mustard
8 Indian Mustard	=	one Bamboo grain
8 Bamboo grains	=	one inch
6 inches	=	¼ of 2 span
12 inches	=	½ of 2 span
18 inches	=	¾ of 2 span
24 inches	=	2 span

Brahmins do possess the scale made up of Bamboo. Kings do have the scale made up of shorea robusta. Vaisiyars do have

the scale made up of Teak. Vēllālar do have the scale made up of East Indian Kino tree.

1. Temple, land, halls, Mandapam, castles are to be measured only by *kitaku* that possesses the measurement of 24 fingers.

2. Towers, rooms, should be measured by six fingers span.

Mason's scale of measurement

The scales that are made up of Tamarinds, East Indian Kino tree, Teak, Robusta, are of much significance. Within these varieties,

Scales of Tamarind woods belong to Brahmins

Scales of Shorea robusta woods belong to Kings

Scales of Teak wood belong to Merchants

Scales of East Indian Kino woods belong to Vellalar

Iron scales belong to Tevar

The mason's scale must be made up of 10 finger length on one side and 8 finger length on the other.

Scale-rope

A special kind of rope has to be made with the combination of aathi, banyan, Ilanthai, jute, Taalai and palm. This rope has to be divided into two or three parts.

The tripartite rope belongs to Tevar, Brahmin, and Kings. The rope with two parts belongs to merchants and vellalar. The tripartite rope which is made up *tarupai* grass belongs to Brahmins, and that which is made up of the roots of banyan belongs to kings. The rope with two parts which is made up of cotton belongs to vaisiyar, that which is made up palm leaves belongs to Vellālar. Usually people use the tripartite rope which is made up of cotton, while measuring with this rope.

Predictions:

If a hen goes across the rope it means that there is the bone of a bird in the eastern side of the land.

If a cat goes across the rope, it means that there is a bone of cat in south-east corner of the land.

If a buffalo goes across the rope, it means that there is a bone of a rabbit in the north-east side of the land.

If a cow goes across the rope, it means that its bone lies in the western side of the land.

If a donkey goes across the rope it means that its bone lies in the centre of the land.

If an onionted man sees the land from one particular corner of the land, it means that human bone can be found in that corner at a depth of 3 inches. Like wise human bone also lies in the place where, a lunatic person stands and witnesses the land.

Therefore, it is necessary to test the soil and land before constructing the house.

Mason's Stick *(Muḻai kutchi)*

This small stick is used to tie the rope after measuring the length and the breadth of the rooms, and the house to facilitate foundation.

This stick usually has a length about from 11 fingers to 24 fingers. At first this stick has to be laid after careful examination of Vāstu part and then it has to be laid, starting from South-east corner, North-east corner, North-west corner, North-west corner respectively.

Certain deeds have to be avoided. It is also not good. For example the stick should not be removed after once it has been laid; the rope should not be cut after it has been tied; changing the place of the stick should not to be done after it has been laid; changing the entrance of the house; constructing the house with the ceiling resembling a tower; the crossing of the ropes; starting the process of digging from West to South; Building houses slantly; re-planing the design of the house; — these deeds have to be avoided.

If necessary arises to renovate, renovation has to be started from North to East.

7. அளவு கோலும் அளக்கும் முறையும்

(சுவடிச் செய்திகளின் சுருக்கம்)

அரைசாண்	எட்டு	கொண்டது	— புல்நுனி
புல்நுனி	,,	,,	— நுண்மணல்
நுண்மணல்	,,	,,	— எள்
எள்	,,	,,	— நெல்
நெல்	,,	,,	— துவரை
துவரை	,,	,,	— விரல்
விரல்	ஆறு	,,	— கால் முழம் (அல்லது) அரை சாண்
அரைசாண்	இரண்டு	,,	— சாண்
சாண்	,,	,,	— முழம் (24 விரல்)

அளவுகோல்—வேறு வகை

அணு எட்டு கொண்டது ஒரு பஞ்சின் தூள்

பஞ்சின்தூள் எட்டு கொண்டது ஒரு மயிர் முனை

மயிர் நுனி எட்டு கொண்டது ஒரு மணல்

மணல் எட்டு கொண்டது ஒரு கடுகு

கடுகு எட்டு கொண்டது ஒரு மூங்கில் அரிசி

மூங்கில் அரிசி எட்டு கொண்டது ஒரு அங்குலம்

அங்குலம் ஆறு கொண்டது கால் முழம் அல்லது அதமாதமம்.

அங்குலம் பன்னிரண்டு கொண்டது அரைமுழம் அல்லது அதமம்

அங்குலம் பதினெட்டு கொண்டது முக்கால் முழம் அல்ல்து மத்திமம்.

அங்குலம் இருபத்துநான்கு கொண்டது ஒரு முழம் அல்லது மாநாங்குலம்.

மூங்கிலால் செய்த கோல் அந்தணர்களுக்கு உரியது; ஆச்சா மரத்தின் கோ்ல் அரசர்களுக்கு ஆகும்; தேக்கினால் செய்த கோல் வைசியர்களுக்கு உரியது; வேங்கை மரத்தினால் செய்த கோல் வேளாளருக்கு உரியது.

1. கோயில், மனை, அறை, மண்டபம், மாளிகை போன்றவற்றை 24 விரல் கொண்ட கிடகால் அளத்தல் வேண்டும்.

2. கோபுரம், கூடம் போன்றவற்றை ஆறுவிரல் முழத்தால் அளத்தல் வேண்டும்.

மட்டக்கோல்

புளி, வேங்கை, தேக்கு, ஆச்சா ஆகியமரங்களால் மட்டக்கோல் செய்வது சிறப்பு உடையது.

மூலை மட்டக்கோல்

ஒரு பக்கம் பத்து விரல் நீளமும், மறு பக்கம் எட்டு விரல் நீளமும் உள்ளதாய் நடு மூலைப் படுமாறு அமைத்தல் வேண்டும்.

அளவு நூல் கயிறு

ஆத்தி, ஆல், இலந்தை, சணல், தாழை, பனை, மருள் (கத்தாழை) இவற்றின் நாரையும், பருத்தி நூலையும் சேர்த்து விரல் நுனி பருமனாகக் கயிறு முறுக்கிக் கொள்ளுதல் வேண்டும். இக்கயிறு மூன்று புரிகளாகவும், இரண்டு புரிகளாகவும் அமைக்கலாம். அவற்றுள்,

முப்புரிக்கயிறு தேவர், அந்தணர், மன்னவா ஆகியோருக்கு உரியது. இருபுரிக்கயிறு வணிகர், வேளாளர் ஆகியோருக்கு உரியது. தருப்பைப் புல்லால் ஆன முப்புரிக் கயிறு அந்தணருக்கு உரியது. ஆலம் விழுதால் ஆன முப்புரிக்கயிறு அரசர்களுக்கு உரியது. பருத்தி நூலால் ஆன இருபுரிக்கயிறு வைசியருக்கு உரியது. பனைநாரினால் ஆன இருபுரிக்கயிறு வேளாளருக்கு உரியது. பொதுவாகப் பருத்தி நூலால் ஆன முப்புக்கயிறுகளையே பெரும்பாலும் எல்லா இனத்தவரும் அளக்கப் பயன்படுத்தி வருகிறார்கள். இக்கயிறுகளால் அளக்கும் போது, அளக்கும் கயிற்றை,

ஒரு கோழி தாண்டினால் ஒரு பட்சி எலும்பு கிழக்குத் திசையில் இருக்கும்.

பூனை தாண்டினால் அதன் எலும்பு அக்கினி மூலையில் (தென்கிழக்கு) இருக்கும்.

எருமை தாண்டினால் முயல் எலும்பு வடகிழக்குத் திசையில் இருக்கும். பசு தாண்டினால் அதன் எலும்பு மேற்குப் பாகத்தில் கிடக்கும். கழுதை தாண்டினால் அதன்

எலும்பு வட மேற்குத் திசையில் இருக்கும். மனிதர் தாண்டி னால் அவர் எலும்பு மனையின் மத்தியில் இருக்கும்.

ஒரு மனிதன் எண்ணெய் தேய்த்துக் கொண்டு எந்த மூலையில் நின்று பார்க்கின்றானோ அந்தத் திக்கில் எழுபத்து மூன்று அங்குல ஆழம் தோண்டிப் பார்த்தால் மனிதர் எலும்பு கிடைக்கும். பயித்தியம் பிடித்தவன் எந்த மூலை யில் நின்று பார்க்கின்றானோ அந்த மூலையில் எட்டு அங்குலம் தோண்டிப் பார்த்தால் மனிதர் எலும்பு கிடைக்கும். இவ்வாறு மண்ணைச் சோதித்து எலும்புகளை அகற்றி, வீடுகட்ட முயல வேண்டும்.

முளைக்குச்சு

மனையில் வீடு கட்டுதற்குரிய நீள அகலங்களுக்கும், அறைகளின் பகுதிகளுக்கும் முளைக்குச்சு அடித்துக் கயிறு கட்டிக் கடைக்கால் எடுத்தற்குப் பயன்படுத்துவது உண்டு.

அம்முளை 11 விரல் முதல் 24 விரல் நீளம் வரை ஏற்றாற் போலக் கொள்ளலாம். அம்முளையினை முதலில் வாஸ்துவின் வயிற்றுப் பாகம் அறிந்து அமைத்தல் வேண் டும். பிறகு தென் மேற்கில் தொடங்கி தென் கிழக்கு மூலை, வடகிழக்கு மூலை, வடமேற்கு மூலை ஆகியவற்றில் முறையே இடமாகச் சுற்றிக் கடாவுதல் (அடித்தல்) வேண்டும்.

இவ்வாறு முதலில் அமைத்த முளையைப் பிடுங்கி எடுத் தல், நன்றாகக் கட்டிய அல்லது பிடித்த கயிறு அறுதல், ஒரு காலை நட்டு மீண்டும் எடுத்து மாற்றுதல், மனை நடுவில் ஒரு மரத்தை அமைத்தல், முதலில் விட்ட வாசலை அடைத்து வேறு வாசல் விடுதல், வீட்டின் உச்சி குத்தாக வருமாறு அமைத்தல், மாறு கயிறாக வருமாறு மனையெடுத்தல், மனையை மேற்கும் தெற்குமாகப் பெயர்த்துக் கட்டுதல், எடுப்பும் சாய்ப்புமாக வீட்டினைக் கட்டுதல், மறுமாடி மூலை வாங்கி நிற்குமாறு கட்டுதல் போன்ற செயல்கள் தீமையைத் தருவனவாம். வீடு கட்டுவோர் இவற்றை அறிந்து செயல்பட வேண்டும்.

பெயர்த்துக் கட்டுவதனால் வடக்கும், கிழக்கும் பெயர்த் துக் கட்டுவது நன்மை தரும்.

அளவுகோல்—முழக்கோல் அளவு

(சுவடியில் உள்ளவை)

93. துன்னிய அணுவும் புல்லும்
நுண்மணல் எள்ளும் நெல்லும்
பன்னிய துவரை யெட்டால்
பரவிய விரல தாகும்

எண்ணிய ஆறி னாலே
இசைந்தகால் முழம தாகும்
நண்ணிய காலி னாலே
நாலினால் முழக்கோல் கொள்ளே.

(இ-ள்) முழக்கோலாவது,

அணு எட்டுக் கொண்டது	—	புல் நுனி
புல் நுனி எட்டுக் கொண்டது	—	நுண் மணல்
நுண் மணல் எட்டுக் கொண்டது	—	எள்ளு
எள்ளு எட்டுக் கொண்டது	—	நெல்லு
நெல்லு எட்டுக் கொண்டது	—	துவரை
துவரை எட்டுக். கொண்டது	—	விரல்
விரலாறு கொண்டது		கால் முழம்
கால்முழம் நான்கு கொண்டது		ஒரு முழம் எ-று.

94. துளங்குவிரல் கிடகுமுழஞ் சூத்திரருக் காகும்
வளம்பிரஜா பத்தியமும் வணிகர்தமக் காகும்
அளந்ததனு முட்டிவிரல் அரசர்களுக் காகும்
விளம்பிய தனுக்கிரகம் வேதியருக் காமே.

(இ-ள்) கிடகு என்னும் இருபத்து நாலு விரல் கொண்டது வேளாளருக்கு முழமென்று சொல்லப்படும்; பிரஜா பத்தியமென்னும் 25 விரல் கொண்டது வைசியருக்கு

முழமென்று சொல்லப்படும்; தனுமுட்டியென்னும் 26 விரல் கொண்டது அரசர்களுக்கு முழமென்று சொல்லப்படும்; தனுக்கிரக மென்னும் 27 விரல் கொண்டது பிராமணருக்கு முழமென்று சொல்லப்படும் எ-று.

95. சொன்னதோர் துவரை எட்டு
விரலென வறிந்து கொள்வாய்
தன்னிய விரல்கள் ஆறு
கொண்டது சாண தாகும்
பன்னிய சாண்இ ரண்டு
கொண்டது முழம தாகும்
அன்னிய மில்லா வண்ணம்
ஆய்ந்துகொள் இதுபோல் தானே.

(இ-ள்) துவரை எட்டு கொண்டது விரல்.
விரல் ஆறு கொண்டது சாண்
சாண் இரண்டு கொண்டது முழம்.

இது போல் பகிர்ந்து கொள்ளவும் எ-று.
(இந்த முறை வழக்காறு இல்லை.).

முழக்கோல் வேறு

96. துன்னிய அணுவது எட்டு
தூக்கிடில் பஞ்சின் தூளாம்
மென்னிய பஞ்சின் தூளோர்
எட்டதாம் மயிர்மு னைக்கு
நன்னிய மயிரின் கூர்மை
நவில்எட்டு மணலது ஆகும்
திண்ணமாங் கடுகு எட்டுச்
செப்பவே ணுவும்ஒன் றாமே.

(இ-ள்) அணு எட்டு கொண்டது ஒரு பஞ்சின் தூள்; பஞ்சின் தூள் எட்டு கொண்டது ஒரு மயிர்முனை; மயிர் முனை எட்டு கொண்டது ஒரு மணல்; மணல் எட்டு கொண்டது ஒரு கடுகு. கடுகு எட்டு கொண்டது ஒரு மூங்கில் அரிசி எ-று.

97. வேணுவோர் எட்டது ஆகில்
வேண்டிய விரல்ஒன்று ஆகும்
தாணுஇவ் விரல்ஆறு ஆனால்
தகைமைசால் அதமா தமம்.

உன்னிய வரையே விள்ள
முயன்றிடும் அதம மாகும்
காணுமே முக்கால் பின்னுங்
கருதிய மத்தி பந்தான்.

(இ-ள்) மூங்கில் அரிசி எட்டு கொண்டது அங்குலம். அங்குலம் ஆறு கொண்டது கால் முழம்; அதற்கு அதமாதமம் என்றும் பெயர். அங்குலம் பன்னிரண்டு கொண்டது அரை முழம்; அதற்கு அதமம் என்றும் பெயர். அங்குலம் பதினெட்டு கொண்டது முக்கால் முழம்; அதற்கு மத்திமம் என்றும் பெயராம் எ-று.

98. சாதியும் ஒன்றது ஆனால்
தருமுழம் உத்த மந்தான்
தீதறு பிரம ரோடு
சிறந்தக்ஷத் திரியர் சூத்திரர்
தூதரு விவேக வைசியர்
சுபமுடன் கொள்வ தற்கு
நீதியால் புனைந்த பாடல்
நெறிப்பட விளம்பல் உற்றாம்.

(இ-ள்) அங்குலம் இருபத்து நான்கு கொண்டது ஒரு முழம் என்றும் சந்தியென்றும் மாநாங்குலம் என்றும் பெயராம். ஆகையால் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் இவர்களுக்கும் இன்ன முழம் என்று சொல்லுவோம் எ-று.

99. சிறந்த சாதி நான்கினுக்குஞ்
சிறுகோல் வரிசை செப்பிடுங்கால்
இறைந்த மூங்கில் மறையவர்க்காம்
ஆச்சா சத்திரி யர்க்காகும்
நிறைந்த தேக்கு வணிகருக்காம்
நெடிய வேங்கை சூத்திரருக்காம்
முறிந்தி டாமல் அவரவர்க்கு
முழக்கோல் அதுகொண்டு அளப்பதுவே.

(இ-ள்) சாதி நான்கினுக்கும் முழக்கோல் விபரமாவது— மூங்கிலால் செய்த் கோல் பிராமணர்களுக்காம்; ஆச்சா மரத்தின் கோல் அரசர்களுக்காம்; தேக்கினால் செய்த கோல் வைசியர்களுக்காம்; உத்திர வேங்கை மரத்தால் செய்தகோல் சூத்திரருக்காம் எ-று.

கோயில், கோபுரம், கூடம், மனை, அளவு முழக்கோல்

100. தாபரம் முதலா வுள்ள
சமயமும் மனையும் மிக்க
கோபுரம் கூடம் சாலை
மாளிகை யளக்கச் சொன்னோம்

தாபரஞ் சமயம் எல்லாம்
கிடகுவின் விரல்க ளாலே
கோபுரங் கூட மெல்லாம்
அறுவிரல் முழத்தி னாலே.

(இ-ள்) தாபரம், சமயம், மனை, சாலை, மாளிகை, இவைகளைக் கிடகுவின் விரலால் அளப்பது; கோபுரம், கூடம் இவைகளை அறுவிரல் முழத்தால் அளப்பது; இதில் பன்னிரண்டு விரலுக்கு விசத்தி யென்றும் பெயராம். இதில் இரட்டி 24 விரல் கொண்டது கிடகு வென்பதாம் எ-று.

முழக்கோல்

101. மூங்கிலில் செய்த கோல்கள்
முதுமறை வேதி யர்க்காம்
தீங்கிலா ஆச்சா வின்கோல்
திறைகொளும் அரசர்க் காகும்
வேங்கையில் செய்த கோல்கள்
வேளாளர்க்கு உரிய தாகும்
பாங்குறு தேக்கு வின்கோல்
பகர்ந்திடில் வணிகர்க் காமே.

(இ-ள்) மூங்கிலிற் செய்த கோல் பிராமணருக்காம்; ஆச்சாவின் கோல் அரசருக்காம்; தேக்குவின் கோல் வணிகருக்காம்; வேங்கையின் கோல் வேளாளருக்காம் எ-று.

மட்டக்கோல்

102. பொருந்திய மட்டக் கோல்தான்
புளிவேங்கை தேக்கோடு ஆச்சா
வருந்திய புளிவே தற்காம்
மன்னவர்க்கு ஆச்சா வாகும்
விரும்பிய வணிகர் தேக்கு
வேளாளர் வேங்கை யாகும்
இரும்புதான் தேவர்க் காகும்
இயல்புடன் சமைத்துக் கொள்ளே.

(இ-ள்) மட்டக்கோலுக்குரியவை புளி, வேங்கை, தேக்கு, ஆச்சா இவை நான்கு மரமுமாகும்.

இவற்றுள்,

புளிமாவின் கோல் மறையோருக்காம்; ஆச்சாவின் கோல் அரசருக்காம்; தேக்குவின் கோல் வணிகருக்காம்: வேங்கையின் கோல் வேளாளருக்காம்; இரும்பினாற் செய்த கோல் தேவருக்காம் எ-று.

மூலைமட்டக்கோல்

103. **மட்டமது கோலினை விளம்பியே உரைக்கின்**
விட்டபடி பத்துவிரல் மேவுமொரு தலையாம்
எட்டுவிரல் ஒருதலையது இப்படிக்கொள் மூலை
பட்டுவளை சதுரமெனப் பர்ர்த்துவிரல் வரையே.

(இ-ள்) மூலை மட்டக் கோலளவு சொல்லுமிடத்து ஒருதலைப் பத்துவிரல் நீளம்; ஒரு தலை எட்டு விரல் நீளம்: நடு மூலைப் பட்டு வளைந்து சதுரமாக்கி விரலளவு பார்த்து வரைந்து கொள் எ-று.

நான்கு சாதிக்கும் அளவு கயிறு

104. **தாலவுரி கேதகை சணத்தொடு மருட்பின்**
நாலினவை மேலுரிநல் ஆத்தியுரி நூலால்
வாலிய கயிற்றின்ன வளம்பட முறுக்கி
ஏலவிர லின்நுனிய தாகமொழி மின்னே.

(இ-ள்) பனை, தாழை, சணல், மருள், ஆல், ஆத்தி, இலதை இவைகளின் நாரினோடு பருத்தி நூல் கூட்டி விரல்நுனி பிரமாணத்தில் கயிறு முறுக்கிக் கொள்ளவும் எ-று.

105. **முப்புரிய தாய்ஒரு கயிற்றினை முறுக்கில்**
விப்பிரர்கள் விண்ணவர்கள் மன்னவருக் காகும்
வைப்புரி யிருபுரிகள் வணிகர்உழ வர்க்கே
ஒப்புருசி கொள்கவினி ஓதிஉரைக் கின்றேன்.

(இ-ள்) முப்புரிக்கயிறு தேவர்களுக்கும் மறையோருக்கும் மன்னவருக்கும் ஆகும். இருபுரிக் கயிறு வணிகருக்கும் வேளாளருக்குமாம் எ-று.

106. **பட்டுநூல் தருப்பை யோடு**
பகருமால் விழுது பண்பார்
நட்டணைப் பனையி னாலும்
நவிலுநூல் தேவ ரோடு

திட்டமாம் மறையோர் தானும்
சிறந்தக்ஷத் திரியர் சூத்திரர்
மட்டவிழ் வைசிய ரோடு
வகையது பிரிவு சொல்லே.

(இ-ள்) பட்டு நூல், தருப்பை, ஆலம் விழுது, பனையின்நார் இவைகள் தேவர்முதல் நான்கு சாதிக்கும் தெளிவாக விவரித்துச் சொல்லுவோம் எ-று.

107. தேவர்க்குப் பட்டு நூலால்
சிறந்தமுப் புரியது ஆகும்
மேவிய மறையோர் தருப்பை
விளங்குமுப் புரியது ஆகும்
காவிஆல் விழுது மூன்று
புரியது வைசியர் நூலாம்
தாவுயர் சூத்திரர் பனைநார்
தானிரு புரிய தாமே.

(இ-ள்) தேவர்களுக்குப் பட்டு நூலால் முப்புரிக் கயிறு; பிராமணர்களுக்குத் தருப்பையினால் முப்புரிக் கயிறு; இராசர்களுக்கு ஆலம் விழுதால் முப்புரிக் கயிறு; வைசியர்களுக்குப் பருத்தி நூலால் இரண்டு புரியையுடைய கயிறு; சூத்திரர்களுக்குப் பனைநாரினால் இரண்டு புரிக் கயிறு ஆம் எ-று.

கயிறுபிடித்து அளக்கும் இலட்சணம்

பிராமணர், க்ஷத்திரியர் பூமியை முதல் முழங்காலால் தொட்டு அளக்கவேண்டும்.

மறுபடியும் பிராமணர் தருப்பையால் தொட்டு அளக்க வேண்டும்.

வைசியரும், சூத்திரரும் திரித்த பூத்தண்டால் அளக்க வேண்டும்.

க்ஷத்திரியர் தேங்காய்க் கயிற்றினால் அளக்க வேண்டும்.

வைசியர் பனைநார்க் கயிற்றினால் அளக்க வேண்டும்

சூத்திரர்நூல் கயிற்றினால் முப்புரி போட்டு அதனால் அளக்க வேண்டும்.

மேலே சொன்னபடி இந்தக் கயிற்றினால் கோயில்களுக்கும், பிராமணர் வீட்டுக்கும் க்ஷத்திரியர் வீட்டுக்கும் அளக்கலாம்.

பின்பு இரட்டைப்புரி நூல் கயிற்றினால் வைசியர், சூத்திரர் இவர்கள் வீட்டுக்கும் அளக்கலாம்.

இந்தக் கயிறு பிடித்து அளக்கும்போது எந்தச் சீவன் தாண்டுகிறதோ அந்தச் சாதி எலும்பு அகப்படும். அதை யெடுத்துப் போட்டு விடவும்

மேற்படி கயிற்றினால் அளக்கும்போது ஒரு கோழி தாண்டினால் பட்சி எலும்பு கீழமூலையிலிருக்கும். பூனை தாண்டினால் அதன் எலும்பு அக்கினி மூலையில் இருக்கும். எருமை தாண்டினால் அதன் எலும்பு ஈசானியத்தில் இருக்கும். பசு தாண்டினால் அதன் எலும்பு வருணன் மூலையில் இருக்கும். கழுதை தாண்டினால் அதன் எலும்பு வாயு மூலையில் இருக்கும். மனிதர் தாண்டினால் அவர் எலும்பு மத்தியில் இருக்கும்.

ஒரு மனிதன் எண்ணெய் தேய்த்துக்கொண்டு எந்த மூலையில் நின்று பார்க்கின்றானோ அந்தத் திக்கில் 73 அங்குலம் ஆழம் பள்ள மெடுத்துப் பார்த்தால் மனிதர் எலும்பு இருக்கும். பைத்தியம் பிடித்தவன் எந்த மூலையில் நின்று பார்க்கிறானோ அந்த மூலையில் 8 அங்குலம் தோண்டிப் பார்த்தால் மனிதர் எலும்பு அகப்படும்.

இந்தப்படி பூமியைச் சோதித்து வீடுகட்ட வேண்டும்.

முளைகடாவும் அளவு; முளைக்கயிறு, கால்

108. பகர்ந்ததோர் முளைக்கு நீளம்
பதினொரு விரல்தொ டங்கி
இகழ்ந்ததோர் விரலால் எற்றி
இருபத்து நான்குங் கொள்க
மகிழந்தவை கடாவும் போது
வாஸ்துவின் வயிற்றில் கெல்லி
உகந்ததென் மூலை தன்னை
யுற்றுமுன் னிடமாய்த் தாக்கே.

(இ-ள்) முளைக்கு நீளம் 11 விரல் தொடங்கி ஒரு விரல் ஏறிட்டு இருபத்து நான்கு விரல் அளவுங்கொள்வது. முளை கடாவும் போது வாஸ்துவின் வயிற்றில் கெல்லிப் பின்பு தென்மேல் மூலையில் கடாவித் தென்கீழ், வடகீழ், வட மேல் மூலைகளில் கடாவி விடவும் எ-று.

மரமிசைத்தல் மறுவாசல் தோஷம்

109. கொட்டுமுளைத் தட்டிப் பறித்தல்
கொத்தே பிடித்த கயிறறுத்தல்
நட்ட காலைப் பின்பறித்தல்
நடுவில் ஆணி மரம்இசைத்தல்
விட்ட வாசல் தனையடைத்து
வேறே வாசல் தனைவிடுத்தல்
சட்ட மனையாள் தனைஇழக்கும்
தானும் மரணம் தப்பாதே.

(இ-ள்) கொட்டின முளையைத் தட்டிப் பறித்தாலும், செவ்வையாகப் பிடித்த கயிறு இற்றாலும், ஒரு காலை நாட்டி அதைப் பின் பறித்தாலும், மனைநடுவில் ஒரு மரத்தை இசைத்தாலும், விட்ட வாசலை அடைத்து வேறொரு வாசல் விட்டாலும் பொல்லாத தோஷம் எ-று.

110. கூறுவிர லான்முகடு கொண்டமறு மாடி
மாறுகயிறு ஆனவைகள் வாழமனை எடுக்கில்
ஈடுபடு நோய்நலியும் இல்லவனும் இல்லாள்
வேறுபடு வெம்பகை விளம்புவது மெய்யே.

(இ-ள்) முகடுகுத்தாகவும், மாறு கயிறாகவும் மனை எடுக்கில் பொல்லாத தோஷத்தைக் காட்டும் எ-று.

மறுமாடி — முளை — நற்குறி — துற்குறி

111. குடக்கும் தெற்கும் மனைபேரில்
குற்றம் மிகவே தான்உண்டாம்
வடக்குங் கிழக்கும் மனைபேரில்
வசியம் உண்டு மிகநன்றாம்
எடுப்புஞ் சாய்ப்பும் ஆகாது
எண்ணுங் கருமம் மிகவுண்டாம்
முடுக்குங் கோடி மறுமாடி
மூலை வாங்கு கிலுந்தீதே.

(இ-ள்) மனைக்கு மேற்குந் தெற்கும் பெயர்த்துக் கட்ட லாகாது; வடக்குங்கிழக்கும் பெயர்த்துக்கட்ட நன்றாம். எடுப்புஞ் சாய்ப்பும் ஆகாது. அப்படி நிற்கிலும் கோடி மறுமாடி மூலை வாங்கிப்போய் நிற்கிலும் ஆகாது எ-று.

மண்வெட்டி முழக்கயிறு சகுனம்

112. மனைகோல வந்த மண்வெட்டி தானும்
முனைமுறிந் திடினும் முனைபறிந் திடினும்
இனமுறச் சேர்க்கும் இசைகயிறு இறினும்
வனைகுழ லாளே வந்திடும் துன்பமே.

(இ-ள்) மனை கோலுவதற்குக் கொண்டு வந்த மண்வெட்டி முனையானது முறியினும், முனையானது பறித்திடினும் கயிறு அறுந்திடினும் ஆகாது. அதனால் என்னென்னில் யசமானன், வாராத ஆபத்தும் மனசு கிலேசமும் அனுபவிப்பதும் அன்றி நீடூழி காலம் துன்பத்தை அனுபவித்து யமபதிக்குப் பாத்திரனாவான். ஆகையால் அந்த மனை ஆகாது எ-று.

நான்கு வருணத்தாரும் பூணுநூல் கொள்ளும்விதி

113. மறையவன் தருப்பை நூலால்
வான்புரி மூன்று கொள்க
இறையவன் கதம்பை தன்னால்
இருபுரி யதுவே கொள்க
பெறுமெனை வைசியர்க் காகிற்
பெண்ணைநார் புரியி ரண்டாம்
அறிவுள உழவர்க் காகில்
ஆத்திநூல் புரியி ரண்டே.

(இ-ள்) பிராமணர்கள் தருப்பைநூல் முப்புரி கொள்க; அரசர்கள் கதம்பை நூல் இருபுரி கொள்க; வணிகர்கள் பனைநார் இருபுரி கொள்க; சூத்திரர்கள் ஆத்திநார் இருபுரி கொள்க எ-று.

8. Laying poles for Ceiling (Roofing)

Finding out the horizontal evenness of the land

Before laying the poles for ceiling, one should verify the evenness of the land. To findout the evenness of the land, a pit of one square feet has to be dug in the centre of the land. Ropes must be tied to this pit with the help of sticks and the evenness can be checked by pouring waters in the pit. If the water overflows and gets spread equally on all four sides, then the land is even. If it is not so, then it means that the land is not even.

Measurement of Ceiling-Poles

The width of the house has to be divided into 9 equal parts and one part of this division has to be deducted, and the measurement of remaining eight parts is the measurement for Ceiling. The measurement of 2 parts, from these eight parts is the measurement of the part of poles to be buried in the earth. The measurement of the remaining five parts is the actually measurement of the height of the Ceiling-poles.

This measurement can be applied to all house, since the measurement of 5 of the 9 parts of the width of the house should be the measurement of height of roof.

Laying Ceiling-Poles

In an auspicious day, after worshipping Lord Vinayaga, milk, some gold and nine kinds of grains have to be placed in the pit, and at first South-west corner pole has to be laid, then it is followed by South-east pole, North-east pole and then North-west pole respectively.

1) The centre girdle, the cross lining woods should get joined in the corner. The joining woods must be placed in a such a way that the bottom of them should face the inner side of the house and their ends should face the outer side of the house.

2) While joining the four corners, the bottom side should be joined with South-west corner and the end parts should be joined with the North-east corner.

3) In this process the southern side woods should be placed a little bit higher than the side wood.

4) The remaining two sides must be joined in the way of up and down order

8. கூரைக்கால் அமைத்தல்

(சுவடிச் செய்தியின் சுருக்கம்)

தளமட்டம் அறிதல்

கூரைக்கால் நடுதற்குரிய முகூர்த்தத்தைத் தொடங்கும் போது முதலில் தரையின் உயர்வு தாழ்வுகளை அறிந்து சமப்படுத்துதல் வேண்டும். தரை சமமாக உள்ளதா என் பதை அறிய முதலில் மனையின் நடுவில் சதுரமாக ஒரு குழியை வெட்டுதல் வேண்டும். மேலே கூறியபடி நான்கு பக்கமும் முளைகளை அமைத்துக் கயிறுகட்டுதல் வேண்டும். அதன்பிறகு குழியில் நீரை ஊற்றி நிலத்தின் சமநிலையை அறியலாம். அதாவது குழியில் ஊற்றிய நீர் வழிந்து ஓடி நான்கு திக்கும் பரந்து முனையிலும் கயிற்றிலும் தாக்கி நின்றால் தரைமட்டம் சமமானது என்று கொள்ளுதல் வேண்டும். பிற உயர்வு தாழ்வுகளை நீர் ஓடும் தன்மை கொண்டு அறியலாம். (இப்போது ரசமட்டம் என்னும் கருவி பயன்படுத்தப்படுகிறது).

கூரைக்கால் அளவு— வீடுகட்டும் பகுதியின் அகலத்தை ஒன்பது பாகம் செய்து ஒரு பாகத்தைக் குறைக்க, நின்ற அளவே கூரைக்காலின் உயர மாகக் கொள்ள வேண்டும். இந்த 8 கூறுகளில் இரண்டு கூறு அளவு குழியில் நடுதல் வேண்டும். மேலே கூரை கட்டுவதற்கு ஒரு கூறு பயன்படுத்த வேண்டும். இடையில் 5 கூறு உயரமே கூரைக்கால் நிற்கும்.

இது கூரை வீட்டிற்கு அமைக்கப்படும் அளவு போலக் காணப்பட்டாலும் எல்லா வீடுகளுக்கும் இக்கூற்றுப் பொருந்தும். அதாவது வீட்டின் அகலத்தில் ஒன்பதில் ஐந்து மடங்கு உள் உயரம் அமைதல் வேண்டும் என்பதே கருத் தாகும்.

கூரைக்கால் நடுதல்— சிறந்த முகூர்த்தத்தில் விநாய கரைப் பூசித்துக் குழியில் பொன்னும், நவமணியும், பாலும் விட்டு முதலில் தென் மேற்கு மூலைக்காலை நாட்டுதல் வேண்டும். தொடர்ந்து முறையே தென் கிழக்கு மூலைக் கால், வடகிழக்கு மூலைக்கால், வடமேற்கு மூலைக்கால் இவற்றை நாட்டுதல் வேண்டும்.

இரண்டு பக்கங்களில் அமைக்கப்படும் கீழ் உத்திரங்கள், குறுக்குக் கழிகள், தாங்கிகள் போல்வன வீட்டின் மூலைப்

பகுதிகளில் வந்து இணையும். அவ்வாறு இணைக்கப்படும் மரங்களை மிகவும் கவனத்துடன் மரத்தின் அடிப்பகுதி, நுனிப்பகுதிகளைக் கவனித்து எப்பொதும்,

1. அடிப்பகுதி கீழேயும் வீட்டின் உட்புறத்தில் அமையு மாறும் வைத்து, நுனிப்பகுதிமரம் மேலேயும் வெளிப் பக்கத்தை நோக்கி அமையுமாறும் வைத்துப் பொருத்தி இணைத்தல் வேண்டும்.

2. மேலும் நான்கு மூலைகளிலும் இணைத்துப் பொருத் தும்போது அடிமரப்பகுதிகள் இரண்டும் தென்மேற்கு மூலையில் பொருந்த வேண்டும். நுனிப் பகுதிகள் இரண் டும் வட கிழக்கு மூலையில் பொருந்த வேண்டும்.

3. இவற்றுள் தெற்கே உள்ள மரம் மேலாகவும், வடக்கே உள்ள மரம் கீழாகவும் வைத்து இணைக்க வேண்டும்.

4. பிற இரண்டு மூலைகளிலும்—அடிப்பகுதி ஒன்றும் நுனிப்பகுதி ஒன்றுமாக அமையும். அவற்றைக் கீழ் மேல் முறைகளை மாற்றாது பொருத்த வேண்டும்.

கூரைக்கால் அமைத்தல்

(சுவடியில் உள்ளவை)

தளமட்டம்

114. மட்டநீர் கொள்ள வேண்டின்
மதித்திடத் தளத்தை நீயும்
திட்டமாய்ச் சதுர மாக்கித்
திறமதாய் நடுவி லேதான்
வெட்டெனக் குழியைக் கெல்லி
வேகமாய் நீரை விட்டுச்
சட்டமாய் முளைக டாவி
சார்பினிற் கயிறு கட்டே.

(இ-ள்) தளமட்டங் கொள்ளும்படி—

நடுவில் சதுரமாகக் குழியைக் கெல்லித் தண்ணீர் விட்டு நாலுதிக்கும் முளைகடாவிக் கயிறுகட்டவும் எ-று.

115. நன்றென விட்ட நீர்தான்
நாற்றிசை நண்ணி மேலும்
சென்றுமே முளையைத் தொட்டுச்
சிதறியே நிற்கும் ஆகில்

மன்றமர் மதிநி லத்துள்
மதித்ததோர் நூலால் கொண்டு
குன்றமர் குமரன் பர்தம்
குறிப்புடன் துதித்துப் போற்றே.

(இ-ள்) நடுவில் விட்டநீர் வழிந்தோடி நான்கு திக்கும் பரந்து முளையிலும் கயிற்றிலும் தாக்கி நின்றால் தளமட்டம் ஒக்கும் எ-று.

கூரைக்கால் நாட்டல்—முகூர்த்தஞ் செய்தல்

116. அகலத்தை ஒன்ப தாக்கி
அதிலொன்று குறைக்கக் கால்ஆம்
புகலுற்ற கழிக்கு இரண்டு
போக்குமேல் ஆறு கூற்றின்
மிகலுற்றே கவர்வ தற்கு
மேலது ஒன்று போக்கிச்
சகலர்க்கும் நடுவோர் ஐந்து
கூறுஎனச் சாற்றி னாரே.

(இ-ள்) அகலத்தைப் பிடித்து 9 கூறுசெய்து அவற்றுள் ஒன்றைக் குறைக்கில் காலாம். கீழே குழி நாட்டுகைக்கு 2 கூறும் மேலே கவருகிறதற்கு ஒரு கூறும் போக்கி நடுவில் 5 கூறு நிறுத்தவும் எ-று.

மூலைக்கால் நாட்டும் விதி

117. முன்னிய முகூர்த்தந் தன்னில்
முதல்வனைப் பூசை செய்து
பொன்னொடு மணியும் பாலும்
பொலிவுடன் குழியில் பெய்து
தென்மேலை மூலைக் காலை
சிறப்புடன் முந்த நாட்டித்
தென்கீழும் வடகீழ் மேலை
மூலையும் தெரிந்து நாட்டே.

(இ-ள்) நல்ல முகூர்த்தத்தில் விநாயகரைப் பூசை செய்து பொன்னும் நவமணியும் பாலும் குழியில்விட்டு முதல் தென்மேல் மூலைக்காலை நாட்டி, தென்கீழ் மூலை, வடகீழ் மூலை, வடமேல் மூலைக்காலும் அடவு சேர நாட்டவும் எ-று.

118. இசைமுது தலைகீழ் ஆக
இளந்தலை மேல தாக
பசையுடன் ஓர மாகில்
பருத்தலை உள்ள தாக
வசமுற விசைப்பார் ஆகில்
வாழ்வொடு சம்பத்து உண்டாம்
பிசகுதல் வருமே யாகிற்
பிணியொடு கேட தாமே.

(இ-ள்) மரம் இசைக்கும் போது முதுதலை கீழாகவும் இளந்தலை மேலாகவும், நார்விசையாகில் முதுதலையுள் ளும், இளந்தலை பிறத்தியுமாக இசைப்பது நன்று. இதற்குப் பிசகு வருமாகில் பிணியுங் கேடு முண்டாம். இளந்தலை கீழும் முதுதலை மேலுமாக இசைப்பராகில் நோயுண்டாம் எ-று.

119. முதுதலை இரண்டுந் தென்மேல்
மூலையில் கூட வைத்து
திதமுற இசைக்கும் போது
தென்தலை மேல தாக
மதியிளந் தலையி ரண்டும்
வடகீழாம் மூலை தன்னில்
விதிவிடத் தலைகீ ழாக
விளம்பினர் பிணைக்கத் தானே.

(இ-ள்) முதுதலை இரண்டும் தென்மேல் மூலையில் பொருந்த வைத்துத் தென்தலை மேலாகவும், இளந்தலை இரண்டும் வடதிசை மூலையிற் பொருந்த வைத்து வடதலை கீழாகவும் பிணைக்கவும் எ-று.

120. இளந்தலை இரண்டும் வேறே
இடத்தினில் இசைக்கல் ஆகா
வளம்படு முதுத லைகள்
வகுத்ததென் மூலை யன்றி

விளம்பினோம் இசைப்பார் ஆகில்
வெறுமைநோய் நலியும் என்றே
தெளிந்தவர் உரைக்க லுற்றார்
சிற்பியின் மூலை ஆய்ந்தே.

(இ-ள்) இளந்தலை இரண்டும் வடகீழ் மூலையொழிய வேறு இடத்தினில் இசைக்கலாகாது. முதுதலை இரண்டும் தென்மேல் மூலையி லொழிய மற்ற இடங்களில் இசைக்க லாகாது. இசைக்கில் வறுமையும் நோயுமுண்டாம் எ-று.

121. பரப்பினில் பாதி தன்னைப்
பன்னிரு கூறு செய்து
நிறப்புறும் ஐந்து கூறு
நின்றதும் ஏற்றம் அஞ்சாம்
இறப்புமஞ் சாகை யாறாம்
ஏழது நடுவாங் கையோ
முறப்புகொ டாகை யெட்டு
மொன்பது கோடி தானே.

(இ-ள்) பரப்பிற்பாதியைப் பன்னிரண்டு கூறுசெய்து இதில் ஐந்து கூறு ஏற்றம் அஞ்சு; ஆறு மஞ்சாகை; ஏழு நடுவாகை; எட்டு மரமிசைக் கோடாகை; ஒன்பது கோடி யென்பதாம் எ-று.

9. The Grammer of the Tree

Male Tree

Both the bottom and the top of the tree are in same measurement. It would be like a pillar. This is the characteristic of the male tree.

For entrance-doors, window-doors the male tree can be used.

Female tree

The bottom of it is bigger than its top.

For girdle, cross-bar woods, small pillars, this female tree can be utilized.

Eunnch Tree

The top of it is bigger than its bottom.

This kind of tree can be used for making small frames. Among trees,

Mango belongs to Tevar; Neem belongs to Brahmins; Teak belongs to Kings; Iluppai belongs to Chettiars; Kino Tree belongs to Vellālars.

Forming wood frames

While making entrance doors, the bottom of the tree should be placed below and the top should be on the above.

While making girdle and cross bars the bottom part should be placed in the South west or in the South, slightly inclined to inside and the top should be placed in the North East or North side, slightly inclined to outside.

Trees that are unfit for constructing houses

Athi, Arasu, Banyan, ilavu, ilanthai, kucham, pilie, purasu, villa are some of the trees should be avoided. If they are used, there would be destruction of wealth; children would die; suffering would seize the house.

Like so, if trees that were uprooted by the wind, trees that were grown in temples and graves, are used, dustruction of wealth, family would occur.

Like so, if trees like agathi, ilavu, yerukku, vamisam, paruthi, palm, tamarind, are in the house, wealth would be destroyed.

Rules to cut down the woods

In an auspicious day, after giving due respect to carpenter by giving Thatachanei to him, wood-cutting should be started.

Day that favourable for wood-cutting

It is good to cut woods on *Pancami*, *Sasti*, *Saptami*, *astami* and *Navami* — these five days. If the star *Rokini falls in any of these days it will be of more good.*

Days that are not favourable for cutting woods

1. When Sun appears on the day of which the star kirutikai reigns.

2. Thiruvonam — Third and fourth part

Thiruvonam	— Third and fourth part	
Avittam	— " "	
Satayam	— Third part	if venus reigns
Purattathi	— "	on these days.

3. When moon reigns in the days on which the stars of Thiruvonam, Avittam, Satayam, Purattadhi, Uthirattadhi, Maham, Puram, Uthiram, Astham, Chitirai, Suvathi fall.

In these days woods should not be out.

9. மரத்தின் இலக்கணம்

(சுவடிச் செய்திகளின் சுருக்கம்)

ஆண் மரம்

மரத்தின் அடிப்பாகமும், நுனிப்பாகமும் ஒரே அளவாய் ஒத்து இருக்கும். தூணைப்போல திரண்டு ஒழுங்காக இருக்கும். இவை ஆண் மரத்தின் அறிகுறிகளாம்.

வாசற்கால், சன்னல் போன்ற கால்களுக்கும் தூண்களுக்கும் ஆண் மரத்தையே பயன்படுத்துதல் வேண்டும்.

பெண் மரம்

அடிப்பகுதி பருத்தும் நுனிப்பகுதி சிறுத்தும் காணப்படும் மரம் பெண்மரம் என்று அறியலாம்.

இம்மரத்தை வீட்டின் உத்திரம் (விட்டம்), தாழ்வாரம், தாங்கிக்கட்டை, சிறியதூண், சுமையடைக் கட்டை போன்றவற்றிற்குப் பயன்படுத்தலாம்.

அலி மரம்

அடிமரம் சிறுத்து நீண்டு உயர்ந்து நுனிமரம் பருத்துக் காணப்பட்டால் அம்மரம் அலிமரம் எனப்படும்.

சிறுவட்டம், பிறசட்டங்கள் போன்றவற்றிற்கு இவ் அலிமரத்தைப் பயன்படுத்தலாம்.

மரங்களுள்

மா மரம் — தேவர்களுக்குச் சிறப்புடையது ஆகும்
வேப்ப மரம் — அந்தணர்களுக்குச் சிறப்புடையது ஆகும்
தேக்கு மரம் — அரசர்களுக்குச் சிறப்புடையது ஆகும்
இலுப்பை மரம் — செட்டிகளுக்குச் சிறப்புடையது ஆகும்
வேங்கை மரம் — வேளாளர்களுக்குச் சிறப்புடையது ஆகும்

மரம் அமைத்தல்

வாசற்கால், தூண் போன்று மரம் நின்றநிலையில் வைக்க வேண்டுமானால் மரத்தின் அடிப்பக்கம் கீழேயும் நுனிப்பக்கம் மேலேயும் அமையுமாறு நிறுத்துதல் வேண்டும்.

உத்திரம், விட்டம், குறுக்குக்கழிகள் போன்று பயன் படுத்த வேண்டுமானால்,

அடிப்பக்கம் தென்மேற்கு மூலையில் பொருந்துமாறு அமைக்க வேண்டும். அல்லது தெற்குத் திசையில் அமைதல் வேண்டும். உட்புறத்தே அமைதல் வேண்டும்.

மரத்தின் நுனிப்பக்கம் வடகிழக்குப்பக்கம், வடக்குப் பக்கங்களில் அமைக்கவேண்டும். நுனிப்பாகம் வெளிப் புறம் அமையலாம்.

வீடு கட்டுதற்கு ஆகாத மரங்கள்

அத்தி, அரசு, ஆல், இச்சி, இரவு, இலந்தை, குச்சம், பீலி, புரசு, மகிழம், விளா ஆகிய மரங்களை வீடுகட்டு வதற்குப் பயன்படுத்தினால் செல்வம் அழியும்; புத்திரப் பேறு குறையும்; வறுமை மிகுந்து துன்பம் உண்டாகும்.

காற்றில் அடிபட்டு விழுந்தமரம், கோயில், மயானம் ஆகிய இடங்களில் இருந்தமரம் ஆகிய மரங்களைப் பயன் படுத்தி வீடு கட்டினால் செல்வம் குறையும்; ஆயுள் குறை யும்; வமிசம் அழியும்.

அகத்தி, இலவு, எருக்கு, நாவல், நெல்லி, பருத்தி, பனை, புளி ஆகிய மரங்கள் வீட்டில் இருந்தால் செல்வம் அழியும்.

மரங்கள் வெட்டும் விதி

நல்லநாள், யோகம், கரணம், இவற்றை அறிந்து மரம் வெட்டும் தச்சனுக்குத் தாம்பூலம், மலர், தட்சணை கொடுத்து மரம் வெட்டச் செய்யவேண்டும்.

மரம் வெட்டும் நாள்

பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி ஆகிய ஐந்து திதிகளில் மரம் வெட்டுவது நல்லது. இத்திதிகளில் ரோகிணி நட்சத்திரம் சேர்ந்த நாளாயின் மிகவும் நல்லது.

மரம் வெட்ட ஆகாத நாட்கள்

1. கிருத்திகை நட்சத்திரத்தில் — சூரியன் இருக்கும் நாள்
2. திருவோணம் — மூன்றாம் பாதம், நான்காம் பாதம்

அவிட்டம் — மூன்றாம் பாதம் நான்காம் பாதம் இவற்றில் சுக்கிரன்
சதயம் — மூன்றாம் பாதம், இருக்கும் நாள்
பூரட்டாதி — மூன்றாம் பாதம்

3. திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி ஆகிய 11 நட்சத்திரத்திலும் சந்திரன் இருக்கும் நாள் இவற்றில் மரம் வெட்டுதல் கூடாது.

மரத்தில் ஆண், பெண், அலி அறிய

(சுவடியில் உள்ளவை)

ஆண்மரம்

122. காணவே மரங்கள் தன்னைக்
கருத்துடன் அறியும் போது
தூண்எனத் திரண்டு நின்று
சுத்தமாய் ஒழுங்க தாக
நீணுயர் பாரின் மீதில்
நின்றிடும் ஆகில் நல்ல
ஆண்மரம் என்று சொல்லி
அறைந்தனர் வேதத் தோரே.

(இ-ள்) மரமானது தூண்போலத் திரண்டு நின்று ஒழுங்காக இருக்குமாகில் ஆண்மரம் என்று சொல்லப்படும் எ-று.

பெண்மரம்

123. கண்ணுற மரங்கள் தன்னைக்
கருதியே பார்க்கும் போது
விண்ணுமை அடிப்ப ருத்து
மேல்து சிறுத்து நின்றால்
பெண்ணென. வகுத்து நின்றாய்
பெருமையாய் ஓத லம்பின்
நுண்ணெனத் தமிழை ஓதும்
தூயனாம் மயன்சொன் னானே.

(இ-ள்) மரமானது அடிபருத்து நுனியானது சிறுத்து இருந்தால் அது பெண் மரம் என்று சொல்லப்படும் எ-று.

அலி மரம்

124. இலங்கிய மரங்கள் தன்னை
இயல்புடன் பார்க்கும் போது
நிலமதில் சிறுத்து நின்று
நெடுமைய தாகிப் பின்னும்
தலையது மிகப்ப ருத்து
தானது நிற்கு மாகில்
அலிமரம் ஆகும் என்றே
அறைந்தனர் வேதத் தோரே.

(இ-ள்) மரமானது சிறுத்து நீண்டு நெடுமையாகித் தலை பருத்திருந்தால் அது அலிமரம் என்று சொல்லப்படும் எ-று.

பயன்

125. கருதுஆண் மரமே யாகில்
காலொடு தூணுக்கு ஆகும்
மருவுபெண் மரமே யாகில்
வளையுத்திரம் பொதிகைக்கு ஆகும்
விரவுஅலி மரமே யாகில்
விட்டமும் சட்டம் ஆகும்
உரவிய கைகள் ஆகி
உத்தம மரங்கள் ஆமே.

(இ-ள்) ஆண்மரமாகில் கால்களுக்கும் தூணுக்கும் ஆகும்; பெண் மரமாகில் வளையுத்தரம் பொதிகைக்கும் ஆகும்; அலிமரமாகில் விட்டம் சட்டத்திற்கும் ஆகும்: கைகளுக்கு உத்தம மரங்கள் நன்று எ-று.

126. மாமரம் தேவர்க்கு ஆகும்
மறையவர் வேம்பது ஆகும்
கோமகன் தேக்கது ஆகும்
குணமுள்ள இலுப்பை செட்டி
பூமகன் வேங்கை யாகும்
பொருசாதி நான்கி னுக்குள்
தாமமாம் வல்லி மேஷந்
தருமயன் சாற்று வாரே.

(இ-ள்) மாமரம் தேவக்காகும்; வேம்பு பிராமணர்களுக்கு ஆகும்; தேக்கு அரசர்களுக்கு ஆகும்; இலுப்பை செட்டி களுக்கு ஆகும்; வேங்கை வேளாளருக்கு ஆகும் எ-று.

127. அடிதலை இரண்டும் ஒத்தல்
ஆண்மரம் ஆகும் என்பர்
அடிபருத் திடிலே பெண்ணாம்
அலியது தலைப்ப ருக்கும்
வடிவுடன் தூணுக்கு ஆணாம்
வளைகள்உத் திரங்கள் போதி
வடிவுடன் விட்டம் சட்டம்
மற்றவைக்கு ஏது மாமே.

128. அகலத்தோர் பாரி தன்னை
ஆறுஇரு கூறு செய்து
சகலர்க்கும் ஐந்து கூறே
தக்கதோர் ஓரம் அஞ்சாம்
மிகலுமஞ் சாகை ஆறாம்
ஏழது நடுவாங் கைக்கு
முகலுங்கோ டாகை எட்டு
ஒன்பது கோடி தானே.

129. அஞ்சினில் இரண்ட தான
கைக்குச்சரம் அளவு நீளம்
மிஞ்சிய முழம்மூன் றாக
வேதித்து ஒன்றை யேற்றித்
தஞ்சமில் அத்தோடு எட்டுத்
தாள்புனர் ஆக்கக் காலம்
மிஞ்சிடாது இரண்டு தானும்
பிறவாகை என்ன லாமே.

மரத்தில் நன்மை தீமை அறிந்து உத்திரம் இணைக்கும் விதி

130. மாடமா ளிகைகள் ஆதல்
மதித்ததோர் மண்ட பங்கள்
நீடிய மயனார் சொல்லும்
நெறிதனை இயம்பக் கேளீர்
கூடிய மரங்கள் தன்னில்
குணங்களாம் நன்மை தீமை
ஆடக மயிலி னாளே
அறிந்தவர் உரைக்க லுற்றார்.

131. உத்திரம் இசைக்க வேண்டில்
உன்னிநீர் கேளும் எல்லாம்
அத்தனை யகலந் தன்னை
யளந்துநற் சதுரம் ஆக்கி

வைத்தன கன்ன னேரே
வடிவுற நூலால் கண்டு
இத்தனை என்ப தாக
இசைத்தனன் குடுமி யாமே.

132. உத்திர மிசையில் ஆணி
உலகத்தில் வலம தாகில்
அத்தனார் அருளி னாலே
அனேகபாக் கியமுண் டாகும்
உத்திர மிசையில் ஆணி
உலகத்தில் இடம தாகில்
சத்துரு பெருத்துப் பின்னும்
சாலைதீப் படுகை திண்ணம்.

133. மையரும் மனைகள் தன்னில்
மரத்தினை யிசைப்பான் ஆகில்
கையதில் பொருளும் போகும்
காவலன் தானும் சாவன்
பையவே ஆகில் மையம்
பாரிய பாதி தன்னில்
செய்யவே கடவ நல்ல
சேர்ந்ததோர் இசையுந் தானே.

134. அடியது கீழ தாகும்
அக்கிரம் மேல தாகும்
படிமுத லான தெல்லாம்
பதமுடன் இசைத்துக் கொள்க
முடியவே ஒரை யாகில்
மூலமும் உள்ளே யாகும்
கடிகமழ் குழலி னாளே
கண்டவர் உரைத்த வாறே.

வீடுகட்டுதற்கு உதவா மரங்கள்

135. அத்தியும் ஆலும் இச்சி
அரசுடன் இலவு தானும்
நத்திய புரசு குச்சம்
நவின்றிடும் இலந்தை பீலி
வித்தம மகிழம் கூறும்
விளாவுடன் இவைகள் எல்லாம்
சித்தியாய் அகங்கள் கட்டச்
செல்வமும் குன்றும் தானே.

(இ-ள்) அத்தி, ஆல், இச்சி, அரசு, இலவு, புரசு, குச்சம், இலந்தை, பீலி, மகிழம், விளா இவைகளால் வீடுகட்டினால் இருக்கப்பட்ட செல்வமும் புத்திர பாக்கியமும் குறைந்து வறுமை மேலிட்டு அதிக துன்பத்தையுண்டாக்கும் எ-று.

136. சீறிய காற்றில் வீழ்ந்த
திறமைசேர் மரமும் அல்லால்
கூறிய ஆல யத்தில்
குணம்பெற நிற்கும் நல்ல
தேறிய மரம்ம யானத்து
இருந்திடும் மரம்அ சுந்தான்
மாறியே கட்டு மாகில்
வமிசமும் நாச மாமே.

(இ-ள்) காற்றில் அடிபட்டு வீழ்ந்தமரம், ஆலயத்தில் இருந்த மரம், மயானத்தில் இருந்த மரம் இவ்வகைப்பட்ட மரங்களால் வீடு கட்டடஞ் செய்தால் செல்வங்குறைந்து ஆயுள் சீரணித்து வமிசம் நாசமாகும் எ-று.

137. பருத்தி அகத்தி பனைநாவல் நெல்லி
எருக்கு புளிஇல வோடு எட்டும்
பெருக்க முடன்எந்த மனைஆ யிடினும்
இந்திரபதம் ஆனாலும் அந்தமனை பாழாய்விடும்

(இ-ள்) பருத்தி, அகத்தி, பனை, நாவல், நெல்லி, எருக்கு, புளி, இலவு இவ்வகைப்பட்ட மரங்கள் வீட்டில் இருக்கும் ஆகில் தாமரைக் கமலத்தில் வீற்றிருக்கின்ற இலட்சுமியானவள் இவ்விடத்தில் இருக்க மனமில்லாமல் வெறுத்து மனையை விட்டு நீங்குவாள் எ-று.

138. பருத்தி அகத்தி பனைநெல்லி நாவல்
எருக்கு புளிஇலவ ஏறுஇலந்தை — நெருக்கமுடன்
இல்லத்தில் வேரோடில் இந்திரனே யானாலும்
செல்லப்போய் நிற்கும் திரு.

மரங்கள் வெட்டும் விதி

வாரம், யோகம், கரணம் இவற்றை அறிந்து கர்த்தனுக்கும் சந்திரதார பலன் பார்த்துக்கொண்டு தச்சனுக்குக் கெந்தம், தாம்பூலம், புஷ்பம், தட்சணை கொடுத்துக் காட்டுக்கு அனுப்பி மரம் வெட்டினால் சுபம் உண்டாகும்.

மரங்கள் வெட்டத் திதி நிர்ணயம்

பஞ்சமி முதல் ஐந்து நாளில் வெட்டினால் பூச்சி பிடியாது. இவ் ஐந்து நாளையில் ரோகணி நட்சத்திரத்தில் ஆனால் மிகவும் உத்தமம். வேல மரம் வெட்டினாலும் பூச்சி பிடியாது.

இதற்கு ஆகாத நாள்

கிருத்திகை நட்சத்திரத்தில் சூரியன் இருக்கத் திருவோணம் அவிட்டம் மூன்றாம் பாதத்திலும், நாலாம் பாதத்திலும், சதயம் பூரட்டாதி மூன்றாம் பாதத்திலும் சுக்கிரன் நிற்க மரம் வெட்டல் ஆகாது.

முன்பு வெட்டின மரங்கள் ஆனாலும் இந்த நட்சத்திரத்திலும் இவர்கள் இருக்கும் போதும் வீட்டுக்கு கொண்டு வரக்கூடாது.

பின்பு திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி இந்த 11 நட்சத்திரத்திலும் சந்திரன் இருக்க மரம் வெட்டலாகாது.

வெட்டின மரங்கள் ஆனாலும் வீட்டுக்குக் கொண்டு வரக்கூடாது.

10. Laying entrance-poles

1. Monday — good for laying entrance poles and pillars.

Wednesday — good for raising the hand pillars

Friday — It is good for forming ceiling, fences and flooring

2. 1) If the house owner wants to have the entrance facing East then he should start the work in the month of Avani, while sun reigns in the katagam, and singam. Like this.

2) entrance facing south — karthikai month — sun reigns in Tulam and virucakam.

3) entrance facing west — Maci month — sun reigns in Makaram and Kumbam.

4) entrance facing north — Vaikasi month — sun reigns in Mesham, Rishabam.

Selection of direction according to the house owner's Rasi

1. Those who belong to Viruchikam, Minam, Katakam may select and have entrance of the houses facing East.

2. Those who belong to Rishabam, Makaram, Kanni may have the entrance of their houses facing South.

3. Those who belong to Tulam, Mithunam, Kumbam, may have the entrance of their houses facing West.

4. Those who belong to Tanusu, Mesham, Simam may have the entrance of their houses facing North.

The part where the entrance poles have to be placed

The length and the width of the direction of the entrance has to be measured and divided into eight parts. Among these eight, entrance should not be formed in the first two parts and in the last two parts. But it can be formed in any of the remaining, 3, 4, 5, 6 parts.

The method of measuring:

1. entrance, intended to face East	—	From the corner of North east to the corner of South east must be measured.
2. entrance, intended to face south	—	measure from the corner of South east to the corner of the South west
3. entrance, intended to faee west	—	measure from the corner of South west to the corner of North west.
4. entrance, intended to face North	—	measure from the corner of North west to the corner of North east.

The predictions of planets to have entrance-poles

The above-said measurement for making entrance should be made in 9 parts. Among these 9 parts,

first part	— Sun	6th	"	— Venus
2nd "	— Moon	7th	"	— Saturn
3rd "	— Mars	8th	"	— Ragu
4th "	— Mercury	9th	"	— Kethu
5th "	— Jupiter			

in the fifth part which is called Pracaspathi, entrance for temple can be créated.

in the sixth part which belongs to Venus, entrance for house can be formed.

in the fourth part which belongs to Mercury, entrance for cow-shed may be formed.

in the fourth, fifth, and sixth parts, which belong to Mercury, Jupiter and Venus, entrances for temple, house and cow-shed can be formed.

The measurement of entrance-pole:

It should be 6¾ ft. height 3¾ ft. width oı
5¼ " 2¼ "
and this would be good. The frames should not be from woods of two different trees. The outer entrance should be lower than inner entrance. There should not be any shortwalls opposite to the entrance. Like wise there should not be any beams against the entrance.

10. வாசற்கால் முதலியன வைத்தல்

(சுவடிச் செய்திகளின் சுருக்கம்)

பொது

1. திங்கள் — வாசற்கால், தூண் முதலியன வைக்க நன்று.

புதன் — கையை ஏற்றுதல் (கை = உத்தரம்)

வெள்ளி — கூரை வேய்தல், வீடு மூடுதல், தளம் இடுதல் ஆகியவற்றிற்கு மிகவும் நல்ல நாளாகும்.

வியாழன் — குடிபுக மிகவும் உரியநாளாகும். இந்நாட்களைத் தேர்ந்து உரிய செயல்களை மேற்கொள்பவன் நீண்ட நெடுங்காலம் எல்லா வகைச் செல்வங்களுடனும் வாழ்வான்.

2. வீடுகட்டுபவர்

1. கிழக்கு நோக்கிய வாசற்படி வைக்கவிருக்கும் வீட்டினை ஆவணி மாதத்தில் கட்டவேண்டும். கடகம், சிங்கம் ஆகிய 2 இராசியில் சூரியன் நிற்க வீடு கட்ட வேண்டும். இதேபோல,

2. தெற்கு நோக்கிய வாசற்படி வீட்டை	கார்த்திகை மாதம்	துலாம், விருச்சிகம் இராசிகளில் சூரியன் நிற்கவும்,
3. மேற்கு நோக்கிய வாசற்படி வீட்டை	மாசிமாதம்	மகரம், கும்ப இராசிகளில் சூரியன் நிற்கவும்,
4. வடக்கு நோக்கிய வாசற்படி வீட்டை	வைகாசி மாதம்	மேஷம், ரிஷப இராசிகளில்சூரியன் நிற்கவும்

கட்டுதல் வேண்டும்.

வீட்டுக்கு உரியவரின் இராசிக்கு ஏற்ற திசை

1. விருச்சிகம், மீனம், கடகம் ஆகிய இராசிக்காரருக்கு கிழக்கு நோக்கிய வீடு நல்லது.

2. ரிஷபம், மகரம், கன்னி ஆகிய இராசிக்காரருக்குத் தெற்கு நோக்கிய வீடு சிறந்தது.

3. துலாம், மிதுனம், கும்பம் ஆகிய இராசிக்காரருக்கு மேற்கு நோக்கிய வீடு உயர்வைத் தரும்.

4. தனுசு, மேஷம், சிம்மம் ஆகிய இராசிக்காரருக்கு வடக்கு நோக்கிய வீடு நன்மை தருவதாகும்.

வாசற்கால் வைக்கும் பாகம்


வாசற்கால் வைக்கும் திசையின் நீளம் அல்லது அகலத்தை அளந்து, அதை 8 பாகங்களாகப் பகுக்க வேண்டும். அவற்றில் முதல் இரண்டு பாகங்களிலும், இறுதி இரண்டு பாகங்களிலும் வாசற்படி வைக்கக் கூடாது. இடையிலுள்ள 3, 4, 5, 6 ஆகிய பாகங்களில் எங்கு வேண்டுமானாலும் அமைக்கலாம்.

நீளம் அல்லது அகலத்தை அளக்க வேண்டிய முறை

1. கிழக்கு நோக்கிய வாசற்கால் வைக்க	வடகிழக்கு மூலை முதல் தென்கிழக்கு மூலை வரை அளக்கவும்.
2. தெற்கு நோக்கிய வாசற்கால் வைக்க	தென்கிழக்கு மூலை— தென்மேற்கு மூலை
3. மேற்கு நோக்கிய வாசற்கால் வைக்க	தென்மேற்கு மூலை— வடமேற்கு மூலை
4. வடக்கு நோக்கிய வாசற்கால் வைக்க	வடமேற்கு மூலை— வடகிழக்கு மூலை.



மாதிரிப் படம்



வாசற்கால் வைக்க நவக்கிரக பலன்

வாசற்படி வைக்கும் திசையின் நீளம் அல்லது அகலத்தை மேலே பாகத்தை அறிய கூறியவாறு அளந்து அதை ஒன்பது பாகங்களாகப் பகுத்துக்கொள்ள வேண்டும். இந்த 9 பாகங்களில்,

முதல் பாகம் — சூரியன்	6 ஆவது பாகம் — சுக்கிரன் (வெள்ளி)
2 ஆவது பாகம் — சந்திரன்	7 ஆவது பாகம் — சனி
3 ஆவது பாகம் — அங்காரகன் (செவ்வாய்)	8 ஆவது பாகம் — இராகு
4 ஆவது பாகம் — புதன்	9 ஆவது பாகம் — கேது
5 ஆவது பாகம் — குரு (வியாழன்)	

எனக்கொள்ளுதல் வேண்டும். இந்த நவக்கிரக பாகத்தில் பிற அப்படியே.

பிரகஸ்பதி பாகம் எனப்படும் 'குரு' பாகமாகிய ஐந்தாம் பாகத்தில் கோயிலுக்கு வாசற்கால் வைக்கலாம்.

சுக்கிரன் பாகமாகிய ஆறாம் பாகத்தில் வீட்டிற்கு வாசற் கால் வைக்கலாம்.

புதன் பாகமாகிய நான்காம் பாகத்தில் மாட்டுத் தொழுவத் திற்கு வாசற்கால் வைக்கலாம்.

புதன், குரு, சுக்கிரன் ஆகிய 4, 5, 6 ஆம் பாகங்களில் கோயிலுக்கும் வீட்டிற்கும் மாட்டுத் தொழுவத்திற்கும் வாசற் கால் வைக்கலாம்.

வாசற்கால் அளவு

வாசற்கால் 6¾ அடி உயரம் 3¾ அடி அகலம் (அல்லது 5¼ அடி உயரம் 2¼ அடி அகலம் இருப்பது சிறந்தது.

வாசற்கால் இரண்டுவகை மரத்தால் செய்யக்கூடாது. தெருவாசற்கால் தாழ்ந்தும் உள்வீட்டு வாசற்கால் உயர்ந்தும் இருத்தல் வேண்டும். வாசற்படிக்கு எதிரில் கட்டைச் சுவர் குத்து ஆகாது. தூலக்குத்தும் கூடாது.

வாசற்கால் முதலிய வைத்தல்
(சுவடியில் உள்ளவை)

கால் வைக்க, கை ஏற்ற நாள், இலக்கினம்

139. மதியினில் காலை நாட்டி
வன்புதன் கையை வைத்து
விதியினால் வெள்ளி வேய்ந்து
வியாழத்தில் குடியே புக்கில்
சதியுடன் பகைவர் வந்து
தண லெரி மூட்டி னாலும்
மதிபெற இந்தி ரன்போற்
பரிவுடன் வாழ்வர் தானே.

(இ-ள்) திங்களில் காலை நாட்டி, புதனில் கையை வைத்து, வெள்ளியில் வேய்ந்து, வியாழத்திற் குடி புகுந்தால் தேவேந்திரன் போல் அஷ்ட ஐசுவரியமும் பெற்று நீடூழி காலம் செல்வம் நீங்காமல் கீர்த்தியுள்ளவனாய் வாழ்வான் எ-று.

திசையறிந்து வாசற்கால் வைக்கும் விதி

கிழக்குப் பார்த்த வாசற்படியுள்ள வீட்டுக்கு ஈசானிய முதல் அக்கினி மூலை வரைக்கும் அளந்து அதை எட்டு பாகம் பண்ணினால்,

முதற்பாகம் — ஆனி	5 ஆவது பாகம் — புத்திர விருத்தி
2 ஆவது பாகம் — சோரம்	6 ஆவது பாகம் — சுகம்
3 ஆவது பாகம் — தனப்பிராப்தி	7 ஆவது பாகம் — துக்கம்
4 ஆவது பாகம் — இராஜ சன்மானம்	8 ஆவது பாகம் — ரோகம்

மேற்கு பார்த்த வாசற்படிக்கு நிருதி மூலை முதல் வாயு மூலை வரைக்கும் அளந்து எட்டு பாகம் பண்ணினால்,

முதற் பாகம் — ஆனி	5 ஆவது பாகம் — பாக்கியம்
2 ஆவது பாகம் — சத்துரு விருத்தி	6 ஆவத பாகம் — சுகம்
3 ஆவது பாகம் — சுகம்	7 ஆவது பாகம் — பயம்
4 ஆவது பாகம் — தனம்	8 ஆவத பாகம் — நாசம்

வடக்கு பார்த்த வாசற்படிக்கு வாயு மூலை முதல் ஈசானிய மூலை வரைக்கும் அளந்து எட்டு பாகம் செய்தால்,

முதற் பாகம்	— மனையாள் நாசம்	5 ஆவது பாகம்	— தனம்
2 ஆவது பாகம்	— புலஹீனம்	6 ஆவது பாகம்	— சௌக்கியம்
3 ஆவது பாகம்	— தன ஆனி	7 ஆவது பாகம்	— துக்கம்
4 ஆவது பாகம்	— தானிய விருத்தி	8 ஆவது பாகம்	— பாத கர்மம்

தெற்கு பார்த்த வாசற்படிக்கு அக்கினி மூலை முதல் நிருதி மூலை வரையில் எட்டு பாகம் பண்ணினால்,

முதற்பாகம்	— தன ஆனி	5 ஆவது பாகம்	— பாக்கிய முண்டாம்
2 ஆவது பாகம்	— சத்துரு விருத்தி	6 ஆவது பாகம்	— நன்மை யுண்டாம்
3 ஆவது பாகம்	— சுகம்	7 ஆவது பாகம்	— பயம்
4 ஆவது பாகம்	— தன வரவு	8 ஆவது பாகம்	— நாசமாம்

இந்தப் பாகங்களின் இயற்கை தெரிந்து நல்ல பாகத்தைப் பார்த்து வாசற்கால் வைக்க வேண்டியது.

நவக்கிரகப் பலன்கள் அறிந்து வாசற்கால் வைக்கும் நிர்ணயம்—

கிழக்கு பார்த்த வாசற்படிக்கு ஈசானிய முதல் அக்கினி மூலை வரைக்கும் அடியளந்து ஒன்பது பாகம் பண்ணவும்.

தெற்கு பார்த்த வாசற்படிக்கு அக்கினிமூலை முதல் நிருதி மூலை வரைக்கும் ஒன்பது பாகம் பண்ணவும்.

மேற்கு பார்த்த வாசற்படிக்கு நிருதி மூலை முதல் வாயு மூலை வரைக்கும் ஒன்பது பாகம் பண்ணவும்.

வடக்கு பார்த்த வாசற்படிக்கு வாயு மூலை முதல் ஈசானிய மூலை வரை ஒன்பது பாகம் பண்ணவும்.

வாசற்படிகளின் எண்ணிக்கை

ஒரு வீட்டிற்கு நாலு பக்கத்திலும் வாசற்படி வைத்திருந்தால் விசுவதோமுகம் என்று சொல்லப்படும். அதன் பலன் விருத்திப் பிரதம்.

கீழண்டை வாசற்படியில்லாமல் மூன்று பக்கத்திற்கும் இருந்தால் வியாக்கிரமபாதம் என்னப்படும். இதன் பலன் பசுக்களுக்கும் மிருகங்களுக்கும் பாதையாய் திருடர் பயமும் ஆகும்.

தெற்குமுக வாசற்படியில்லாமல் மற்ற மூன்று பக்கத்திலுமிருந்தால் பாக்கியப்பிரதம்.

மேற்கு முகமாக வாசற்படியில்லாமல் மற்ற மூன்று பக்கத்துக்கும் இருந்தால் ஸ்ரீநிலயம் என்று சொல்லப்படும். இதன் பலன் நன்றாக வாழ்வார்கள்.

வடக்கு முகமாக வாசற்படியில்லாமல் மற்ற மூன்று பக்கத்திலும் இருந்தால் சூரியநிலயம் எனப்படும். இதன் பலன் நாசம், பயம்.

விசுவ தெற்கு முகத்தில் சுவர் இல்லாமல் இருந்து கோண மத்தியில் சுவர் இருந்தால் அது புண்டரீகம் என்னப்படும். இதன்பலன் மத்திபம்.

வாசற்கால் வைக்கும் விதி

140. வந்ததோர் மனையின் நீளம்
வகுத்ததோர் முழங்கள் தன்னை
ஒன்பது கூறு செய்து
ஒரு மூன்றும் இடத்தே போக்கி
நின்றதோர் வலத்தில் ஐந்து
நீக்கியே நின்ற கூறில்
அன்பொடு வாச லாக
அறிந்தவர் உரைத்த வாறே.

கதவுக்கு நெம்பு, முளை — ஏடுகளுக்கு
இரட்டைத் துவாரம் இடும் விதி

141. நாலுக்கு மூன்றுக்கு நடுவுக்கு நடுவே
காலுக்குங் கதவுக்கும் கம்மைக்கும் இதுவே
மேலுக்குங் கீழுக்கும் நடுவுக்கும் உடலாம்
ஓலைக்கு நூலுக்கும் உளவுற்று வையே.

நில அளவு

142. நிலஅக லங்கள் கொள்ள
நேர்படச் சொல்லும் போது
நிலஅக லத்தி னாலே
கனமது நீட்டிக் கொண்டு
நிலஅக லத்தில் முக்கால்
அரையது காலே யாதல்
நிலஅக லத்தால் வந்த
நிலத்தளவு ஒத்த தாமே.

வெண்பா

143. ஒத்த நிலஅகலம் உண்மை யுடன்உரைக்கில்
ஒத்த நிலத்தளவன் றெய்தினான் — மற்ற
எண்கூறுஇட்டு ஆறரையு மேற்கத் துளை
இரண்டும்.
பண்பாகக் கொள்வாராம் பார்.

144. பார்க்குங்கூ றொன்றையும் பஞ்சமஞ்சு
கூறுசெய்து
ஆர்க்கவேயோ கையறிதல் ஒன்பதற்குச் — சீர்க்க
இருகூறாம் ஈர்துளைக்க டாவியவை மூன்றும்
வருமாம் படியாக வை.

நில நீளம் வைக்கும் விதி

145. வைத்த சுவர்கனத்தை வாக்காறு கூறுசெய்து
ஒத்ததில் மைய்யங் கிருப்புக்குத் — துத்துப்
புறம்பாக்கி நாலாம் பொருந்தும்மா மன்னர்க்குத்
திறம்பாமல் நூலாற் றெளி.

(இ-ள்) ஒன்றாக நீளம் ஒரு விரல் ஒத்தித் தள்ளி வைப்பது; யாதொரு நீளத்தையும் எட்டு பங்கு செய்து 7 உட்கூடு 1-9 செய்து மேல் 5, கீழே 4 தளமிட வைப்பது; நிலநீளத்தை 6 செய்து உட்கூடும் 2-9 செய்து மேல் 5, கீழ் 4; வேறு நில நீளத்தை ஏழு செய்து 6 உட்கூடு 1-6 செய்து மேல் 5, கீழ் 4 நிற்பதங்கள் பற்றி வைக்க வேண்டு மென்பதே. உட்கூடு விரல்-முறியாமல் வைப்பது உட்கோட் டில் பாதிபோம். விரலொற்றிக் கொள்வது.

11. The rules for having doors

Entrance doors are also .to be made up of woods from one tree like that of entrance frames.

Doors should not be running here and there. It should stay where it is stopped. It should run to close on its own accord.

While opening and closing the door, if its sounds like donkey's braying and like that of oil machines it is not good sign. If it creates sounds like the voice of an elephant and the sound of couch-shell, it signifies goodness.

If it sounds like a parrot, or if it moves in a dull manner, then it means that some pivotal nail must have to be repaired.

If it sounds like the howling of dog, like the sound of beetle, like machines of sugar-cane mill, it means that it is not good. Therefore it is careful to keep the door in good condition in order to guard them from raising such ill-omened noises.

11. கதவு இலக்கணம்

(சுவடிச்செய்திகளின் சுருக்கம்)

வாசற்கால் செய்வது போலவே கதவுகளையும் ஒரே வகைப் பலகையால் அமைத்தல் வேண்டும்.

கதவைத்திறந்துவிட்டால் விட்ட இடத்தில் நிலையாக நிற்கும்படிக் கதவைப் பொருத்துதல் வேண்டும். திறந்து விட்டால் தானே வந்து சாத்திக் கொள்ளுதல் கூடாது.

கதவைச் சாத்தும்போதும் திறக்கும்போதும் —

கழுதை கத்துவது போலவும், செக்கின் ஓசை போலவும், ஓசை உண்டாவது தீமை பயப்பதாகும்;

யானைக்குரல் போலவும், சங்கின் ஒலிபோலவும் சத்த மிடுவது பலவகையிலும் நன்மையைத்தரும்; செல்வம் பெருகும்;

வாதநாடி, பித்தநாடி களைப்போல மந்தமாய் நகர்ந்தாலும், கிளியைப்போலக் கீச்சென்ற சத்தம் வந்தாலும் கதவின் நடுச்சட்டத்தில் உள்ள ஆணி ஒன்று பழுதுபட்டிருக்கும் என்று அறியலாம். இந்த ஓசைகளும் தீமை பயப்பனவாகும்.

நாய் அழுவது போல, தும்பியின் ஒலிபோல, பேரிகை கொட்டுவது போல, கரும்பு ஆலை போலப் பலவகையான ஒலிகளும் ஆகாது. இத்தகு ஒலிகள் ஏற்படாதவாறும், திறந்தாலும், மூடினாலும் தாமே ஓடுமாறு இல்லாமலும் கதவுகளைப் பொருத்துவதில் கவனமாய் இருத்தல் அவசியம்.

கதவுகளின் இலக்கணம்

(சுவடியில் உள்ளவை)

146. சிறப்புடை தேவர்க்கு அன்றே
அடைத்தலுந் திறத்தல் தானும்
சிறப்புடை வடம்இ ரண்டாய்
அடைத்தலுந் திறத்தல் தானும்
சிறப்புடை வடமது ஒன்றாய்த்
தேவர்கட்கு அன்றி யாகா
சிறப்புடை கதவுங் கோலுஞ்
சிக்கெனச் செய்வ தாமே.

147\. இருக்கவே யாகும் ஆகில்
ஒருவடம் முன்நோய் செய்யும்
இருவடம் மறையோர் தேவர்
மற்றெல்லா விடத்தும் ஆகும்
கருதுகோல் எவர்க்கும் ஒக்க
இரட்டித்தல் தேவ ருக்காம்
மருவுதான் நடுவு கண்டால்
மார்க்கமாம் அளவு தானே.

148\. ஓடி யடைக்குமே லூர்திறந்து போற்றிடினும்
வாடி யதனை வருத்துவிக்கும்—வாடாது
நிற்கவெனில் நிற்கும் நிலைகெடுமே கேடாமே
கற்பகஞ்சேர் வாசல் கதவு.

(இ-ள்) மூடின கதவைத் திறந்து நிலையில் நிற்க வைக்கில் தானே வந்து சாத்துமாகிலும் அதிக இறைச்சலிட்டாலும் உயிர்ச் சேதமுண்டாவதல்லாமல் மனையும் பாழாம். நின்ற நிலையில் நிற்குமாகில் நீடூழி காலம் வாழலாம் எ-று.

விருத்தம்

149\. தாளவே ஒன்று மூன்றும்
ஐந்தின்பால் கதவு நிற்க
மீளவே தாம்க பாடம்
விடும்அதன் ஓசை வேறு
காளமாங் கழுதை செக்குக்
குரலது கவலை யாக்கும்
தாளம்வே ழத்தின் ஓசை
சங்கொலி மிகவும் நன்றே.

(இ-ள்) கதவைச் சாத்தும்போது கழுதைக்குரல் போலும், செக்கின் ஓசை போலும் சத்தம் உண்டாகில் தீராக் கவலை யுண்டாம். யானைக் குரல் போலும் சங்கின் ஒலி போலும் சத்தமுண்டாகில் சகல பாக்கியமுண்டாம் எ-று.

150\. மந்தமாய் வாத பித்தம்
மருவியே நடத்திட் டாலும்
சிந்தையில் கிளியின் கூச்சல்
சிதறியே கேட்டிட் டாலும்
அந்தமாய் நடுச்சட் டத்தில்
ஆணியொன்று ஊன மாகித்
தொந்தமாய் இருக்கும் நோய்தான்
தீராது துணிந்து சொல்லே.

(இ-ள்) கதவைச் சாத்தும் போது மந்தங் கொண்டு வாதம், பித்தம் என்னும் இண்டு நாடி போல நடக்கிலும் அல்லது கிளியைப்போல கீச்சென்று கூச்சலிடினும் நடுச் சட்டத்தில் ஆணி ஒன்று ஊனமென்று சொல்லவும். அது வீட்டிற்குடையவனுக்கு நோயை யுண்டாக்கும் எ-று.

151. சங்கது போலே சாத்தித் தாளம்போல் மூடு
மாகில்
பொங்கம துடனே தானும் புத்திரன் மிகவுண்
டாகும்
துங்கமால் மாது சேர்வாள் சோபன மிகவுண்
டாகும்
தங்கமே பொழியு மென்று சாற்றினார்
வேதத் தோரே.

152. ஆடிய கதவி னோசை
ஆண்குரல் செக்கு போல
கூடியே கத்து மாகில்
குபேரனைப் போல வாழ்வார்
நீடிய பிள்ளை பெண்டிர்
நீள்நெடுங் காலம் வாழ்வார்
சாடிநோய் வருத்து மென்று
சாற்றினார் வேதத் தோரே.

153. பேசிய கதவு தானும்
பெண்குரல் செக்குப் போலே
வாசியாய்ப் பேசு மாகில்
மனையினில் தனமுண் டாகும்
மாசியாய் ஆலை போலக்
கூறிடு மாகி லேதான்
மாசில்லா மயனார் சொன்ன
மனையினில் வாழ்வொண் ணாதே..

12. Vaasthu Purushan

Vaasthu Purushan sleeps in the Rashi where Sun reigns in the respective month with his legs stretched and his head in the seventh Rasi, which is opposite to the Rasi, where his legs are. Usually he sleeps with his left-hand down and his right hand up.

Rasi, where vaasthu sleeps

Rasis where vaasthu lays his head	Rasis where he stretches his legs	Direction to which he faces
1. Kanni, Tulam Viruchikam (West)	Meenam, Mesam, Rishabam (East)	North
2. Tanusu, Makaram Kumbam (North)	Mithunam, Kada-kam, Simam (South)	East
3. Meenam, Mesam, Rishabam (East)	Kanni, Tulam, viruchikam (West)	South
4. Mithunam, Kadakam Simam (South)	Tanasu, Makaram Kumbam (North)	West

Month	Date	Minute		Working Time
Chitrai	10	5	from	8.00 A.M. to 9.30 A.M.
Vaikasi	21	8	"	9.12 A.M. to 10.42 A.M.
Adi	11	2	"	6.48 A.M. to 8.18 A.M.
Aavani	6	21	"	2.24 P.M. to 3,54 P.M.
Iypasi	11	2	"	6.48 A.M. to 8.18 A.M.
Karthikai	8	10	"	10.00 A.M. to 11.30 A.M.
Thai	12	8	"	9.12 A.M. to 10.42 A.M.
Masi	20	8	"	9.12 A.M. to 10.42 A.M.

Within the working time Vaasthu. (Within the 3¾ Naligai – 1 hr. and 30 Min.

Time	Action/duty	Prediction
In the first ¾ Naligai	taking bath	fear of enemies
In the second ¾ Naligai	prayer	poverty would arise
In the third ¾ Naligai	meals	” ”
In the fourth ¾ Naligai	(Thambulem) Greetings	Blessed with children
In the fifth ¾ Naligai	reigning	much blissfulness would be there.

Thus vaasthu performs these five duties in his raising 3¾ Naligai. If one analyses the effect of his duties, it indicates that the first three three-quarter Naligai do not favour any good things and give only bad effects. Therefore, by considering the fourth and fifth three quarter, one should begin good deeds. The poem describes these five duties such as brushing the teeth, taking bath, prayer, meals, greetings, but it is dominated by prose. Therefore, it is good to do things by considering and calculatings the day, month and time in which vaasthu works.

Constructing Entrance – General

While considering the sleeping time of vaasthu in the respective month and his facing direction, entrance must be framed in the stomach part of vaasthu.

Direction of the Entrance

S. No.	Month	Direction of Head	Direction of feet	Fasing Direction	Direction of the Entrance
1.	Chitrai, vaikasi	West	East	North	North
2.	Aadi Aavani	North	South	East	East
3.	Iyppasi Karthikai	East	West	South	South
4.	Thai, Masi	South	North	West	West

The part of the Entrance

1. If the entrance is created in the head part of Vaasthu — Head of the family would die
2. If the entrance is framed in the chest part of Vaasthu — Fire would destroy the land
3. If the entrance is constructed in the part of hand of Vaasthu — Children would die
4. If it is built in the stomach part of Vaasthu — fear of King would seize the house
5. If it is devised in the part legs of Vaasthu — Evils may occur to wife

After studying the direction of the entrance, the construction of the house must be started in the respective months in accordance with the direction of the house.

S. No.	Direction of the entrance	Month in which the house has to be built
1.	Entrance facing North	Chitrai, Vaikasi
2.	Entrance facing East	Aadi, Avani
3.	Entrance facing South	Iyppasi, Karthikai
4.	Entrance facing West	Thai, Masi

12. வாஸ்து புருஷன்

(சுவடிச் செய்திகளின் சுருக்கம்)

பொது

வாஸ்து புருஷன் அந்தந்த மாதத்தில் சூரியன் நின்ற இராசியில் காலை நீட்டி அந்த இராசிக்கு எதிராக அதன் ஏழாம் இராசியில் தலையை வைத்துப் படுத்திருப்பான். எப்போதும் இடக்கை கீழும் வலக்கை மேலுமாகவே வைத்துப் படுத்திருப்பான்.

வாஸ்து படுத்திருக்கும் இராசிகள்

தலை வைக்கும் இராசிகள்	கால்நீட்டும் இராசிகள்	நோக்கும் திசை
1. கன்னி, துலாம், விருச்சிகம் (மேற்கு)	மீனம், மேடம், ரிஷபம் (கிழக்கு)	வடக்கு
2. தனுசு, மகரம், கும்பம் (வடக்கு)	மிதுனம், கடகம், சிங்கம் (தெற்கு)	கிழக்கு
3. மீனம், மேடம், ரிஷபம் (கிழக்கு)	கன்னி, துலாம், விருச்சிகம் (மேற்கு	தெற்கு
4. மிதுனம், கடகம், சிங்கம் (தெற்கு)	தனுசு, மகரம், கும்பம் (வடக்கு)	மேற்கு

வாஸ்து எழுந்திருக்கும் காலங்கள்

மாதம்	தேதி	நாழிகை	செயல்படும் நேரம்
சித்திரை	10	5	காலை 8.00 மணி முதல் 9.30 முடிய
வைகாசி	21	8	காலை 9.12 மணி முதல் 10.42 முடிய
ஆடி	11	2	காலை 6.48 மணி முதல் 8.18 முடிய
ஆவணி	6	21	பிற்பகல் 2.24 மணி முதல் 3.54 முடிய
ஐப்பசி	11	2	காலை 6.48 மணி முதல் 8.18 முடிய
கார்த்திகை	8	10	காலை 10.00 மணி முதல் 11.30 முடிய
தை	12	8	காலை 9.12 மணி முதல் 10.42 முடிய
மாசி	20	8	காலை 9.12 மணி முதல் 10.42 முடிய

வாஸ்து செயல்படும் நேரங்களாகிய மேலே குறிப்பிட்ட 3¾ நாழிகை (1 மணி 30 மணித்துளிகள்) களில்—

நேரம்	செயல்	பயன்
முதல் ¾ நாழி (18 மணித்துளிகள்)	நீராடல்	அரச பயம் ஏற்படும்.
2 ஆவது ¾ நாழி (18 மணித்துளிகள்	பூசை	பீடை, வறுமை உண்டாகும்.
3 ஆவது ¾ நாழி (18 மணித்துளிகள்)	உணவு	வறுமை உண்டாகும்.
4 ஆவது ¾ நாழி (18 மணித்துளிகள்)	தாம்பூலம்	புத்திரப் பேறு உண்டு.
5 ஆவது ¾ நாழி (18 மணித்துளிகள்)	அரசு	மிகுந்த நன்மை விளையும்.

வாஸ்துவானவன் விழித்திருக்கும் 3¾ நாழியில் இவ்வாறு ஐந்து வகையான தொழில்களை முடிக்கிறான். அந்தந்த தொழிலுக்குரிய நேரத்தின் பயனை அறிந்தால், முதல் மூன்று முக்கால் நாழி நேரங்கள் (2¼ நாழி) எந்த செயலைத் தொடங்கினாலும் தீமை தருவதாகவே அமைகின்றன. எனவே சிறந்த பயனைத் தருவனவாகிய நான்காவது, ஐந்தாவது முக்கால் நாழி நேரங்களைத் தேர்ந்து அந்த நேரங்களில் நல்ல காரியங்களைத் தொடங்குதல் வேண்டும். இந்த ஐந்து செயல்களும் முறையே பல்துலக்கல், நீராடல், பூசை, உணவு, தாம்பூலம் என்ற முறையில் பாடல் அமைகிறது. ஆனால் உரை நடைச் செய்தி மேற்கண்டவாறு குறிப்பிடுகிறது.

வாஸ்து புருஷன் எழுந்திருந்து செயல்படும் மேல் கண்ட எட்டு மாதங்களிலும் குறிப்பிட்ட நாட்களிலும் நேரங்களிலும் சிறந்தனவற்றைத் தேர்ந்து மனை கோலுதல் வேண்டும்.

வாயில் விடுதல்—பொது

வாஸ்து புருஷன் படுத்திருக்கும் போது அந்தந்த மாதங்களில் அவன் முகம் நோக்கியிருக்கும் திசை அறிந்து வயிற்றுப் பாகத்தில் வாயில் விடுதல் வேண்டும்.

வாயில் விடும் திசை

மாதம்	தலைதிசை	கால்திசை	பார்வைத் திசை	வாசல் விடும் திசை
1. சித்திரை, வைகாசி	மேற்கு	கிழக்கு	வடக்கு	வடக்கு
2. ஆடி, ஆவணி	வடக்கு	தெற்கு	கிழக்கு	கிழக்கு
3. ஐப்பசி, கார்த்திகை	கிழக்கு	மேற்கு	தெற்கு	தெற்கு
4. தை, மாசி	தெற்கு	வடக்கு	மேற்கு	மேற்கு

வாயில் விடும் பகுதி

வாஸ்து புருஷனின்,

1. தலைப் பகுதியில் வாயில் விட்டால் — தலைவன் மரணமடைவான்
2. மார்புப் பகுதியில் வாயில் விட்டால் — மனை எரிந்து போகும்
3. கைப்பகுதியில் வாயில் விட்டால் — குழந்தைகள் மரணமடைவர்.
4. **வயற்றுப் பகுதியில்** வாயில் விட்டால் — **சிறந்த வாழ்வு** உண்டாகும்.
5. முதுகுப் பகுதியில் வாயில் விட்டால் — அரச பயம் ஏற்படும்.
6. கால் பகுதியில் வாயில் விட்டால் — மனைவிக்குத் தீங்கு ஏற்படும்.

வாயில் விடும் திசைகளை ஆராய்ந்து பார்த்து, வீடு கட்டும் திசைகளுக்கு ஏற்ப வீடுகட்டத் தகுந்த மாதங்களை அறிதல் வேண்டும். அதாவது,

வாயில் திசை	வீடுகட்ட வேண்டிய மாதம்
1. வடக்கு நோக்கிய வாயில்	— சித்திரை, வைகாசி
2. கிழக்கு நோக்கிய வாயில்	— ஆடி, ஆவணி
3. தெற்கு நோக்கிய வாயில்	— ஐப்பசி, கார்த்திகை
4. மேற்கு நோக்கிய வாயில்	— தை, மாசி

வாஸ்து சொல்லிய கிரக ஆரம்ப விதி
(சுவடிச் செய்திகள்)

வாஸ்து புருஷன் கிடக்கை

154. திங்களில் இராசி நிற்கும் திசைதனிற்
காலை நீட்டி
இங்கெதிர் தலையை வைத்தே யிடதுகை
கீழதாகப்
பொங்கிய வலக்கை மேலாய்ப் பூதலம்
விளங்க வென்று
மங்கையே சொல்லக் கேளாய் வாஸ்துவின்
கிடக்கை தானே.

(இ-ள்) வாஸ்து புருஷன் அந்தந்த மாதத்து இராசியில் காலை நீட்டி அதற்கு எதிராகிய ஏழாம் இராசியில் தலையை வைத்து இடக்கை கீழும் வலக்கை மேலுமாகக் கிடப்பன் எ-று.

வாஸ்துவுக்கு இராசி வீடு

155. மீனமும் ஆடும் ஏறும்
மேற்றிசை தலைய தாகி
ஊனம்அற்று இடக்கை கீழாய்
உத்திரத் திசையை நோக்கி
சேனைவா சவன்தான் வாழுந்
திசைதனில் காலை நீட்டி
மான்எனும் விழியாய்க் கேளாய்
வாஸ்துதான் கிடக்கும் வாறே.

(இ-ள்) மீனம், மேடம், ரிஷபம் இம்மூன்று இராசியில் காலை நீட்டி, கன்னி, துலாம் விருச்சிகம் இந்த மூன்று இராசியில் சிரசை வைத்து, இடக்கை கீழும், வலக்கை மேலுமாக உத்தரத் திசையை நோக்கி இந்திரன் திசையில் நீட்டி வாஸ்து புருஷன்' கிடப்பன் எ-று.

156. தண்டொடு நண்டு சிங்கம்
தலையது வடக்கே வைத்து
எண்திசை இடக்கை கீழாய்
வலக்கைதான் மேல தாக
திண்திறல் இயமன் வாழுந்
திசைதனில் காலை நீட்டி
வண்டணி குழலி னாளே
வாஸ்துவுங் கிடக்கும் வாறே.

(இ-ள்) மிதுனம், கடகம், சிங்கம் இம்மூன்று இராசியில் காலை நீட்டி, தனுசு, மகரம், கும்பம் இம்மூன்று இராசியில் சிரசை வைத்து, இடக்கை கீழும் வலக்கை மேலுமாக யமன் மூலையில் காலை நீட்டி வாஸ்து புருஷன் கிடப்பான் எ-று.

157. கன்னியும் துலாமும் தேளுங்
கதிர்முடி திசையில் வைத்து
மன்னிய வருணன் மேலே
மகிழ்பெறக் காலை நீட்டி
இன்னிசை இடக்கை கீழாய்
இயமன்தன் திசையை நோக்கி
வன்னமா மாதே கேளாய்
வாஸ்துதான் கிடக்கும் வாறே.

(இ-ள்) கன்னி, துலாம், விருச்சிகம் இம்மூன்று இராசி யில் காலை நீட்டி, மீனம், மேஷம், ரிஷபம் இம்மூன்று

இராசியில் சிரசை வைத்து, இடக்கை கீழும் வலக்கை மேலுமாக மயன் திசையை நோக்கி வாஸ்து புருஷன் கிடப்பன் எ-று.

158. தனுசொடும் மகரம் கும்பம்
தலையது தெற்கே வைத்து
மனுவொடு இடக்கை கீழாய்
வலக்கைதான் மேல தாக
மனமொடு முகமும் மேற்கு
வடக்கினில் காலை நீட்டி
வனமுலை மாதே கேளாய்
வாஸ்துவும் கிடக்கும் வாறே.

(இ-ள்) தனுசு, மகரம், கும்பம் இம்மூன்று இராசியில் காலை நீட்டி, மிதுனம், கடகம், சிங்கம் இம்மூன்று இராசி யில் சிரம் வைத்து, இடக்கை கீழும் வலக்கை மேலும் மேற்கே முகமும் வடக்கே காலுமாக வாஸ்து புருஷன் கிடப்பன் எ-று.

வாஸ்துவின் இருப்பு

159. திங்கள்ஓர் இராசி தன்னில்
திகழவே சிரசை வைத்து
பொங்கிய இராசிக்கு ஏழாய்ப்
புகன்றிடும் இராசி தன்னில்
தங்கிய காலை நீட்டிச்
சகப்பிர திட்டை யாக
மங்கையே சொல்லக் கேளாய்
வாஸ்துதான் கிடக்கும் வாறே.

(இ-ள்) மாதம் ஒரு இராசியில் சிரம் வைத்து, அதற்கு ஏழாம் இராசியில் காலை நீட்டி ஜெகப் பிரதிட்டையாக வாஸ்து புருஷன் கிடப்பன் எ-று.

160. துங்க பானு தான்நின்று
துய்ய இராசி நிலையறிந்து
அங்கே பாதந் தனைநீட்டி
அதனுக்கு ஏழில் தலைவைத்து
பங்கை இடக்கை கீழாகப்
பகரும் வலக்கை மேலாக
மங்கே பூத லந்தனிலே
வாஸ்து புருஷன் கிடப்பதுவே.

(இ-ள்) ஆதித்தன் நின்ற இராசியில் காலை வைத்து, அதற்கு ஏழாம் இராசியில் சிரம் வைத்து, இடக்கை கீழும் வலக்கை மேலுமாக வாஸ்து புருஷன் கிடப்பன் எ-று.

161. கிடப்பதும் இடக்கை கீழாய்க்
கிடந்தவன் எழுந்தி ருந்து
நடப்பது வலமே யாகில்
நல்லதோர் இராசி தோறும்
படுக்கையில் வயிறு பார்த்த
பரிவுடன் வாசல் தன்னை
விடுப்பதும் இல்லை யாகில்
வேதனை மூளு மன்னே.

(இ-ள்) இடக்கை கீழும் வலக்கை மேலுமாய்க் கிடந்தவன் எழுந்திருந்து வருவது வலமாகில், படுக்கை, வயிறு அறிந்து வாசல் கோலாவிட்டால் வேதனையினாலே வாடுவார்கள் எ-று.

வாஸ்து எழுந்திருக்கும் நாள்

162. சித்திரை வைகாசி ஆடி
சிறந்த ஆவணியி னூடு
வைத்த ஐப்பசியும் மிக்க
மன்னுகார்த் திகையுந் தானும்
மற்றதை மாதத் தோடு
மாசிதான் எட்டும் ஆகும்
புத்தியால் மனைகள் கோல
புகழுடன் நன்மை யாமே.

(இ-ள்) சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி இவ்வெட்டு மாதமும் வாஸ்து எழுந்திருப்பன். இம்மாதங்களில் மனைகோலினால் சகல சம்பத்துமுண்டாகும் எ-று.

சமயம் ஐந்திற்கும் வாஸ்து அதிகார இலட்சணம்

163. செய்யவாஸ் துவின்தன் நாட்டம்
திறமுடன் விழித்து நோக்கில்
துய்யதோர் கடிகை மூன்று
துரிதமுக் காலுக் குள்ளே

உய்யவே முதலாம் வேளை
உவந்ததோர் கடிகை முக்கால்
நையவே தந்த சுத்தி
ராசனார் பயம். உண் டாமே.

(இ-ள்) வாஸ்துவின் ஆதிகார இலட்சணமாவது—

நாழிகை மூன்றே முக்காலுக்குச் சமயம் ஐந்து. முதற் சமயம் கடிகை முக்காலுக்குள் தந்த சுத்தி செய்வான். அதில் முகூர்த்தஞ் செய்தால் அரசரால் பயமுண்டாம் எ-று.

164. ஏற்றிய இரண்டாம் வேளை
எழில்உயர் கடிகை முக்கால்
போற்றிய ஸ்நானம் செய்வன்
பொருந்திய பீடை உண்டாம்
சாற்றிய மூன்றாம் வேளை
தக்கதோர் கடிகை முக்கால்
மாற்றிய பூசை செய்வன்
வறுமையால் வாடும் என்னே.

(இ-ள்) வாஸ்துவின் இரண்டாம் சமயமான கடிகை முக்காலுக்குள் ஸ்நானஞ் செய்வன். அதில் முகூர்த்தம் செய்தால் பீடையுண்டாகும்.

மூன்றாம் சமயமான கடிகை முக்காலுக்குள்ளே பூசை செய்வன். அதில் முகூர்த்தஞ் செய்தால் வறுமையால் வாடுவார்கள் எ-று.

165. பெருகிய நாலாம் வேளை
பேருயர் கடிகை முக்கால்
அருமையாய் அசனம் செய்வன்
அழகிய புத்திரர் உண்டாம்
திறமையாம் ஐந்தாம் வேளை
சேர்ந்ததோர் கடிகை முக்கால்
மருவுதாம் பூலம் கொள்வன்
மகிழ்ந்து உத் தமம்என்று ஓதே.

(இ-ள்) நாலாம் சமயமான கடிகை முக்காலுக்குள் தாம்பூலம் கொள்வன். அதில் முகூர்த்தம் செய்தால் மகா உத்தமம் எ-று. (நாலாம் வேளை உணவும், ஐந்தாம் வேளை தாம்பூலமும் கொள்ளுவான். அந்த இரண்டு நேரமும் உத்தமம் என்றிருக்க வேண்டும்.)

வாஸ்து எழுந்திருக்கும் நாளறிய, மனைகோல, குடிபுக

வேறு

166. ஏற்றஞ் சித்திரை யோர்பத்தில்
இருபத் தொன்றில் வைகாசி
பார்த்த ஐப்பசி யோடுஆடி
பதினொன்று ஆவணி ஓர்ஆறில்
கார்த்திகை எட்டுதை ஈராறில்
காணும் மாசி யிருபதனில்
வாஸ்து வுந்தான் எழுந்திருப்பன்
மனைதான் வாசல் கோலலாமே.

(இ-ள்) சித்திரை மீ-10, வைகாசி மீ-21, ஆடி, ஐப்பசி மீ-11, ஆவணி மீ-6, கார்திகை மீ-8, தை மீ-12, மாசி மீ-20 இந்த தேதிகளில் வாஸ்து புருஷன் எழுந்திருப்பன். இந்நாளில் மனைகோலில் அவரவர்க்குப் பொருந்திய திக்கில் வாசல் விடலாம்; குடி புகலாம்.

வாஸ்து வீட்டின் பலன் — மேற்கோள்

167. துய்யதோர் வயிற்றில் வாசல்
சுகமொடு செல்வம் உண்டாம்
கையது வாசல் ஆகிற்
கைக்குழந் தைகளும் பாழாம்
மெய்யதா மார்பே யாகில்
மேல்மனை எரிந்து போகும்
பையவே தலையது ஆகில்
பதிக்குளோன் இறப்பன் என்னே.

168. காலதே வாச லாகிற்
கனங்குழல் சாவு சொல்லும்
சாலவே தலைய தாகில்
தானவன் சாவு சொல்லும்
கோலிய முதுகே யாகிற்
கோலினால் அச்ச முண்டாம்
வாலிய வயிற்றில் விட்டால்
வான்பொருள் சேரும் அன்றே.

(இ-ள்) வாஸ்து புருஷன்கிடக்கையில் காலில் வாசல் விட்டால் மனையாளுக்குப் பொல்லாங்கு. தலையில் வாசல் விட்டால் கணவனுக்கு ஆகாது. முதுகில் வாசல் விட்டால்

இராஜபயம் உண்டாம். வயிற்றில் வாசல் விட்டால் வாழ்வு உண்டாம் எ-று.

வாஸ்து புருஷன் எழுந்திருக்கும் ஜாமம், தேதி, நாழிகை, போசனம்

169. குண்டைமான் குடங்கள் எட்டில்
கொடியதேள் பத்த தாகும்
நண்டுகோல் இரண்ட தாகும்
நன்மேடம் ஐந்த தாகும்
திண்திறல் சிங்கந் தானே
சிறந்தமு வேழ தாகும்
வண்திறல் மறையோர் சொன்னார்
வாஸ்துவும் உதிக்கும் வாறே.

(இ-ள்)

சித்திரை மாதம் 10 — நாழிகை ஐந்து

வைகாசி மாதம் 21 — நாழிகை எட்டு

ஆடி, ஐப்பசி மாதம் 11 — நாழிகை இரண்டு

ஆவணி மாதம் 6 — நாழிகை இருபத்து ஒன்று

கார்த்திகை மாதம் 8 — நாழிகை பத்து

தை மாதம் 12 — நாழிகை எட்டு

மாசி மாதம் 20 — நாழிகை எட்டு

வாஸ்து எழுந்திருக்கிற நாள்

சித்திரை, வைகாசி இந்த இரண்டு மாதமும் மேற்கே தலையும், கிழக்கே காலும் வடக்கு முகமாக இடக்கை கீழாய்க் கிடப்பன். கிழக்கு மேற்காக அகம் கட்டி வடக்கு வாசல் விடவும்.

ஆடி, ஆவணி இரண்டு மாதமும் வடக்கே தலையும் தெற்கே காலுமாக இடக்கை கீழாய் கிடப்பன். தெற்கு வடக்காக அகம் கட்டி, கிழக்கே வாசல் விடவும்.

ஐப்பசி, கார்த்திகை இரண்டு மாதமும் கிழக்கே தலையும், மேற்கே காலுமாய்த் தெற்கே முகமாய்க் கிடப்பன். கிழக்கு மேற்காக அகம் கட்டி, தெற்கு வாசல் விடவும்.

தை, மாசி இந்த இரண்டு மாதமும் தெற்கே தலையும், வடக்கே காலுமாக மேற்கு முகமாய்க் கிடப்பன். தெற்கு வடக்காக அகம் கட்டி, மேற்கு வாசல் விடவும்.

வாஸ்து எழுந்திருக்கிற நாளில் அந்த அந்த மாதங்களில் எழுந்திருக்கிற நாழிகை பார்த்து வீடு எடுத்து வாசல் விட சுகவாழ்வாய் வாழ்ந்திருப்பார்கள்.

இப்படி இந்த எட்டு மாதமும் வாஸ்துவானவன் படுத்திருந்து எழுந்திருக்கிற வேலை நாள் பாராமல் வீடு கட்டினாலும் தரச்செய்தாலும் மத்திபமாய் வாழ்க்கையில் பீடையுண்டாகும்.

13. Selecting auspicious day for Constructing House

An auspicious day must be selected on the basis of the horoscope of the owner. The days for the beginning of the construction of the house and their effects:

1. According to the horoscope,

If in a day in which Jupiter, Mars and Saturn reign in 4th, 10th and 11th place respectively, the construction is started, then the house will be flourishing for 100 years.

2. According to the horoscope,

If construction of the house is started in a day in which Jupiter, Venus are in 5th place and sun in 3rd place, Mars in 6th place, then the house will be prosperous.

3. According to the horoscope;

If construction of the house is started in a day in which, Mercury is in 4th place, if the Jupiter is in retracation, the house would be prosperous for 600 years.

4. According to the horoscope,

If construction of the house is started in a day in which Venus is in 10th house, Mercury is in 3rd place and if the jupiter is in retracation it would also be good to the house for 600 years.

5. According to the horoscope,

If construction of the house is started in a day in which Mercury is in the houses of Jupiter and Venus, then it would be good for 800 years.

6. According to the horoscope,

If Moon is in the 10th house, and the sun is in restracation, then it would be good for 1000 years.

7. According to the horoscope,

If Jupiter is in 7th place, moon is in 10th and if Sun is in its rising state, it would be good for 1000 years.

8. According to the horoscope,

If Venus and Jupiter reign, it would be suggestive of evil, though fear does not seize the house.

9. If moon is in the house of Kadagam. Meenam, and Makaram, victory is indicated due to this.

10. If construction is started in a Thursday in which Jupiter is with any one of the following stars, Pooradam, Thiruvonam, Rohini, Uttiram, Uthiradam, Uthirathi, Ayiliam, Mirgasiradam, it would bring happiness.

11. If it is a Friday in which Venus is in the rasi which is called sala rasi, it would bring wealth to the house.

12. If it is a Monday and it is a sala rasi, the effect would be moderate.

Laying entrance-frames and laying shells and conchs. The place where the conch has to be placed:

At first the sleeping posture of vaasthu must be identified. If he sleeps with his head in the Isaniya corner and legs in Niruthi corner, the measurement from head to legs must be divided into 9 parts and after leaving 4 parts from the head, shell can be in placed in the third part or the fifth part.

The measurement of the shell

Height is two span; the weight of the bottom is 6 inches; The weight of the upper part would be 1 inch.

Shell-Tree

Trees like Sandal, Elephant Turk, the suma tree, banian tree, peepul tree, Ficus raumosa, O ange tree, The Kino tree, Teak, Coromental ebony tree are goo l for craving shell. Among these, Teak and Kino tree are fit f r all things.

The method of laying shell

A place of 2 two span length and width must be levelled and the shell after having been cleaned with water, Tarmaric.

kumkum and prayed with sandal and flower, and then it has to be laid in the levelled place.

Time in which shell nas to be laid

The months Aavani, Iyppasi and Karithikai are good for laying shell. While in these months, during crescent moon period sun has to be very bright. Prathamai, Sasti, Yekadesi are the three Nantha Thithi; Sathurthi, Navomi, Sathurthosi are the three Rikta thithi; from Amavasai (New moon) to the above said this shell has not to be placed. Wednesday, Thursday and Friday are very good. Saturday, Sunday, Tuesday are infavourable and shell should not be placed. Satayam, Tiruvonam, Uthiram, Astham, Revathi, Suvathi, Rohini, Mirgesirdem, Chitrai, Poram, Ponarpusam, Anusam, Avitam, the fifteen stars are good enough to lay shells.

The days that are good for laying shells, are also good for laying frames.

Laying

Soil of the place where crabs dug, Soil that has been collected due to elephant's scratch, soil of authills, soil of ponds, soil from ox's digging — all these soils must be mixed.

Then a coffer of either five sections or even nine or fifteen sections must be made of golden grains and gold must be placed in the centre of the coffer and the rest of it must be filled with grains. Then in the proposed land for building house the centre must be detected with the help of machine which shows North and South direction. Then it is divided into 9 parts of length and width. 4 parts from West, 3 from East are to be left out and the remaining 2 central parts are to be taken like so 4 parts from North and 3 parts from South must be left and the remaining 2 central parts are to be taken and, by treating this part as central part and in this part the coffer has be buried in the earth.

Architect

An architect must have fair complexion, clear mind, knowledge and patience.

He should have the habit of cleansing his body, wearing silk dress to read vedic scriptures, to do his pooja and he must have read the books on Architecture.

If such a pious Architect happens to create the coffer, according to sastra, it would defeat all the evils that would attack the house and it would give good effects.

13. மனை கோல நல்லநாள் தேர்ந்தெடுத்தல்

(சுவடிச் செய்திகளின் சுருக்கம்)

மனைக்கு உரியவரின் பிறப்பு இலக்கினத்தை அடிப் படையாகக் கொண்டு மனை கோலுதற்குரிய சிறந்த நாளைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அவ்வாறு தேர்ந் தெடுக்க வேண்டிய நல்ல நாட்களும் அவற்றின் பலன் களும் —

1. பிறந்த இலக்கனத்திற்கு நான்காம் இடம் அல்லது பத்தாமிடத்தில் சந்திரன், பதினோராமிடத்தில் வியாழன், செவ்வாய், சனி ஆகியோர் இருக்கும் நாளும் நேரமும் தேர்ந்து மனை கோலினால் அவ்வீடு நூறு ஆண்டு காலம் உயர்ந்து விளங்கும்.

2. பிறந்த இலக்கினத்தில் வியாழன், வெள்ளி (சுக்கிரன்), ஐந்தாமிடம் அல்லது மூன்றாமிடத்தில் சூரியன், ஆறாமிடத்தில் செவ்வாய் ஆகியோர் இருக்கும் நன்னாளில் மனை கோலினாலும் நூறு ஆண்டு விளங்கும்.

3. பிறந்த இலக்கினத்தில் சந்திரன் நாலாமிடத்தில் புதன், அத்தமனத்தில் வியாழன் இவர்கள் கூடிய நன் னாளில் மனை கோலினால் அறுநூறு ஆண்டு நன்மை தரும்.

4. பிறந்த இலக்கினத்தில் அல்லது பத்தாமிடத்தில் வெள்ளி, மூன்றாமிடத்தில் புதன், அத்தமனத்தில் வியாழன் இவர்கள் கூடிய நன்னாளில் மனை கோலினால் அறுநூறு ஆண்டு நன்மை தரும்.

5. பிறந்த இலக்கினத்தில் வியாழன், வெள்ளியின் வீட்டில் புதன் இவர்கள் கூடிய நன்னாளில் மனைகோலி னால் எண்ணூறு ஆண்டு நன்மை தரும்.

6. பிறந்த இலக்கினத்தில் அல்லது பத்தாமிடத்தில் சந்திரன், அத்தமனத்தில் சூரியன் இவர்கள் கூடிய நன் னாளில் மனைகோலினால் ஆயிரம் ஆண்டு நன்மை தரும்.

7. பிறந்த இலக்கினத்திற்கு ஏழாமிடத்தில் வியாழன், பத்தாமிடத்தில் சந்திரன், உதயத்தில் வெள்ளி இருக்க ஆயிரம் ஆண்டு நலம் விளங்கும்.

8. பிறந்த இலக்கினத்தில் வெள்ளி, வியாழன்இருக்க மனை கோலினால் தீயினால் உண்டாகும் பயம் இல்லை.

9. கடகம், மகரம், மீனம் ஆகிய இலக்கினங்களில் சந்திரன் இருக்க வைக்கோல் போட .வெற்றி உண்டாம். (இங்கு வைக்கோல் போட என்பது கூரை வேய்தலைக் குறிப்பதாக இருக்கலாம்)

10. பூராடம், திருவோணம், உரோகினி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, ஆயிலியம், மிருகசீரிடம் ஆகிய நட்சத்திரங்களில் வியாழன் இருக்க வியாழக் கிழமையில் மனை கோலினால் மகிழ்ச்சி உண்டாகும்.

11. சல இராசியில் சுக்கிரன் இருக்க வெள்ளிக் கிழமை யாகவும் வர அன்று மனை கோலினால் மிகுந்த செல்வம் உண்டு.

12. சல இராசியில் திங்கள் நிற்கத் திங்கட் கிழமை யாகவும் வர மனை கோலினால் மத்திம பலன் உண்டு.

கடைக்கால் எடுக்கவும் சங்கு வைக்கவும்

முதலில் வாஸ்து புருஷனின் படுக்கை அறிதல் வேண் டும். ஈசானிய மூலையில் தலையும் நிருதி மூலையில் காலு மாகக் கிடக்கும் போது, தலை முதல் கால் முடிய 9 பங்காக்கி, தலைமுதல் 4 பங்கு தள்ளி, 5 ஆம் பங்கினை மூன்று பாகமாகப் பிரித்து, அவற்றின் மூன்றாம் பாகத்தில் கடைக்கால் போடத் தொடங்கலாம்; அல்லது சங்கு வைக்கலாம்.

சங்கின் அளவு

உயரம் ஒரு முழம்; அடியில் கனம் 6 அங்குலம்; தலைக்கனம் ஒரு அங்குலம்.

சங்கு மரம்

யானைக் கொம்பு, சந்தன மரம், வன்னி, ஆல் அரசு, அத்தி, கிச்சிலி, கருங்காலி, பரம்பை, வேங்கை, தேக்கு

ஆகியவை சங்கு செய்யச் சிறந்த மரங்கள். இவற்றுள் வேங்கை, தேக்கு ஆகிய மரங்கள் அனைவருக்கும் உரியன வாகும்.

சங்கு வைக்கும் முறை

இரண்டு முழம் நீள, அகலம் உள்ள இடத்தைச் சமன் செய்து, நல்ல நேரம் பார்த்துச் சங்கினை நீரினால் தூய்மை செய்து மஞ்சள், குங்குமம், சந்தனம் இட்டு, மலர் தூவிப் பூசை செய்து சமன் செய்யப்பட்ட நிலத்தில் நிறுத்துதல் வேண்டும்.

சங்கு வைக்கும் காலம்

சங்கு வைக்க ஆவணி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்கள் சிறந்தவை. இம்மாதங்களில் வளர்பிறை காலத் தில், ஆகாயத்தில் மாசு மருவற்று சூரியன் விளங்கும் கால மாக இருத்தல் வேண்டும். பிரதமை, சஷ்டி, ஏகாதசி ஆகிய மூன்றும் நத்தை திதி; சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி ஆகிய மூன்றும் ரிக்கத்திதி; அமாவசை முதல் மேற்கண்ட நாட் களில் சங்கு வைக்கக் கூடாது. புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று நாட்களும் சிறந்தவை. சனி, ஞாயிறு, செவ் வாய் ஆகிய நாட்களில் சங்கு வைக்கக் கூடாது. சதயம், திருவோணம், உத்திரம், அஸ்தம், ரேவதி, சுவாதி, உரோ கினி, மிருகசீரிடம், சித்திரை, பூரம், உத்திரம், புனர்பூசம், அனுஷம், அவிட்டம் ஆகிய பதினைந்தும் சங்கு வைக்க மிகவும் சிறந்த நட்சத்திரங்களாகும்.

சங்கு வைக்கவென்று சொன்ன சிறந்த நாட்களும் கால மும் கடைக்கால் எடுக்கவும் சிறந்தவையாகும்.

கருப்பப் பேழை

நண்டு தோண்டிய மண், யானைக் கோட்டால் கீறிய மண், புற்றுமண், குளத்துமண், எருதுக் கோட்டால் கீறிய மண் இவற்றைச் சேர்த்து,

ஐந்து அறை, ஏழு அறை, ஒன்பது அறை, பதினைந்து அறை ஆகியவற்றுள் ஒரு அளவுடைய அறைகளை உடைய ஒரு பெட்டியைச் செய்து கொள்ளுதல் வேண்டும். அப் பெட்டியின் நடு அறையில் பொன்னும் மணியும் இட்டு, மற்ற அறைகளில் பல தானியங்களை நிரப்புதல் வேண்டும்.

பிறகு வீடு கட்டும் மனைப் பகுதியின் வடக்கு, தெற்கு ஆகிய திசைகளைத் திசை காட்டும் கருவியால் கண்டு மையத்தை அறிய வேண்டும். பின் நீள அகலங்களை முறையே ஒன்பது, கூறு செய்து

மேற்கே நான்கு கூறும், கிழக்கே மூன்று கூறும் விட்டு, இடைப்பட்ட இரண்டு கூறுகளையும் தெற்கே நான்கு கூறும் வடக்கே மூன்று கூறும் விட்டு, இடைப்பட்ட இரண்டு கூறுகளையும் எடுத்துக் கொண்டு அதுவே நடு இடமாகக் கொண்டு அவ்விடத்தில், நிரப்பப்பட்ட கருப்பப் பேழையைப் பூமியில் அமைத்தல் வேண்டும்.

சிற்ப ஆசாரி

சிற்பியானவன் சிவந்த உடல், தூயமனம், தெளிந்த அறிவு, பொறுமை குணம் ஆகியவற்றைப் பெற்றனவாக இருத்தல் வேண்டும்.

உடலைத் தூய்மை செய்து, தூயபட்டு உடுத்தி, வேதம் ஓதி, தெய்வ பூசை செய்து, சிற்ப நூலை நாள்தோறும் ஓதும் பழக்கம் உடையனவாய் இருத்தல் வேண்டும்.

இப்படிப்பட்ட சிற்பியானவன் சாத்திர முறைப்படி இக்கருப்பப் பேழையினை அமைப்பானேயானால் மனைக்கு வந்த மனைக்குற்றம், பணிக்குற்றம், நிலக்குற்றம் போன்ற தோஷங்கள் யாவும் விலகி நன்மை ஏற்படும்.

மனைகோலுகையில் இலக்கின முகூர்த்தம்
(சுவடியில் உள்ளவை)

170. தக்கசெனம் நாலுபத்தில் சசிதான் நிற்கத்
  தருபதினொன் றில்குருவுங் குசனும் மந்தன்
மிக்கஇவர் தான்இருந்து முகூர்த்தம் செய்தால்
  மேவியதோர் மனைதனக்கு வயது நூறாம்
தக்கதொரு இலக்கினத்தில் குருவும் சுக்கிரன்
  தரும் ஐந்தில் மூன்றில்வெய்யோன் தகைமை ஆறில்
திக்குஉயரும் குசன்இருந்தால் அகத்துக் கேதான்
  திறவயது நூறெனவே செப்பி னாரே.

(இ-ள்) ஜென்ம இலக்கினத்திற்கு நாலுபத்தில் சந்திரன் நிற்க, பதினொன்றில் இராசா, செவ்வாய், சனி, இவர் களிருக்க மனைக்கு முகூர்த்தம் செய்தால் வயது நூறு வருஷ மாகி விளங்கும். இலக்கினத்தில் குருவும் சுக்கிரனும் இருக்க, ஐந்து, மூன்றில் சூரியன் இருக்க, ஆறில் செவ்வாய் இருக்க முகூர்த்தம் செய்யில் அந்த மனை நூறு வருஷம் விருத்தியாய் விளங்கும் எ-று.

171. மேவியசீர் இலக்கினத்தில் சோமன் நாவில்
விரும்புபுதன் குருஅதீத மான காலம்
தாவியபட் டணம்நகரம் முகூர்த்தம் செய்தால்
தகைமைவயது இருமூன்று நூறது ஆகும்
மேவியதோர் உதயத்தில் பத்தில் வெள்ளி
ஒருமூன்றில் புதன்குருவும் அந்த மானம்
மாவுயர்பட் டணம்நகரம் முகூர்த்தம் செய்யில்
வரும்நூறு இருமூன்றாய் வகுத்த வாறே.

(இ-ள்) இலக்கினத்திற் சந்திரன் நிற்க, நாலில் புதன் இருக்க, குரு அத்தம் ஆக முகூர்த்தம் செய்யில் அந்த மனைக்கு அறுநூறு வயதாகும்.

இலக்கினத்தில் பத்தில் சுக்கிரன் இருக்க, மூன்றில் புதன் இருக்க, குரு அஸ்தமனமாக முகூர்த்தம் செய்யில் அந்த மனை அறுநூறு வயது விளங்கும் எ-று.

172. பொங்குகுரு க்ஷேத்திரத்தில் வெள்ளி வீட்டிற்
புதன்இருக்க நகர்முகூர்த்தம் புரிவீர் ஆகில்
தங்குவயது இருநான்கு நூறது ஆகும்
தரும்இரவி உதயம்அந்த மான காலம்
சங்கைதரு பத்ததிலே சோமன் நிற்க
தகைமைநகர் ஆலயமே முகூர்த்தம் செய்தால்
இங்கிதமாய் வயதும்ஒரு சகஸ்த்திரம் என்று
இம்மொழிக்கு மயனுரையும் இயம்பி னாரே.

(இ-ள்) குரு, க்ஷேத்திரத்தில் இருக்க, வெள்ளி வீட்டில் புதன் இருக்க முகூர்த்தம் செய்யில் எண்ணூறு வயது இருக்கும். சூரியன் அஸ்தமான காலம் பத்தில் சந்திரன் நிற்க ஆலய முகூர்த்தம் செய்யில் ஆயிரம் வருஷம் விளங் கும் எ-று.

173. தேசுஉயர்ந்த சுக்கிரனும் உதயம் ஆகத்
திருந்தியதோர் ஏழதிலே குருஇ ருக்க
மாசுஅகன்ற பத்ததிலே சோமன் நிற்க
வளர்முகூர்த்தம் ஆலயமே மகிழ்ந்து செய்யில்
பேசுவது வயதும்ஒரு சகஸ்திரம் என்றே
பேசலாம் ஓரைதனில் வெள்ளி நிற்க
வாரகுரு க்ஷேத்திரமாம் நகருக் கேதான்
மருவுமன்ற சேதம்இலை மகிழு வாரே.

(இ-ள்) சுக்கிரன் உதயமாக, ஏழில் இராசன் இருக்க, பத்தில் சந்திரன் இருக்க முகூர்த்தம் செய்யில் ஆயிரம் வருஷம் விளங்கும். இலக்கினத்திற் சுக்கிரன் இருக்க, குரு க்ஷேத்திரத்தில் இருக்க முகூர்த்தம் செய்யில் அக்கினி பயம் இல்லை எ-று.

174. வரும்கடக மகரம்அது மீனம் தன்னில்
வளமைமிகு சந்திரனும் மருவி நின்றால்
திருஉயர்ந்த கிரகம்அதில் வைக்கோல் போடச்
செயமதுவாம் பூராடம் திருவோ ணம்தான்
தருஉயர்ந்த உரோகிணிஉத் திரங்கள் மூன்றும்
தங்கியஆ யிலியம்அது சாற்றக் கேளு
வருமிருக சீரிடத்தில் குருஇ ருக்க
வரும்குருவா ரங்கள்செய மகிழ்ச்சி யாமே.

(இ-ள்) கடகம், மகரம், மீனம் இவைகளிற் சந்திரன் இருக்க வைக்கோல் போட்டால் செயமாகும். பூராடம், திருவோணம், உரோகிணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, ஆயிலியம், மிருகசீரிடம் இவைகளில் இராஜன் இருக்க குருவாரத்தில் செய்ய மகிழ்ச்சி உண்டாம் எ-று.

175. திருந்துசல இராசியதில் வெள்ளி நிற்க
சிறந்தசுக்கிர வாரமுமாய் இருந்தால் ஆக்கம்
பொருந்துசல இராசிதனில் சோமன் நிற்க
புகலுதிங்கள் வாரம்அதாய் இருக்கும் ஆகில்
வருந்துமக மனையாளும் கற்பம் ஆகில்
வளர்முகூர்த்தம் குடிபுகவும் மத்தி பம்தான்
வருந்தியதோர் கிரகபலன் இதுவாம் என்று
மயன்உரைஇவ் வாறுஅதனை மகிழ்ந்து பாரே.

(இ-ள்) சலராசியில் சுக்கிரன் இருக்கச் சுக்கிரவாரமாய் இருந்தால் செல்வம் உண்டு. சலராசியில் சந்திரன் இருக்கத் திங்கள் வாரம் ஆகில் மனையாள் கர்ப்பமாயினும் முகூர்த் தம் செய்யினும் குடிபுகினும் மத்திபம் என்று மயன் என்ப வர் சொல்லிய வாக்கியம் எ-று.

சுக்கிர பலன்

176. இருங்குரு வெள்ளி வாரம்
 இலக்கினம் நாலேழ் தன்னில்
வருங்கதிர் ஆறில் தக்க
 வந்தனன் மூன்றில் நிற்க
பெரும்புறங் கோயில் வீடு
 பீடமே செய்வீர் ஆகில்
திருந்தவே வயது நூறு
 தீர்க்கமாய் விளங்கும் மாதே.

(இ-ள்) வெள்ளி வாரமும் இலக்கினம் நாலும் ஏழும் ஆகச் சூரியன் ஆறிலும் இராஜன் மூன்றிலும் நிற்கக் கோபு ரம், சாலை, வீடு, மாளிகை இவைகள் கட்டில் நூறுவயது பெற்று விளங்கும் எ-று.

மனைகோலும் போது கடைக்கால் சங்கு ஸ்தாபனம்

சரவாஸ்து புருஷன்-ஒன்பதாகப் பகுந்து சிரசிலிருந்து நான்குபங்கு தள்ளி ஐந்தாம் பங்கை மூன்று கூறாக்கிச் சிரசுப்பக்கம் இரண்டு கூறுதள்ளி மூன்றாம் பங்கில் கடைக் காலாவது, சங்கு ஸ்தாபனமாவது செய்யவும். உத்தமம். மேற்படி சரவாஸ்து எப்போதும் அசையாமல் படுத்திருப்பன்.

கடைக்கால் சங்கு ஸ்தாபனமாவது

வாஸ்து ஒரு மனையில் ஈசானிய மூலையில் சிரசும், நிருதி மூலையில் காலுமாகி இடக்கையைக் கீழேவைத்துப் படுத்திருப்பன். சிரசிலிருந்து நான்கு பங்கு தள்ளி ஐந்தாம் பங்கை மூன்றுபங்கு செய்து இரண்டு தள்ளி மற்ற பங்கில் கடைக்கால் போடவும், சங்கு ஸ்தாபனம் பண்ணவும் சுபம்.

சிற்ப ஆசாரியின் இலக்கணம்

177. பன்னிய பொற்பூ ணூலும்
 பௌத்திரங் கையில் இட்டு
சென்னியில் சிகைய தாகிச்
 செய்யதோர் நிறத்த னாகி

மன்னிய குலமு மிக்க
மனமிகத் துய்ய னாகி
வன்னிய சாதி கூடாது
அறிந்தவன் சிற்பி தானே.

(இ-ள்) பொற்பூணூல் அணிந்து விரல்களில் மோதிரமும் பின் குடுமியுமுடையவனாய்ச் சிவந்த மேனியனாகி, வமிசமும் நயகுணமும் தூயமனமும் உடையதானவனாய் அன்னிய சாதியரைச் சேராமல் அறிவுள்ளவன் சிற்ப ஆசாரியாம் எ-று.

இதுவும் அது

178. சுத்தமாய் வேத மோதித்
துய்யதோர் ஆடை பூண்டு
சித்தமும் வாக்கும் ஒன்றாய்ச்
சேர்த்துக் கோபங் கடிந்து
நித்தமும் அனுஷ்டா னங்கள்
நிறைவுடன் பூசை பண்ணி
வித்தக நூலைக் காலை
விளம்புதல் இயற்கை யாமே.

(இ-ள்) சிற்பாசாரி சுத்தமாயிருந்து, வேதமோதி, பரிசுத்தவஸ்திரம் அல்லது நார்மடியுடுத்தி, தெளிவுஞ் சிறப்புமுடைவனாய், மனமும் வாக்கும் ஒருமைப்பட்டுக் கோபத்தை நீக்கி, நித்தியானுஷ்டானமும் தெய்வ பூஜையுந் தப்பாமல் முடித்து, சிற்ப நூலைக் காலையில் ஓத வேண்டும்.

சங்கு ஸ்தாபனம்

179. சங்குவின் நீளம் முன்னம்
சாற்றிய விரலி னாலே
தங்கிய முந்நான் காகக்
கொண்டது பரும னாகும்
அங்குஅதன் நாலில் மூன்றும்
அத்தலைச் சுற்ற தாகும்.
வந்ததோர் ஏக மாகக்
கொண்டதுஓர் உச்சி தானே.

(இ-ள்) சங்கு நீளம் பன்னிரண்டு விரல் பருமனாம். இது ஒன்று முக்கால் தலையிற் சுற்றும், இதில் மேலுச்சியில் நீளம் ஒருவிரல் கொள்வது எ-று.

180. வானுடைய தேவர்முதல் மானிடர்க்கும் ஆகுந்
தானுடைய சங்குமரந் தக்கதகை சொல்லில்
ஆனஅரசு ஆலமரம் அத்தியுடன் சிக்கில்
கானகருங் காலிபரம் பைகடைந்து கொள்ளே.

(இ-ள்) தேவருக்கும், மானிடருக்கும் சங்கு மரமாவது அரசு, ஆல், அத்தி, சிச்சிலி, கருங்காலி, பரம்பை இவை யாம் எ-று.

181. பண்ணிய சங்கு வைக்கப்
புார்தனை மட்ட மாக்கி
எண்ணிய ஒருகோல் கொண்டால்
அகலமும் அதுவே யாகும்
தண்ணிய மட்ட நீளம்
ஒக்கவே கொண்ட பின்பு
திண்ணிய பொருளி னாலே
தீங்கிலாச் சங்கு வையே.

(இ-ள்) சங்கு வைக்கும் போது நிலத்தை மட்டம் செய்து ஒரு கோல் முறை அகலம், நீளம், மட்டம் ஒக்கக் கொண்டு பொருள் வைத்துச் சங்கு வைக்கவும் எ-று.

182. ஆவணியும் ஐப்பசியும் ஆனயெறி மாதம்
பூவணியில் வாழ்ந்திடு புராதனர் தமக்காம்
தேவணியில் நாள்தவிர மற்றவை தேவர்க்காம்
தேவணிய தாய்மனையில் சங்குநட லாமே.

(இ-ள்) ஆவணி, ஐப்பசி, கார்த்திகை இந்த மூன்று மாதங்களில் சங்கு நடல் மனிதருக்காம். மற்றெல்லா மாதங் களும் தேவர்களுக்காம் எ-று.

சங்கு ஸ்தாபிதம்

183. உத்தரா யணமும் ஆக
உயர்ந்தநல் வாரம் பார்த்து
சித்திரை நட்சத் திரங்கள்
சிறப்புடன் பார்த்து வானில்
சுத்தமாய்க் களங்கள் இல்லாச்
சூரியன் விளங்கும் போது
நத்தியே அவ்வி டத்தில்
நவிலுவேன் இனிது கேளே.

(இ-ள்) சங்கு ஸ்தாபிக்கும் நாளாவது உத்தராயணத்தில் வாரம், இலக்கினம், நட்சத்திரம் இவைகளைத் திறமாகப் பார்த்து ஆகாயத்தில் களங்கம் இல்லாமல் சூரியன் விளங்கும் போது செய்யும் விபரத்தைச் சொல்லுவோம் எ-று.

சங்கு ஸ்தாபன இலட்சணம்

சங்கு ஸ்தாபனம் முன் செய்திருக்கின்ற இடத்தில் தனக்கு வேண்டும் வேளையில் வீடு கட்டலாகும்.

இதற்குத் தோஷம் இல்லை; சங்குத் தோஷம் இல்லை; சங்கு ஸ்தாபனஞ் செய்ய வேண்டியது—சுக்கில பட்சம் சோபனம் உண்டு; பிரதமை, சஷ்டி, ஏகாதசி இம்மூன்றும் நத்தை திதி சவுத்தி, நவமி, சதுர்த்தசி, இம்மூன்றும் ரிக்கத் திதி.

அமாவாசை முதல் இந்த நாட்களில் சங்கு ஸ்தாபனம் செய்யலாகாது.

புதன், வியாழன், வெள்ளி இந்த மூன்று நாளில் செய்தால் சுகப்பிரதம். சனி, ஞாயிறு, செவ்வாய் இந்த வாரங்களில் கூடாது.

சங்கு ஸ்தாபன நிர்ணயத்துக்கு நட்சத்திரம்

சதயம், திருவோணம், உத்திரம், அஸ்தம், ரேவதி, சுவாதி, ரோகிணி, மிருகசீரிஷம், சித்திரை, பூரம், உத்திரம், புனர்பூசம், அனுஷம், அவிட்டம் இந்த 15 நட்சத்திரத்தில் சங்கு ஸ்தாபனம் பண்ணினால் நன்மை. இந்த நட்சத்திரங்களுக்குத் தோஷம் இல்லாமல் இருக்க வேண்டும்.

த்த்தாதாரம், சுபஸ்தாரம், தூமதாரம், ரோகதாரம், நற்சீவதாரம் இந்தத்தாரங்களில் சுபர், பாவர் அறிந்து சீவதாரத்தில் சங்கு ஸ்தாபனம் செய்ய வேண்டும். தத்தா தாரத்தில் செய்தால் அக்கினி வேதை;

சுபஸ்தாரத்தில் சண்டை;
தூமதாரத்தில் தரித்திரம்;
நிற்சீவதாரத்தில் கேடு உண்டாம்.

சங்கு செய்ய மரம்

184. உத்தம சங்குக் கேதான்
உயரம்ஓர் முழம்அது ஆகும்
நத்திய அடியில் ஆறு
அங்குலம் நடுவில் கேளு
சுத்தமாய்த் தலைக னந்தான்
சொல்லும்அங் குலம்ஒன்று ஆகும்
பத்தியாய்த் திரள நன்றாய்ப்
பரிவுடன் கடைதல் செய்வாம்.

(இ-ள்) சங்கு செய்யும் விதமாவது—உயரம் ஒரு முழம்; அடியில் கனம் அங்குலம் ஆறு; தலைகனம் அங்குலம் ஒன்று. அதற்காக வட்டமாய்த் திரளக் கடைசல் செய்யவும் எ-று.

185. தந்தியின் கொம்பு வாச்ச
சந்தனம் வன்னி தேக்கு
முந்திய புளியி னோடும்
உயர்கருங் காலி செய்வாம்
விந்தையாய் இவையல் லாமல்
வேண்டும்பால் மரந்தான் ஆகும்
அந்தமாம் வயிரத் தோடே
அமைந்ததோர் பிரிவு சொல்வாம்

(இ-ள்) சங்கு செய்யும் மரம்—யானைக்கொம்பு, சந்தன மரம்; வன்னி, தேக்கு, புளியன், வைரம், கருங்காலி இவையல்லாமல் எந்த மரத்தில் பாலுண்டோ அதிலும் செய்யலாம். ஆகையால் தேவசாதி நான்குக்கும் விபரம் சொல்லுவாம் எ-று.

தேவர் முதல் நான்கு சாதிகளுக்கும் சங்கு செய்யும் மரம்

186. சந்தனத் தந்திக் கொம்பு
தகைமைசேர் தேவர்க் காகும்
விந்தையாம் மறையோர்க் கேதான்
மிகுகருங் காலி வன்னி

சிந்தைசேர் மன்ன ருக்குத்
தேக்கு வைசியருக்கு ஆகும்
புந்தியி னோடு புகல்மை
சூத்திரர்க் கென்று ஓதே.

(இ-ள்) யானைக்கொம்பும் சந்தனமரமும் தேவர்களுக்கு ஆகும். கருங்காலி பிராமணருக்கு ஆம். புளியவயிரம் சூத்திரர்களுக்கு ஆம் எ-று.

187. மேவும் முதல்பா கத்தும்
மிகுந்த தட்சிண பாகத்தும்
மாஅவச் சாயல் உண்டு
மந்தமண் டலத்தில் வந்த
ஓவியப் புள்இ ரண்டில்
ஓடவே கிழக்கு மேற்கு
தாவிய அந்நாள் தன்னில்
தகைமையை யறிய லாமே.

(இ-ள்) உத்தராயணத்திலும் தட்சிணாயணத்திலும் அவச் சாயல், பாதச்சாயல் உண்டு. அந்த மண்டலத்தில் வந்த புள்ளி இரண்டிலும் நூலை யோடவாங்கிக் கிழக்கு மேற்கு மறிவாம் எ-று.

188. இரண்டுபுள் ளியின்பால் மீது
ஏகவே வெளியில் நன்றாய்த்
திரண்டசேர் கயல்மீ னாகச்
சிறப்புடன் வீசிப் பின்னும்
முரண்டசேல் மீனின் வாயில்
முகத்திலுங் கூடு நூலை
இரண்டதை ஓட வாங்கி
ஆகநூல் இரண்டும் சொல்வாம்.

(இ-ள்) இரண்டு புள்ளியின் மீது கயல் மீனாக வீசி, மீனின் முகத்திலும் வாயிலும் கூடுதலை இரண்டையும் ஓடவாங்கிக் கொள்ளுவாம் எ-று.

189. திறமைதட் சிணபா கத்தின்
சிறந்ததட் சணத்தின் மீதே
உறமையுத் தரபா கத்தில்
உத்தர பாக மீதே

முறைமையாம் இரண்டி டத்தில்
உயர்ந்திடு நூலைப் பெற்று
உறமுடன் கொள்ளு வான்பின்
உண்மையை விளம்பு வேனே.

(இ-ள்) தட்சிணாயணத்திலும் உத்தராயணத்திலும் இரண்டு நூலையும் பெற்றுக் கொள்ளுவோம் எ-று.

கர்ப்பம் வைக்கப் பேழை

190. அலவனில் எழுந்த மண்ணும்
ஆனையின் கோட்டு மண்ணும்
நிலனுறு புற்று மண்ணும்
நீடிய கயத்தின் மண்ணும்
குலவிய எருது மண்ணும்
கூடநீ சேர்த்துக் கொண்டு
பலமிகு கர்ப்பம் வைக்கப்
பேழையைப் பண்ணிக் கொள்ளே.

(இ-ள்) நண்டு தோண்டு மண், யானைக் கோட்டு மண், புற்று மண், கயத்து மண், எருதுக் கோட்டு மண் இவையெல்லாம் கூட்டிச் சேர்த்துக் கர்ப்பப் பேழை செய்து கொள்ளவும் எ-று.

191. பண்ணிய கர்ப்பப் பேழைஐந்து
ஏழொடு ஒன்ப தாக
எண்ணிய பதினைந் தாக
அறையினைப் பண்ணிக் கொண்டு
நண்ணிய பணியும் பொன்னும்
நற்பல தானி யங்கள்
திண்ணென அடைக்க வென்று
செப்பினார் கலைவல் லோரே.

(இ-ள்) ஐந்து அறை, ஏழு அறை, ஒன்பது அறை, பதினைந்து அறை இவற்றில் ஒன்று பொருந்திய அறை

பண்ணி அதில் நடுவறையிலே பொன்னும், மணியும் சுற்றிலும் இருக்கும் அறைகளில் பல தானியங்களும் இட்டு வைக்கவும் எ-று.

192. சாலையின் மையம் பற்றித் தன்னினில் அகலம் பற்றிக்
கோலிலே ஒன்பதாக்கிக் குறித்திடும் மேற்கு நாலு
வாலிய கிழக்கு மூன்று தெற்குமே நான்கு விட்டு
சீலமாம் வடக்கு மூன்று நடுவது கர்ப்பஞ் செய்யே

(இ-ள்) சாலையில் முதல் மையத்தைப் பற்றிப் பின்பு அகலம் பற்றி அதை ஒன்பது கூறுசெய்து மேற்குநான்கும் கிழக்கு மூன்றும் தெற்கு நான்கும் வடக்கு மூன்றும் விட்டு நடுவில் கர்ப்பஞ் செய்யவும் எ-று.

இந்தச் சாஸ்திரம் சொன்னபடி சிற்பியானவன் செய்வானாகில் மனைக்குற்றம், பணிக்குற்றம், நிலக்குற்றம் இவைகளால் வந்த தோஷங்களையும் தள்ளும் என்றறியவும்.

14. Predictions for constructing houses

Prediction for Months

If house is built in the month

of Chitrai	—	decrease in wealth
of Vaikasi	—	victory would happen
of Aani	—	fear of enimies does not favour children.
of Aavani	—	The arrival of relatives would occur.
of Puratasi	—	All kinds of illness would suppress
of Iyppasi	—	Confusion. Destruction of costly dresses and ornaments may occur.
of Karthikai	—	Wealth would stay. Evils won't occur.
of Markalzhi	—	Fear would increase
of Thai	—	Death would occur
of Masi	—	Sufferings disappear; wealth would accumulate.
of Punguni	—	Wealth would be robbed.

Predictions for planets:

Prediction for sun

If the house is built when Sun is in the lost two parts of the star. Parani, in the four parts of Karthikai, and in the first of Rohini, it predicates that fear of enemies would occur.

Prediction for Mars

If the house is built when Mars is in Karthikai, Pusam, Maham, Puram, Astham, Mulam, Revethi, it is indicated that fear of fire and loss of children would happen.

Prediction for Mercury

If the house is built when Mercury is in Asvani, Mirgasirdam, Astham, Uthiram, Chitrai and Rohini, it would get all prosperity including children and wealth. If in this time and

also in the time when Mercury is in power, when the construction house is started, the same effect is applicable.

Prediction for Jupiter

If the house is built when Mercury is in Thiruvonam. Uthiram, Uthiradam, Uthiratathi, Puradam, Mirgasirdam, Ayiliam, Rohini, Pusam it would be suggestive of increase in wealth. This effect is also applicable when the construction is done when Jupiter is in superior power.

Prediction for Venus

If the construction of the house is done when Venus is in Kettai, Punarpusam, Chitrai, Asvani, Puradam, Avitam Anusam, Visagam, Thiruvathirai, Sathayam, it would bring blissfullness and happiness.

Prediction for Saturn

If the construction of the house is done when Saturn is in Sathayam, Puratathi, Suvathi, Uthiratathi, Barani, Avitam, Anusam, Kettai, it would bring evils and witches into the house.

Prediction for Ragu

To the character of Ragu, the fourteen stars are inimical Therefore, constructing house must be avoided.

Prediction for Rasi

If house is constructed in Mesha Rasi, blissfulness would occur; in Rishaba Rasi, wealth would accumulate; in Mithuna Rasi, cow herds would flourish; in Kadaga Rasi, loss would occur; in Simma Rasi, the reunion with relatives would happen; in Kanniya Rasi, illness would occur; in Thula Rasi, there would be attempts; in Viruchaka Rasi, wealth would increase; in Thanusu Rasi, wealth would get destroy; If house is constructed in Mahara Rasi, grains would flourish; in Kumba Rasi, profit in diamond would happen; in Meena Rasi, fear would increase.

From above said predictions for Rasi, construction of the house must be started in good time.

Prediction for Thithi

If the house is constructed in thithis of the crescent moon,

it is good. But the thithis of the waning moon are not good and favourable. During crescent moon from Thiruthiai thithi to the Sabthami thithi, after the fullmoon, the construction can be started.

Other thithis of the waning are unfavourable. Among these if construction is started Pirthamai, Sasti, Yekathesi (Anthaka thithi) wealth would get destroyed.

If it is started in Thiruvathrai, Sabathami, Thuvathesi (pathirai thithi) imprisonment may happen.

If it is constructed in Thiruthiai, Aastami, thirayothasi it is good.

If it is done in Sathurthi, Navomi, Sathurthasi (Rigathithi) fear for enemies would happen.

If it is done in Panjami, Thasami, and Paurnami (Poornathithi) victory would happen.

If it is done is Ammavasai (New moon day) loss of lives may occur.

From the examination of the above said prediction for Thithis, the construction of the house must be started in good time.

Prediction for the days of the week

If construction is started in Sunday, fear of fire would occur.

" " " " Monday, blissfulness would be there

" " " " Tuesday, fear of fire would prevail

" " " " Wednesday, wealth would accumulate

" " " " Thursday, wealth would accumulate

" " " " Friday, " "

" " " " Saturday, fear of robbers would be there

After examining the above said predictions, one should select good day for constructing house.

Prediction for the stars

The stars, such as Rohini, Mirgasirdam, Pooram, Uthiram, Astham, Chitrai, Suvathi, Anusam, Uthiradam, Thiruvonam, Avitam, Sathayam, Uthiratathi, Revathi, are the fourteen would be good for the beginning of construction of the house.

14. வீடு கட்டுவதற்கு உரிய பலன்கள்

(சுவடிச் செய்திகளின் சுருக்கம்)

மாத பலன்

சித்திரையில் வீடு கட்ட	செல்வம் குறையும்
வைகாசியில் வீடு கட்ட	வெற்றி உண்டாகும்
ஆனியில் வீடு கட்ட	பகைவர் பயம்; புத்திரருக்கு ஆகாது
ஆடியில் வீடுகட்ட	பசுக்கள் நஷ்டம்; செல்வம் அழியும்
ஆவணியில் வீடுகட்ட	உறவினர்கள் வருகை ஏற்படும்
புரட்டாசியில் வீடுகட்ட	பலவகைப் பிணிகள் வருத்தும்
ஐப்பசியில் வீடுகட்ட	கலகம், ஆடையணிகள் சேதம் உண்டாகும்.
கார்த்திகையில் வீடுகட்ட	செல்வம் நிலைக்கும்; தீங்கு ஏற்படாது
மார்கழியில் வீடுகட்ட	பயம் மிகுதியாகும்.
தையில் வீடுகட்ட	மரணம் உண்டாகும்.
மாசியில் வீடுகட்ட	துன்பம் நீங்கும்; செல்வம் உண்டாகும்
பங்குனியில் வீடுகட்ட	ஆடை ஆபரணங்களும் உள்ள செல்வமும் கொள்ளை போகும்.

கிரக பலன்

சூரிய சார பலன்

பரணி நட்சத்திரத்தின் பிற்பகுதி இரண்டு பாதங்கள், கார்த்திகை நான்கு பாதங்கள், ரோகிணி முதற் பாதம்—ஆகிய ஏழு பாதங்களிலும் சூரியன் இருக்க வீடு கட்டினால் தீயினால் பயம் உண்டாகும்.

அங்காரக சார பலன்

கார்த்திகை, பூசம், மகம், பூரம், அஸ்தம், மூலம், ரேவதி இந்த 7 நட்சத்திரங்களிலும் அங்காரகன் இருக்க வீடு

கட்டினால் தீயினால் பயமும், புத்திரர் அழிவும் உண்டாகும்.

புத சார பலன்

அசுவினி, மிருகசீரிடம், அஸ்தம், உத்திரம், சித்திரை, ரோகிணி இந்த 6 நட்சத்திரங்களில் புதன் இருக்க வீடு கட்டினால் புத்திரப் பேற்றுடன் சிறந்த செல்வமும் சுகமும் ஏற்படும். இந்த இலக்கினத்திலாவது, உச்சத்திலாவது புதன் இருக்க வீடு கட்டினாலும், கட்ட ஆரம்பம் செய்தாலும் இதே பலன்கள் கிட்டும்.

குரு சார பலன்

திருவோணம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, பூராடம், மிருகசீரிடம், ஆயிலியம், ரோகினி, பூசம்,

இந்த 9 நட்சத்திரங்களில் குரு இருக்க வீடு கட்டினாலும் கட்ட ஆரம்பஞ் செய்தாலும் செல்வம் பெருகும். இந்த இலக்கினத்திலாவது உச்சத்திலாவது குரு இருக்க வீடு கட்டினாலும் இதே பலன் உண்டாகும்.

சுக்கிர சார பலன்

கேட்டை, புனர்பூசம், சித்திரை, அசுவினி, பூராடம், அவிட்டம், அனுஷம், விசாகம், திருவாதிரை, சதயம் ஆகிய பத்து நட்சத்திரங்களிலும் சுக்கிரன் இருக்க வீடு கட்டினாலும் கட்டத்தொடங்கினாலும் நன்மையும் மங்களமும் தரும்.

சனி சார பலன்

சதயம், பூரட்டாதி, • சுவாதி, உத்திரட்டாதி, பரணி, அவிட்டம் அனுஷம், கேட்டை இந்த எட்டு நட்சத்திரங்களிலும் • சனி இருக்க வீடு கட்டினாலும், வீடு கட்டத் தொடங்கினாலும், பேயும் இராட்சதரும் பட்சிகளும் வந்து சேரும்.

இராகு சார பலன்

இராகு இருந்த இலக்கினத்திற்கு எதிர் சாரம் பதினான்கு நட்சத்திரங்களும் பகைமையானவை, ஆதலால் வீடு கட்டவோ, கட்டத் தொடங்கவோ கூடாது.

இராசி பலன்

மேஷ இராசியில் வீடு கட்டினால்	மங்களம் பெருகும்
ரிஷப இராசியில் வீடு கட்டினால்	செல்வம் பெருகும்
மிதுன இராசியில் வீடு கட்டினால்	பசுக்கள் விருத்தியாகும்.
கடக இராசியில் வீடு கட்டினால்	நஷ்டம் ஏற்படும்.
சிம்ம இராசியில் வீடு கட்டினால்	உறவினர் சேர்க்கை உண்டாகும்.
கன்னியா இராசியில் வீடு கட்டினால்	நோய் உண்டாகும்.
துலா இராசியில் வீடு கட்டினால்	சுகம் வளரும்.
விருச்சிக இராசியில் வீடு கட்டினால்	செல்வம் பெருகும்.
தனுசு இராசியில் வீடு கட்டினால்	செல்வம் அழியும்
மகர இராசியில் வீடு கட்டினால்	தானிய விருத்தியாகும்.
கும்ப இராசியில் வீடு கட்டினால்	இரத்தினலாபம் உண்டாகும்.
மீன இராசியில் வீடு கட்டினால்	பயம் மிகுதியாகும்.

மேற்குறித்த இராசி பலன்களைக் கண்டு நல்ல இராசிகளில் வீடு கட்டத் தொடங்குவது சிறந்த பலனைத் தருவதாகும்.

திதி பலன்

வளர் பிறைத்திதிகள் வீடுகட்ட நன்மை தருவனவாகும்.

தேய் பிறைத்திதிகள் வீடுகட்ட ஆகாதவை. வளர் பிறையில் திருதியை, முதல் பௌர்ணமி கழித்து சப்தமி வரையில் வளர் பிறைத்திதிகளாகவே கொண்டு வீடு கட்டத் தொடங்கலாம். பிற தேய்பிறைத்திதிகளே சிறிதும் ஆகாதவை.

இவற்றுள்,

பிரதமை, சஷ்டி, ஏகாதசி (அந்தக திதி) ஆகிய திதிகளில் வீடு கட்டத் தொடங்கினால் பொருள் அழிவு ஏற்படும்.

துவதியை, சப்தமி, துவாதசி (பத்திரை திதி) ஆகிய திதிகளில் வீடு கட்டினால் சிறை வாசம் ஏற்படும். திருதியை, அட்டமி, திரயோதசி (செயித்திய திதி) ஆகிய திதிகளில் வீடு கட்டினால் நல்ல பலன் ஏற்படும்.

சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி (ரிக்கத் திதி) ஆகிய திதிகளில் வீடு கட்டினால் பகைவர் பயம் உண்டாகும்.

பஞ்சமி, தசமி, பௌர்ணமி (பூரண திதி) ஆகிய திதிகளில் வெற்றி உண்டாகும்.

அமாவாசையில் வீடு கட்டினால் உயிர்ச் சேதம் ஏற்படும்.

மேற்கூறிய திதிகளில் பலன் தரும் திதிகளை அறிந்து வீடுகட்டத் தொடங்க வேண்டும்.

வார பலன்

ஞாயிறு வீடுகட்ட	தீயினால் பயம் உண்டாகும்.
திங்கள் வீடுகட்ட	மங்களம் உண்டாகும்.
செவ்வாய் வீடுகட்ட	தீயினால் பயம் உண்டாகும்.
புதன் வீடுகட்ட	செல்வமுண்டாகும்.
வியாழன் வீடு கட்ட	செல்வமுண்டாகும்
வெள்ளி வீடுகட்ட	செல்வமுண்டாகும்
சனி வீடுகட்ட	கள்ளரால் பயம் உண்டாகும்

மேற்கூறிய வாரங்களில் பலன் தரும் வாரங்கள் அறிந்து வீடு கட்டத் தொடங்க வேண்டும்.

நட்சத்திர பலன்

ரோகிணி, மிருக சீரிடம், பூசம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய பதினான்கும் வீடுகட்டத் தொடங்குவதற்கு நன்மை தரும் நட்சத்திரங்களாம்.

வீடுகட்டும் பலன்
(சுவடியில் உள்ளவை)

மாத பலன்கள் — சித்திரை மாதம்

193. செப்பும் சித்திரை சிறந்த மதிதனில்
ஒப்பு மாளிகை ஒவ்வ அமைத்திடில்
தப்பி லாமல் தனம் அதற்கு ஆனியாம்
மெய்ப்பு டன்மயன் விரும்பி உரைத்தே.

வைகாசி மாதம்

194. பேசும் வைகாசி பெருக்கமா ளிகட்டில்
தேரும் புருஷ செயப்பிர தங்களாம்
நேசமாம் பெண்டிர் நெருங்கும் சுபாபலம்
மாசி லாமயன் மன்னர்க்கு அறைந்ததே.

ஆனி மாதம்

195. உள்ள இராசி உரைக்கின்றேன் மாந்தர்க்கு
தெள்ளும் ஆனியில் திடமாளி கட்டிடில்
பிள்ளை குட்டி புகல்மிருத் துப்பயம்
கொள்ள மயன்உரை கூறியது உண்மையே.

ஆடி மாதம்

196. சொல்லும் ஆடி தொடர்ந்த மாளிகட்டில்
சொல்லும் காராம் பசுக்கள்நஷ் டங்களாம்
சொல்லும் செல்வமும் சீரும் அழிந்திடும்
சொல்லு மயனார் தொகுத்த சிற்பநூலே.

ஆவணி மாதம்

197. உரைத்திடும் ஆவணி மாளிகை கட்டிடில்
நிறைத்தி டும்பந்து வர்க்கம் வரத்துமாம்
உரைத்தி டும்மயன் வாக்குப்பொய் யாதுகாண்
பரைத்திடும் பஞ்சனத் தார்க்கு அறைந்ததே.

புரட்டாசி மாதம்

198. தேயு மேபுரட் டாசி மதிதனில்
ஏயு மாளி எழில்பெறக் கட்டிடில்
மாயு நோயும் மகாரோகம் எய்திடும்
தாயு மேமயன் தயவாய் உரைத்ததே.

ஐப்பசி மாதம்

199. காணும் ஐப்பசி கனத்த மாளிகட்டில்
ஆணும் பெண்ணும் அறியக் கலகமாம்
பூணும் ஆடை புகலும்ஆ பரணமும்
வேணும் சேதம் விளையும்மேன் மேலுமே.

கார்த்திகை மாதம்

200. கனத்த மாரி கழறுங்கார்த் திகையில்
தனத்த மாளி தகைமையாய்க் கட்டிடில்
அனர்த்தம் வாராது ஒருநாளும் மாந்தர்க்கு
நினைத்த இலட்சுமி நெருங்கும் வாசமதே.

மார்கழி மாதம்

201. சொல்லு மேதிரு வாதிரை மார்கழி
புல்லு மாளி புகழவே கட்டிடில்
கொல்லு மேபயம் குவலயம் தன்னிலே
வெல்லு மயனார் விடும்பி உரைத்தே.

தை மாதம்

202. கிரணம் வீசும் கிளர்க்கும்தை மாதத்தில்
முரண மாக முகிழ்மணி கட்டிடில்
மரண மேதரும் அக்கினி பயமுண்டாம்
சரணம் பண்ணித் தடுப்பது நன்மையே.

மாசி மாதம்

203. அருமை யாக அறைகிறேன் சிற்பநூல்
பெருமை யாய்மாசி பிலக்க மாளிகட்டில்
சிறுமை நீங்கிச் சிறக்கும்செல் வங்களாம்
ஒருமை யாக உரைக்கும் மயன்நூலே.

பங்குனி மாதம்

204. மெள்ளவே பங்குனி மாளிகை கட்டிடில்
உள்ள இரத்தினம் உரையிம்ஆ பரணமும்
தெள்ளு மட்ட சிறந்ததோர் செல்வமும்
கொள்ளை போம்என்று கூறுவர் சிற்பரே.

சூரிய சார பலன்

205. கூறும் பரணி குறிக்கும்இரண் டாம்பாதம்
வீருங் கார்த்திகை விளம்பும்நா லாம்பாதம்
கோரும் ரோகிணி குறிக்கும் முதற்பாதம்
மாறும் ஏழிலும் வகுக்கும் பரிதியே.

206. பரிதி நின்று பகர்மாளி கட்டிடில்
குருதி அக்கினி கொடிய பயன்சொல்லும்
பரிதி போல்மயன் பகரும்நல் சாத்திரம்
நிருதி மாந்தற்கு நேராய் உரைத்ததே.

அங்காரக சாரபலன்

207. செப்பி டும்மதி சிறந்ததோர் கார்த்திகை
ஒப்பிடும் பூசம் ஓங்கு மகமுடன்
வெப்பும் பூரமும் விளங்கிடும் அஸ்தமும்
தப்பிலா ரேவதி மூலம்பொல் லாதிதே.

208. பொல்லாது ஐய்யா புக்லும் குருமொழி
கொல்லும் நட்சத் திரபலன் ஏழிலும்
வெல்லும் அங்காரன் இருக்க மாளிகட்டில்
புல்லும் புத்திரர் புகல ஆனியதே.

புதசார பலன்

209. பொன்னும் அஸ்தம் புகலும் அசுவினி
மன்னும் உத்திரம் மாமிருக சீரிடம்
வின்னும் ரோகிணி விளங்கிடும் சித்திரை
துன்னும் ஆறும் தொகுப்பாய் உரைத்ததே.

210. உரைத்தி டும்பதி ஓங்கும் புதன்இருந்து
இரைத்திடும் கணத்து இனிதுஎனில் ஆவது
உரைத்தி டும்பதி உச்சத்தில் ஆவது
குறைத்தி டாமாளி கட்டுவது ஆட்சியே.

211. ஆட்சி யன்றி யனிபெறும் புத்திரர்
மாட்சி மேவும் அதிகமாம் மன்னவர்
காட்சி யாவுங் களித்திடும் இப்பலன்
தாட்சி இன்றி தனிய அறைந்ததே.

குரு சார பலன்

212. ஆய உத்திரம் ஆன திருவோணம்
தூய உத்திராடம் உத்திரட் டாதியும்
ஏய பூராடம் ஏற்கும் மகாரோகினி
காயு மிருகம் கழறு பூசமதே.

213. பூச மேவும் புகலும் ஆயிலியம்
வாசம் வீசும் வகுக்கு நட்சத்திரம்
நாசம் செய்யும் நவில ஒன்பதும்
நேசம் செய்யா நெருங்கும் பலமதே.

214. செல்ல உத்திரம் செழிக்கக் குருநிற்கில்
வல்ல இலக்கினம் வழங்கும் உச்சத்திலும்
செல்வ மாளி சிறக்கவே கட்டினால்
நல்ல இலட்சுமி நவிலும் வாசமதே.

சுக்கிர சார பலன்

215. நண்ணும் கேட்டை நவிலும் புனர்பூசம்
ஒண்ணும் சித்திரை ஓங்கும் அசுவினி
வண்ணம் மேவும் வகுக்கும்பூ ராடமாம்
அண்ண லார்உரை அரையும் அவிட்டமே.

216. மேடுவி டும்அனு ஷம்விசா கத்துடன்
தாவு மேதிரு வாதிரை தன்முதல்
மேவும் சதையம் விளம்பும்இப் பத்திலும்
தூவு சுக்கிரன் தோன்றலும் நன்மையே.

217. நன்மை யாம்பதி நவிலும் சுக்கிரனும்
வன்மை யாக வலுத்துமே நின்றிடில்
புன்மை யாம்மாளி புகலவே கட்டிடில்
துன்மை நீங்கிச் சுகம்தரும் உண்மையே.

சனி சார பலன்

218. வருமே சதயம் வகுக்கும்பூ ரட்டாதி
இருமே சுவாதி எழில்உத்தி ரட்டாதி
ஒருமே பரணியாம் ஓங்கும் அவிட்டமும்
தருமே அனுஷமும் தாக்கும் கேட்டையதே.

219. இந்த நட்சத்தி ரப்பலன் எட்டிலும்
தொந்த மேவும் தொடரும் சனிநிற்கில்
அந்த மாக அரையமாளி கட்டிடில்
பந்தம் அற்றுப்போய் பாழும் அடைவதே.

220. அடையும் பூதம் அறையும் மாளிதனில்
படையும் அற்றுப் பகரும்மூ தேவியாள்
அடையு மேபிரம்ம ராட்சதன் எப்போதும்
இடையும் சீதேவி எழில்வாக்குத் தப்பாதே

இராகு சார பலன்

221. சொல்லு மேவும் தொடரும் இராகுதான்
வெல்லும் இலக்கினம் மேவும் எதிர்சாரம்
புல்லு மேபதி நான்கு நட்சத்திரம்
கொல்லும் மிருத்துவ சாரம்பொல் லாதிதே

222. பொல்லாது ஐயா புகலும் அந்தசாரம்
நல்ல மாளிகை நவில அமைத்திடில்
சொல்ல ஒண்ணாமல் தோற்றிடும் துன்பமும்
அல்லும் பகலும் மறைய ஒண்ணாதிதே.

இராசி பலன்

223. சொல்லு மேஷம் சுபப்பிர தங்களாம்
வெல்லும் ரிஷபம் வேண்டும் தனலாபம்
புல்லு மிதுனம் புகலும் பசுவிருத்தி
கொல்லும் கடகம் குறிக்கும் சமனதே.

224. அறையும் சிங்கம் அரும்பந்து சேர்தலாம்
நிறையும் கன்னி நெருங்கு மகாரேர்கம்
இறையுமே துலாம் ஏறும் சௌக்கியம்
நறையும் விருச்சிகம் நாட்டும் அர்த்தபலம்.

225. நலியுந் தனுசு நவில்வர் அர்த்தஆனி
வலியு மகரம் வகுக்குந்தா னியவிருத்தி
பொலியுங் கும்பம் புகலும்இரத் தினலாபம்
ஒலியு மீனமும் ஓங்கும் பயமதே.

226. கண்டுமே ராசி காசினி மானிடர்
விண்டுமே சிற்பி விளம்புவாக் கியமதை
கொண்டு சோதிடக் குறிப்பின் பிரகாரம்
மிண்டி டாமல் முடிப்பது திண்ணமே.

திதிபலன் — (வேறு)

227. நெறியும் சுக்கில பட்சமது
நேரும் சுபப்பிரத மாதம்
செறியும் கிருஷ்ண பட்சமது
சிறந்த இரவி போனதன்பின்
பெருகும் திரிதிகை முதலாய்ப்
பேசும் பௌர்ணமி தொடங்கி
உருகும் சத்தமி தன்வரைக்கும்
ஓங்கும் சுக்கில பட்சமதே.

(கலி விருத்தம்)

228. மற்றநாள் கிருஷ்ண பட்சமுத லாகா
உற்ற பிரதமை ஒடுங்கும்சஷ் டிகளும்
முற்றும் ஏகா தசிஇது கணத்தைப்
பெற்ற திதிபலன் பேரத்த வாணியே.

229. வாறிட்டார் விதியை சத்த மிகளும்
ஓரிட்டு துவாதசி பத்தி ரைதிதி
நேரிட் டதிதி நிகழ்பலன் பந்தனம்
கூறிட் டாமயன் குறித்த வுண்மையே.

230. தக்க அட்டமி தாக்கும் திரிதிகை
பக்க மேதிர யோதசி தன்முதல்
மக்கண செயத்தி யதிதி யாமிவை
சிக்குஞ் சுபமெனச் செப்பினர் சிற்பரே.

231. சீரது பெறுஞ்ச துர்த்தி நவமிகளும்
தாரது செறியும் சதுர்த்த சிமுதல்
ஊரது பெறுமறிக் கத்திதி யின்பலன்
போரது செறிமி ருத்துவின் பயமதே.

232. சொல்லும் பஞ்சமி தோற்றுந் தசமிதான்
வெல்லும் பௌர்ணமி வேண்டும்பூ ரணதிதி
புல்லும் இதன்பலன் போற்றும் செயப்பிரதம்
அல்லும் அமாவாசி அர்த்த ஆனியே.

சுக்கில பட்சம் சுபப்பிரதம். கிருஷ்ண பட்சம் அமா வாசை போனதிரிதிகை முதல் பௌர்ணமி போன சப்தமி வரையில் சுக்கில பட்சமாகும். மற்ற நாட்கள் கிருஷ்ண பட்சமாகாது.

வார பலன்

233. இனிய வாரம் எழில்பெறும் ஞாயிறு
தனிய செவ்வாய் தனில்அக்கி னிபயம்
இனிய திங்களும் கூறிடும் நற்சுபம்
துணிவு டன்பயன் சொன்னது உண்மையே.

234. உண்மை யாம்புதன் உரைக்கும் வியாழமும்
தன்மை யாம்வெள்ளி தாக்கும் சுபஅசுபம்
உண்மை யாம்சனி வார சோரபயம்
வண்மை வாரம் அறிந்து மாடம்கட்டே.

நட்சத்திர பலன்

235. ஓதும் அஸ்தம் உரையும் ரோகிணியும்
நீதி யாய்அவிட் டம்சதை யங்களும்
கோதி லாமிருக சீரிடம் பூசமும்
தீதி லாத்திரு வோணமும் நன்மையே.

236. நன்மை யாம்சுவா திஅனுஷ் டானமும்
துன்மைஇல் லாத தொடர்ந்தசித் திரையும்
வன்மை ரேவதி வகுக்கும்உத்தி ரட்டாதி
பன்மை உத்திராடம் பார்க்கச் சுபமிதே.

237. பார்க்க உத்திரம் பகருநட் சத்திரம்
ஏர்க்க வேபதி னான்குஞ் சுபந்தரும்
தீர்க்க மாய்ச்சிற்ப நூலாய்த் திரட்டியே
மார்க்க மாக மயன்மதன் சொன்னதே.

யோக பலன்

238. தங்கு மேசுகம் தாக்கும்பிர மமுடன்
பொங்கும் ஐந்திரம் போற்றுநற் சாத்தியம்
எங்கு மேசிவம் ஏற்கும் சுப்பிரமாம்
அங்கம் ஆயிசும் ஆனசௌ பாக்கியம்.

239. காணும் துருவம் சுழறும்வை திருதியாம்
வேணும் சோபனம் விரும்பும் சுபமதாம்
தோனும் பிரிதியும் தோற்றும்சித் தங்களாம்
பூணும் யோகம் புகலும் பதினான்கே.

240. மாதுவியாக் காதம் வழுதுங்கண் டகளாம்
கோது குலம்குறிக் கும்விஷக் கம்பமாம்
ஓதும் வச்சிரம் ஓங்கு மதிகண்டம்
நீதி யாம்விதி பாதம் பொல்லாதிதே.

241. பொல்லா தையா புகலும் பரிகமாம்
நல்லா வைதிருதி இந்தயோ கங்களும்
பொல்லாப்பு என்று புகலுவார் சிற்பர்கள்
புல்லா ஒன்பதும் போற்றும் பொல்லாதிதே.

யோக பலன்

வச்சிரம், பரிகம், விதிபக்தம், வைத்ருதி, கண்டம், சூலம், அதிகண்டம், விஷக்கம்பம், வியாக்ரதம் இந்த 9ம் நலமல்ல. மற்ற 18ம் உத்தமம்.

நட்சத்திரத்திற்கும் யோகத்திற்கும் அமிசை

அசுவினிக்கு — அரிசனம்
ரோகணிக்கு — பிரதி
புனர்பூசத்திற்கு — விதிபாதம்
மகத்திற்கு — சோபனம்
அஸ்தத்துக்கு — சிவம்
விசாகத்துக்கு — துருதி
மூலத்துக்கு — சுபம்
திருவோணத்துக்கு — விருத்தி
பூரட்டாதிக்கு — ஐந்திரம்
இந்த 9 நட்சத்திர யோகத்துக்கும் தனம்-4
பரணிக்கு — விஷக்கம்பம்
மிருக சீரிஷத்துக்கும்
சித்திரைக்கும்
பூசத்திற்கும் — சௌபாக்கியம்
பூரத்துக்கு — பரிகம்
சித்திரைக்கு — சுகர்மம்
அனுஷத்துக்கு — சாத்தியம்
பூரட்டாதிக்கு — கண்டம்
அவிட்டத்திற்கு — பிரமம்
உத்திரட்டாதிக்கு — வியாக்ரதம்
இந்த 9 நட்சத்திர யோகத்துக்கும் தனம்-3
கார்த்திகைக்கு — வச்சிரம்
திருவாதிரைக்கு — ஆயுசுமான்
ஆயிலியத்துக்கு — வரியான்
உத்திரத்திற்கு — அதிகண்டம்
சுவாதிக்கு — சித்தம்
கேட்டைக்கு — சூலம்
உத்திரட்டாதிக்கும்
சதயத்திற்கும் — துருவம்
ரேவதிக்கு — வைதிருதி
இந்த 9 நட்சத்திர யோகத்திற்கும் தனம்— 2

நட்சத்திரத்திற்கும் யோகத்திற்கும் தாரபலன்

அசுவினிக்கு	— பேசிதாரம்
ரோகிணிக்கு	— சரிதாரம்
புனர் பூசத்துக்கு	— பேசிதாரம்
மகத்துக்கு	— சரிதாரம்
அஸ்தத்துக்கு	— பேசிதாரம்
விசாகத்துக்கு	— சரிதாரம்
மூலத்துக்கு	— பேசிதாரம்
திருவோணத்துக்கு	— சரிதாரம்
பூரட்டாதிக்கு	— பேசிதாரம்

அசுவினிக்குப் பேசிதாரம் ஆகையால் அந்த நட்சத்திரத்தில் சங்கியம் கூட நட்சத்திரம் 20 கூட்டினால் 2-8-ல் அர்த்தம் 14-ம் ஆகையால் விஷகம்பம் ஆதியாய் 14 யோகமும் அசுவினிக்குவரும்.

ரோகிணி நான்காவது சரிதாரம் ஆகையால் அர்த்தம் இரண்டாவது யோகம் வரும்.

இந்தப் பிரகாரம் சரிபார்த்து நட்சத்திரத்திற்கும், யோகத்திற்கும் தெரிந்து கொள்வது. இந்தப்படி பரணி முதல் ஒன்பது நட்சத்திரமும் சொன்னபடி எண்ணிக் கொண்டு யோகத்தை அறியவும்.

242. **பண்ணும் பாலவம் பகரும் பவமுடன்**
அண்ண லார்உரை அறையுங் கௌளவம்
எண்ணும் வித்துலா மேற்குங் கரசியாம்
நண்ணும் பத்ரவம் நற்சுபம் ஈயுமே.

243. **உய்யும் தாகமும் ஓங்கும் சகுனியாம்**
பைய சதுஷ்பாதம் பகரும் வனசியும்
மெய்ய வேகி மஸ்ததுக் கினமைந்தும்
பொய்யக் கரணம் புகலப் பொல்லாதிதே.

பவம், பாலவம், கௌலவம் தைதுலை, கரசை, பத்திரை	இக்கரணம் ஆறும் சுபம்
சகுனி, நாகவம், சதுஷ்பாதம் கிமிஸ்த்துக்ஷிணம், வனசை	இக்கரணம் ஐந்தும் ஆகாது.

கரண பலன்

பவம், பாலவம், கௌலவம், தைதுலம் இவை நான்கும் உத்தமம். கரசை, வனசை இவை இரண்டும் மத்திமம். விஷ்டி, சகுனி, நாகவம், சதுஷ்பாதம், கிமஸ்துக்கினம் இவை ஐந்தும் நஷ்டம்.

அமிசை, மத்திய அமிசை, தறுவ அமிசை இம்மூன்றும் அதிகமாயிருக்கக் கோசர அமிசை, புத்திர அமிசை என்னப் படும்

இப்படியாக அங்குலம் 6 அமிசை, 9 அமிசை அல்லா மல் வேறு அதிகமும் குறைவும் வருகிறதில்லை, 3, 9, நன்மை. 6 ஆகாது.

அமிசை கூடாது

கர்த்தனுக்கு 60 வயதுக்கு மேல் இருந்தால் பாக்கியப் பிரதம். 60 வயது குறைவானால் ஆனிப்பிரதம்; தேவேந்திர கர்த்தன் ஆனால் சுபப்பிரதம்; அக்கினிகர்த்தன் ஆனால் கீழ் மேலாகச் செய்விக்கும்.

பிரகஸ்பதி சுக்கிரன் அஸ்தமனமான பலன்

244. கூறுடன் சுக்கி ரன்குரு தன்முதல்
வீறும் அஸ்தமான போது தன்னிலும்
கூறு மேவும் குறிக்கு நீசத்திலும்
தூறு மேபகை தோன்றலும் உண்மையே.

245. உண்மை யாக உறையும் சேத்திரபதி
தண்மை யாம்சத்து ருக்கள் இருக்கினும்
வண்மை யாய்மாளி வகுக்கவே யாகாது
கண்மை யாமயன் கண்டு உரைத்ததே.

246. கூறு மாளி குறிக்கும் அதிகாரம்
தூறு மெந்தத் துரைசாதி யானாலும்
சேரும் அந்த சிறந்திடும் சாதிக்கு
கோரும் கிரகம் குறிக்கப்பொல் லாதிதே.

247. குறிக்கச் சத்துரு கூட இருக்கினும்
தெறிக்க வேதிகழ் அஸ்தமான போதும்
முறிக்க நீச் முடிவுதா னத்திலும்
மறிக்க மாளி யமைப்பது துன்மையே.

248. கூறும் துன்பமும் குறிக்கும் மனிதர்க்கு
நேரும் சங்கர்ப்பம் நிகழும்எக் காலமும்
கூறும் அன்னியர் கூட்டம்இட் டேவந்து
பாரும் அக்கிர மாகக்கொள் வார்களே.

குரு, சுக்கிரன், அஸ்தமானாலும், நீச்சதானத்திலாகினும், பகைக்ஷேத்திரத்திலாகினும், சத்துருக்களுடன் கூடினாலும் வீடு கட்டலாகாது.

வீட்டுக்குக் கர்த்தன் எவ்விதச் சாதியானாலும் அந்தந்தச் சாதிகளுக்குக் கிரகம் சத்துருக்களுடன் கூடினாலும், அஸ்தமானாலும், நீச்சத்தானத்தில் இருந்தாலும் வீடுகட்டினால் அன்னியர் அபகரித்துக் கொள்வார்கள்.

ஸ்திரலக்கின ராசிகள் பலன்

249. பால சிங்கம் பகரும் ரிஷபமாம்
நால கும்பம் நவிலும் விருச்சிகம்
கோல மாம்அந்தக் குறிக்கும்சேத் திரங்கள்
ஏல மேவுநன்மை எழில்உத்த மாகுமே.

250. சாரும் கடகம் சாற்றிடு மேஷமும்
சேரு மேதுலாம் சிறந்த மகரமும்
நேரு நாலும் நிகழ்சர லக்கினம்
பாரு மத்திபம் பகர்சிற்ப நூலிதே.

251. ஏய கன்னியே ஏழிலாம் மிதுனமும்
தூய மீனம் தொடரும் தனுசுவும்
ஆய இந்நான்கும் அறையும் சுபாபலன்
நேய மாம்உப யராசி யானதே.

252. ஆனதி னாலதில் அறைமாளி கட்டிடில்
கான மேவும் கடுராசி பொல்லாது
ஊன மாக உரையும் லக்கினபதி
போன கிரகம் புகலப்பொல் லாததே.

253. இலகும் சத்துரு சேத்திரம் தன்னிலும்
குலவும் லக்கினம் கூறும் கணேசுரன்
அலகும் சத்துரு அறையும்சேத் திரத்திலும்
கலக இலக்கினம் பத்தாம் இடமதே.

254. இருந்த மாளி எழிலாய் அமைத்திடில்
பொருந்த வேளை புகலப் பொல்லாதது
பருந்து மேவும் பராதீன மாய்ப்போகும்
தெரிந்து மயனார் தெளிய உரைத்ததே.

ரிஷபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் இந்த நான்கும் ஸ்திர லக்கினம். உத்தமம்.

மேஷம், கடகம், துலாம், மகரம் இந்த நான்கும் சர லக்கினம். மத்திபம்.

மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இந்த நான்கும் சுபாவ மான உபயராசியாகையால் வீடு கட்டக் கூடாது.

ஆரம்ப இலக்கினத்தில் இருந்து கிரகத்துக்குச் சத்துரு க்ஷேத்திரமான இலக்கினேச்சரன் சத்துரு க்ஷேத்திரத்தில் இருந்தாலும், ஆரம்ப இலக்கினத்திற்குப் பத்தாம் இடத்தில் இருந்தாலும், அப்படிப்பட்ட வேளையில் வீடு கட்டினால் பராதீனமாய்ப் போகும்.

திக்குகளுக்கு ஆகாத இராசி

255. மன்னு மேவும் கிழக்குத் துவசாயம்
மின்னு விருச்சிக இராசிக்கும் ஆகாது
துன்னு மேவுதென் கிழக்குதூ மாயமாம்
நன்னு மீன ராசிக்குமே ஆகாதே.

256. அறியும் தெற்கு வருள்சிம் மாயமாம்
உறுதென் மேற்கு உரையும்சங் காயமாம்
செறியு மேற்குச் சிறந்த ரிஷபாயம்
நறியும் தனுசு ராசிக்கும் ஆகாதே.

257. அச்ச மான வ்ரையும் வடமேற்கு
நிச்ச காராயம் நேரும் துலாவுக்கு
உச்ச மானது ஒருபோதும் கூடாது
சொச்ச மயானர் சுளுவாய் அறைந்ததே.

258. உன்னு மேவும் உறையும் வடக்கதாம்
நன்னும் கேஜாய் நவில உரைக்கிறேன்
தன்னு மேஷரா சிக்காரர்க்கு ஆகாது
அன்ன மயனார் அறிய உரைத்ததே.

259. இலங்கு மேடை கிழக்குக்கு ஆகாயமாம்
துலங்கு கும்பராசிக் காரருக்கு ஆகாது
நலங்கொள் மகரம் நவிலும் மிதுனமாம்
பலங்கொள் சிங்கம் பகரும் ரிஷபமே.

260. சொல்லும் இந்த துலங்கும்ரா சிக்காரர்
வெல்லும் கிராமம் விளங்கிடும் மத்தியில்
புல்லும் மாடம் புகலவே கட்டொணாது
அல்லும் மயனார் தமிழில் உரைத்ததே.

261. கட்டினால் மாட மாளிகை பின்னமாம்
கட்டினால் தோஷம் கருதும் ஆனியாகும்
கட்டினால் மாளி விருத்தியும் ஆகாது
கட்டினால் சீரணம் கடுக அடைவதே.

கிழக்கு	துவசாயம்	விருச்சிகஇராசிக்காரருக்கு	ஆகாது.
தென்கிழக்கு	தூமாயம்	மீனஇராசிக்காரருக்கு	ஆகாது.
தெற்கு	சிம்மாயம்	கடகஇராசிக்காரருக்கு	ஆகாது.
தென்மேற்கு	சுனகாயம்	கன்னிஇராசிக்காரருக்கு	ஆகாது
மேற்கு	ரிஷபாயம்	தனுசுஇராசிக்காரருக்கு	ஆகாது.
வடமேற்கு	காளாயம்	துலாஇராசிக்காரருக்கு	ஆகாது.
வடக்கு	கெஜாயம்	மேஷஇராசிக்காரருக்கு	ஆகாது.
வடகிழக்கு	காகாயம்	கும்பஇராசிக்காரருக்கு	ஆகாது.

மகரம், மிதுனம், சிங்கம், ரிஷபம் இந்த இராசியுடையோர் கிராம மத்தியில் வீடு கட்டல் ஆகாது. இப்போது சொல்லிய பிரகாரம் வீடு கட்டினால் ஆனியாகும்.

அ, ஆ, இ, ஈ உ, ஊ, எ, ஏ இதுகள் கிழக்கு முதற் கொண்டிருக்கும்.

இதற்குப் பலன்

இந்திரன்	கிழக்கு முதல்	கெருடன்	கா-க-கா-காக-கா
அக்கினி	இரண்டாவது	பூனை	சா, ச, சா, சா, ச, சா
இயமன்	மூன்றாவது	சிங்கம்	டா, ட, டா, டா, ட, டா
நிருதி	நான்காவது	நாய்	தா, த, தா, தா, த, தா
வருணன்	ஐந்தாவது	பாம்பு	பா, ப, பா, பா, ப, பா
வாயு	ஆறாவது	எலி	ய, ர, வ வ
குபேரன்	ஏழாவது	யானை	சா, ஷா, ச, ஆ

ஈசானியன் எட்டாவது முயல்

கர்த்தானவர்களுக்கு 5 ஆம் அவர்க்குச் சத்துருதான மாங்கையால் அவ்விடத்தில் வீடு கட்டக் கூடாது. கட்டினால் ஆனியாகும். இவைகள் சத்துருத் துவந் தெறிந்து வீடு கட்டப்படும்.

இதற்குத் தோஷப் பரிகாரம்

262. வஞ்சி கேளும் வழங்கு மகாமீனம்
மிஞ்சு மகரம் மேவுங் கடகமும்
செஞ்சு பூரண செயமுள ராசிநாம்
சஞ்ச மயனார் கழறுநூல் பொய்யாதே.

263. வகுத்தி டும்துலாம் வழங்கும் விருச்சிகம்
தொகுத்தி டும்மேஷம் தோன்று மிகப்பாதம்
பகுத்தி டும்சல ராசி எனலாகும்
நிகழ்த்து மயனார் நேராய் அமைத்ததே.

264. பாரில் கும்பம் பகுக்கும் ரிஷபமாம்
சேர சிம்மம் சிறக்க இவைகளும்
சீரும் அர்த்த சலராசி யென்னலாம்
பேர மயனார் பேணி உரைத்ததே.

265. பாரெ லாம்கன்னி பகரும் மிதுனமாம்
ஏரும் தனுசு ஏற்க இவைமூன்றும்
கார்நி றச்சல ராசி எனப்படும்
சீரும் பூரண் சேர்சல ராசியே.

266. ஏந்தும் இந்த எழில்பெறும் இராசியில்
போந்த மாளி புகல அமைத்திடில்
வேந்தன் உத்தம மான ராசிதனில்
கூந்தல் வேனில் குருசுக்கி ரன்ஆமே.

267. ஆமே சந்திரன் அறையும் பார்வைதனில்
தாமே மாடம் தனிமாளி கட்டிடில்
போமே அங்கார தோஷம் பொலிவில்லை
நாமே சிற்பநூல் நவில உரைத்ததே.

மீனம், கடகம், மகரம் இவை சம்பூரண சலராசி.
விருச்சிகம், துலாம், மேஷம் இவை பாத சலராசி.
கும்பம், ரிஷபம், சிம்மம் இவை அர்த்த சலராசி.
கன்னி, மிதுனம், தனுசு இவை நிறை சலராசி.

பூரணசல ராசியில் கட்டினாலும், உத்தமமான நட்சத திரத்தில் சந்திரன், குரு, சுக்கிரன், பார்வையில் கட்டினாலும் அங்காரக தோஷம் தேவையில்லை.

மாதநாளில் கர்ப்பம் ஓடுவது

வெண்பா

268. பானு தனுவில் பதின்மூன்றே முக்கால்மேல்
ஆனிக்குக் கற்பம் அறுகால—மானேகேள்
நண்டுமுதல் தேள்அளவு நாலரைநால் மாகாணி
கொண்டதனு சுக்குஒன்றே கூறு.

269. கன்னியில் மனைஎ டுக்கில்
கைப்பொருள் வந்து சேரும்
அன்னமும் முத்தும் சேரும்
ஆயிழை தானும் நிற்பள்
பொன்னொடு தானி யங்கள்
பொருந்தவே செல்வம் உண்டாம்
முன்னமே அயனார் சொன்ன
முறைமைநூல் விளம்பல் உற்றேன்.

மனை எடுக்கும் பலன்

270. ஈசானிய மூலை தன்மேல்
இயல்புடன் இருந்து கொண்டு
வாசமாம் இதனில் வாழ்ந்தால்
வரிசையும் வாழ்வும் உண்டாம்
போசனார் புவியோர்க்கு எல்லாம்
பொருந்திய மனுசன் ஆவான்
வாசமின் குழலி னாளே
வகைமனைக் குறிகள் கண்டாய்.

271. வாயுமேல் மனைஎ டுக்கில்
வயிற்றினில் பிணிஉண் டாகும்
நேசமாய் நினைத்தது எல்லாம்
நிசமுடன் கேடது ஆகும்
காசநோய் கொண்டு சாவார்
களவினால் பொருளும் போகும்
பேயுமே கூடிக் கொல்லும்
பிணம்சுடு காடது ஆமே.

272. அங்கிமேல் மனைஎ டுக்க
மங்கைதான் மலடி ஆவாள்
செங்கைவாள் அரவம் தீண்டும்
தீப்படும் மனையில் பா...
பொங்குமாம் குழலி னாளே
பொருளது களவும் போகும்
அங்கையற்கு அயனார் சொன்ன
வண்மைநூல் விளம்பல் உற்றேன்.

15. Natcatiram (stars)

Nama Natcatiram (Stars)

Those who do not have their birth stars they could find the respective star of the first letter of their names and with the help of that stars, they can the find out the predictions. In order to make this process the first letters should be listed out.

Each star has been divided into 4 parts which fall equally as the quarter of the one. To these separate parts separate letters have been given respectively. Therefore the respective letters should be taken as the respective parts of the stars and this arrangement would be useful to find out racis.

Respective trees, birds, animals have been listed out for all the 27 stars and by reading the goodness and badness of them, one should build the house.

The matching with Raci (Raci pōrutam)

Though stars happen to be good, one should select, after scruitinizing one's respective raci, stars that would fall on the right side of the raci. If one selects the stars that fall on the left side, the construction of the house would not attain fruitful results and would bring disaster.

Stars that are favourable for building towers, and roofs

1.	Asvini, Parani, Karthikai, Rohini	— good days
2.	Mirukasiritam	— auspicious day
3.	Tiruvatirai, Punarpucam, Pucam, Ayiliam	— unauspicious days
4.	Makam, Puram, Utiram, Astam	— good days
5.	Citirai	— auspicious day
6.	Cuvati, Vicakam, Anusam, Kettai	— Unauspicious days
7.	Mulam, Puratam, Utiratam, Tiruvonam	— good days

8. Aviṭam — good day
9. Caṭayam, Purātati, Utiratati, Revati — Unauspicious days.

Among these, in the good days in which 12 stars fall, one could construct houses. In these days other good deeds can also be performed. In the auspicious days the construction of towers, roofs can be done. In the unauspicious days — 12 days — these deeds ought to be avoided.

good days (Mukatu Nāl).		good days Mukatu Nāl)		good days Mukatu Nāl)	
Mirka		Citirai		Avitam	
Rohini	Tiruvatirai	Astam	Cuvati	Tiruvonam	Saṭayam
Kartikai	Punarpucam	Utiram	Vicākam	Utiratati	Puratati
Parani	Pucam	Puraṭam	Anucam	Puratam	Utiratam
Asvati	Aiyiliam	Makam	Kettai	Mulam	Revati
good days	unauspicious days	good days	unauspicious days	good days	unauspicious days

Stars and Days

Parani that falls on Sundays
Citrai that falls on Mondays
Utiratam that falls on Tuesdays
Avitam that falls on Wednesdays
Kettai that falls on Thursdays
Purātam that falls on Fridays
Revati that falls on Saturdays

Birth Star

Under the 2nd, 4th, 6th, 8th, 9th stars from the birth star of one person, one could perform good deeds. The 1st, 3rd, 5th and 7th stars are unfavourable for such deeds. Apart from the nineth star, the same counting ought to be followed from the 10th star to 18th star. The calculation for 27 stars can be done like this :

2, 4, 6, 8, 9 stars

11, 13, 15, 17, 18 stars

20, 22, 24, 26, 27 stars

Days to be avoided

1. Days on which circles found round the Sun
2. Days on which circles found round the Moon
3. Bad days; 4. Clouded days; 5. Drizzling days
4. Days on which Solar / lunor eclipses take place
5. Stars that sound unfavourable.
6. The hours that called Vitikarnam
7. The day when Venus disappears
8. Bad hours; 11. Astami; 12. New moon day;
9. The parts of moon (4, 9, 14 — parts)
10. Stars that have no legs — kartikai, utiram, utiratam
11. Stars that have no body — Miruciritam, citrai, anucam
12. Stars that have no heads — punarpucam, vicakam, puratati
13. The day when Venus appears
14. The day when Venus moves on right side
15. The last three days of every month
16. Days after 15th Pankuni
17. Seven days before and after, the day of eclipse

In these days attempts to do good deeds are to be avoided.

The State of Yoni – Thithis

Thutiyai, Tuvādesi

Saptami.
Tutiyai (F.c)
Tuvatesi(F.c.)

Saptami (F.C.)

North

Astami
Astami
Triyotési (F.c)

Sky

Navami, Caturdasi (F.c)
Caturti (F.c)

Sasti
Piratamai(F.c.)
Ekadesi(F.c.)

Piratamai
Ekadesi
East Sasti(F.c)

West

Tasmi, Panjami (F.c)
Amavasai

Earth

Caturti
Caturtaci
Navami(F.c.)

South

Panjami, Paurnami,
Tasmi (F.c)

Tirutiyai
Tiriyōdasi
astami (F.c.)

Among these,

1. Thithis of south-east direction — Tirutiai, Tiriyotaci, astami (of New moon)
2. Thithis of Sky — Navami, Caturtaci (of New moon), Caturti (of new moon)
3. Thithis of Earth — Tacami, Panchami (of new moon) Ammavacai (The new moon day)

— these days are to be avoided.

The place of the plot, where various fairies reside

The length and breadth of the ground have to be divided $8 \times 8 = 64$ parts.

Among them

1. 4 intermittent parts — piramam part
2. Following these, 4 corner parts — parts where ghosts reside
3. 8 parts of 2 directions — uthira part
4. Other 48 parts — parts where tevars resides

		TEVAR		
	GHOSTS	UTHIRAR	GHOSTS	
TEVAR	UTHIRAR	PIRAMA PAKAM	UTHIRAR	TEVAR
	GHOSTS	UTHIRAR	GHOSTS	
		TEVAR		

Mondays are suitable to lay entrances, and pillars.
Wednesdays are suitable to spread girdle and roofs.
Fridays are suitable to do roofing and flooring
Thursdays are suitable to make house warming ceremony.

	Stars	Animal	Birds	Tree	Kanam
1.	Aswani	House	Falcon	Etti	Deva
2.	Parani	Elephant	Crow	Goose berry	Manita
3.	Kartikai	Goat	Peacock	Atti	Ratchesa
4.	Rohini	Shake	Owl	Jambo	Manita
5.	Mirukaciritam	Water snake	Hen	Ebony	Deva
6.	Tiruvatirai	Dogs	Nightingale	Red Ebony	Manita
7.	Punarpucam	Female cat	Swan	Bamboo	Teiva
8.	Pucam	Male goat	Water Crow	Peepul	Teiva
9.	Aiyiliam	Male Cat		Colophyllum	Ratchesa
10.	Makam	Male rat	Male eagle	Ārā (Kumkum tree)	Ratchesa
11.	Puram	Bandycot	Female eagle	Butea Frondosa	Manita
12.	Uttiram	Ox	Bee	Oleander	Manita
13.	Astam	Buffalo	Vulture	Bauhımia racemos	Teiva
14.	Citrai	Male Tiger	Wood Peeker	Crateva religiosa	Ratchesa
15.	Cuvati	Male goat	Bee	Koenig	Teiva
16.	Vicakam	Female Tiger	Red Tailed sparrow	Wood apple-tree	Ratchesa
17.	Anucam	Female deer	Sky-lork	Makula	Teiva
18.	Kettai	Kalai	ruddy goore	Pirai	Ratchesa
19.	Mulam	Female goat	Indian cuckoo	Indian fig tree	Ratchesa
20.	Puratam	Male Monkey	Tetrao Cınerea	Vanchi	Manita
21.	Uttiratam	Steriled cow	Black sparrow	Jack tree	Manita
22.	Tiruvonam	Female Monkey	Water Bird	Calotrophis	Teva
23.	Avittam	Celestial cow	Bee	Prosopis Spicigira	Ratchesa
24.	Catayam	Female Monkey	Raven	Eugenia racemosa	Manita
25.	Purattati	Purca-mirukam	Domestic Ox	Sweet mangoo tree	Manita
26.	Uttirattati	Cow that secretes milk	Hooting Owl	Neem	Manita
27.	Revati	Female elephant	Vulture	Bassia	Teva

Letters for stars

1.	cu	ce	cō	lā	Aswani
2	lī	lu	le	lō	Parani
3.	ā	ī	ū	ē	kartikai
4.	o	vā	vī	vū	Rohini
5	ve	vō	kā	cī	Mirkaciritam
6.	kū	ka	na	ca	Tiruvatirai
7.	ke	kō	ha	hī	Punarpucam
8.	ku	hō	hō	ta	Pucam
9.	tī	tu	te	tō	Ayiliyam
10	mā	mi	mu	me	makam
11.	mō	tā	ti	tu	Puram
12	te	tō	pā	pī	Uttiram
13.	pū	si	nā	ttā	astam
14.	pe	pō	rā	ri	citrai
15	ru	re	rō	t	cuvati
16.	tī	tū	ṭe	ṭō	vicakam
17.	nā	nī	nū	ne	Anuṣam
18.	nō	yā	i	yū	kettai
19	e	yō	ppā	ppi	Mulam
20	pū	tā	pa	ta	puratam
21.	pe	pō	ṣā	ṣi	Uttiratam
22.	ṣu	ṣe	ṣō	ka	tiruvonam
23.	ka	kī	ku	ke	Avittam
24.	kō	cō	cī	cū	catayam
25.	ese	sō	ṭā	ti	Purattati
26.	Ṭū	eṣa	ṭtā	ṭti	Uttirattati
27.	ṭe	ṭō	ccō	cci	Revati

15. நட்சத்திரம்

(சுவடிச் செய்திகளின் சுருக்கம்)

நாம நட்சத்திரம்

பிறந்த நட்சத்திரம் அறிய இயலாதவர்கள் தங்கள் பெயரின் முதல் எழுத்திற்கு உரிய நட்சத்திரத்தினை அறிந்து ஏற்ற பலன் கண்டு நல்ல செயல்களை மேற் கொள்ள வேண்டும். இதற்கு உதவுமாது பெயர்களின் முதல் எழுத் திற்கு ஏற்ப நட்சத்திரங்களின் பெயர்கள், பட்டியல் இட்டுக் காட்டப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் உரிய நான்கு கால் பகுதி களுக்கும் முறையே நான்கு எழுத்துக்கள் கொடுக்கப்பட் டுள்ளன. அவற்றை முறையே அந்தந்த நட்சத்திரத்தின் முதற்பாதம், இரண்டாம் பாதம், மூன்றாம் பாதம், நான் காம் பாதம் எனக் கொள்ளுதல் வேண்டும். இவை இராசி முதலியன காணவும் பயன்படுவதாக அமைக்கப்பட்டுள்ளன.

நட்சத்திரங்களுக்கு உரிய மிருகம், பட்சி, மரம், கணம் போல்வனவும் இருபத்தேழு நட்சத்திரங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் நன்மை தீமைகளை அறிந்து ஏற்ப மனையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

இராசிப் பொருத்தம்

நட்சத்திரங்கள் சிறந்தனவாக இருந்தாலும் மனைக்கு உரியவரின் பிறந்த இராசியையோ, பெயருக்கு உரிய இராசியையோ பார்த்து அந்த இராசிக்கு முன்னால், வலப் புறமாக உள்ள நட்சத்திரங்களையே தேர்ந்தெடுக்க வேண் டும். அவ்வாறு இன்றி,

தன் இராசிக்குப் பின்னால் இடப்புறமாக உள்ள நட்சத் திரங்களில் மனை கோலினால் தீமையே விளையும்.

உச்சிக் கோபுரம் வைக்க, உச்சிமேடு மூட நட்சத்திரங்கள்

1. அசுவனி, பரணி, கார்த்திகை, ரோகிணி — ஏறு நாட்கள்
2. மிருகசீரிடம் — முகட்டு நாள்
3. திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம் — இறங்கு நாட்கள்
4. மகம், பூரம், உத்திரம், அஸ்தம் — ஏறு நாட்கள்

5. சித்திரை — முகட்டு நாட்கள்

6. சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை — இறங்கு நாட்கள்

7. மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம் — ஏறு நாட்கள்

8. அவிட்டம் — முகட்டு நாள்

9. சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி ரேவதி — இறங்கு நாட்கள்

இவற்றுள்,

ஏறு நாட்களாகிய 12 நட்சத்திரங்களிலும் வீடு கட்டலாம். இவை பிற நல்ல செயல்களுக்கும் உரியன வாகும். முகட்டு நாட்களாகிய மிருக சீரிடம், சித்திரை, அவிட்டம் ஆகிய நட்சத்திரங்களில் வீட்டின் உச்சி மேட்டுப் பகுதி மூடுதல் கோபுரங்களில் உச்சிக்கோபுரம் கட்டுதல் போன்ற செயல்களைச் செய்யலாம்.

இறங்கு நாட்களாகிய 12 நட்சத்திரங்களில் இச்செயல் களில் எதையுமே செய்யக் கூடாது.

முகட்டு நாள்		முகட்டு நாள்		முகட்டு நாள்	
மி		சித்		அவி	
ரோ	திரு	அஸ்	சுவா	திரு	சத
கார்	புன	உத்	விசா	உத்தி	பூரட்
பர	பூச	பூர	அனு	பூரா	உத்
அசு	ஆயி	மக	கேட்	மூல	ரேவ
ஏறு நாட்கள்	இறங்கு நாட்கள்	ஏறு நாட்கள்	இறங்கு நாட்கள்	ஏறு நாட்கள்	இறங்கு நாட்கள்

நட்சத்திரமும் நாளும்

ஞாயிற்றுக் கிழமையில் வரும் — பரணி
திங்கள் கிழமையில் வரும் — சித்திரை
செவ்வாய்க் கிழமையில் வரும் — உத்திராடம்
புதன் கிழமையில் வரும் — அவிட்டம்
வியாழக் கிழமையில் வரும் — கேட்டை
வெள்ளிக் கிழமையில் வரும் — பூராடம்
சனிக் கிழமையில் வரும் — ரேவதி

ஆகிய நட்சத்திரங்களில் மனை கோலினால் வீடு பாழாகும்; பிற நல்ல செயல்கள் செய்தாலும் தீமையே விளையும்.

பிறந்த நட்சத்திரம்

தான் பிறந்த நட்சத்திரத்திற்கு, 2, 4, 6, 8, 9 ஆகிய நட்சத்திரங்களில் நல்ல செயல்களை மேற்கொள்ளலாம்.

தான் பிறந்த நட்சத்திரமாகிய முதல் நட்சத்திரம், அந்த நட்சத்திரத்திற்கு—மூன்றாம் நட்சத்திரம், ஐந்தாம் நட்சத்திரம், ஏழாம் நட்சத்திரம் ஆகியவை நல்ல செயல்களை மேற்கொள்ளப் பொருந்தாதனவாகும். இவ்வாறு, பிறந்த நட்சத்திரம் தொடங்கி ஒன்பது நட்சத்திரம் முடிய ஒன்று முதல் ஒன்பது என்று கொண்டு மீண்டும் பத்தாம் நட்சத்திரம் முதல் பதினெட்டாம் நட்சத்திரம் முடிய முறையே ஒன்று முதல் ஒன்பது எனக்கணக்கிட்டுப் பயன் காண வேண்டும். அடுத்து பத்தொன்பதாம் நட்சத்திரம் தொடங்கி இருபத்தேழாம் நட்சத்திரம் முடிய ஒன்று முதல் ஒன்பது எனக் கொள்ள வேண்டும் இவ்வாறு கணக்கிட,

பிறந்த நட்சத்திரத்தை ஒன்று எனக் கொண்டு அதிலிருந்து எண்ண,

2, 4, 6, 8, 9 ஆம் நட்சத்திரங்கள்


11, 13, 15, 17, 18 ஆம் நட்சத்திரங்கள்

20, 22, 24, 26, 27 ஆம் நட்சத்திரங்கள் ஆகிய பதினைந்தும் நல்லனவாகக் கொள்ள வேண்டும்.

நீக்க வேண்டிய நாட்கள்

1. சூரியனைச் சூழ்ந்து பரிவேடம் இட்டிருக்கும் நாள்
2. சந்திரனைச் சூழ்ந்து பரிவேடம் இட்டிருக்கும் நாள்
3. தீமை தரும் கிழமைகள்
4. மேகம் சூழ்ந்து மந்தாரம் உள்ள நாள்
5. மழைத் தூறல் விழுந்து கொண்டிருக்கும் நாள்
6. சூரிய சந்திர கிரகணம் உடையநாள்
7. தீமை தரும் நட்சத்திரங்கள்
8. விட்டிகரணம் என்னும் நேரம் (பதினொரு உறுப்புகளில் ஒன்று)
9. வெள்ளி மறையும் நாள்
10. தீமை தரும் நாழிகை
11. அஷ்டமி
12. அமாவாசை
13. சந்திர பக்கங்கள் (4, 9, 14-ஆம் பக்கங்கள்)
14. கால் அற்ற நட்சத்திரங்கள் — கார்த்திகை, உத்திரம், உத்திராடம்
15. உடல் அற்ற நட்சத்திரங்கள் — மிருகசீரிடம், சித்திரை, அனுஷம்
16. தலை அற்ற நட்சத்திரங்கள் — புனர் பூசம், விசாகம், பூரட்டாதி
17. வெள்ளி எதிர்படும் நாள்
18. வெள்ளி வலப்புறம் ஆகும் நாள்
19. ஒவ்வொரு மாதத்தின் கடைசி மூன்று நாட்கள்
20. பங்குனிமாதம் 15 தேதிக்கு மேல் உள்ள நாட்கள்
21. கிரகண நாளுக்கு முன்பும் பின்பும் ஏழு, ஏழு நாட்கள் போன்ற நாட்களில் நல்ல செயல்கள் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

யோகினி நிலை — திதிகள்



குறிப்பு: (தே.) தேய்பிறைத் திதிகள்

இவற்றுள்,

1. தென் கிழக்குத் திதிகளாகிய — திருதியை, திரயோ தசி, அஷ்டமி (தே)

2. ஆகாயத் திதிகளாகிய — நவமி, சதுர்த்தி (தே), சதுர்த்தசி (தே)

3. பூமித் திதிகளாகிய — தசமி, பஞ்சமி (தே), அமா வாசை ஆகிய திதிகள் நல்ல செயல்களுக்கு விலக்கப்பட வேண்டியவைகளாகும்.

மனையில் தேவதைகள் இருப்பிடம்

வீட்டு மனையின் நீள அகலங்களை எட்டு, எட்டுப் பகுதிகளாகப் பிரிக்க 64 பகுதிகளாகும். அவற்றுள்,


1. இடை 4 பாகங்கள் — பிரம்ம பாகம்.

2. அதைத் தொடர்ந்து 4 மூலைப் பாகங்கள் — பேய்ப் பாகம்.

3. 4 திசையும் இரண்டிரண்டுள்ள 8 பாகங்கள் — உருத்திர பாகம்

4. பிற 48 பாகங்கள் — தேவர் பாகம்

படம்



திங்கட் கிழமையில் — வாசற்கால், தூண் முதலியன நாட்ட நன்று.

புதன் கிழமை — உத்திரம், விட்டம், கழிகள் பரப்ப நன்று.

வெள்ளிக் கிழமையில் — கூரை, ஓடுவேய்தல், தளம் போடல் நன்று.

வியாழக் கிழமையில் — குடிபுக நன்றாம்.

	நட்சத்திரம்	மிருகம்	பட்சி	மரம்	கணம்
1.	அசுவனி	குதிரை	இராசாளி	எட்டி	தேவ கணம்
2.	பரணி	யானை	காக்கை	நெல்லி	மனித கணம்
3.	கார்த்திகை	ஆடு	மயில்	அத்தி	இராட்சச கணம்
4.	ரோகணி	பாம்பு	ஆந்தை	நாவல்	மனித கணம்
5.	மிருகசீசம்	சாரை	கோழி	கருங்காலி	தேவ கணம்
6.	திருவாதிரை	நாய்	அன்றில்	செங்கருங் கால	மனித கணம்
7.	புனர்பூசம்	பெண் பூனை	அன்னம்	மூங்கில்	தெய்வ கணம்
8.	பூசம்	கிடா	நீர்க்காக்கை	அரசு	தெய் வகணம்
9.	ஆயிலியம்	ஆண் பூனை	சிச்சிலி	புன்னை	இராட்சச கணம்
10.	மகம்	ஆண் எலி	ஆண் கழுகு	ஆவ	இராட்சச கணம்
11.	பூரம்	பெருச்சாளி	பெண் கழுகு	பலாசு	மனித கணம்
12.	உத்திரம்	எருது	சிள்வண்டு	அலரி	மனித கணம்
13.	அஸ்தம்	எருமை	பருந்து	ஆத்தி	தெய்வ கணம்
14.	சித்திரை	ஆண் புலி	மரங்கொத்தி	வில்வம்	இராட்சச கணம்
15.	சுவாதி	கிடா	ஈ	மருதை	தெய்வ கணம்
16.	விசாகம்	பெண் புலி	செல்வால் குருவி	விளா	இராட்சச கணம்
17.	அனுஷம்	பெண் மான்	வானம்பாடி	மகிழ	தெய்வ கணம்
18.	கேட்டை	கலை	சக்கரவாகம்	பிறாய்	இராட்சச கணம்
19.	மூலம்	பெண் நாய்	செம்போத்து	மரா	இராட்சச கணம்
20.	பூராடம்	ஆண் குரங்கு	கவுதாரி	வஞ்சி	மனித கணம்
21.	உத்திராடம்	மலட்டு பசு	வலியன்	பலா	மனித கணம்
22.	திருவோணம்	பெண் குரங்கு	நாரை	எருக்கு	தேவகணம்
23.	அவிட்டம்	காமதேனு	வண்டு	வன்னி	இராட்சச கணம்
24.	சதயம்	பெண் குதிரை	அண்டங் காக்கை	கடம்பு	மனித கணம்
25.	பூரட்டாதி	புருஷாமிருகம்	உள்ளான்	தேமா	மனித கணம்
26.	உத்திரட்டாதி	பால் பசு	கோட்டான்	வேம்பு	மனித கணம்
27.	ரேவதி	பெண் யானை	வல்லூறு	இலுப்பை	தேவ கணம்

நாம நட்சத்திர எழுத்துக்கள்

1. சு- சே- சோ- லா — அசுவனி
2. லீ- லூ- லே- லோ — பரணி
3. ஆ- ஈ- ஊ- ஏ — கார்த்திகை
4. ஓ- வா- வீ- வூ — ரோகணி
5. வே- வோ- கா- கீ — மிருகசீரிடம்
6. கூ- க- ஞ- ச — திருவாதிரை
7. கே- கோ- ஹ- ஹி — புனர்பூசம்
8. கு- ஹே- ஹோ- ட — பூசம்
9. டீ- டு- டே- டோ — ஆயிலியம்
10. மா- மீ- மூ- மே — மகம்
11. மோ- டா- டி- டு — பூரம்
12. டே- டோ- பா- பீ — உத்திரம்
13. பூ- ஷ- நா- டா — அஸ்தம்
14. பே- போ- ரா- ரி — சித்திரை
15. ரு- ரே- ரோ- த — சுவாதி
16. தீ- தூ- தே- தோ — விசாகம்
17. நா- நீ- நூ- நே — அனுஷம்
18. நோ- யா- இ- யூ — கேட்டை
19. ஏ- யோ- ப்பா- ப்பி — மூலம்
20. பூ- தா- ப- ட — பூராடம்
21. பே- போ- ஜா- ஜி — உத்திராடம்
22. ஜு- ஜே- ஜோ- க — திருவோணம்
23. க- கீ- கு- கே — அவிட்டம்
24. கோ- சா- சீ- சூ — சதயம்
25. ஸே- ஸோ- தா- தி — பூரட்டாதி
26. தூ- ஸ- த்தா- த்தி — உத்திரட்டாதி
27. தே- தோ- ச்சா- ச்சி — ரேவதி

நட்சத்திர பலன்
(சுவடியில் உள்ளவை)

1. அசுவினி, மிருகசீரிஷம், ரோகணி, பூசம், அஸ்தம், சித்திரை, அனுஷம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம் ஆகிய 11-ம் உத்தமம்.

2. திருவாதிரை, புனர்பூசம், உத்திரம், கேட்டை, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய 6-ம் மத்திபம்.

3. பரணி, கார்த்திகை, ஆயிலியம், மகம், பூரம், பூரட்டாதி, சுவாதி, பூராடம், விசாகம், மூலம் ஆகிய 10-ம் அதமம்.

சுபகாரியங்கள் செய்ய வேண்டியதற்கு மூன்று வித மாகச் சில **நட்சத்திரங்களறிய:**

முதலாவது—ரோகணி, ஆதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, திருவோணம், அவிட்டம், சதயம் இவை ஒன்பதும் ஊர்த்துவ முகம் எனப்படும் மேல் நோக்கு நட்சத்திரங்களாகும்.

இவற்றில் ஸ்தம்பப் பிரதிஷ்டை, பட்டாபிஷேகம், உத்தியோகத்திற் பிரவேசித்தல், இராசதரிசனம், வியா பாரம், வீடு, ஆபரணம், மெத்தை, மேல்மெத்தை, வாசற் கால், தூண், துபஜம், தோப்பு, சாலை, மரம் முதலியவை வைக்கவும். மற்றும் இவை முதலாகிய சுபகாரியங்கள் செய்யவும் அபிவிருத்தியாகி வரும்.

இரண்டாவது—அசுவினி, மிருகசீரிஷம், புனர்பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், கேட்டை, ரேவதி இவை ஒன்பதும் **திரிமுகம்** எனப்படும் பக்க நோக்கு நட்சத்திரங்களாகும்.

இவற்றில் சுவர்வைக்க, பயிரிட, நிலம் வாங்க, பசு, எருது, எருமை, குதிரை, யானை, பண்டி முதலானவை வாங்கவும்; பொன்னேர் கட்டியுழவும்; விதை விதைக்கவும்; பசு முதலானதுகளுக்குக் கொட்டாரங் கட்டவும்; யாத்திரை போகவும்; ஏரி வாய்க்கால் வெட்டவும்; நிலத்துக்கு வாப்பு கட்டவும்; இவை முதலாகிய சுபகாரியங்கள் செய்ய உத்தமம்.

மூன்றாவது—பரணி, கார்த்திகை, ஆயிலியம், மகம், பூரம், விசாகம், மூலம், பூராடம், பூரட்டாதி இவை ஒன் பதும் அதோமுகம் எனப்படும் கீழ் நோக்கு நட்சத்திரங்க ளாகும்.

இவற்றில் நிட்சேபம் (ஈடு) வைக்கவும்; வித்தியாரம்பம் செய்யவும்; கிணறு, குளம், அகழி எடுக்கவும்; களஞ்சியம் கட்டவும்; புதையல் வைக்கவும்; கிழங்கு முதலானவை நடவும்; சங்கு ஸ்தாபனம் பண்ணவும் இவை யுத்தமம்.

இவற்றில், முதற் சாமம் உத்தமம்; இரண்டாவது சாமம் சந்தோஷம்; மூன்றாம் சாமம் அதமம்; நான்காம் சாமமும், அந்திகாலமும் இராக் காலமும் கூடாது.

கிரக ஆரம்பம்செய்ய முக்கியமான முகூர்த்த நட்சத்திரங்கள். இது கிரந்தங்களிலிருந்து எழுதப்பட்டது. மிருகசீரிஷம், அஸ்தம், பூசம், சித்திரை, அனுஷம், உத்திரம் மூன்று, திருவோணம், அவிட்டம், சதயம் ஆக பதினொன்றும் உத்தமம்.

நட்சத்திரங்களின் நன்மை தீமையறியும் விதி

அகலம், நீளம், நிலைக்கால்உயரம் இதில் மூன்றுமிருந்த மனையில் கட்டுத்திசையில் சொல்லப்பட்டது என்னவெனில்—

அசுவினிக்கு—தென்சார்பு வீடுகட்டவது. நீளமுழம் 6; அகல முழம் மூன்றேகால்; வாசல் வடக்கு; நிலைக்கால் உயரம் அங்குலம் 49.

பரணி—தென்சார்பு நீளம் முழம் 7-க்கு அகலம் முழம் 3க்கு வாசல் வடக்கு. நிலைக்கால் உயரம் அங்குலம் 51.

கார்த்திகை—மேல்சார்பு நீளம் முழம் 7க்கு அகலம் முழம் 3க்கு வாசல் கிழக்கு. நிலைக்கால் உயரம் அங்குலம் 53.

ரோகணிக்கு—மேல்சார்பு நீளம் முழம் 7க்கு அகலம் முழம் 3¾க்கு வாசல் கிழக்கு, நிலைக்கால் உயரம் அங்குலம் 55.

மிருகசீரிஷத்திற்கும் திருவாதிரைக்கும்—தென்சார்பு நீளம் முழம் 9க்கு அகலம் முழம் 3க்கு வாசல் வடக்கு. நிலைக்கால் உயரம் அங்குலம் 49.

புனர் பூசத்திற்கு—மேல்சார்பு—நீளம் முழம் 10க்கு அகலம் முழம் 3¾க்கு கிழக்கு, நிலைக்கால் உயரம் அங்குலம் 55.

பூசத்திற்கு, ஆயிலியத்திற்கு—மேல்சார்பு நீளம் முழம் 6க்கு அகலம் முழம் 3க்கு வாசல் கிழக்கு, நிலைக்கால் உயரம் அங்—59.

மகத்துக்கு வடசார்பு நீள்ம் முழம் 5¾க்கு அகலம் முழம் 3க்கு வாசல் தெற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 47.

உத்திரத்திற்கு—மேல் சார்பு நீளம் முழம் 9க்கு அகலம் முழம் 3க்கு வாசல் கிழக்கு தெற்குமாக, நிலைக்கால் உயரம் அங்குலம் 57.

அவிட்டத்திற்கு—வடசார்பு நீளம் முழம் 13க்கு அகலம் முழம் 3க்கு வாசல் தெற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 51.

சித்திரைக்கு—வடசார்பு நீளம் முழம் 11க்கு அகலம் முழம் 3¾க்கு வாசல் தெற்கு. நிலைக்கால் உயரம் அங்குலம் 57.

சுவாதிக்கு—வடசார்பு நீளம் முழம் 5க்கு அகலம் முழம் 3க்கு வாசல் தெற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 40

விசாகத்திற்கு—வடசார்பு நீளம் முழம் 9க்கு அகலம் முழம் 3க்கு வாசல் தெற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 49.

அனுஷத்திற்கு—கீழ்சார்பு நீளம் முழம் 5க்கு அகலம் முழம் 3க்கு வாசல் மேற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 49.

கேட்டைக்கு—கீழ்சார்பு நீளம் முழம் 5க்கு அகலம் முழம் 3¾க்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 49.

மூலத்திற்கு—வடசார்பு நீளம் முழம் 7க்கு அகலம் முழம் 3க்கு வாசல் தெற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 57.

பூராடத்திற்கு—கீழ்சார்பு நீளம் முழம் 6¾க்கு அகலம் முழம் 3க்கு வாசல் மேற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 53.

உத்திராடத்திற்கு—கீழ்சார்பு நீளம் முழம் 13க்கு அகலம் முழம் 3க்கு வாசல் தெற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 57.

திருவோணத்திற்கு—வடசார்பு நீளம் முழம் 11க்கு அகலம் முழம் 3க்கு வாசல் தெற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 53.

அவிட்டத்திற்கு—கீழ்சார்பு நீளம் முழம் 7க்கு அகலம் முழம் 3க்கு வாசல் மேற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 51.

சதையத்திற்கு—தென்சார்பு நீளம் முழம் 9க்கு அகலம் முழம் 3க்கு வாசல் வடக்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 49.

பூரட்டாதிக்கு—தென்சார்பு நீளம் முழம் 15க்கு அகலம் முழம் 4க்கு வாசல் வடக்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 59.

உத்திரட்டாதிக்கு—கீழ்சார்பு நீளம் முழம் 10க்கு அகலம் முழம் 3க்கு வாசல் மேற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 57.

இரேவதிக்கு—தென்சார்பு நீளம் முழம் 10க்கு அகலம் முழம் 3க்கு வாசல் வடக்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 51.

273. பொல்லாத நாட்கள் வாரம் பொருந்தாத
இராசி மாதம்
செல்லாத வெள்ளிப் பாடு தியாச்சியம்
இராகு காலம்
எல்லோரும் நன்மை வாஸ்து வெழுந்திருக்
கின்ற போதும்
வல்லாமை யுடையோர் எல்லாம்
மனைகோலல் ஆகா தன்றே.

274. நடையினில் முக்கால் நாழி நலமுடன்
பொசிப்பு முக்கால்
குடையினில் முக்கால் நாழி கூறிய
மலர்க்கண் முக்கால்
படர்மிசை எழுந்தி ருந்து பார்தனை
விளக்கு முக்கால்
அடவுடன் வாஸ்து வுக்கு அகத்தியர்
உரைத்த வாறே.

முகூர்த்தம்

275. ஆலயம் நகரம் பட்டணம் கிரக
மருளிய தடாகக்கூ பமுமாஞ்
சீலமாஞ் சிற்பன் செய்கின்ற கிரியைச்
செயலதை நீக்கிய வேறோர்
தாலத்தில் அன்னிய சாதியோன்* செய்தால்
தாரணி மன்னவர் தமக்கும்
சாலவே கர்த்தன் தனக்குமே தோஷம்
சஞ்சலம் அதுவுமுண் டாமே.

(இ-ள்) ஆலயங்கள், நகரங்கள், பட்டணங்கள், கிரகங்கள் தடாகங்கள், கிணறுகள் இவைகளைச் சிற்பன் கையால் செய்யாமல் அன்னிய வருணத்தான் கையினால் மூகூர்த்தஞ் செய்தால் அரசருக்கும் யசமானுக்கும் ஆகாது எ-று.

மனைகோல அவரவர்கள் இராசிப்பொருத்தம்

276. நன்மனை யெடுப்போர்க்கு எல்லாம்
நாளுடன் பூமி தன்னை
முன்வலங் கொள்வ ராகில்
முயற்சியாங் கருமம் நன்றாம்

பன்னெடுங் காலம் வாழ்வர்
பயின்றநல் மக்கட் பேறாம்
பின்னிடங் கொள்வ ராகில்
பிணியொடு சாதல் ஆமே.

(இ-ள்) மனைக்கு வாசல் பொருத்தம்—அவரவர் பேர் வழி, பிறந்த ராசி, முன்னும் வலமுமாக இருக்கக் கொள்வது நன்றாம். பின்னும் இடமுமாகியிருக்கக் கொள்ளில் தீதாம் எ-று.

277. சித்திரை வைகாசி ஆடி
சிறந்தஆ வணியா மிக்க
வைத்தஐப் பசியி னோடு
மன்னுகார்த் திகைய தாகும்
மத்தக விலாத தையும்
மாசியோ டெட்டு மாதம்
புத்தியான் மனையே கோலப்
புகழுடன் நன்மை யாமே.

(இ-ள்) சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி இந்தயெட்டு மாதமும் மனைகோல நன்றாம் எ-று.

மனைகோலவும் குடிபுகவும் ஆகா மாதங்கள்

278. கூனி யானி புரட்டாசி மார்கழி
ஊன மான ஒருநான்கு மாதமும்
மானி யாமன் மனைகுடி தான்புக்கில்
ஈன மாகி யிடர்செயும் நோய்களே.

(இ-ள்) பங்குனி, ஆனி, புரட்டாசி, மார்கழி இந்த நாலு மாதமும் மனை கோலவும், குடிபுகவும் ஆகாது. இதற்கு விரோதமாய் குடிபுகினும் அல்லது மனை கோலினும் பிணியுண்டாம் எ-று.

குடிபோகும் மாதபலன்

279. ஆடித் திங்களில் இராவணன் பட்டதாம்
ஆலித் தேபெரும் பாரம் மார்கழி
வீடித் தேபுரட் டாசி இரணியன்
வேதத் தோன்முடி அற்றது பங்குனி.

280. நாடித் தேதியில் நன்மனை போயிடில்
நாட்டில் மாந்தர்கள் நாசம் அடைகுவார்
ஓடித் தேசங் குடியேறிப் போனாலும்
ஓட்டிலே இரந்து உண்ணவும் ஆகுமே.

கிரகப் பிரவேசம்

ஆனி, ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி, பங்குனி, மாதங்களும், ஞாயிறு, செவ்வாய், வியாழன், அசுவினி, மிருகசீரிஷம், புனர்பூசம், அஸ்தம், தவிர மற்ற நட்சத்திரங்களும் விருச்சிகம், கும்பம், இருத்தையும் ஆகாவாம். அஷ்டம் சுத்தமுள்ள இலக்கினம் உத்தமம்.

இராவிழிப்பு ராசியாவன

மேஷம்	கர்க்கடகம்
ரிஷபம்	தனுசு
மிதுனம்	மகரம் ஆக ஆறு

முகடு வைக்க

281. இலிங்கத்தா பரங்கள் போல
இசைந்தமூ வரையுங் கீறி
விலங்குநால் வரையுங் கீறி
மேலது முகட்டு நாளங்
குலுங்குமா விறங்கு நாளிற்
கோபுர மாடக் கூடம்
துலங்குநன் மனைகள் கோலத்
துக்கமாய் இடிந்து போமே.

(இ-ள்) இலிங்கம்போல் நீண்ட வளையமாய் மூன்று வரை கீறி குறுக்கே நான்குவரைகீற இருபத்தேழு தானங் காணும். அடிவரையில் முதல் ஸ்தானத்தில் துவக்கி அசுவினி முதலாக எண்ணிவர,

அசுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி; மகம், பூரம், உத்திரம், அஸ்தம்; மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம் — 12ம் ஏறுநாட்களாம். திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம்; சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை; சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி — 12ம் இறங்கு நடசத்திரங்களாம். மிருகசீஷம், சித்திரை, அவிட்டம் — 3ம் முகட்டு நட்சத்திரங்களாம்.

ஏறுநாளில் மனைமாடக் கூடம், கோபுரம் கட்டலாம். முகட்டு நாளில் முகடு வைக்கலாம். இறங்கு நாளில் செய்யலாகாது. செய்யில் இடிந்து பாழாய்ப்போம் எ-று.

பிறந்த நாளும் வாரமும் கூடில் ஆகாநாள்

282. செங்கதிரோன் வாரநாள் பரணி கூடில்
செழுமதியிற் சித்திரைசேய் உத்தி ராடம்
பொங்குபுதன் அவிட்டம்பொன் வாரங் கேட்டை
புகற்பூராடம் காரிரே விதியிந் நாளில்
மங்கையரை மணம்புணரில் விதவை யாகும்
மனையெடுக்கின் பாழ்வழியிற் போகிற் சாவாம்
செங்கயற் கண்ணார் பூத்தால் மலடி யாவர்
சிறுகுழவி பெறின்மரிக்கும் திண்ணந் தானே.

(இ-ள்) ஞாயிறு — பரணியும் வியாழன் — கேட்டையும்
திங்கள் — சித்திரையும் வெள்ளி — பூராடமும்
செவ்வாய் — உத்திராடமும் சனி — ரேவதியும்
புதன் — அவிட்டமும்

கூடினநாள் ஆகாது. இந்நாட்களில்—விவாகஞ் செய்யில் கைம்பெண்ணாம்; மனை கோலில் பாழாம்; வழிப்போகில் மரணமாம்; ருதுவானால் மலடியாம்; பிள்ளை பிறக்கில் சாவாம் எ-று.

தனிப்பொருத்த முகூர்த்தம்

283. பிறந்தநாள் இரண்டு நான்கும்
ஒன்பதும் எட்டும் ஆறும்
சிறந்தசீ ருளவை மற்றுங்
கேடல்ல சம்பத் துண்டாம்
அறிந்தநூல் கற்றும் ஒன்றோர்
ஐந்துமூன் றேழு நீக்கிச்
சிறந்திட மொழிந்த தெல்லாம்
திண்ணமாய்ப் பொருந்துந் தானே.

(இ-ள்) சென்ம நாளுக்கு 2, 4, 6, 8, 9 இந்நாள்கள் நன்றாம். 1, 3, 5, 7 இந்நாள்கள் பொருந்தா. மற்றவை

பொருந்து மென்ப. இப்படி ஒன்பது ஒன்பதாக 27 நாட்களையும் பிரித்துக் கொள்வது என்றவாறு.

284. வட்டமும் கொடிய வாரம்
மந்தார மழையி னோடு
தொட்டிடும் கிராணம் பற்றல்
சூழ்ந்திடும் பொல்லா நாட்கள்
விட்டியும் வெள்ளிப் பாடும்
விடமுறுக் கடிகை தானும்
அட்டமி யுவா விருத்தை
ஆகாது நீக்கிக் கூட்டே.

(இ-ள்) சந்திரனையும் சூரியனையும் பரிவேடமிட்டிருத்தல் கொடியவாரம். மந்தாரம், மழைத்தூறல், கிரணந் தீண்டல், பொல்லாத நட்சத்திரங்கள், விட்டிகரணம், வெள்ளிப்பாடு விஷக்கடிகை — அஷ்டமி — உவா-இருத்தை இவையாகாதே என்று நீக்கி நல்ல நாட்களில் முகூர்த்தங் கொள்ளவும் எ-று.

285. காலற்றநாள் உடலற்றநாள் தலையற்ற நாளின்
மாலுக்கொரு மனைமாளிகை கோலினது பாழாம்
ஏலக்கருங் குழலாரிதில் ருதுவாகினும் மலடாம்
ஞாலத்தவர் வழிப்போயினும் நலமெய்திடார் அவமே.

(இ-ள்) காலற்றநாள் — கார்த்திகை, உத்திரம், உத்திராடம், உடலற்றநாள் — மிருகசீரிஷம், சித்திரை, அனுஷம், தலையற்றநாள் — புனர்பூசம், விசாகம், பூரட்டாதி இவ்வொன்பது நாட்களில் மனை கோலின் பாழாம். பெண் திரளில் மலடியாம். யாத்திரை செய்யில் நன்மையடையார் எ-று.

சுக்கிரன் பாடு

286. சுக்கிரன் எதிரே யாகில்
தொல்குடி சாவு கேடாம்
சுக்கிரன் வலக்கண் ஆகில்
தோற்றிய பொருளே சேதம்

சுக்கிரன் பின்னே யாகில்
சுகமுடன் வாழ்வ தாகும்
சுக்கிரன் இடக்கண் ஆகில்
துக்கமொன் றில்லை யென்னே.

(இ-ள்) வெள்ளி—எதிரும், வலக்கண்ணும் முடமு மாகாது; மனை கோலினும் குடிபுகினும் தீதாம். வெள்ளி பின்னும் இடக்கண்ணுமாகில் மிக உத்தமம் எ-று.

சுபகாரியங்கள் செய்யக் கூடாத நாட்கள்

287. மாதாந்தம் மூன்று நாளும்
வருடாந்தம் ஒருபத்து ஐந்தும்
தீதாந்த கிரணம் தீண்டும்
தினம்முன்பின் சேர்ந்த ஏழும்
காதாந்த கண்ணாய நாளில்
கடைஇரு கடிகை தானும்
வேதாந்தம் உணர்ந்தோர் தீதுஎன்று
உரைத்தனர் மிகவும் தானே.

யோகினி அறிய

288. யோக பூர்வ பிரதமைமுதல் அஷ்டமி
ஒன்பது ஆகாயம் பூமி தசமியாம்
ஆகும் பன்னொன்று பஞ்சமி யந்தமும்
அந்நெறி சஷ்டி முன்னுவர் ஈறதாம்
ஏகும் இப்படி முப்பது பககமும்
இடமுன் அந்தமாம் பூமிதென் கீழ்த்திசை
லோக யாத்திரை நன்மைக் கிவைகளும்
நோக்கும் பூசுக்கி ரன்மற்று நல்லதே.

(இ-ள்) கிழக்கு முதல் வலமாக எட்டுத் திக்கிலும் பூர்வ பட்சப் பிரதமை முதலாக அட்டமியளவும் திக்கு 8க்கும் நிற்கும்;. நவமி ஆகாயத்திலும் தசமி பூமியிலும், நிற்கும். முற்பக்க ஏகாதசி முதல் அமரபட்சத்துப் பஞ்சமி யிறுதியாக முன்போல நிற்கும். அமரபட்சத்து சஷ்டி முதலாக அமாவாசையிறுதியாக முன்போலவே நிற்கும். இப்படி முப்பது பக்கத்தையும் நிறுத்தி இதில் தென்கீழ்த்திசை நிற்கும் திதியும், ஆகாசம் பூமியில் நிற்கும் திதியும், எதிரும் இடமும் நிற்கும் 'திதியும் யாத்திரை முதலியவற்றிற்கும்' விலக்கப் பட்டன. அல்லாத பக்கங்களும் வலமும் பின்னும் பூமி சுக்கிரனும் மிகவும் நன்மையாம் எ-று.

மேற்கோள் யோகினி நிற்கும் நிலை

289. இந்திரன் கனகன் அக்கினி நிருதி
யெமன்நீர் வாயு ஈசானன்
முந்தும் ஆகாயம் புவியுடன் பத்து
முற்பிர தமைமுத லாக
வந்தபின் இந்த முறைப்ப டிஅமா
வாசை ஈறாந்திதி தன்னில்
உந்தும் யோகினியில் எதிரிடப் புவியில்
உருப்பன்று புறம்வலம் நன்றே.

(இ-ள்) பூர்வபட்சப் பிரதமை முதல்,

பிரதமை	— கிழக்கு	நவமி	— ஆகாசம்
துதியை	— வடக்கு	தசமி	— பாதாளம்
திருதியை	— அக்கினி (தென் கிழக்கு)	ஏகாதசி	— கிழக்கு
		துவாதசி	— வடக்கு
சதுர்த்தி	— நிருதி (தென் மேற்கு)	திரயோதசி	— அக்கினி
பஞ்சமி	— தெற்கு	சதுர்த்தசி	— நிருதி
சஷ்டி	— மேற்கு	பௌர்ணமி	— தெற்கு
சப்தமி	— வாயு (வட மேற்கு)		
அஷ்டமி	ஈசான்யம் (வட கிழக்கு)		

அமர் பட்சப் பிரதமை — மேற்கு

துதியை	— வாயு	நவமி	— நிருதி
திருதியை	— ஈசான்யம்	தசமி	— தெற்கு
சதுர்த்தி	— ஆகாயம்	ஏகாதசி	— மேற்கு
பஞ்சமி	— பாதாளம்	துவாதசி	— வாயு
சஷ்டி	— கிழக்கு	திரயோதசி	— ஈசானியம்
சப்தமி	— வடக்கு	சதுர்த்தசி	— ஆகாயம்
அஷ்டமி	— அக்கினி	அமாவாசை	— பாதளம் — நிற்கும்

இந்த யோகினி முன்னும் இடமும் யாத்திரை முதலான வற்றிற்கும் தீயது பின்னும் வலமும் நல்லது எ-று.

கன்னிகா சக்கரம்

சிவதாரத்தில் இலட்சுமி பயிரதம் இந்தக் கிரகம் கன்னி காக் காலச்சக்கரத்து மூன்று லிங்கம் கணக்கு எழுதி அதற்குக் குறுக்கே ரேகை நாலுகீறி அடிவரையில் அசுவினி நட்சத்திர முதல் 27 நட்சத்திரங்களையும் மூன்று இலக்கத்துக்கும் எழுதவும்.

> இந்தச் சக்கரத்தை எண்ணிப் பார்க்க ஊர்த்தமுகம்; அந்தக் குறுக்கு ரேகையில் சூரியன் இருந்தால் அக்கினி பயம்; அங்காரகன் இருந்தால் மிருத்யு பயம்; புதன் இருந்தால் ரோகப்பிரதம்; பிரகஸ்பதி இருந்தால் தானிய ஆனி; சுக்கிரன் இருந்தால் கலகம்; சனி இருந்தால் சோரபயம்; இராகு இருந்தால் தேகபீடை; கேது இருந்தால் சவம்.

இந்தக் கிரகம் கன்னிகாச் சக்கரத்தை எண்ணிக் கொண்டு வருகிற நட்சத்திரத்தால் ஊர்த்த முகமாயிருக்கிற நட்சத்திரத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்தால் உத்தமம்.

இறங்கி வருகிற நட்சத்திரம் அதோ முகமாய் இருக்கிற நட்சத்திரத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யலாகாது.

ரோகணி, பூசம், திருவாதிரை, திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இந்த ஒன்பதும் ஊர்த்த முக நட்சத்திரங்கள்

ஆகையால் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யலாம்.

பசு, ஆடு, மாடு, குதிரை இவைகள் வாங்கலாம்.

ரேவதி, அஸ்தம், புனர்பூசம், சித்திரை, சுவாதி, அசுவினி, மிருக சீரிஷம், அனுஷம், கேட்டை இந்த நட்சத்திரம் ஒன்பது சுவர் வைக்கவும், யானை, குதிரை, ஆடு, மாடு இவை வாங்கவும் உத்தமம்.

அதோமுக நட்சத்திரத்தில் கிணறு, குளம், ஏரி இவை எடுக்கலாம்.

விசாகம், மூலம் ஆயிலியம், கார்த்திகை, பூரம், பூராடம், பூரட்டாதி, மகம், பரணி இந்த ஒன்பது நட்சத்திரங்களும் அதோமுகம் ஆனதால் அகழி, சுரங்கம், கணக்கு, அப்பியாசம், களஞ்சியம் இவைகள் செய்யலாம்; தனம் புதைக்கலாம்; சங்கு ஸ்தாபனம் பண்ணலாம்.

ஸ்தம்பப் பிரதிஷ்டை பண்ண முதற்சாமம் உத்தமம். இரண்டாம் சாமம் சந்தோஷம். மூன்றாம் சாமம் அதமம். நாலாம் சாமம், சந்தியா காலம், இராக்காலங் கஸிலும் கூடாது.

290. நாட்டுப் புகழ்சேர் மனையதற்கு
நலங்கொள் எட்டுஎட்டு அறைசெய்து
மீட்டு நடுவில் நாலறையும்
விரிஞ்சன் மூலை நாலும்பேய்
ஈட்டுத் திசைகள் ஒருநான்கும்
இருநான்கு அறையும் இறையவராம்
கோட்டு நாற்பத்து எட்டு அறையும்
குணமாய்க் கொள்வாய் கொம்பனையே

ஒரு மனையில் அறுபத்து நான்கு பாகத்துக்கு
உட்பட்டு வீடுகட்டுவதற்கு இலட்சணம்

291. அகந்தனை எல்லை நான்கும்
அன்புடன் ஆய்ந்து கொண்டு
திகழ்தரும் ஆறு பத்து
நாலுடன் பாகம் செய்து
பகரவே பிரம ஸ்தானம்
மத்தியில் நான்கு பாகம்
சுகம்உயர் திக்கு நான்கும் (துமிகர)
உருத்திர பாகம் தானே.

(இ-ள்) மனையை நான்கு பக்கமாக அளந்து கொண்டு அதை அறுபத்து நான்கு பங்கு ஆக்கி மத்தியில் நான்கு பங்கு பிரமஸ்தானம்; நான்கு திக்கும் உருத்திரபாகம் எ-று.

292. மற்றதோர் திக்கு நான்கு
வகையது சொல்லக் கேளாய்
வித்தகன் ஆன விஷ்ணு
பாகமாம் விளம்பக் கேளு
சித்மாம் குறைகள் எல்லாம்
தேவதை பாகம் என்றும்
சுத்தமாம் தமிழை ஓதும்
சுகமயன் சொன்ன வாறே.

(இ-ள்) திக்குகள் நான்கும் விஷ்ணுபாகம். மற்றவை எல்லாம் தேவர்களது பாகம் என்று மயனென்பவர் சகலருக்கும் தெளிவாகச் சொல்லிய வாக்கியம் எ-று.

293. அண்டத்துக்கு ஒத்த நேர்மை
அருளிய பிண்டம் ஆகும்
பிண்டத்துக்கு ஒத்த நேர்மை
பெருகிய கிரகம் ஆகும்
கொண்டநேத் திரமும் நாசி
கூறிய கரம்கா லோடு
விண்டுயர் உந்தி சென்னி
மேவியது வாரம் ஆமே.

(இ-ள்) அண்டத்துக் கொத்தபடி பிண்டம். பிண்டத்துக் கொத்தபடி வீடு. கர, சரண ஆதிகளோடும் கூடி விளங்கிய கிரகம் வாரம் ஆகும் எ-று.

294. இந்தநல் விதமாய்ச் செய்தால்
இயல்புடன் வயது நூறாம்
செந்திரு என்னும் மாது
திகழ்பிர காசம் ஆவள்
சந்ததி கன்று காலி
தக்கதோர் செம்பொன் சேரும்
சுந்தரப் புகழ்உண்டு என்று
சோதித்து மயன்சொன் னாரே.

(இ-ள்) இந்தப் பிரகாரம் வீடு கட்டினால் அதற்கு வயது நூறு. கன்றுகாலிகள், கறவைப்பசுக்கள் இவை நாளுக்கு நாள் விருத்தியாகும். மேலும் தாமரையில் வீற்றிருக்கும் இலட்சுமியானவள் சேர்ந்து ஆனந்தத் தாண்டவம் புரிந்து கொண்டிருப்பாள் எ-று.

வெண்பா

295. மதிஉதிக்கக் கால்நாட்டி மாலுதிக்கக் கைவைத்து
மதி வெள்ளி தானுதிக்க மேய்ந்து—கதிர்பெறவே
மந்திரியார் தானுதிக்க மாடம் புகுவீரேல்
இந்திரன்போல் வாழ்வீர் இசைந்து

(இ-ள்) சந்திரன் உதிக்க ஸ்தம்பம் முதலியவை நாட்டி, புதன் உதிக்கப் பறப்பு பூட்டி, வெள்ளியுதிக்கத் தளம் அல்லது ஓடு இசைத்து, வியாழம் உதிக்கக் கிரகப்பிரவேசம் செய்தால் தெய்வசம்பத்துடன் வாழ்வார்கள் எ-று.

16. The State of Arukkan

(Time and direction, on which Arukkan used to stand)

	Day		Time	Direction	Birth
1	Saturday	—	Night 30 nalikai	South	Lion
	Sunday	—	Day ”		
2.	Sunday	—	Night 30 nalikai	South	Dog
	Monday	—	Day, Night, 60 Nalikai	West	
3.	Tuesday	—	Day 30 Nalikai	West	Snake
	”	—	Dusk 10 ”		
4.	Tuesday	—	Night 20 Nalikai	North	Rat
	Wednesday	—	Day 30 Nalikai	West	
5.	Wednesday	—	Night 30 Nalikai		
	Thursday	—	Day 30 ”	North	Elephant
		—	Dusk 10 ”		
6.	Thursday	—	Night 20 ”		
	Friday	—	Day, Night 60 Nalikai	North	Hare
				North	
7.	Saturday	—	Day 30 ”	East	Eagle
				South	
8.	Pal			South	
				East	Cat

By considering the above said timing, where the state of arukkan could be studied and along with its inimical state, one should decide the starting of good deeds.

It is further explained as follows:

1. If one starts new actions on the night of the saturday and the day of sunday, since the direction of this day and the birth being south and lion respectively, and its opposite direction and inimical birth being north, elephant, wnich could be attacked by lion, and so one can proceed. Since other directions also are not inimical one can also proceed in other directions.

2. If the deed is started in the night of the sunday and in the day, in the night of monday — Since the direction and the birth of it being south west and dog respectively, since its opposite direction and the inimical birth being north east and hare; and since hare can be taken by dog, in the south west direction one could proceed. The births of other direction are not inimical and in that directions also one could proceed.

3. If it is decided to start any deed in the day and night of Tuesday (10 Nalikai) its direction and birth being East and Eagle — and its opposite direction and birth — west and snake — Hence it should not be good to proceed towards East, and but towards other direction one can proceed.

4. If it is decided to do any good deed in the night of Tuesday (20 Nalikai) the day of Wednesday (30 Nalikai)

its direction and birth — North west, Rat
its opposite and birth — South East, Cat

Since rat is inimical to cat, one should not proceed towards nothwest. But in the other directions one could proceed.

5. If it is decided to start new action in the night (30 Nalikai) of Wednesday, in the day and in the night (10 Nalikai) of Thursday

its direction and birth — North and Elephant
its opp. direc. and birth — South and Lion

Hence in this direction one should not proceed and in other directions one could proceed.

6. If it is decided to start new action in the day in the night of Friday,

its direction — North East; birth — hare
its opp. direc. — South west; birth — dog

Since, it is the nature of dog to live on hare, which is inimical, one should avoid going in this direction, but one could choose other directions.

7. If it is decided to start new action in the day of saturday (30 Nalikai)

its direction — East; birth — Eagle
its opp. direc. — West; birth — snake

since the birth of the opp. direction, snake could be taken by eagle, hence, could proceed in this direction. Also there are no hurdles in other directions.

8. Like wise from the direction of cat, (ie) from South East, one could proceed to the direction of rat, (ie) North west, since rat may be killed by cat. Others directions can also be considered.

1. Besides these, the incompitable racis for marriage and other good deeds are shown here in isolation.
2. Numbers related to one's raci chart are given.
3. Suitable days for good deeds are tabulated here.

Unsuitable days (fear of making mistakes)

rising crescendo in Caturdai 5th part of the day west
" in Astami 2nd part of the day South East
" in Ekadesi 7th part of the day North
" in puranci 4th part of the day South west
Falling crescendo in Tirutiai 9th part of the day North west
" in Capatami 3rd part of the day South
" in Tacami 8th part of the day North
" in Caturtaci 1st part of the day East

Since these times are unfavourable, these times should be avoided..

Five planets

1. 7th, 10th, 15th, 21th stars from the star where Sun resides.
2. 7th, 10th, 15th, 21th stars from the star where Mars resides.
3. 8th, 18th, 24th stars from the star where Mercury resides.
4. 7th, 9th star from the star where Jupiter resides.
5. 7th, 9th star from the star where Venus resides.
6. 5th, 6th, 10th, 11th, 20th star from the star where Saturn resides.

7. 7th star from the star Raugh and kethu resides.

In these stars good deed ought not be performed.

Kari Nāl (Heavy Days)

The appearance these (kari Natkal) days for 12 months are given here.

Times ought to be avoided

Avoid 1 hr. 30 minutes after 6.48 on Sunday Evening.
Avoid 1 hr. 30 minutes after 10.48 on Monday Night.
Avoid 1 hr. 30 minutes after 6.24 on Tuesday Evening.
Avoid 1 hr. 30 minutes after 10.48 on Wednesday Night.
Avoid 1 hr. 30 minutes after 6.24 on Thursday Evening.
Avoid 1 hr. 30 minutes after 2.24 on Friday Afternoon.
Avoid 1 hr. 30 minutes after 11.36 on Saturday Forenoon.

The Period of Kulikai

Days	Mukurtam	Nalikai	Time
Sunday	7th	22½ — 26¼	Evening 3.00 — 4.00
Monday	6th	18¾ — 22½	Afternoon 1.30 — 3.00
Tuesday	5th	15 — 18¾	Forenoon 12.00 Afternoon 1.30
Wednesday	4th	11¼ — 15	Forenoon 10.30 — 12.00
Thursday	3rd	7½ — 11¼	Forenoon 9.00 — 10.30
Friday	2nd	3¾ — 7½	Forenoon 7.30 — 9.00
Saturday	1st	Mor. 3¾	Forenoon 6.00 — 7.30

The period of Night Kulikai

Days	Mukurtam	Nāḷi	Time
Sunday	3rd	7½ — 11¼	Night 9.00 — 10.30
Monday	2nd	3¾ — 7½	Night 7.30 — 9.00
Tuesday	1st	0 — 3¾	Dusk 6.00 — 7.30
Wednesday	7th	22½ — 26¼	Dawn 3.00 — 4.30
Thursday	6th	18¾ — 22½	Night 1.30 — 3.00
Friday	5th	15 — 18¾	Mid-night 12.00 — 1.30
Saturday	4th	11¼ — 15	Mid-night 10.30 — 12.00

In these kulikai periods, many good things like laying foundations, laying pillars, house warming, journey can be performed.

16. அருக்கன் நிலை

(சுவடிச் செய்திகளின் சுருக்கம்)

அருக்கன் நிற்கும் நேரமும் திசையும்

நாள், நேரம்	திசை	பிறப்பு (யோனி நிலை)
1. சனி — இரவு 30 நாழிகை ஞாயிறு — பகல் 30 நாழிகை ...	தெற்கு	சிங்கம்
2. ஞாயிறு — இரவு 30 நாழிகை திங்கள் — பகல், இரவு 60 நாழிகை ...	தென்மேற்கு	நாய்
3. செவ்வாய் — பகல் 30 நாழிகை செவ்வாய் முன் இரவு 10 நாழிகை ...	மேற்கு	பாம்பு
4. செவ்வாய் — இரவு மிகுதி 20 நாழிகை புதன் — பகல் 30 நாழிகை ...	வடமேற்கு	எலி
5. புதன் — இரவு 30 நாழிகை வியாழன் — பகல் 30 நாழிகை வியாழன் — முன் இரவு 10 நாழிகை ...	வடக்கு	யானை
6. வியாழன் — இரவு மிகுதி 20 நாழிகை வெள்ளி — பகல், இரவு 60 நாழிகை ...	வடகிழக்கு	முயல்
7. சனி — பகல் 30 நாழிகை ...	கிழக்கு	கருடன்
8. பாழ் ...	தென்கிழக்கு	பூனை

மனைகோலல், கால்நாட்டல், கூரைவேய்தல், குடிபுகுதல் போல் வனவாகிய நல்ல செயல்களுக்கும், பிரயாணம் செய்தல் போன்ற பிற செயல்களுக்கும் மேற்கூறிய அருக்கன் நிற்கும் நிலை, நாள், நேரம், திசை முதலியன அறிந்து அதற்கு எதிர் திசையில் நிற்கும் பகைப் பொருளின் வன்மை, மென்மை அறிந்து அவற்றிற்கு ஏற்ப அச்செயலைத் தொடங்குதலோ விடுதலோ செய்ய வேண்டும்.

இச்செயலுக்கான முழு விளக்கம்

1. சனி இரவு, ஞாயிறு பகல் — இக்காலங்களில் ஒரு செயலைத் தொடங்கினால்,

இந்நாட்களுக்குரிய திசை தெற்கு—பிறப்பு—சிங்கம். எதிர்திசை வடக்கு. அதற்குரிய பிறப்பு—யானை. இவற்றில் யானை இரையாகும் மிருகமாதலின் சிங்கம் யானையை நோக்கிச் செல்லலாம். எனவே இந்நாட்களில் நல்ல செயல்களுக்காகத் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லலாம். பிற திசைகளிலும் சிங்கத்திற்குப் பகை இல்லை. ஆதலின் பிறதிசைகளை நோக்கியும் செல்லலாம்.

2. ஞாயிறு இரவு, திங்கள் பகல், இரவு இக்காலங்களில் செல்ல விரும்பினால்—

இந்நாட்களுக்குரிய திசை—தென்மேற்கு—பிறப்பு—நாய். எதிர்திசை—வடகிழக்கு—அத்திசைக்குரிய பிறப்பு முயல். இவற்றிலும் முயல் இரையாகும் மிருகம் ஆதலின் இந்நாட்களில் வடகிழக்கு நோக்கிச் செல்லலாம். பிற திசைகளிலும் நாய்க்கு எதிர் பகை எதுவும் இல்லை. அத்திசைகளிலும் செல்லலாம்.

3. செவ்வாய் பகல் முதல், இரவு 10 நாழிவரை ஆகிய காலத்தில் தொடங்கினால்—

எதிர்திசை—கிழக்கு—பிறப்பு—கருடன். இவற்றில், கருடன் இரை எடுக்கும் பிறப்பு ஆதலின் செவ்வாய்க் கிழமைக்குரிய மேற்கிலிருந்து (பாம்புத் திசையிலிருந்து) கருட திசையாகிய கிழக்கு நோக்கிச் செல்லலாகாது. பிறதிசைகளில் செல்லலாம்.

4. செவ்வாய் இரவு மிகுதி 20 நாழிகை, புதன் பகல் 30 நாழிகை ஆகிய இந்தக்காலத்தில் ஒரு செயலைத் தொடங்குவதானால்—

இக்காலத்திற்கு உரிய திசை—வடமேற்கு—பிறப்பு—எலி எதிர் திசை—தென்கிழக்கு—பிறப்பு—பூனை.

இவற்றில் எதிர் திசையிலுள்ள பூனை இரை எடுக்கும் பிறப்பு ஆதலின் செவ்வாய், புதன் ஆகிய மேற்குறித்த நாட்களுக்குரிய வடமேற்குத் திசையிலிருந்து (எலித்திசையிலிருந்து) பூனைத்திசையாகிய தென்கிழக்கு நோக்கிச் செல்லுதல் கூடாது. பிறதிசைகளில் செல்லலாம்.

5. புதன் இரவு 30 நாழிகை—வியாழன் பகல் முதல், முன் இரவு 10 நாழிகை ஆகிய இந்தக் காலத்தில் ஒரு செயலைத் தொடங்குவதானால்—

இக்காலத்திற்குரிய திசை — வடக்கு — பிறப்பு — யானை
எதிர்திசை — தெற்கு — பிறப்பு — சிங்கம்

இவற்றிலும் எதிர் திசையிலுள்ள சிங்கம் இரை எடுக்கும் பிறப்பு ஆதலின் புதன் இரவு, வியாழன் பகல், இரவு 10 நாழிகை வரையுள்ள காலத்தில் அதற்குரிய திசையாகிய வடக்குத் திசையிலிருந்து சிங்கத் திசையாகிய தெற்கு நோக்கிச் செல்லலாகாது. பிறதிசைகளில் செல்லலாம்.

6. வியாழன் இரவு பின் 20 நாழிகை, வெள்ளி பகல், இரவு ஆகிய காலத்தில் ஒரு நல்ல செயலைச் செய்யத் தொடங்குவதானால்,

இக்காலத்திற்குரிய திசை — வடகிழக்கு — பிறப்பு — முயல்
எதிர்திசை — தென்மேற்கு — பிறப்பு — நாய்

இவற்றிலும் எதிர் திசையிலுள்ள நாய் இரை எடுக்கும் பிறப்பு ஆதலின் மேற்கண்ட வியாழன், வெள்ளி நாட்களுக்குரிய வடகிழக்குத்திசையிலிருந்து நாய்த்திசையாகிய தென்மேற்குத் திசைக்குச் செல்லக்கூடாது. பிற திசைகளில் செல்லலாம்.

7. சனி — பகல் 30 நாழிகை ஆகிய காலத்தில் ஒரு செயலைத் தொடங்குவதானால் —

இக்காலத்திற்குரிய திசை — கிழக்கு — பிறப்பு — கருடன்
எதிர்திசை — மேற்கு — பிறப்பு — பாம்பு

இவற்றில் எதிர்திசையிலுள்ள பாம்பு இரையாகும் பிறப்பு ஆதலின் சனிக்கிழமை கிழக்குத்திசையிலிருந்து பாம்புத் திசையாகிய மேற்கு நோக்கிச் செல்லலாம். பிற திசைகளுக்கும் தடை இல்லை.

8. பூனைத்திசையாகிய தென் கிழக்குத் திசையிலிருந்து எலித்திசையாகிய வடமேற்கு நோக்கி எப்போதும் செல்லலாம். பிற திசைகளுக்குச் செல்லவும் தடை இல்லை.

மேலும் இப்பகுதியில்,

1. திருமணம் முதலிய நல்ல செயல்களுக்கு ஆகாத இராசிகள் மட்டும் தனியே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

2. இதே போல நல்ல செயல்களுக்கு உரிய தலைவனின் இராசிச் சக்கரத்தில் எந்த இடம் சுத்தமாய் இருக்க வேண்டும் என்ற எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

3. எந்த எந்த நாட்கள், எந்த எந்த செயலுக்கு ஏற்றவை என்பதும் அட்டவணை இட்டுக் காட்டப்பட்டுள்ளது.

குற்றமுடைய நாட்கள்

வளர் பிறை	சதுர்த்தசியில்	ஐந்தாம் சாமம்	மேற்கு
,,	அஷ்டமியில்	இரண்டாவது சாமம்	தென்கிழக்கு
,,	ஏகாதசியில்	ஏழாம் சாமம்	வடக்கு
,,	பூரணையில்	நான்காம் சாமம்	தென்மேற்கு
தேய் பிறை	திருதியையில்	ஒன்பதாம் சாமம்	வடமேற்கு
,,	சப்தமியில்	மூன்றாம் சாமம்	தெற்கு
,,	தசமியில்	எட்டாம் சாமம்	வடக்கு
,,	சதுர்த்தசியில்	முதற் சாமம்	கிழக்கு

ஆகிய நேரங்கள் குற்றம் (தோஷம்) உடையனவாகும். எனவே இந்த நேரங்களில் நல்செயல்கள் செய்வதைத் தவிர்க்க வேண்டும். இந்தத் திசைகளில் பயணம் செய்வதையும் இந்த நேரங்களில் தவிர்க்க வேண்டும்.

பஞ்ச கோள்கள்

1. சூரியன் நின்ற நட்சத்திரத்திற்கு 7, 10, 15 21 ஆகிய நட்சத்திரங்கள்
2. செவ்வாய் நின்ற நட்சத்திரத்திற்கு 7, 10, 15, 21 ,,
3. புதன் நின்ற நட்சத்திரத்திற்கு 8, 18, 24 ,,
4. வியாழன் நின்ற நட்சத்திரத்திற்கு 7, 9 ,,
5. வெள்ளி நின்ற நட்சத்திரத்திற்கு 7, 9 ,,
6. சனி நின்ற நட்சத்திரத்திற்கு 5, 6, 10, 11, 20 ஆகிய நட்சத்திரங்கள்
7. இராகு, கேது ஆகியவற்றிற்கு ஏழாம் நட்சத்திரம் ஆகியவற்றில் நல்ல செயல்கள் எவற்றையும் செய்யக்கூடாது.

கரிநாள்

பன்னிரண்டு மாதங்களிலும் கரிநாட்கள் வரும் தேதிகள் உள்ளே முறைப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

கட்டாயம் நீக்கவேண்டிய நேரங்கள்

ஞாயிறு மாலை மணி 6.48க்கு மேல் 1 மணி 30 நிமிடம் நீக்கவும்

திங்கள் இரவு மணி 10.48க்கு மேல் 1 மணி 30 நிமிடம் நீக்கவும்

செவ்வாய் மாலை மணி 6.24க்கு மேல் 1 மணி 30 நிமிடம் நீக்கவும்

புதன் இரவு மணி 10.48க்கு மேல் 1 மணி 30 நிமிடம் நீக்கவும்

வியாழன் மாலை மணி 6.24க்கு மேல் 1 மணி 30 நிமிடம் நீக்கவும்

வெள்ளி பிற்பகல் மணி 2.24க்கு மேல் 1 மணி 30 நிமிடம் நீக்கவும்

சனி பகல் மணி 11.36க்கு மேல் 1 மணி 30 நிமிடம் நீக்கவும்

குளிகை காலம்

பகல் குளிகை

கிழமை	முகூர்த்தம்	நாழி	மணி	
ஞாயிறு	7 ஆவது	22½-26¼	மாலை	3.00- 4.30
திங்கள்	6 ஆவது	18¾-22½	பிற்பகல்	1.30- 3.00
செவ்வாய்	5 ஆவது	15-18¾	பகல்	12.00- 1.30
புதன்	4 ஆவது	11¼-15	முற்பகல்	10.30-12.00
வியாழன்	3 ஆவது	7½-11¼	காலை	9.00-10.30
வெள்ளி	2 ஆவது	3¾-7½	காலை	7.30- 9.00
சனி	1 ஆவது	காலை-3¾	காலை	6.00- 7.30

இரவு குளிகை

கிழமை	முகூர்த்தம்	நாழி	மணி	
ஞாயிறு	3 ஆவது	7½-11¼	இரவு	9.00-10.30
திங்கள்	2 ஆவது	3¾-7½	இரவு	7.30-9.00
செவ்வாய்	1 ஆவது	0-3¾	பின்மாலை	6.00-7.30
புதன்	7 ஆவது	22½-26¼	விடியல்	3.00-4.30
வியாழன்	6 ஆவது	18¾-22½	இரவு	1.30-3.00
வெள்ளி	5 ஆவது	15-18¾	நள்ளிரவு	12.00-1.30
சனி	4 ஆவது	11¼-15	நள்ளிரவு	10.30-12.00

இக்குளிகை கால நேரங்களில் மனை கோலுதல் கால் நாட்டுதல், குடிபுகுதல், பயணம் தொடங்குதல் போன்ற எல்லா வகையான நல்ல செயல்களையும் மேற்கொள்ள நன்மை உண்டாகும்.

அருக்கன் நிலை

(சுவடிச் செய்திகள்)

296. அருக்கன்நிலை யில்கருடன் ஆனதொரு பூனை
நெருக்கியநல் சிங்கமொடு நின்றிலகு நேர்நாய்
தருக்கமுடன் நாகம்எலி யானைமுயல் எட்டும்
இருக்குமுதல் இந்திரன்நே ராம்பகை எதிர்த்தே.

297. மன்னுமுதல் சதுர்த்தசியின் ஐந்தாம் சாமம்
மருவியஅட் டமிஇரண்டு பதினொன்று ஏழாம்
முன்னிலுவா நாற்சாமம் பின்பக் கத்தின்
மூன்றிலிரு மூன்றேழில் மூன்றாஞ் சாமம்
பன்னியபின் பத்தினிலே எட்டாஞ் சாமம்
பதினான்கின் முதல்சாமம் பகர்ந்த விஷ்டி
இன்னதனை யச்சாமம் என்றீம் மற்றை
இரவிமுதல் திசைகள்தீது என்னு மாமே.

கரிநாள் வரும் தேதிகள்

298. இன்பமுறு மேடமதில் ஆறுபதி னைந்தாம்
ஏறதனில் ஆறுபதி னாறுபதி னேழாம்
அன்புமிகும் ஆனிஒன்றும் ஆறலவன் இரண்டோடு
ஐயிரண்டும் ஐந்நான்கும் ஆவணி யிரண்டும்
ஒன்பதெழு நான்குங்கன்னி யுற்றபதி னாறு
ஒன்றொழிமுப் பான்துலையில் ஒராறுஇரு
பான்தேளில்
முன்சோம வாரமொன்று பத்துபதி னேழாம்
முனியாறும் ஒன்பதும்பதி னொன்றுமுத
வாநாள்.

299. உதவாத நாள்கலையின் ஒன்றிரண்டு மூன்றும்
ஒருபதுடன் ஒன்றுபதி னேழதுவு மாகா
துதிபெருகு மாசிபதி னைந்துபதி னாறும்
சொல்லுபதி னேழுகடை மாதமதி லாறும்
பதினைந்தும் ஒன்றொழிஐந் நான்குமிகு தீதாம்
பகர்ந்தமா தந்தோறுந் தெய்தியெனக் கொண்டு
சதிதருநற் பொதியவரை முனிவனுரைத் திட்ட
கரிநாள்முப் பாநான்குங் கண்டறிகு வீரே.

வாரத் தியாச்சியம்

300. ஞாயிறு நாலெட்டாம் நல்திங்கள் ஏழாறாம்
தீயசெவ்வாய்ப் பொன்முப்பத் தொன்றாகும்—
ஏயபுதன்
நாற்பத் திரண்டாகும் நல்லவெள்ளி மூவேழாம்
காற்சனியீர் ஏழுவிஷங் காண்.

இராகுகாலக்கவி

301. அரியிரு பத்தா றேகால் அம்புலி மூன்றே முக்கால்
எரிவண்ணன் இருப தோடு இரண்டரை புதன்மூ
வைந்து
குருபதி னெட்டே முக்கால் குளிர்வெள்ளி
பதினொன்றே முக்கால்
கரியன் ஏழரை யிராகு காலமென் றறிந்து
கொள்ளே.

பகற் குளிகன்

302. ஞாயிறு முகூர்த்தம் ஏழாம் நன்மதிக் காறாம்
செவ்வாய்க்கு
ஏயஐந் தாகும் புந்திக் கீரிரண் டாம்பொன்
மூன்றாம்
தூயநல் புகர்க்கி ரண்டாம் சன்னினுக் கொன்ற
தாகும்
ஆயஇம் முகூர்த்தத் தோடே அற்றிடுங் குளிகம்
எல்லில்.

இராக் குளிகன்

303. கதிரவன் தனக்கு மூன்றாம் கவின்மதிக் கிரண்ட
தாகும்
சதிபெறு செவ்வாய்க் கொன்றாம் சாற்றிய புதற்கு
ஏழாம்
மதிவளர் பொன்னுக் காறாம் மன்புகர்க் கைந்தாம்
நான்கு
கதிர்மகற் காம்மு கூர்த்தம் காட்டிய பகல்போல்
கொள்ளே.

பார்வையின் அளவு

304. சேரும் முதலா மேழிடங்கள் முழுநோக்
கொன்பான் எட்டுமரை
பாரீர் ஐந்தோ அரைநோக்காம் பத்தும் நான்குங்
கால்நோக்காம்

ஆறு மூன்றும் பதினொன்றும் அரைக்கால்
நோக்காம் ஆறுடனே
நாரி யிரண்டும் பன்னிரண்டும் நாட்ட மில்லை
நலகோட்கே.

மடசுத்தம்

குடிபுக	12	முடி சூட்ட	11
அன்னப் பிராசனத்துக்கு	10	மயிர் கழிக்க	9
உபநயனத்துக்கு	8	விவாகத்துக்கு	7
கோடியுடுக்க	6	யாத்திரைக்கு	5
வித்தியாரம்பத்துக்கு	4	பொன் பூண	2

நிஷேகத்துக்கு இலக்கினம் சுத்தமாக இருக்க வேண்டும்

வாரபலன்

சுக்கிரவாரம், சோமவாரம்	— சுபகரம்
புதன், வியாழன்	— தனப்பிரதம்
சனி வாரம்	— சோரபயம்

இராசி	விசேஷம்	ஆகாத இராசிகள்	
விவாகத்துக்கு	மேஷம்	வீடுகட்ட	துலாம்
திதி கொடுக்க	ரிஷபம்	உழவுக்கு	விருச்சிகம்
யாத்திரைக்கு	மிதுனம்	கிணறு வெட்ட	தனுசு
மரம் வைக்க	கர்க்கடகம்	கப்பல் யாத்திரைக்கு	மகரம்
குருவைக்காண	சிங்கம்	மயிர் கழிக்க	கும்பம்
புணர்ச்சிக்கு	கன்னி	வித்தியாரம்பத்துக்கு	மீனம்

இவை ஆகாது.

வார விசேஷம்

ஞாயிறு	— உத்தியோகம் செய்ய
திங்கள்	— விதை விதைக்க
செவ்வாய்	— போர் செய்ய
புதன்	— வித்தியாரம்பஞ் செய்ய
வியாழன்	— விவாஹஞ் செய்ய
வெள்ளி	— மயிர் கழிக்க
சனி	— தவஞ் செய்ய — உத்தமம்.

17. The Methods of Predictions (Aruda Muraikal)

In this part, the ways to give perdictions for the owner of the land and house. If the owner does not possess the horoscope, his respective star could be identified with the help of the first letter of his name and predictions can be had accordingly. Like wise, favourable days and raci to lay pillars are given. The measurement of walls are given, which can also be changed for new adoptions.

The Method of forming rooms and other places in the house

The rooms in the house

1. North — (kubera direction — profit) — store room
2. North East — (Cāniyam) — kitchen, pooja hall
3. East — (Intira direction) — bath room
4. South East — (Akni corner) — kitchen, rooms to have money
5. South — (Imya direction) — bed room
6. South West — (Niruti corner) — study room
7. West — (Varuna direction) — dining room
8. North West — (Vayu direction) — grains room

Outside the house

1. In North — cow shed
2. In North East — materials related kitchen
3. In East — dustbin goat shed, bath room
4. South East — cow shed
5. In South — dust-bin
6. South East — Garden, hay shed
7. West — baffulo shed
8. North west — grain shed.

The flow of water

The out let, drainage from the house should be in the direction of East, North or North East. The water should not be stagnated. The water from the next house should not enter into our house.

17. ஆரூட முறைகள்

(சுவடிச் செய்திகளின் சுருக்கம்)

ஆரூட முறையில் பலன்கள் அறியும் வழிகள் பல இப்பகுதியில் இடம் பெறுகின்றன. மனைக்குரிய தலைவரின் பிறந்த நட்சத்திரம் தெரியாதபோது நட்சத்திரம்' என்னும் பகுதியில் அட்டவணையிட்டுக் காட்டியுள்ளவாறு தலைவர் பெயரின் முதல் எழுத்துக்கேற்ற நட்சத்திரத்தை அறிந்து பலன்களைக் காணலாம். அவ்வாறு பலன் அறியும் முறை இப்பகுதியில் இடம் பெறுகிறது.

அதேபோல் தூண் நிறுத்துவதற்கான நாட்களும் இராசிகளும் கொடுக்கப் பெற்றுள்ளன. சுவர் வைக்கும் கன அளவு பழைய முறைப்படி அமைகிறது. புதிய முறைக்கு மாற்றிக் கொள்ளலாம்.

மனையில் அறைகளும் பிற இடங்களும் அமைய வேண்டிய முறை

வீட்டின் அறைகள்

1. வடக்கு (குபேர திசை) — தன, தானிய அறை
2. வடகிழக்கு (ஈசானியம்) — சமையற் பொருள் அறை, பூசை அறை
3. கிழக்கு (இந்திரதிசை) — குளிக்கும் அறை.
4. தென்கிழக்கு (அக்கினி மூலை) — சமையல் அறை; பணப் பெட்டி வைக்கும் அறை
5. தெற்கு (யமதிசை) — படுக்கையறை
6. தென்மேற்கு (நிருதி மூலை)— நூல்கள் வைக்கும் அறை
7. மேற்கு (வருணதிசை) — உணவு உண்ணுமிடம்
8. வடமேற்கு (வாயுதிசை) — தானியக் களஞ்சியம்

என இவ்வாறு அமைப்பது உத்தமம்.

வீட்டின் வெளியே

1. வடக்கில் — பசுத் தொழுவம்
2. வடகிழக்கில் — அடுக்களை தொடர்பானவை
3. கிழக்கில் — குப்பைக்குழி, ஆட்டுக்கொட்டில், குளிக்கும் அறை

4. தென்கிழக்கில் — பசுத்தொழுவம்
5. தெற்கில் — குப்பைக்குழி
6. தென்மேற்கில் — வைக்கோல்போர், தோப்பு
7. மேற்கு — எருமைத் தொழுவம்
8. வடமேற்கு — தானியக்களஞ்சியம் கட்டலாம். (தனியே) பசுத் தொழுவம்

ஆகியவை அமைக்க வேண்டும்.

தண்ணீர்ப் போக்கு

வீட்டுத் தண்ணீர் கிழக்குத்திசை, வடக்கு அல்லது வட கிழக்குத் திசைகளில் போகுமாறு வாய்க்கால் அமைக்க வேண்டும். வீட்டு மனையிலேயே தேங்குமாறு விடக்கூடாது. அடுத்த வீட்டுத் தண்ணீர் நம்மனையில் வருவது நல்லதல்ல.

ஆரூடமுறைகள்

(சுவடியில் உள்ளவை)

305. தெற்கிலிடு குப்பைதிகழ் நிருதியிடு வைக்கோல்
இக்குட திசைக்குளொரு மைத்தொழு வியற்று
மற்கொள்வட மேற்குமலி கூடுணவு கட்டு
பற்புகழ் வடக்கது பசுத்தொழு வியற்றே.

(இ-ள்) இருந்த மனைக்குத் தெற்கில் குப்பை கொட்டவும், தென் மேற்கு மூலையில் வைக்கோல் போர் கட்டவும், மேற்கில் எருமைத் தொழுவம் இயற்றவும், வடமேற்கில் தானியத் தொம்பை யமைக்கவும், வடக்கில் பசுத்தொழுவம் கட்டவும் உத்தமம் எ-று.

306. இயற்றுவட கீழ்த்திசை யடுக்களை யமைப்பாம்
பயிற்றரு கிழக்கதனில் ஆடுகள பரப்பாம்
செயிற்றெறிய அங்கியினில் வைகுமது சேமம்
பயிற்றப்பட மொழிந்தபடி பார்த்திடுதல்
நன்றே.

(இ-ள்) வடகிழக்கில் அடுக்களை வீடுகட்டவும், கிழக்கில் ஆட்டுக் கொட்டிலமைக்கவும், தென்கிழக்கில் பொக்கிஷ வீடு இயற்றவும் உத்தமம். கிழக்குத்திக்கில் குளிக்குமிடமும், அக்கினி மூலையில் சமையல் பண்ணுமிடமும், தெற்கில் சயனஸ்தலமும், நிருதி மூலையில் சாஸ்திர முதலானதும்

வைக்குமிடமும், மேற்கில் போசனம் புசிக்கும் வீடும், வாயு மூலையில் பசுத்தொழுவமும், வடக்கில் தனதானிய வீடும், ஈசானிய மூலையில் பூசை வீடும் கட்ட ராஜ யோகமுண்டாம் எ-று.

307. நண்ணாம் கிழக்கு முதலெட்டும்
மடநல் லான்தொழு குப்பைக்
குன்றாம் படப்பை எருமை
நிலைத்தொழு நெல் கூடு
தண்ணீரட்ட சாலநன்றாம் மனைக்கு
கிணறுகீழ் சன்பத்திநீ ரெளிருக்கிவை
தன்றான கதிர்மேல்நீட் டிஎதிராக
வைத்துஇடங் கீழ்தான் கிடக்கும்.

மனையில் சருக்க மூலைக்கு மிடங்கள்

மனைக்குக் கிழக்கே ஆட்டுத் தொழு, தென்கிழக்கு பசுத் தொழு, தெற்கு குப்பை, தென்மேற்கு தோப்பு, மேற்கு எருமைத் தொழு, வடமேற்கு நெல் கூடு, வடக்கு உண்ணு மிடம், வடகிழக்கு விடுதி, வடகிழக்கு இன்பம், வடக்கு விளைவு. வடமேற்கு ஆயிழையாள் மரணம், மேற்கு சம்பத்து, தென்மேற்கு மிரத்தி, தெற்கு ஸ்திரி மரணம், தென்கிழக்கு ஆயுத ஆனியும், புத்திர ஆனியும் என்று சொல்வது.

சலதாரை இலட்சணம்

அண்டை வீட்டுத் தண்ணீர் தன்வீட்டுக்கு வரக்கூடாது. நமது வீட்டுத்தண்ணீர் கிழக்கே போனால் உத்தமம். அக்கினி மூலையில் போனால் எசமானுக்கு ஆகாது வாயு மூலையில் போனால் பசுக்கள் நஷ்டமாகும்.

வடக்கே போனால் தனமுண்டு. ஈசானிய மூலையில் போனால் சுபக்கிரகம் உண்டாகும். தன்வீட்டில் தானே தண்ணீர் இருந்தால் நாசமாகும்.

க்ஷேத்திர ஆரூடம்

இந்தத் திக்கில் வீடு கட்டினால் நல்லதா? என்று கேட்கும் போது, அந்தத் திக்கிலிருப்பவர்க்கு எதுவோ அந்தக் கணக்கை, வலப்பக்கத்தில் வைத்துக் கர்த்தனாமாதி அச்சரவர்க்கும் இதுவே. அந்தக் கணக்கு இடப்பாகத்தில் வைத்து எட்டுப் பெருக்குக் கொடுக்க மிகுந்தது தனம்.

முன் வலப்பாகத்திலிருந்த கணக்கை இடப்பாகத்தில் வைத்து எட்டுப்பேருக்குக் கொடுக்க மிகுந்தது ருணம்.

தனம் அதிகமாய் இருந்து ருணம் குறைவாய் இருந்தால் நல்லது. ருணம் அதிகமாய் இருந்து தனம் குறைவாய் இருந்தால் நல்லதல்ல. தனமும் ருணமும் சரியாய் இருந்தால் ஆதாயமும் விரையமும் சமமாய் இருக்கும்.

ஜென்ம நட்சத்திரம் பார்க்கும் நிலை

சென்ம நட்சத்திர முதல் கடைசி நட்சத்திரம் வரைக்கும் எண்ணின தொகையை நாலில் பெருக்கித் திதிவாரம் கூட்டி, நவக்கிரகத்தில் கிழக்கே நின்றது.

ஆதித்தன், சோமன் இலாபயோகம்; அங்காரகன், மிருத்தியு, புதன், பிரகஸ்பதி இலாபம்; சுக்கிரன் சௌக்கியம்; சனி மகா பாண்டம்; இராகு காத பாதம்; கேது மகதயன் இது நித்தியபலன். இலக்கினத்தில் பிரகஸ்பதியிருந்தாலும் சுக்கிரன் இருந்தாலும் அப்போது வீடு கட்டினால் ஐந்நூறு வருஷம் சுகமேயிருப்பார்கள்.

இலக்கினத்தில் புதன் இருந்தால் ஐம்பது வருஷம்.

இலக்கினத்தில் புதனும், சுக்கிரனும் பிரகஸ்பதியும் இருந்தால் ஐம்பது வருஷம் ஸ்தம்பப் பிரதிஷ்டை.

இலக்கினத்தில் பிரகஸ்பதி நாலில் சந்திரனும், அங்காரகனும், சனியும், 11-இல் இருக்க நாற்பது வருஷம் சுபமாகவிருக்கும்.

இலக்கினத்தில் சுக்கிரன் இருக்க நூறு வருஷம். சிங்கம், கன்னி, துலாம், இந்த மூன்று இராசியிலும் சூரியன் இருக்க ஈசானியத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யவேணும். கும்பம், மேஷம் இந்த இரண்டு இராசியிலும் சூரியன் இருக்க நிருதி மூலையில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யவேணும்.

ரிஷபம், கடகம், மிதுனம் இந்த மூன்று இராசியிலும் சூரியன் இருக்க அக்கினி மூலையில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யவேணும்.

இந்தப்படிக்கு விவாகம் முதலானதற்கும் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்ய வேணும்.

308. தொட்டலக் கினத்தில் காரி
சூரியன் செவ்வாய் இராகு
திட்டநாலு ஏழு பத்திற்
சீரண மதிய சேர்ந்தாற்
பட்டிடும் மரங்கள் கட்டை
பானையோடு எலும்பு சாம்பல்
சட்டமாய் இருக்குது என்றே
தார்சடை முனிசொன் னாரே.

(இ-ள்) யாரேனும் ஒருவர் கேட்கவரில் அவரை ஒரு ராசியைத் தொடச்சொல்லி அந்த ராசிக்குச் சனி, சூரியன், செவ்வாய், இராகு நான்காம் இடம், ஏழாம் இடம், பத்தாம் இடம் அமர பக்கம் சந்திரனுங் கூடி இருந்தால், பட்ட மரமும் பானையோடும் எலும்பும் சாம்பலும் இருக்கிறது என்று சொல்ல வேண்டும்.

309. மதிக்கு நாலு ஏழுபத்தில்
மந்திரி புந்தி கூடி
அதற்கு மூன்று எட்டில்
ஆறில் ஆதித்தன் வலமதாகி
இதற்குஓர் பத்தி னாலே
இருந்தவன் பலவான் ஆகில்
நிதிக்குளோர் பயனே சொல்லும்
நிச்சகம் மயன்சொன் னாரே.

(இ-ள்) சந்திரனுக்கு 4, 7, 10, ஆம் இடம் இராச னாகிலும் புதனாகிலும் நிற்கில் அதற்கு 3, 6, 8 இல் சூரியன் இருந்தால் நிதியுண்டு என்று சொல்ல வேண்டும்.

310. சுக்கிரனுக்கு எதிரே புந்தி
தோன்றிய காரி மன்னன்
வக்கிரம் இல்லாது இருந்தால்
மன்னவர்க்கு ஆறில் மந்தன்
நிக்கவே திரவி யங்கள்
நிலந்தன்னில் உள்ள தாகும்
பக்குவ மான வெள்ளி
பாரினில் மிகவுண் டாமே.

(இ-ள்) சுக்கிரனும் புதனும் கூடி அதற்கு எதிர் இராசன் இருக்க, இவர்கள் வக்கிரம் இல்லாதிருக்க இராசனுக்கு ஆறில் சனி இருக்க அந்த பூமியில் திரவியம் உண்டு; அது இல்லா விடில் வெள்ளியாகிலுமிருக்கும் என்று சொல்ல வேண்டும். எ-று.

இலக்கின சுபகிரக இராசி நிர்ணயம்

4ஆம் இராசி, 10ஆம் இராசி, 7ஆம் இராசி, 9ஆம் இராசி, 5ஆம் இராசி இவைகளில் சுபக்கிரகம் இருந்தாலும் சுபக்கிரகம் இலக்கினத்தைப் பார்த்தாலும் சுபக்கிரகம் உச்சத்திலிருந்தாலும் பாவக்கிரகம் 6ஆம் இராசி, 3ஆம் இராசி, 11ஆம் இராசியில் இருக்க ஸ்தம்பப் பிரதிட்டை செய்யில் சுபகரம் உண்டாம்.

மாதங்களில் காலசர்ப்பகதி இலட்சணம் கால சர்ப்பகதி—

ரிஷபம், மிதுனம், கடகம் இந்த மூன்று சங்கராந்தியிலும் கால சர்ப்பம்:—

ஈசானியத்தில் சிரமும், வாயு மூலையில் இடுப்பும், நிருதி மூலையில் வாலும், இதன் பின்பக்கமாய் வந்து சிம்மம், கன்னி, துலாம் இந்த மூன்று சங்கராந்தி யிலும், வாயு மூலையில் சிரசும், நிருதி மூலையில் இடுப்பும், அக்கினி மூலையில் வாலும், இதன் பக்க மாய் வந்து, விருச்சிகம், தனுசு, மகரம் இந்த மூன்று சங்கராந்திலும், நிருதி மூலையில் சிரசும், அக்கினி மூலையில் இடுப்பும், ஈசான்ய மூலையில் வாலும், இதன் பக்கம் வந்து, கும்பம், மீனம், மேஷம் இந்த மூன்று சங்கராந்தியிலும், அக்கினி மூலையில் சிரசும், ஈசானிய மூலையில் இடுப்பும், வாயு மூலை யில் வாலும்

இவ்விதமாய் இருக்க ஸ்தம்பப் பிரதிஷ்டை செய் யில் சுபப் பிரதம்.

சிரசில் செய்யில் மிருத்து பயம்; முதுகின் மேல் செய் யில் கெடுதி உண்டாம்; வாலின் மேல் செய்யில் சலனம்.

இப்படி இருக்கிற ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யில் சம்பத்து உண்டாம்.

சூசிகா சங்கராந்தி நிர்ணயம்

ரிஷபம், கடகம், மிதுனம் இந்த சங்கராந்தியில் சூரியன் இருக்க,

கன்னி, சிம்மம், துலாம் இதில் சம்பந்தம் ஆனாலும், உத்திரம், அஸ்தம், சித்திரை இந்த மூன்று நட்சத்திரத்திலும் சந்திரன் இருக்க அக்கினி மூலையில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யலாம்.

கும்பம், மீனம், மேஷம் இந்த சங்கராந்தியில் சூரியன் இருக்க,
ரிஷபம், மிதுனம், கடகம் இதில் சம்பந்தம் ஆனாலும்

ரோகிணி, மிருகசீரிடம், புனர்பூசம் இந்த மூன்று நட்சத்திரத்திலும் சந்திரன் இருக்க, நிருதி மூலையில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யவும்.

இந்தப் படிக்குப் பிரதம ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யலாம். சுபப்பிரதம். அன்னிய மார்க்கத்தில் செய்தால் கேடு வரும்.

வீட்டுக்கு இலக்கின கேந்திர கிரகப்பலன்

பிரகஸ்பதி இருக்கும் இலக்கினத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை பண்ணி, புதன் இருக்கிற இலக்கினத்தில் தூலம் ஏற்றிச் சுக்கிரன் இருக்கிற இலக்கினத்தில் ஓடு மூடினால் அந்த வீட்டுக்கு அக்கினி பயம், சோரபயம் இராசபயம் ஆகியவை இல்லை. சலராசியில் சந்திரன் இருக்கவாகிலும் 5இல், 9இல் சந்திரன் இருக்க சுக்கிர வாரத்தில் வீடு கட்டினால் சம்பத்து உண்டாம்.

இப்பால் ராஜயோகம்.

குருவாரத்தில், கடகம், மீனம், தனுசு இந்த இலக்கினங்களில் பிரகஸ்பதியானாலும் சுக்கிரனானாலும் இருக்க வீடு கட்டினால் அந்த வீட்டில் சௌக்கியமாய் ராஜாதியாய், புத்திர சம்பத்துண்டாகி சுகமேயிருப்பார்கள்.

சுபக்கிரகம் 10இல் இருந்தாலும் இலக்கினத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், அப்படிப்பட்ட வேளையில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்தால் சுபப்பிரதமாகும்.

மீன இலக்கினத்தில் சுக்கிரன் இருக்க வானாலும் 4இல் பிரகஸ்பதி இருக்கவானாலும் 10இல் 2இல் உச்சதாமாய் இருந்த சனி 11இல் இருந்தாலும் அப்படிப்பட்ட இலக்கினத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்தால் சுபம் உண்டாகும்.

மாதாமாதம் சூரியன் இருக்கும் நிலை

வெண்பா

311. சித்திரையும் ஐப்பசியும் சீரொக்கும் சித்திரையின்
அத்திங்கள் ஐந்தும் அருகுஏறும் — பத்திப்
பின்ஐந்து மாதம் பிசகாமல் அராவேறும்
முன்னே விடுபூ முடி.

சுவர்களம் உயர்வு இலட்சணம்

ஒரு முழ அகலப் பிரமாணத்திற்கு இரண்டு முழப் பிரமாண்ம் சுவர் வைக்கவேண்டும். பத்து சாண் உயரம் உள்ள சுவர் அரசர்களுக்கும் பிராமணர்களுக்கும் ஆம். ஒன்பது சாண் உயரம் உள்ள சுவர் சங்கம்சாதிகளுக்கு ஆகும். இந்த கணக்கிற்குக் குறைவாய் இருக்கக் கூடாது. இதை அறிந்து செய்ய வேண்டியது.

சுவர் வைக்கும் போது விழுந்தால் சோர பயம். வெளிப் பக்கமாய் விழுந்தால் கலகம். உட்புறம் விருந்தால் வீட்டுக்கு உடையவனுக்கு ஆகாது.

வார பலன்

ஆதிவாரம் அக்கினி பயம்; சோம வாரம் கலகம்; மங்களவாரம் மித்துரு பயம்; புதன், வியாழன், வெள்ளி இந்த மூன்று வாரங்களில் செய்யில் சுபம் உண்டாகும் சனி வாரம் புத்திர ஆனி.

நட்சத்திர பலன்

அஸ்தம், ரேவதி, அசுவினி, சதயம், அவிட்டம், பூசம், திருவோணம், புனர்பூசம், ரோகிணி, சித்திரை, அனுஷம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இந்த நட்சத்திரங் களில் பிரதிஷ்டை செய்யில் தனமும் புத்திர சுகமும் உண்டாகும்.

சாயல் மாத விலக்கம்

312. மேவுவை காசி யோடு
மிகுபுரட் டாசி இரண்டும்
தாவ அவச்சாயல் இல்லை
சாற்றுவேன் இனிது கேளும்

ஆவணி ஆனி யோடும்
　　ஐப்பசி சித்திரை மாதம்
மேவிய சாயல் இரண்டும்
　　உண்மைஅங் குலம்என்று ஓதே.

வைகாசி, புரட்டாசி இவ்விரண்டு மாதத்திற்கும் விலக்கம் இல்லை. ஆவணி, ஆனி, ஐப்பசி, சித்திரை இந்நான்கு மாதத்திற்கும் இரண்டங்குலம் விலக்கம்.

313. ஆடி கார்த்திகை பங்குனி
　　அங்குலம் நான்கு சாயல்
நீடு மார்கழியும் மாசி
　　நிறைவிரல் ஆறு சாயல்
தேடு தைமாதம் எட்டும்
திறமை அங்குலம் சாயல்தான்
பாட லாம்புகழைக் கூறப்
பண்பிது பகரு வேனே.

ஆடி, கார்த்திகை, பங்குனி இம்மூன்று மாதத்திற்கும் நாலு அங்குலஞ் சாயல். மார்கழி, மாசி இவ்விரண்டும் மாதத்திற்கும் ஆறு அங்குலஞ் சாயல். தைமாதம் எட்டு அங்குலஞ் சாயல் எ-று.

கீழ்வீடு, மேல்வீடு, உயரம் குறைச்சலுக்குப் பாட்டு

314. ஓதிய கீழ்வீட் டுக்குச்
　　சந்தோரம் மேல வீடு
நீதியாய் உசரு மாகில்
　　நிச்சயம் இரண்டும் வாழும்
ஆதியாய் மேல வீடு
　　அளவுடன் குறையு மாகில்
சேதியாய் உயிர்கள் போகும்
　　தீப்படும் மனையும் பாழாம்.

315. நேருடன் சூரிய வாஸ்து
　　நெருங்கவே வீடு நின்றால்
சீருடன் பாரில் என்றும்
　　சிறக்குமே னாகம் பாழாம்
ஆருடன் கருட வாஸ்து
　　அதிகமே சிங்கம் பாரதி
பாருடன் ஆனை பாழாம்
பண்புடன் மயனு ரைத்தார்.

18. The Formation of wells

Predictions for Racis

1. If the well is dug in Mesha Raci stones will appear
2. ” ” ” Rispa Raci water will be there
3. ” ” ” Mithuna Raci seashore will be seen
4. ” ” ” Kataka Raci much water will be there
5. ” ” ” Cinga Raci stones will fall down
6. ” ” ” Kanni Raci much water will be there
7. ” ” ” Tula Raci sand hills will be formed
8. ” ” ” Viruchika Raci old well will be there
9. ” ” ” Thanusu Raci floods will come
10. ” ” ” Makara Raci side walls will fall
11. ” ” ” Kumba Raci stones will be there
12. ” ” ” Minam Raci stones and water will be there

The method of digging well

The place, where it is decided to dig a well, is to be divided into 12 parts. Starting from the North West part, which is to be considered as Mesha rasi, subsequently, the 12 parts are to be considered as 12 parts, and the respective predictions can be had. Besides, where Moon and Venus reign, much water can be had; where Sun Saturn, Mars stand, water cannot be there; where Raku and Ketu stand, old well will be there; where Mercury stands, stones will be there; where Jupiter stands little water will be there.

NORTH

	M	R	Mi	K	
	MIN	Piraman		Ci	
WEST	Kum	Satānam		Kan	EAST
	MAK	Tanu		Viv	Tu

SOUTH

Directions that are favourable for well-digging

In the western direction, which belongs to Varuna direction, good water will be found.

If it is dug in North East — wealth would increase

If it is dug in the Centre, — all goodness will happen

If it is dug in North, North West — Grains will increase

Months that are favourable for well-digging

Month: If it is dug in Citirai, Vaikaci, Āni, water can be had for all time.

Stars: If well is dug in Parani, Kartikai, Ayiliam, Makam, Puram, Vicakam, Mulam, Puratam, Puratati, expected desires will be fulfilled. The first part of the day of these stars are good for this.

The grammer of saying prediction by considering the part of body being touched by somebody (Tōtukuri Illakanam)

Before digging the well, Vinayaka Puja will be conducted and a boy will be asked to stand facing East and another one will be asked to touch his body. The predictions will be based on the part of the body where the boy is being touched.

The parts which are touched	Prediction
1. Head, shoulder-North west corner	Water can be found at the depth of 7 feet
2. Face, Eyes, Thighs	Water can be found 6 feet
3. Neck, Forehead, Right leg	" " " " 11 feet
4. Chest, Fourth East corner	Water is at a very deep level.
5. Fingers " " "	Water can be found at 9 feet depth
6. Hips, foot	There will be no water

18. கிணறு அமைத்தல்

(சுவடிச் செய்திகளின் சுருக்கம்)

இராசிகளுக்குரிய பலன்

1. மேஷ ராசியில் கிணறு எடுத்தால் கற்பாறை விழும்.
2. ரிஷப ராசியில் கிணறு எடுத்தால் தண்ணீர் கிடைக்கும்
3. மிதுன ராசியில் கிணறு எடுத்தால் கடற்கரை தோன்றும்
4. கடக ராசியில் கிணறு எடுத்தால் தண்ணீர் மிகுதியாக ஓடும்
5. சிங்க ராசியில் கிணறு எடுத்தால் கற்பாறை விழும்
6. கன்னி ராசியில் கிணறு எடுத்தால் பெருமளவு நீர் கிடைக்கும்
7. துலா ராசியில் கிணறு எடுத்தால் புற்று ஏற்படும்
8. விருச்சிக ராசியில் கிணறு எடுத்தால் பழங்கிணறு தோன்றும்
9. தனுசு ராசியில் கிணறு எடுத்தால் வெள்ளம் காணும்
10. மகர ராசியில் கிணறு எடுத்தால் இடிகரை காணும்
11. கும்ப ராசியில் கிணறு எடுத்தால் குடலைக்கல் தோன்றும்
12. மீன ராசியில் கிணறு எடுத்தால் கல்லும் தண்ணீரும் கிடைக்கும்.

மேற்காணும் இராசிகளில் கிணறு எடுக்கும் முறை

கிணறு எடுக்கும் பகுதிக்கு உரிய மனையைப் பதினாறு பாகம் செய்து இடைப் பகுதியைப் பிரம்ம ஸ்தானமாகக் கொள்ள வேண்டும். மற்றையப் பன்னிரண்டு பாகங்களையும் 12 இராசிகளாகக் கொள்ளவேண்டும். வட மேற்குப் பாகத்தை மேட ராசியாக வைத்து வலம் இடமாகப் பன்னிரண்டு இராசிகளையும் அமைத்து அந்தந்த இராசிகள் அமையும் இடத்திற்கேற்ற பலனை அறிதல் வேண்டும்.

வடக்கு

மே	ரி	மி	க
மீ	பிரம்ம		சி
கு	ஸ்தானம்		கன்
ம	த	வி	து

தெற்கு

மேலும் இவற்றில் சந்திரனும் வெள்ளியும் நிற்குமிடங்களில் மிகுதியான நீர் கிடைக்கும். சனி, ஞாயிறு, செவ்வாய் நிற்குமிடங்களில் நீர் கிடைக்காது. இராகு, கேது நிற்குமிடங்களில் பழங்கிணறு அமையும். புதன் நிற்குமிடத்தில் கற்பாறை அமைந்து கீழ் நீர் சிறிது கிடைக்கும். வியாழன் நிற்குமிடத்தில் சிறிதுநீர் கிடைக்கும்.

கிணறு எடுக்கும் திசை

வருணதிசையாகிய மேற்குத் திசையில் நல்லநீர் தோன்றும் என்பது பொதுவிதி ஆயினும் கட்டப்பட்ட வீட்டின் அல்லது மனையின்,

வடகிழக்கில் எடுத்தால் —செல்வம் பெருகும்

பிரம்மத்தானமாகிய நடுப்பாகத்தில் எடுத்தால் எல்லா நன்மையும் உண்டு

வடக்கு, வடமேற்கில் எடுத்தால்—தானியம் பெருகும் என்பன திசைக்குரிய பலன்களாகும்.

கிணறு வெட்டும் மாதம் முதலியன

மாதம்—சித்திரை, வைகாசி, ஆனி இம் மாதங்களில் கிணறு வெட்டினால் எப்போதும் நீர் பெருகி இருக்கும்.

நட்சத்திரம்—பரணி, கார்த்திகை, ஆயிலியம், மகம், பூரம், விசாகம், மூலம், பூராடம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் கிணறு வெட்ட, விரும்பிய பலன் கிடைக்கும். இந்த நட்சத்திரங்களில் முதற்சாமம் உத்தமம்.

தொடுகுறி இலக்கணம்

கிணறு வெட்டத் தொடங்குமுன் விநாயக பூசை செய்து, அவ்விடத்தில் ஒரு சிறுவனைக் கிழக்கு முகமாக நிறுத்தி, அவன் உடலில் வேறு ஒரு சிறுவனை விட்டுத் தொடச் சொல்லி தொட்ட உறுப்பிற்கு ஏற்பப் பலன்களையும் சொல்லலாம்.

தொடும் உறுப்பு	பலன்
1. தலை, தோள், வடமேற்கு மூலையில்	7 முழத்தில் தண்ணீர் கிடைக்கும்
2. முகம், கண், தொடை	7 ,, ,, ,,
3. கழுத்து, நெற்றி, வலக்கால்	11 ,, ,, ,,
4. மார்பு—தென்கிழக்கு மூலையில்	அதி ஆழத்தில் ,, ,,
5. விரல்— ,, ,,	9 முழத்தில் ,, ,,
6. இடுப்பு, பாதம்	நீரில்லை.

கிணறு எடுக்கும் இலட்சணம்
(சுவடிச் செய்திகள்)

கலி விருத்தம்

316. ஆன மேஷம் அறையுங்கற் பாறையாம்
வான ரிஷபம் வரையும்தண் ணீர்ஆகும்
பான மிதுனம் பகரும் கடற்கரை
மான கர்க்கடகம் மதிக்கஆறு ஓடுமே.

317. வேந்தன் சிங்கம் விரும்பும்கற் பாறையாம்
ஏந்து கன்னி இசைந்ததோர் தெற்குமுன்
போந்த கல்லும் புகழும் வடக்கதாம்
கூந்தல் மோழை குமுற வருகுமே.

318. ஆயபுற்று அமையும் துலாம் இடம்
தூய விருச்சிகம் தோன்றும் பழங்கிணறு
ஏய வேதனு சுக்குவாய் மட்டமுன்
பாய வேகிழக் கும்படு மோழையே.

319. ஆன மகரம் அறையும் இடிகரை
தான கும்பம் தடுக்கும் குடலைக்கல்
மீனம் தெற்கு மிசைந்த கல்வடக்கு
ஊனம் இல்லா உயர்ந்த தண்ணீராமே.

சுக்கிரபலன்

320. சுக்கிரபல னெதிரே யாகில் தொல்குடி சாவு கேடாம்
சுக்கிரன் லக்கினனாகில் தோண்டிய பொருளுங் கேடாம்
சுக்கிரன் பின்னே யாகில் சுகமுடன் வாழ்வ் தாகும்
சுக்கிரன் இடக்கண் ணாகில் துறக்கமொன் றில்லை யென்னே.

நின்ற வேட்ட தறட ... செய்யுமிடத்தில் நால் சதுரமாக மெழுகி விநாயகன் வைத்துப் பாக்கு, வெற்றிலை, தட்சிணை, தீபதூபமுங் கொடுத்து, பூசைபண்ணி அவ்விடத்திலொரு வனைக் கிழக்கு முகமாக நிற்கச் சொல்லி அவன் அங்கத் திலே ஒருவனை விட்டுத் தொடச் சொல்லித் 'தொடுகுறி பார்த்துச் சொல்வது

(பலன் முன்பு கொடுக்கப்பட்டுள்ளது)

321 முல்லை கரிசல் முனாபாதம் தான்வெளுப்பு
செல்லாக் குறிஞ்சி செவப்பாகும்—நல்ல
மருதம் பெருமணலாம் வாநெய்தல் நீர்கசிலாம்
கருதும் படிவேர்க் கருது.

என்பது முல்லை நிலமாவது—கரிசல். இதில் வரும் படியிலும் மிடசு, முல்லை, தென்னை, யிலுப்பை, பிரண்டை, புத்து இதற்குத் தண்ணீர் காண்பது சாண் 24. இதில் மணல் சாண் 8. சுக்காம் பாறையும் காக்கைப் பொன்னும், கல்லும் நீலக்கால் மண்சாண் 4 கோலப் பாறை, அடுக்குப் பாறை மண்சாண் 8½ சாண் 24.

பாலை நிலமாவது—இளஞ்செவ்வல் தரை. இதற்குத் தண்ணீர் சிறிதுமண் பின்னிலத்துக்குத் தண்ணீர் காண்பது. இந்நிலைக்குத் தண்ணீர் காண்பது சாண் 32. இதில் மண்ணும் கல்லும் சாண் 8. சுக்காம் பாறையும் பலநிறக் கல்லும் காக்கைப் பொன்னும் காண்பது சாண் 26.

குறிஞ்சி நிலம்—கடும் செவ்வல்தரை. கருவறியும்படி கல்புத்து, சாரணத்தி, அத்திக்கால், இவற்றில் பூவாயெருக் கலை அடுக்குப் பாறையும், மகரும் பாறையும் மண்ணு சாண், ஆக சாண் 12.

நெய்தல் நிலம்—உப்புத்தரை, நீர்க்கசிவு, இதில் கரு வறியும் படிக்குடப்புத்துச் சேறி நீராத்தி. இதற்கு மட்டஞ் சாண் 25. இதில் மண்ணும் கல்லும் சுக்காம் பாறையும், காக்கைப்பொன்னும், சாரக்கல்லும் சாண் 16 ஆக சாண் 32.

மருதநிலம்—பெருமணல் தரை—இதில் கருவறியும்படி எலும்பின் புத்து யேளிலை. பாலை வில்வம் பூளை, சாரணத்திக் கொறந்தைக் கல்லும் சாண் 12. அடுக்குப் பாறையும், கொடும் பாறையும் சேரும் மண்ணும் சாண் 4. நீர்வாளி கல்லும் அடுக்குப் பாறையும் சாண் 3 சுக்காம் பாறை பலநிறக்கல்லு காக்கைப் பொன், கல், சேறு சுரண்டி அடுக்குப்பாறையும் கொடும் பாறையும் கல்லும் சேறும் சாண் 62 பருகு நாணல், கள்ளி, மாதுளை, பூலா, ஆத்தி, வெள்ளருகு, இலந்தை இதற்குத் தண்ணீர் மட்டம் இதற்குச் சாண் 18. இதில் மண் சாண் 3.

துரவுகள் எடுக்க

(அகலம், நீளம், சுற்றுமுழம் அறியவும்)

4 அடி துரவுக்கு நீளம் அடி — 10
5 அடி துரவுக்கு நீளம் அடி — 15
6 அடி துரவுக்கு நீளம் அடி — 18
7 அடி துரவுக்கு நீளம் அடி — 21
8 அடி துரவுக்கு நீளம் அடி — 24

கிணறு வெட்ட, கரைகட்ட

ஐப்பசி மாதம் — நடுப் பத்திலே
உத்திரம் மூன்றும்,

கேட்டை, ரேவதி, சித்திரை, ரோகணி, திருவோணம், அஸ்தம், மிருகசீரிடம், பூராடம், மகம், பஞ்சமி, சத்தமி, திதியை, ஏகாதசி, திரியோதசி, பிரதமை, கும்பம், மீனம், மகரம், ரிஷபம், கற்கடகம் சுப வாரங்களுள் உத்தமம்.

சித்திரை நடுப்பத்தில் முன்சொன்னபடியே கூடிய சுப தினத்தில் கரைகட்ட உத்தமம்.

19. Matchings

Those who want to build house should confirm the matchings between them and the land where they propose to build their houses. According to sastra of the land or plot there are 16 points to confirm the matchings. If one gets more than 8 points, matchings can be considered as good.

The 16 points of matchings

1. Karpam
2. Profit
3. Expenditure
4. Birth
5. Star
6. Thiti
7. Day
8. Laknam
9. Caste
10. Amicam
11. Age
12. Sight
13. Kanam
14. Sucitram
15. Putam
16. Raci

Ways to know this Matchings

1. The land should be measured both length wise and breadth wise by a stick whose length is three feet.

2. The multiplication of length and breath is the number of the Squareyard based on which this matchings can be known.

What is the two feet stick (Stick whose length is four cān

The measurement of cān differ from place to place. Hence its measure is changed into modern metric dimension. Thus, its measure has become to 36 inches or 3 feet and it can also converted into respective meters.

With the help of this stick whose length in 36 inches the land is measured lengthwise and breadhwise, its multiple gives its square yard. By counting these Square yard, the following points of matchings can be known.

1. **Āya Porutam (matching with Āya) (karpam)**

The multiple of length and breath is the number of pits, which is further divided by 8 and the reminder is Āya. If it is

1 — It is Tuvaca Āyam Intiran
2 — It is Tūma Āyam Akni
3 — It is Cima Āyam Iyaman
4 — It is Civaṇ Āyam Niruti
5 — It is Rispa Āyam Varunan
6 — It is Tancu Āyam Vayvu
7 — It is Kaja Āyam Kuberan
8 — It is Kāk Āyam Īcaniyan

If there is no reminder, the predictions can be had by having the number as 8 (Āyam happens to be one among, Ātayam, Kerpam, Palan, Pōrutam, menai)

Besides, the predictions of this

1. is *Karuda* Karpam matched for 4 castes
2. is *Pura* (dove) matched — medium, indicates poverty, suitable for hunter
3. is *Cinka* (Lion) matched — good
4. is *Cuvāna* matched — medium, suitable for spysies
5. is *Pacu* (cow) matched — for all deeds
6. is *Kakkai* (crow) matched — medium — construction will stand incomplete.
7. is *elephant* karpam — good
8. is donkey karpam — medium — construction will stand incomplete.

2. **The *varavu* (profit) and the owner of the land and its predictions**

The multiple of pits is divided by 12 and the reminder is **varavu** (profit).

If that number happens to be

1, 2 — wealth would come

3, 4	— it will bring all goodness
5, 6,	— it has medium effect
7, 8, 9	— it will bring all blessings
10	— all things will get success
11	— wealth would happen
12	— all good things would occur

If it is has no reminder, the predictions can be had by considering the number as 12.

3. Expenditure and its prediction

If the number of pits is divided by 10, the reminder is consider as expenditure **Cĕlavu.**

If that number happens to be

1 — the decrease of wealth will take place
2 — death/fear would seize the heart
3 — family would attain goodness
4 — medium, can be blessed with child
5 — all goodness will occur
6 — medium
7 — poverty and dullness would seize
8 — Accumulation of wealth will be there
9 — destruction of heirs will be there
10 — good.

If it has no reminder, the predictions can be known by considering 10 as reminder.

4. Birth and its predictions

If the number of pits is multiplied by 3 and then is divided by eight, the reminder being the birth. If it happens to be

1 — birth of eagle — Intiran — East — accumulation of wealth.
2 — birth of cat — Ăkni — South East - chaos and confusion.
3 — birth of Lion — Iyaman — South — victory will be there.

4 — birth of Cuvāna — Niruti — South West — sickness and enemity.

5 — birth of Snake — Varunan — West — wealth and friendship with relatives

6 — birth of rat — Vayu — North west — destruction of wealth

7 — birth of Elephant - Kuberan — North — all goodness.

8 — birth of Hare — Ilaniyanai — North East — sickness and dullness.

5. **Stars and their prediction**

The number of pits is multiplied by 8 and then is divided by 27, the reminder being the star. If it is

1. — Asvani — indicates victory
2. — Parani — the head of the family would die before the construction of house
3. — Kartikai — fear of fire would prevail
4. — Rohini — indicates victory
5. — Mirukacirtam — blessings would be there
6. — Tiruvatirai — moderate things would happen
7. — Punarpucam - a blessed with child
8. — Pucam — blessed with child
9. — Ayiliam — fear of death
10. — Makam — medium
11. — Puram — medium
12. — Utiram — medium
13. — Astam — flourishing would prevail for some days
14. — Citrai — medium
15. — Cuvati — goodness would prevail
16. — Vicakam — sufferings would arise
17. — Anucam — blessed with education
18. — Kettai — indicates evil and enemity would arise
19. — Mulam — disease and medium goodness

20. — Puratam — disease and destruction of house would occur

21. — Utirātam — blessings would happen

22. — Tiruvonam — blessed with children.

23. — Avittam — man who built the house would enjoy it for only a short time.

24. — Satayam — victory and wealth would increase

25. — Puratathi —

26. — Utiratati — accumulation of wealth

27. — Revathi — disease would prevail all time.

Thithis and their predictions

The area of the land should be multiplied by 9 and then it is divided by 30 and the reminder being Thiti. The first fifteen can be considered as Thithis of rising cresendo and from 16 to 30 can be considered as the thitis of falling crescendo.

Rising crescendo	Falling crescendo	Prediction
If it is		
1 Piratamai	for 16 Piratamai	goodness
2 Tivitai	for 17 Tivitai	goodness
3 Tiruthai	for 18 Tirutiyai	victory
4 Caturti	for 19 caturti	defeat
5 Panjami	" 20 Panjami	blessing of children
6 Sasti	" 21 Sasti	" "
7 Sapthami	" 22 Sapthami	goodness
8 Astami	" 23 Astami	disease
9 Navami	" 24 Navami	suffering
10 Tasami	"25 Tasami	blessings
11 Ekadesi	" 26 Ekadesi	evil

12 Tuvādesi	"27 Tuvādesi	plenty of food and clothes.
13 Triyotasi	" 28 Triyotasi	indicates wealth
14 Caturtaci	" 29 Caturtaci (Paurnami)	destruction of life
15 Full Moon	" 30 Amimavasai (New moon)	all goodness

Though the same predictions given for two thitis, the thitis of rising crescendo are good and the thithis up to Panjami of falling crescendo can be considered for doing good deeds.

7. Day and its predictions

If the number of pits is multiplied by 9 and then is divided by seven, the reminder being the day.

1 indicates, Sunday meant uselessness
2 " Monday, meant healthy life
3 " Tuesday, meant evil
4 " Wednesday, meant wealth
5 " Thursday, meant blessings of child
6 " Friday, meant healthy life
7 " Saturday, meant confusion.

8. Lakna and its predictions

If the number of pits is multiplied by four and further is divided by 12, the reminder being the Lakna. If the number is

1 — Mesham — indicates flourishing.
2 — Rishabam — indicates blessed life
3 — Mitunam — indicates the accumulation wealth.
4 — Katakam — indicates blessings, victory, long life
5 — Cimam — indicates the growth wealth.
6 — Kanni — indicates the growth of life and knowledge
7 — Tulam — indicates the accumulation of all kinds of wealth
8 — Virucikam — indicates all goodness and incompatibility of things.

9 — Thanucu	—	indicates blessings and wealth
10 — Makaràm	—	indicates wealth and the blessings of child
11 — Kumpam	—	indicates wealth and suffering
12 — Minam	—	indicates victory which could happen at delay.

9. Caste and its prediction

If the number of pits is multiplied by 9 and is further divided by 4,.and the reminder being the caste. If the reminder happens to be

1 — Brahmin	—	indicates goodness
2 — Cutira	—	indicates victory
3 — Vaciya	—	indicates wealth
4 — Velala	—	increase indicates in grains.

10. Amicam and its predictions

If the number of the pits is multiplied by 4 and then is divided by 9, the reminder being the Amicam, If it happens to be.

1 — tatakara amicam	—	indicates sufferings all time
2 — comakara amicam	—	indicates all blessings
3 — catt a amicam	—	indicates ethics
4 — puṣkara amicam	—	indicates the growth of grains
5 — Jupiter amicam	—	indicates profit
6 — Venus amicam	—	indicates luxury life.
7 — Saturn amicam	—	indicates confusion and enemity
8 — Raku amicam	—	medium effects
9 — Ketu amicam	—	indicates all goodness

11. Age and its predictions

If the number of pits is multiplied by 25 and is further divided by 100, the remainder being the age.

If the numoer for age happens to be 45 it indicates good, and above 60, it indicates the increase in the number for age, indi- cates goodness.

12. **Vision and its predictions**

1. **For Sundays**

9 from Rohini indicates one eyed vision
12 from Astam indicates two eyed vision
6 from Puratati indicates blindness

2. **For Mondays**

9 from Punarpucam indicates one eyed vision
12, from Vicākam indicates two eyed vision
6 from Asuvini indicates blindness

3. **For Tuesdays**

9 from Makaram indicates one-eyed vision
12 from Mūlam indicates two-eyed vision
6 from Rohini indicates blindness

4. **For Wednesdays**

9 from astam indicates one eyed vision
12 from Tiruvonam indicates two eyed vision
6 from Punarpucam indicates blindness

5. **For Thursday**

9 from Vicākam indicates one eyed vision
12 from Puratati indicates two eyed vision
6 from Makam indicates blindness

6. **For Fridays**

9 from Mulam indicates one eyed vision
12 from Asuvini indicates two eyed vision
6 from astam indicates blindness

7. **For Saturdays**

9 from Tiruonam indicates one eyed vision
12 from Rohini indicates two eyed vision
